மாதாந்த சஞ்சிகை மார்ச் - ஏப்ரல் 2007 100/-

# சரிநிகர்

SARINIHAR




















# வெட்கம்?











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவாடும் உயிரிலிருந்தென்று யார் மதித்தார் ?

கருவாடும் உயிரிலிருந்தென்று
யார் மதித்தார்?

கோழிக் கறியில்
குளம்பு மீனில்
ஒரு உயிரின் செத்த இருப்பை
உணரினும் உள்ளம்

வாசனின்
"கருவாடு" ஓவியத் தொடர் மிளிர்க்கும்
கருவாடும் உயிரிலிருந்தென்று
யார் மதித்தார்?

உடன்கோழி வெட்டி விற்கும்
கோழிக் கடையாகிய வாழ்வு

கூட்டில் அடைத்து
வெட்டுக்கு விட்ட
"புறொயிலர்" கோழிகளின் முடக்கம்

வெட்டுக் குற்றியும்
கூட்டுக் கோழியும்

கண்ணில் பட
உடன்கோழி வெட்டி விற்கும்
கடையாகி வாழ்வில்

நிறைக்கு பெறுமதி
கோழிக்கு

மனிதர்க்கு?


தெருவில் நாய் செத்தால்
வளர்த்த கிளி செத்தால்
மூக்கைச் சுளித்தும் சிந்தியும்
செல்லும் உலகில்

மனித சாவுகள்
கற்பனைச் சிறகுகளில்
காரணங்களைப் பறக்கவிட்டு...

கருவாடும் உயிரிலிருந்தென்று
யார் மதித்தார்?

**சி. ஜெயசங்கர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

# அடுத்த காலடி

"எல்லாவற்றையும் விழுங்கி விடும் போர்"

இது 2001 பெப்ரவரியில் சரிநிகர் இறுதி இதழில் வெளியான ஆசிரிய தலையங்கம். ஆம், இப்போது போர் எல்லாவற்றையும் விழுங்கிவிட ஆரம்பித்திருக்கிறது!

"நீங்கள் பயங்கரவாதிகளின் பக்கம் நிற்கப் போகிறீர்களா அல்லது எங்களுடைய பக்கம் நிற்கப் போகிறீர்களா" என்று ஈராக்கிற்கு மேல் போர் தொடுத்த போது அமெரிக்க ஜனாதிபதி புஷ் கேட்டது போல இங்கும் ஊடகவியலாளர்களை நோக்கி கேட்டிருக்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கிறதா இல்லையா என்பது பற்றியும் தனக்கு அக்கறை இல்லை என்கிறார் அவர்.

வடக்கு கிழக்கில் ஆரம்பித்த கைதுகளும், கடத்தல்களும், காணாமல் போதல்களும் இன்று தலைநகர் வரை வியாபித்திருக்கிறது. யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் பாதுகாப்புத் தேடி சிறையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றனர். கொழும்பிலும் சுற்றுச்சூழலிலும் தமிழ் வர்த்தகர்கள் கப்பம் கேட்டுச் சிறைப் பிடிக்கப்படுகிறார்கள்.

கடற்கோள் பேரனர்த்தம் போல கிழக்கில் ஒரே நாளில் போர் ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட மக்களை அகதிகளாக்கியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட அமைப்பு கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களுடைய உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்கு உதவுமாறு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

தெருவோரங்களில் எரிந்தும் எரியாததுமாக சடலங்கள் தென்பட ஆரம்பித்திருக்கின்றன. "சுட்டவனைச் சுட்டு கூடச்சொன்னவனையும் சுட்ட" கதையாகி விட்டது மங்கள சமரவீரவினதும் சிறிபதி சூரியாராய்ச்சியினதும் கதை.

அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்ததாக சிறிபதி சூரியாராய்ச்சி கைது செய்யப்பட்டிருக்கிறார். இதே காரணத்துக்காகக் கைது செய்வதாயின் அமைச்சரவையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வெலிக்கடையில் தான் இருக்க வேண்டி வரும். அரசாங்கம் விமர்சனங்களை ஏற்கத் தயாராகவில்லை என்று இந்த அரசாங்கத்தை ஆட்சியிலமர்த்திய ஜே.வி.பியே சொல்கிறது.

உலகிலேயே அதிக அமைச்சரவையைக் கொண்ட நாடு என்ற சாதனை வேறு. கூடவே "தோல்வியடைந்த நாடு" என்ற அவப் பெயரும் உண்டு. கொலை, கடத்தல், காரணமின்றித் தடுத்து வைப்பு என்று ஊடகவியலாளர்கள் மீதான நெருக்கடி தொடர்கிறது. உலகிலேயே ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் உள்ள நாடுகளில் 2005, 2006 ஆம் ஆண்டுகளில் இலங்கை நான்காவது இடத்தைப் பிடித்திருக்கிறது என்கிறது சர்வதேச செய்தியாளர் பாதுகாப்பு நிறுவனம் (INSI).

எந்த இறைமையைக் காப்பதாகக்கூறி கடந்த இரண்டு தசாப்தத்திற்கு மேலாக பொருளாதார மனிதவள அழிவுகளையும் கொடுத்து போர் புரியப்பட்டு வருகிறதோ அந்த இறைமையை அமெரிக்காவுடனான ஒரு ஒப்பந்தத்தோடு விழுங்கக் கொடுத்தாயிற்று.

ஆம், போர் எல்லாவற்றையும் விழுங்கி வருகிறது. கருத்து வெளிப்பாட்டு உரிமையை, அபிப்பிராயம் தெரிவிக்கும் உரிமையை, மனித உரிமைகளை, தொழிலாளர் உரிமைகளை, பெண்கள் உரிமைகளை, வாழும் உரிமையை என்று எல்லா உரிமைகளையும் விழுங்கி வருகிறது. இவை எல்லாம்"மக்கார்த்தி யுகத்தை" ஞாபகமூட்டுவதாக கலைஞர்களும் எழுத்தாளர்களும் மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் பல்வேறு அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தக் காலகட்டத்தில் தான் சரிநிகர் தனது அடுத்த காலடியை எடுத்து வைக்கிறது. மக்களை அனைத்துத் தளைகளிலிருந்தும் விடுவிக்கப் போராடும் ஒவ்வொருவருடனும் தனது கரங்களைப் பிணைத்துக் கொள்ள அது விரும்புகிறது. இந்த நீண்ட பயணத்தில் வலுச் சேர்க்க வாருங்கள் என அது எல்லோரையும் நோக்கி அறைகூவல் விடுக்கிறது.

வெளியீடு
சரிநிகர்,
66/4, ஸ்ரீதர்மராம வீதி,
இரத்மலானை.
☎: 5674225
✉: sarinihar@gmail.com

அச்சுப்பதிப்பு
நவமக அச்சகம்,
66/4, ஸ்ரீதர்மராம வீதி,
இரத்மலானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிநிகர்

## மீண்டும் தொடங்கும் மிடுக்கு!

சரியாக ஆறு ஆண்டுகள்.

வாரப் பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்த சரிநிகர் நின்று போய் ஆறு ஆண்டுகள் ஓடி விட்டன. இடையில் ராவயவின் அனுசரணையுடன் வெளிவந்த நிகரி வெளிவந்த காலத்தை விட்டு விட்டுப் பார்த்தால், கடந்த ஆறு ஆண்டுகளில் சரிநிகரின் இடம் நிரப்பப்படாமலே இருந்திருக்கிறது.

'வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை' என்று சரிநிகர் நின்று போக வேண்டிய நிலை வந்தபோது நினைத்துக் கொண்டோம். ஆனால் கவிஞர் சேரனின் இந்த வரி சரிநிகர் விடயத்தில் பொய்த்துப் போய் விட்டது.

இப்போது மீண்டும் சரிநிகரில் இந்தப் பத்தியை எழுதத் தொடங்கும் போது கடந்து போன ஆறு ஆண்டு நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை, ஏ9 பாதை திறப்பு, யுத்த மீறல்கள், பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் படுகொலை, ஏ9 மூடப்படல், குடாநாட்டின் மீதான பொருளாதாரத்தடை, கிழக்கின் யுத்தம், பல்லாயிரக்கணக்கான மக்கள் இடப்பெயர்வு, வடக்குக் கிழக்குப் பிரிப்பு என்று எத்தனையோ நடந்து முடிந்து விட்டன: தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இயற்கைப் பேரழிவு, அனர்த்த நிவாரண மோசடிகள், பல காத்திரமான படைப்பாளிகளின் மறைவு என்று துயரம் தரும் செய்திகள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வருகின்றன.

மீண்டும் சரிநிகர் நின்று போன நிலையில் நாடு வந்து நிற்கிறது. சந்திரிகா இருந்த கதிரையில் மகிந்த அமர்ந்திருக்கிறார் என்பதைத் தவிர நிலைமைகளில் வேறெந்த மாற்றமும் நிகழ்ந்து விட்டதாகத் தெரிய வில்லை. 90இல் சரிநிகர் தொடங்கப்பட்டபோது இருந்த பயங்கரமான ஆட்சியை விட, மேற்தோற்றத்திலும், உள்ளீடாகவும் படுபயங்கரமான ஆட்சி நிலை இன்று நிலவுகிறது. ஊடகங்களில் எழுதப்படாத தணிக்கை நிகழ்கிறது. ஊடகவியலாளர்கள் ஒன்றில் மௌன மாக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது உண்மைக்கும் நேர்மைக்கும் தமது தொழிலுக்குமுரிய விழுமியங் களை தூரத்தே நீக்கி விட்டு அதிகாரத்தின் சேவகர் களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். மற்றப்படி நாட்டில் நிலவிய பிளவு மேலும் அதிகமாக விரிசல் கண்டிருக்கிறது.

இந்த நிலையில் மீண்டும் சரிநிகர் வெளிவருகிறது என்பது பலருக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தும் ஒரு விடயம் என்று சரிநிகர் அன்பர்கள் தெரிவிக்கிறார்கள். எமது சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டுத் தளங்களில் ஏற்பட்டிருக்கும் சிதைவுகள் பற்றிய பிரக்ஞையோடு இனியும் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் இன்னும் மீதமிருக்கும் நேரம் அச்சம் தரும் வண்ணம் சிறியதே ஆனாலும், இருக்கிறது! என்ற நம்பிக்கையுடன் எம்முடன் உரையாடுவது பத்திரிகையைக் கொண்டு வருவதிலும், எழுதுவதிலும் புதிய ஆர்வத்தையும், ஊக்கத்தையும், தெம்பையும் வழங்குகிறது.


வீழ்ந்து கிடந்து துயரில் உழலும் நிலை மறந்து, மீண்டும் எழுவோம் மிடுக்குடன் என்று நம்பிக்கையு டன் எழுதத் தொடங்குகிறேன்.

அன்பு வாசகர்களின் வழமையான ஆதரவை எதிர்பார்த்து!

## அர்த்தம் இழந்து போன வாக்கியம்

**பே**ச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும். இந்த வரியை வாசிக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் அடைகின்ற களிப்பு எனக்குப் புரிகிறது. கிட்டத்தட்ட கடந்த இரு தசாப்த காலங்களுக்கு மேலாக, அனேக மாக எல்லா நாட்களும் பத்திரிகைகளிலும், பிற ஊடகங்களிலும் திரும்பத் திரும்ப வெளிவந்து கொண்டிருக்கின்ற ஒரு வாக்கியம் இது. இலங்கை ஜனாதிபதி முதல், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், பத்தியாளர்கள் என்று யாரும் இதற்கு விதிவிலக்கில்லை. போதாததற்கு வெளிநாடுகளி லிருந்து 'சர்வதேச சமூகத்தின்' பிரதிநிதிகளாக இலங்கைக்கு வரும் ஒவ்வொருவரும் கூட இந்த வாசகத்தைத் தம் பங்கிற்குச் சொல்லாமல் விடுவ தில்லை. இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும், மக்களுக் கும் இலவசமாக இவர்கள் வழங்கும் 'ரெடிமேட்' ஆலோசனை இது. இலங்கையில் மிக அதிகளவில் அர்த்தமிழந்து போன வாக்கியம் இதுதவிர வேறு இல்லை என்று சொல்லிவிடலாம்.

இப்பொழுது இந்த வார்த்தையை உச்சரித்திருப்பவர் அமெரிக்கத் தூதர் றொபேர்ட் பிளேக். மட்டக்களப்பில் நடைபெற்ற ஷெல் தாக்குதலின் போது பாதிப்புக்குள் ளான பின் தூதுவர் அண்மையில் நடைபெற்ற வர்த்தக முகாமைத்துவ சங்கக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது இதைத் தெரிவித்திருந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்று கூறுகின்ற இவரும், இவர் போன்ற வெளிநாட்டுப் பிரமுகர்களும் இந்த வாக்கியத்திலுள்ள பேச்சுவார்த்தை, பிரச்சினை, தீர்வு என்று மூன்று வார்த்தைகளதும் அர்த்தங்களைப் பெரும்பாலும் புரிந்து கொண்டிருப்பதில்லை என்பது தான் இந்த வாக்கியம் இந்தளவிற்கு அர்த்தமிழந்து போனதற்குக் காரணம்.

முதலாவதாக இந்தப் பிரமுகர்களுக்குப் 'பேச்சு வார்த்தை' என்ற சொல்லுக்குத் தெரிந்திருக்கும் அர்த்தம் இருதரப்பும் மேசையில் இருந்து பேச வேண்டும் என்பது மட்டும் தான். எதைப் பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும். பேச்சுக்கு ஒரு ஏற்றுக் கொள்ளப்பட்ட நோக்கம் அவசியம். அதை நோக்கிய அக்கறையுடன் பேச வேண்டும், பேச்சில் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை எப்படி நிரப்புவது என்று இரு தரப்பும் ஒருமித்த முடிவுக்கு வர வேண்டும் என்று எல்லாம் இவர்கள் நினைப்பதில்லை. பேசினால் தீரும் என்று திரும்பத் திரும்பச் சொல்வார்கள். ஆனால் நிலைமையோ பேசினால் மூளும் என்பதாகவே இருக்கிறது. மேசையில் இருப்பவர்கள் ஒருவர் பேசுவதை மற்றவர்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்களது கண்களில் தீப்பொறி பறக்கிறது. கபடம் தெறிக்கிறது. இதழ்கள் வார்த்தைகளைப் பசப்புகின்றன. ஒவ்வொரு பேச்சு வார்த்தையின் பின்னும் ஒருவரிடம் ஒருவர் தோற்றுப்போன கசப்புணர்வுடன் மேசையை விட்டு எழுந்து செல்கின்றனர்.

பிரச்சினை பற்றிய இவர்களது தெளிவு இதைவிட மோசமானது. புலிகள் அரசுடன் யுத்தம் புரிகிறார்கள். அவர்கள் தமது அதிகாரங்களைப் பிடுங்கிக் கொள்வதற்காக சண்டையிடுகிறார்கள் என்பதற்கு அப்பால் வேறு புரிதல்களை இவர்கள் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

தீர்வு பற்றிய இவர்களது தெளிவோஎன்றால் இவையிரண்டையும் விட மோசமானது. தீர்வு என்பது மேசையில் புலிகளும், அரசும் ஒப்புக் கொள்கிற விடயம் என்று இவர்கள் முடிவு செய்கிறார்கள். யாரும் நிலைமை பற்றிய பூரண தெளிவுடன் பேசுவதில்லை. வார்த்தைகள் பேசப்படுகின்றன. கைகள் குலுக்கப்படுகின்றன. பல விடயங்கள் இந்தப் பரிமாற்றத்தின் போது வந்து போகின்றன. ஆனால் மாற்றங்கள் எதுவும் நடப்பதில்லை. உரையாடல்கள் உருவாகுவதில்லை. ஒவ்வொரு சந்திப்பின் பின்னும் ஒன்றில் அவர்கள் அதே இடத்தில் நிற்கிறார்கள், அல்லது இன்னமும் விலகிச் செல்கிறார்கள். ஒருவர் பேசுவதை மற்றவர்கள் கேட்க, புரிய முடியாத தொலைவுக்கு அவர்களுடைய மனங்கள் விலகிப் போய்விடுகின்றன.

பேச்சுவார்த்தை தீர்வைத் தரும் என்று சொல்லும் இத்தகைய போர்வழிகளில் பெரும்பான்மையானோருக்கு அதில் நம்பிக்கை இல்லை. அல்லது பேச்சுவார்த்தை என்பது ஒன்றில் மிரட்ட, அல்லது பிச்சை கேட்க அல்லது இருதரப்பும் தமது நிலைகளை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ள செய்யப்படும் ஒரு முயற்சி என்ற மட்டிலேயே அவர்களது புரிதல் இருக்கிறது.

அமெரிக்காவிற்கு பேச்சு வார்த்தையை வேறு விதமாகப் புரிந்து கொள்வது கடினம். தீர்வுக்கு, யுத்தமும், கொலையும், பொய்யும் போதுமானவை என்பதை அது ஈராக் விடயத்தில் தெளிவாக உலகுக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. அதற்குப் பேச்சுவார்த்தைக்கான அர்த்தம் இதற்கு மேல் வேறெதாகவும் இருக்க முடியாது.

மட்டக்களப்பு ஷெல் வீச்சை, இலங்கை அரசு, இராஜதந்திரிகள் அங்கு வருகிறார்கள் என்று அறிவித்திருந்தால் தவிர்த்திருக்கலாம். தூதுவர் காயம் ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்காது- என்ற மட்டத்தில், பேச்சு வார்த்தை அவசியம் என்று சொல்வதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆம், அரசாங்கம் புலிகளுடன் பேச வேண்டும். இராஜதந்திரிகளின் உயிர்களுக்கு உத்தரவாதம் தர இது அவசியம்தான்!

## சீன உதவி

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம் தொடர்பான பேச்சுவார்த்தைக்காக சீனா சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஏறக்குறைய நாலரைக்கோடி அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்த இந்த நிர்மாணப் பணிக்கான உதவியைப் பெற்றுக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இந்தத் துறைமுக நிர்மாணத்திற் கான தொகையில் 85%த்தை விரைவில் வழங்கவும் மூன்று ஆண்டுகளுக்குள் இந்த நிர்மாணப்பணியை முடித்துத் தரவும் சீனா இணங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



இலங்கையில் இன்னொரு துறைமுகம் கொண்டு வரப்படுவதற்கு வேண்டிய தேவையும் அவசரமும் இருந்து வருகிறதா? அப்படி வருவதன் மூலம் இலங்கைக்கான வருமானத்தை அதிகரிக்க முடியுமா? கொழும்புதுறைமுகம் இன்றைய கப்பல் வருகைகளைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறதா என்பன போன்ற கேள்விகள் முழுமையாக ஆராயப்பட்டு துறைமுக நிர்மாண தீர்மானங்கள் எடுக்கப்பட்டனவா என்பது பற்றி யாரும் அதிகமாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. இவ்வாறு தான் மறைந்த அமைச்சர் அஷ்ரப் அவர்கள் ஒலுவில் துறைமுக நிர்மாண முயற்சியில் ஈடுபட்ட போதும், இந்தக் கேள்விகள் என் மனதில் எழுந்தன.

துறைமுகம் என்பது ஒரு நாட்டின் பொருளாதார வருவாய்க்கான சர்வதேச கப்பல் போக்கு வரத்திற்கான வாய்ப்புகளை விருத்தி செய்கிற. இதன் மூலம் பாரிய தொழில் வாய்ப்புகளை வழங்கக் கூடிய ஒரு முதலீட்டு முயற்சி என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது. ஆனால் துறைமுகத்தின் அமைவிடத்தைத் தெரிவு செய்வதற்கான காரணம் இந்த இரண்டு முயற்சிகளிலும், இவையிரண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் இரண்டு அரசியல்வாதிகளின் சொந்தப் பிரதேசங்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டவை என்பது தான். எமது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களிற்கு உள்ள மிகப் பெரிய சாபக்கேடு நீண்டகால நோக்கமோ, கவனமான திட்டமிடலோ எதுவும் இருப்பதில்லை. ஒலுவில் துறைமுக முயற்சிகள் தொடங்கப்பட்ட போது, அதற்கான நீண்ட திட்டமிடல்கள் எதுவும் இருக்கவில்லை. அடிக்கல் நாட்டலுக்குப் பின் கட்டிட நிர்மாணப்பணிக்கான திகதி, அதைக் கட்டுவதற்கான காலஎல்லை என்பன முழுமையாகத் திட்டமிடப்படவில்லை. அமைச்சர் அஷ்ரப் அவர்களின் மறைவுடன் அது ஒரு கைவிடப்பட்ட திட்டமாக கிடப்பில் போடப்பட்டு விட்டது.

இப்பொழுது, அதே அரசாங்கத்தைச் சேர்ந்த ஜனாதிபதி தனது பிரதேசத்தில் ஒரு துறைமுகத்தை கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

இந்தப் புதிய துறைமுகமும் கூட, சேது கால்வாய்த் திட்டம் நடைமுறைக்கு வருமானால், பெரும்பாலும் பயனற்ற ஒன்றாகவே போய்விடும் என்பது பற்றி அரச மட்டத்தில் யாரும் தீவிரமாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. சேதுகால்வாய்த் திட்டம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு, வெறும் நீண்ட மௌனமாகவே இருந்து வருகிறது.

சீனர்களிடம் இருந்து துறைமுகத்தைக் கட்டித்தரும் ஒப்பந்தத்தை வாங்கிவர முடிவு செய்திருக்கும் ஜனாதிபதி அவர்கள் அவர்களது வெற்றிக்குக் காரணமான அவர்களது பாரம்பரிய சிந்தனையை சமகால செயற்பாட்டு முகாமைத்துவத்திற்கு எப்படி பயன்படுத்து



கிறார்கள் என்பதை அடையாளம் காண ஒரு சிறிதளவாவது முயன்றிருந்தால், அவ்வாறு தாமும் செயற்பட வேண்டும் என்று யோசித்திருந்தால், வெறும் துறைமுகத்தை மட்டுமல்ல, நாட்டையே முழுமையாக புனர்நிர்மாணம் செய்யவல்ல முகாமைத்துவ அனுகூலங்களை அவரால் பெற்றுக் கொண்டிருக்க முடியும்.

Frank W.K. Tsao என்ற வெற்றிகரமான சீனத் தொழிலதிபர் தனது வெற்றிக்கான காரணத்தை இவ்வாறு கூறுகிறார்: 'ஒரு வினைத்திறன்மிக்க தலைவராக/வழிகாட்டியாக (How to Become an Affective Leader) வருவது எப்படி என்று பல நூறு நூல்கள் எழுதப்பட்டு விட்டன. என்னைப் பொறுத்தவரையில் சீனப் பாரம்பரியத்தில் வேர் கொண்டு நிற்கும் ஐந்து முக்கியமான கருத்தாக்கங்கள் தலைமைத்துவம் பற்றி நான் அறிய வேண்டிய எல்லாவற்றையும் எனக்குப் புரிய வைத்துள்ளன. ஷ்ஷி (Xhi) - அறிவு ஞானம், ஷ்ஷின் (Xhin) - நம்பகத்தன்மை, றென் (Ren) - நல்லுறவு, நபர்களுக்கிடையிலான உறவு சார்ந்த பொறுப்புணர்வு, ஜங் (Yong) - துணிவு, மற்றும் ஜான் (Yan) - கட்டுப்பாட்டொழுங்கு.''

"அறிவு அல்லது ஞானம் என்பது ஒருவரது ஆற்றலையும், திறமையையும் நேர்மையாக மதிப்பிடுவது ஆகும். அது ஒரு தலைவர் வினைத்திறன் மிக்க விதத்தில் வழிகாட்டவும், புதிய கருத்துக்களையும், போக்குகளையும் விளங்கிக் கொள்வதற்கான திறந்த மனதுடையவராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இந்த அறிவுடமை தகுதியானவர்களிடம் பொறுப்புக்களை பகிர்ந்தளிக்கவும், 'ஆமாம் ஐயா' போடுபவர்களிடமிருந்து விலகி நிற்கவும் உதவுகிறது. நல்ல நேர்மையான விமர்சனம் எமது கர்வத்திற்கு (Ego) சவாலாக, அதைப் பாதிப்பதாக இருக்கலாம். ஆனால் நீண்டகாலத்தில் அது உங்களைப் பாதுகாப்பதுடன் பின்னாளில் வருத்தப்படாதிருக்கவும் செய்யும். உங்களது கொள்கைகளை விமர்சிக்க அனுமதிப்பதையும், மாற்றுக் கொள்கைகளை உருவாக்கிக் கொள்ளத் தயாராக இருப்பதையும் அது கோரி நிற்கிறது.

ஷின் என்ற நம்பகத் தன்மையானது மற்றவர்களிடம் இருந்து நாம் பெற்றுக் கொள்ள வேண்டியது. 'உங்களது வாக்குறுதிகளும் நடைமுறையும் நன்றாக இருக்க வேண்டும்' என்ற சீனப் பழமொழி இதைத் தெளிவாக விளக்குகிறது.

றென், மற்றவர்களை மதிக்கவும் நல்லுறவைப் பேணுவதையும் வலியுறுத்துகிறது. ஜங் என்பது துணிவு. சரியானது என்பதை தெளிவாகக் கணிப்பிட்ட பின் முடிவெடுக்கும் துணிவு ஒரு தலைவருக்கு மிகவும் அவசியமாகும்.

ற்சாவோவின் இந்தக் கருத்துக்களை ஜனாதிபதி கணக்கெடுத்தாராக இருந்தால் எல்லாமே நன்றாக அமைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸிச ஆட்சியை நோக்கி ...

நாட்டில் மனித உரிமை மீறல்கள் எதுவிதமான கட்டுப்பாடுமின்றி நாளாந்தம் அதிகரித்து வருவது நாட்டு மக்கள் மத்தியில் இனம் புரியாத பீதியினையும் கடும் கிலேசத்தையும் தோற்றுவித்துள்ளது.

வகை, தொகையின்றிக் காணாமல் போவோரதும் கடத்தப்படுவோரதும் எண்ணிக்கை அதிகரிக்க, அதிகரிக்க அரசாங்கத்திற்கு எதிரான அதிருப்திகள் குற்றச் சாட்டுக்கள் மற்றும் எதிர்ப்புகளும் பெருகி வருகின்றன.

இத்தகையதான சம்பவங்களது பின்னணியில், நாட்டினதும் நாட்டு மக்களதும் பாரதூரமான நிலைமையினை கருத்திற்கொண்டு கலைஞர்கள் உட்பட 18 நிறுவனங்கள் விபரமான கடிதமொன்றினை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

மிக முக்கியத்துவம் வாய்ந்த இக்கடிதத்தில் நாடு எதிர்நோக்கியிருக்கும் அபாயகரமான நிலைமையினையும் சம்பவங்களது பாரதூரமான தன்மைகளையும் ஜனாதிபதிக்கு. அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அவரது உடனடிக் கவனத்தையும் கோரியுள்ளனர்.

பாதகமான அரசியல் நடவடிக்கைகளும் யுத்த வீறாப்புமிக்க தன்மைகளும் நாட்டில் ஒரு போர்ச் சூழலையே வளர்த்து வருவதாகவும், எந்நேரமும் வெடித்து விடக்கூடிய எரிமலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் பாரதூரமான நிலைமையில், நாடு தத்தளித்துக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் பல இடதுசாரி கட்சிகள் மனித உரிமை நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் கலைஞர்கள் ஆகியோருக்கு பலமான அச்சுறுத்தல்களும் நெருக்கடிகளும் உருவாகியுள்ளதாகவும் இக்கடிதத்தில் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

8 அம்சங்களை உள்ளடக்கியதாக ஜனாதிபதியின் உடனடிக் கவனத்தைக்கோரி எழுதப்பட்டிருக்கும் இந்த நான்குபக்க கடிதத்தில் நிறுவனங்களாகிய இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயகக் கட்சி, சோசலிசக் கட்சி, ஹிரு குழுவினர், தியச குழுவினர், எக்ஸ் குழுவினர், மௌபிம அபி, பெரடிக சுலங், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் (வசந்த திசநாயக்கா), ஜனநாயகம் மற்றும், வாழும் உரிமையைப் பாதுகாப்பதற்கான இயக்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், அரச ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், அரச சுகாதார ஐக்கிய சேவைகள் சங்கம், அரச அச்சக சங்கம், சோசலிஸ தோட்டத் தொழிலாளர் சங்கம், தேசிய காணிகள் விவசாய புனருத்தாரண இயக்கம் ஆகியனவும், பேராசிரியர் சுனில் விஜய சிறிவர்த்தன, பராக்கிரம நீரியல்ல. சந்திரபால குமரகே ஆகிய கலைஞர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.




இக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கும் சுருக்க விபரங்கள் வருமாறு:-

1. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து, அதற்கு ஆதரவு தரும் தேசிய சக்திகளுடன் ஒன்றிணைந்து தேசிய பிரச்சினைக்கு இராணுவ அணுகுமுறை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தி ஆட்சி அதிகாரத்திற்கு நீங்கள் வந்தீர்கள். இத்தகைய சக்திகளாகிய ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் அரசாங்கம் கூட்டுச் சேர்த்து நாட்டில் போர்ச்சூழலையும் பதற்றங்களையும் ஏற்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு வார்த்தை அடிப்படையிலான தீர்வில் நாட்டம் கொண்டு செயற்பட்டு வரும் சகல தொழிற் சங்கங்கள், ஊடகங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேறு நிறுவனங்கள் ஆகியனவற்றுக்கு கடும் நிர்ப்பந்தங்களும் நெருக்கடிகளும் தோன்றியுள்ளன. நாட்டின் தலைவர் என்ற ரீதியில் நீங்கள் தலையிட்டு உடனடியாக இவற்றைக் கட்டுப்படுத்த ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வற்புறுத்துகிறோம்.

2. உங்களது அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற ஒடுக்கு முறைச் சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் நிலைமையினை மிகவும் மோசமடையச் செய்துள்ளன. இச்சக்திகள் தமது பாஸிசத் தேவைகளை ஈடேறச் செய்து கொள்ளும் வகையில், அரசாங்கத்திற்குள் அவற்றை ஜன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக விரோதமாகப் பயன் படுத்திக் கொள்வதில் தீவிர முனைப்புடன் செயற்படுகின்றன.

3. உங்களது அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற ஜாதிக ஹெல உறுமய, அரசாங்கத்தின் ஒரு பகுதி என்ற ரீதியில் பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் என்ற தொரு போர்வையில் சமாதான செயற்பாட்டில் நம்பிக்கை கொண்டு செயற்படுவோருக்கு எதிராக விஷமத்தனமான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறது. இதற்கு நல்ல உதாரணம் அவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற "சமாதானப் புலிகள், ஊடகப் புலிகள், இடது சாரிப் புலிகள் இவர்களை இனங் கண்டு அழித்து நாட்டைப் பாது காப்போம்" என்ற சுவரொட்டிப் பிரசாரங்களாகும். இலங்கையைப் பொறுத்த வரையில் தமது அரசியல் எதிரிகளை ஓரங்கட்டுவதற்கு எவரையும் புலியென்றோ அல்லது புலி ஆதரவாளரென்றோ பெயரிட்டுக் கொள்வது மிகச் சௌகரிய மானதொரு ஆயுதமாகும். 1950 களில் ஜனாதிபதி ஹரி ட்ரூமன் காலத்து அமெரிக்காவில் செனற்றர் மக்கார்த்தி "கொம்யூனிஸ்டுகள்" என்று பெயரிட்டு அல்லது "கொம்யூனிஸ்டுகளின் கூட்டாளிகள்" என்று பெயரிட்டு பழிவாங்கிய பயங்கர யுகத்தையே இது எமக்கு ஞாபகமூட்டுகின்றது. தொடரவிடப்பட்ட இந்த ஒடுக்கு முறையானது இறுதியில் அமெரிக்க ஜனாதிபதியைக் கூட விட்டு வைக்கவில்லை. இறுதியில் அவரும் "கொம்யூனிஸ்ட்" என முத்திரை குத்தப்பட்டார். இன்று "மக்கார்த்தியுகம்" போன்றதொரு நிலையே இலங்கையில் உருவாகியுள்ளது. யுத்தவெறி கொண்ட இந்தத் தேசிய சக்திகளின் நாசகார செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்காவிடில் இது இலங்கையையே விழுங்கிவிடும். ஆபத்து மிக்க இந்தப் போக்கை உடனடியாகவே கட்டுப்படுத்துவது அவசியமானதொன்றாகும்.

4. பயங்கரவாத தடைச் சட்டமும் அதனோடு தொடர்புடைய ஏனைய ஒடுக்குமுறைச் சட்டங்களும் இலங்கைச் சமூகத்துக்குப் பெரிய சவாலாகும். உங்களுடைய அரசாங்கத்தால் அவசரகால விதிகளுக்கு உட்பட்ட வகையில் அறிமுகப் படுத்தப்பட்ட இது இலங்கை சமூகத்தின் அரசியல் மற்றும் மனித உரிமைகளுக்கு பாரிய அச்சுறுத்தலாகும். இதனோடு தொடர்புடைய குறிப்பிட்ட சில அம்சங்கள் மிகப் பாரதூரமானவையாகும். ஐ.தே. கட்சி அரசாங்க ஆட்சியின் போது நீங்கள் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து எதிர்த்த சட்ட விதிகளைப் பார்க்கிலும் ஆபத்து மிக்கவை இவையென்பதை இத்தருணத்தில் சுட்டிக் காட்டுவது மிகவும் பொருத்தமானதொன்றாகும். இதே வேளை உங்களது அரசாங்கம் படையினருக்கும் அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களுக்கும் வரம்பற்ற அதிகாரங்களையும், சட்ட அங்கீகாரத்தையும், கடத்தல் காணாமல் போதல் போன்ற பாரதூரமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய விதத்தில் வழங்கியிருப்பது மிகவும் வெளிப்

**உங்களுக்கு எதிராக புலிகளுடனான ஒப்பந்தமொன்றினை செய்து கொண்டதாக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி என்ற ரீதியில் அரசாங்க வளங்களைப் பயன் படுத்தி உங்களால் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது. ஆனால் இதேவேளை, அதிகாரமற்ற ஏழையான பிரஜை ஒருவருக்கு எதிராக இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால், அவர் 'குற்றமில்லாதவர்' என நிரூபிப்பது இலகுவானகாரியமாகுமா?**

படையானது. நாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகள் முற்றாகச் சீர் குலைந்த நிலையிலுள்ளன. உங்களுக்கு எதிராக புலிகளுடனான ஒப்பந்தமொன்றினை செய்து கொண்டதாக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி என்ற ரீதியில் அரசாங்க வளங்களைப் பயன்படுத்தி உங்களால் வெற்றிகரமாக எதிர் கொள்ள முடிந்தது. ஆனால் இதேவேளை, அதிகாரமற்ற ஏழையான பிரஜை ஒருவருக்கு எதிராக இவ்வாறான தொரு நிலைமை ஏற்பட்டால், அவர் "குற்றமில்லாதவர்" என நிரூபிப்பது இலகுவானகாரிய மாகுமா?

5. தொழிற்சங்கங்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது. கடந்த வருடம் ஓகஸ்ட் 3ம் திகதி கொண்டுவரப்பட்ட அத்தியாவசிய சேவைகள் சட்டத்தின் (அவசரகால சட்ட விதிகளின் கீழ்) படி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது சட்ட விரோத மானதொன்றாகும். பயங்கரவாத தடைச் சட்டத்தின்படி இது ஒரு பயங்கரவாத நடவடிக்கை யுமாகும். இவற்றுக்கு எதிராகக் கிளம்பிய ஆட்சேபனைகள், எதிர்ப்புகள் காரணமாக அரசாங்கம் இதனை இரத்துச் செய்வதாக ஒத்துக் கொண்ட போதிலும், இதுவரை அரசாங்க மட்டத்திலிருந்து எது வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதேவேளை பல தொழிற்சங்கங்கள் சர்வதேச தொழிற்சங்க நிறுவனத்தின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்றுள்ளன.

6. பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த போது இதனை ஊடகங்களுக்கு எதிராகவோ தொழிற்சங்கங்களுக்கு எதிராகவோ பயன்படுத்தப் போவதில்லை என நீங்கள் உட்பட பல சிரேஷ்ட அரசாங்க உறுப்பினர்கள் வாக்குறுதியளித்தீர்கள் ஆனால் இதற்கு முற்றிலும் விரோதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் ஊடகவியலாளர்கள் மிகப் பயங்கரமான நிலைமைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

7. யுத்தத்துக்கு எதிராக கருத்துக் கூறுவதற்கான அடிப்படைச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. கலைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான விசமத்தனமான பிரசாரங்களும் தங்கு தடையின்றி முன்னெடுக்கப்படுகின்றன. இந்த வகையில் சிந்திப்பதற்கும் கருத்துகளை சுதந்திரமாக வெளியிடவும் முடியாததொரு நிலைமை தோன்றியுள்ளது. அண்மைக் காலத்தில் ஊடகவியலாளர்கள் பலர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளது நாட்டில் சுதந்திர ஊடகத்தின் அவல நிலையினை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. "அக்ஷாரயா" என்ற சிங்களத் திரைப்படம் வலுவான காரணங்கள் எதுவுமற்ற நிலையில் தடை செய்யப்பட்டுள்ளது.

8. இன்று நாடு ஒரு நரகமாக மாற்றப்பட்டதற்கான பிரதான காரணம் அரசியல் தீர்விலிருந்து விலகி, வீறாப்புமிக்க பாதகமான தொரு யுத்தச் சூழல் உருவாக்கப் பட்டமையேயாகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கம் கெட்டுப்போய் வீழ்ந்து படுவோமா?

நாசமறுப்பான்

மூன்று ஆண்டுகளுக்குள் புலிகளை முற்றாக ஒழித்து விட முடியும் என்று அறிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச.

இந்த அறிவிப்பை பத்திரிகைகளில் படித்த போது எனக்கு உடனே ஞாபகத்திற்கு வந்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தன பயங்கரவாத தடைச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்து தனது மருமகனான பிரிகேடியர் வீரதுங்கவை வடக்குக்கு அனுப்பி பயங்கரவாதத்தை "ஆறு மாதத்தில் அழித்தொழிப்பேன்" என்று சூளுரைத்த சம்பவம் தான். ஆறு மாதம் அல்ல ஆறு வருடங்கள் கழித்து தனது பதவியை விட்டு விலகிச் செல்லும் வரை முயன்றும் ஜே.ஆருக்கு முடியாமல் போன கதை கோத்தபாயவுக்கு சில வேளை அமெரிக்காவில் இருந்ததால் தெரியாமல் இருக்கக் கூடும். ஆனால், ஜனாதிபதிக்கு இது தெரியாமலிருக்க நியாயமில்லை.

ஆறுமாதத்தில் வடக்கு கிழக்கில் நிலவிய தமிழ் இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சியை பயங்கரவாதம் என்று முத்திரையிட்டு அதை அழிப்பதாகச் சூளுரைத்த ஜே.ஆர். பதவியை விட்டு இறங்குகையில் தெற்கில் நிஜப் பயங்கரவாதம் முளைவிட்டுக் கொண்டிருந்தது. ஜே.வி.பி தனது அரசியல் கோட்பாடுகளை மூட்டை கட்டி வைத்து விட்டு கண்மூடித்தனமான படுகொலைகளை கட்டவிழ்த்து விட்டிருந்தது. ஜே.ஆருக்குப் பிறகு வந்த பிரேமதாச அரசாங்க காலத்தில் இந்த தெற்குப் பயங்கரவாதம் அரச பயங்கரவாதத்துடன் சேர்ந்து படுபயங்கரமான ஒரு நாடாக இலங்கையை மாற்றி விட்டிருந்தது.

உண்மையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் மனதில் இருந்ததெல்லாம் தமிழ் இளைஞர்களது, ஆயுதக் கிளர்ச்சி என்பது வெறும் கும்பல் நடவடிக்கை என்ற கருத்துத்தான். ஒரு கல்லெறிக்குத் தாக்குப் பிடிக்க முடியாத காகக் கூட்டம் என்ற கருத்துத்தான் அவரிடம் பதிந்திருந்தது. தமிழ் மக்களது அரசியல் உரிமை, போராட்டம் என்பவை எல்லாம், தமது அதிகார அரசியல் வெறிக்கு முன் மிகவும் அற்பமானவையாக அவருக்குத் தோன்றின.

வஞ்சகம், மிரட்டல், படுகொலை, அதிகார துஷ்பிரயோகம், ஏமாற்றல் என்பனவற்றின் ஊடாக தனது அரசியலை வளர்த்து வந்திருந்த ஜே.ஆருக்கு வேறு விதத்தில் இந்தப் பிரச்சினையை விளங்கிக் கொண்டிருக்க முடியாது. அவர் இந்தப் பிராந்தியத்தின் தலைவர்களுடன் ஒப்பிடுகையில் தானே மிகுந்த தந்திரசாலி என்ற அகம்பாவத்தையும், அசைக்க முடியாத அதிகார பலத்தைக் கொண்டிருந்ததன் காரணமான திமிரையும் கொண்டிருந்தார். இதனால் அவர் தனது அறிவுக்குத் தெரிந்திருக்கக் கூடிய விடயங்களைக் கூட கவனத்தில் எடுக்கவில்லை.

விளைவு மாபெரும் கொந்தளிப்பு நிறைந்த தென்னிலங்கையையும், அந்நியப் படைகள் அதிகாரம் செய்கிற வடக்குக் கிழக்கையும் கொண்ட ஒரு இலங்கையை அவர் பிரேமதாசவிடம் கையளித்துச் சென்றார். பிரேமதாச ஜனாதிபதி பதவியை ஏற்ற போது அவருக்கு இரு முனையில் நெருக்கடிகளும் இருந்தன. ஒரு புறம் இந்தியப் படையும் தமிழீழ விடுதலைப் போராட்டமும், மறுபுறம் ஜே.வி.பியினால் கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலை நடவடிக்கைகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச படைகளின் பயங்கரவாதமும் அவருக்கு முன் நின்ற மாபெரும் சவால்களாக இருந்தன. அரசியல் ரீதியாக அவருக்கு இந்தியப் படையின் இருப்பு மாபெரும் நெருக்கடியாக இருந்தது. தனிப் பட்ட முறையில் அவரது ஜனாதி பதித் தெரிவு முழு மேலோங்கி (தனது கட்சியைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட) அரசியல் தலைவர் களதும் அதிருப்தியை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

ஆயினும், அவர் தனது பாணியில் அதனைக் கையாள முயன்றார். ஆரம்ப முயற்சிகளில் அவரது செயற்பாடுகளில் தர்க்க ரீதியான போக்குகள் இருந்தன. ஆனால் அது விரையிலேயே தலைகீழாக மாறியது. தெற்கில் வளர்ந்து வந்திருந்த ஜே.ஆரினால் மிகவும் வெறியூட்டப்பட்டிருந்த இனவாத மேலாதிக்கத்திற்கு அவர் அடி பணிந்து போகும் நிலை ஏற்பட்டது. திரும்பவும் நாடு இன்னொரு படுகொலைக்களமாக மாறியது.

பயங்கரவாதம் தனது நடிவடிக்கை களையும் செயற்படு களத்தையும் இடம் மாற்றிக் கொண்டிருந்ததே தவிர அது வெவ்வேறு வடிவங் களில் நன்றாகப் போஷித்து வளர்க்கப்பட்டது. இதன் உச்சகட்ட மாக. ஜனாதிபதி பிரேமதாச சந்தியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட போது, அவர் கொல்லப்பட்ட இடத்து தடயங் களைக் கூட இனங்காண முடியாத ளவுக்கு பயங்கரவாதம் அவ்வி டத்தை ஒரு சில நிமிடங்களில் கழுவித் துடைத்து விட்டிருந்தது.

பிரேமதாசவின் பின் பதவியில் சொற்ப காலம் இருக்கும் வாய்ப்புப் பெற்ற விஜேதுங்க அரசாங்கம் பயங்கரவாதத்தை தமிழ் மக்களு டன் இணைத்துக் கொள்வதில் வெற்றி பெற்றது. தமிழர்கள் அனை வரும் வந்தேறு குடிகள், தங்கி வாழ வேண்டியவர்கள், புலிகள் என்று அவர் பயங்கரவாதத்திற்கு புதிய தத்துவார்த்த பலத்தையும் வழங்கி னார்.

சந்திரிகா இந்தப் பயங்கரவாதத் திற்கு ஆரம்பத்தில் ஓய்வு கொடுத் திருந்தார். ஆனால் விரைவிலேயே முன்பை விட வேகமாகவும் ஆக் ரோசமாகவும் செயற்படுவதைப் பார்த்து உள்ளூரப் பெருமைப்படும் அளவுக்கு தன்னை பக்குவப்படுத் திக் கொண்டார். இந்த ஜனாதிபதி கள் எல்லோருக்குமே பயங்கர வாதம் என்பது தாமே வளர்த்து விட்ட ஒரு கடா, அது தமது நெஞ் சில் பாய்கிறது என்ற பிரக்ஞை இருந்ததில்லை: அப்படிப் புரிந்து கொள்ளும் சுரணையும் இருந்த தில்லை.

ஜே.ஆர்.காலத்தில் பயங்கரவாதத் துக்கு எதிரான நேரடியான யுத்தம் நடந்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட அணிகளுடன் அவரும் அவரது படைகளும் எதிரிகளா கவே சந்தித்துக் கொண்டனர். திம்பு பேச்சுவார்த்தையின் போதும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போதும் இதே நிலைமையே நிலவியது.

ஆனால், பிரேமதாச, விடுதலைப் போரட்ட அணிகளுடன் முதன் முதலாக நடைமுறை அரசியல் வசதிக்காக பேரம் பேசலில் இறங்குவது சாத்தியம் என்பதை நிகழ்த்திக் காட்டினார். தனது அரசியல் பலத்திற்காக, பயங்கர வாதிகள் என்று அழைக்கப்பட்ட வர்களுடன் உடன்பாட்டிற்கு வரமுடியும் என்று அவர் செய்து காட்டினார். அவரைத் தொடர்ந்து சந்திரிக்காவும் அதே பாணியில் உடன்பாட்டிற்கு வந்தார். தென்னி லங்கை அரசியல்வாதிகள் எல்லோ ரும் தமது தனிப்பட்ட அரசியல் லாபத்துக்காக புலிகளுடனும், பிற தமிழ் அரசியல் குழுக்களுடனும் பேச்சுக்களையும் இரகசிய உடன் படிக்கைகளையும் செய்து கொள் ளத் தயாராக இருந்திருக்கிறார்கள்.

அண்மையில் புலிகளுடன் இரக சியமாக தேர்தலுக்குமுன் ஒப்பந் தம் செய்யப்பட்டதாக சிறிபதி சூரியாராச்சி குற்றம் சாட்டுகின்ற விடயம் ஒன்றும் ஆச்சரியப்படுகிற விடயமல்ல. தமது பதவிக்காக இவர்கள் எதையும் செய்வார்கள் என்பதை இன்னொரு தடவை இது பதிவு செய்திருக்கிறது. என்பதற்கு மேலாக வேறு எந்தச் சிறப்போ, அதிர்ச்சியளிக்கும் தன்மையோ இதற்குக் கிடையாது.

ஜே.ஆரிடமிருந்து, வேண்டா வெறுப்பாக வழங்கப்பட்ட பதவியை, தனது பாணியில் வெற்றி கரமாக பயன்படுத்தியிருந்தார் பிரேமதாச. பிரேமதாசவின் பயங் கரமான பக்கத்திற்கு அப்பால் சாதா ரண மக்களை ஈர்க்கின்ற இன் னொரு பக்கம் அவருக்கு இருக் கவே செய்தது. அதே விதத்தில் தான் சந்திரிகாவினால் மகிந்தவுக்கு வேண்டாவெறுப்பாக இந்தப் பதவிக்கான வாய்ப்பு வழங்கப் பட்டது. அவரும் பிரேமதாச போல, தன்னுடைய பாணியில் நிலை மையை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல முயன்று கொண்டிருக்கிறார். ஆனால், மகிந்த பிரேமதாச அல்ல. அவருக்கு அவருக்கேயுரிய தென்று ஒரு மக்கள் பலம் பின்னணி எதுவும் கிடையாது. பிரதேச ஆதரவை விட்டால், கட்சி ஆதரவை விட்டால், இவர்களுக் காக இதைச் செய்தேன் என்று சொல்ல அவரிடம் எதுவும் கிடை யாது. இந்தக் காரணத்தால் தான் மகிந்தவுக்கு பிரேமதாசவைப் போல இரண்டு பக்கங்கள் இருக்க முடியவில்லை. இருப்பது ஒரு பக்கம். அந்த ஒரு பக்கமும் தனிப்பட்ட அரசியல் வாழ்வைச் சுற்றிய பக்கம் மட்டுமே. அவரு டைய இவ்வளவு கால அரசியல் வரலாற்றில் இலங்கை வாழ் மக்களின் நலனுக்காக செய்த ஒரு உருப்படியான செயல் என்று ஒன்று கூட இல்லை. இப்போது வேண்டு மானால் சிங்கள இனவாத சக்தி களுக்கு "நான் மூதூரையும் வாக ரையையும் பிடித்தேன்" என்று சொல்ல முடியும் அவ்வளவு தான்.

ஜனாதிபதி ராஜபக்ஷ இலங்கை யின் இனப்பிரச்சினையைக் கையா ளும் விதம் "ஏனோ தானோ" என்ற விதம் தான். அவரது மகிந்த சிந்தனையின் நிகழ்ச்சி நிரலில் அதற்கு முக்கியத்துவம் எதுவும் கிடையாது. "இலங்கையில் போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கிறதா இல்லையா என்பது கூட தனது அக்கறைக்கு அப்பாற் பட்ட விடயம் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தனக்கென சுயமான சமூக அரசி யல் நோக்கமும் அதற்காக செயற் படும் உறுதியும் இல்லாதவர் களுக்கு என்னவெல்லாம் நடக்கு மோ அவை எல்லாம் அவருக்கு நடந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவும் சீனாவும், அமெரிக் காவும் தத்தமது நோக்கத்திற்கேற்ப அவரைக் கையாள்கின்றன. அவர் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக இருந்து எல்லாவற்றையும் செய்கி றார். விளைவாக எல்லோராலும் நாடு சூறையாடப்பட்டுக் கொண்டி ருக்கிறது. இதில் அவருக்கு என்ன லாபம் என்று நீங்கள் யாராவது நினைக்கலாம். ஆம், அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட லாபம் இருக்கிறது. அரசியல் அதிகாரமும் அதன் காரணமாக கிடைக்கும் இலாபங்களும் அவருக்குக் கிடைக்கின்றன. அவை அவருக்கு போதுமானவையாக இருக்கின்றன.

இந்தச் சூழலில் அந்நிய நாடுகள், ஆயுதப்படைகள், உள்நாட்டு படுகொலைக் கும்பல்கள், மற்றும் பிற ஆயுதக் குழுக்கள் எல்லாமே அவருக்கு தலை வணங்கிவிட்டு தமது போக்கில் நாட்டை இழுத்துச் செல்கின்றன. மகிந்த சிந்தனைக்கு அவை பற்றி அக்கறை இல்லை. மகிந்தவின் இந்த இயல்புதான் தமக்கும் வசதியாக இருக்கும் என்று நம்பி ஐ.தே.க கட்சியின் முக்கியஸ்தர்கள் அவருடன் சேர்ந்து கொண்டதும் நடந்தது.



Female LTTE cadres ready for battle

ஜனாதிபதியின் இந்த நிலை நாட்டில் படுகொலைகளையும், அராஜகங்களையும், பட்டினிச் சாவிற்கான நிலையையும் வளர்த்து விட்டிருக்கிறது. படையினர் ஒப்பந்தத்தை வீசி விட்டு, வடக்கு கிழக்கில் யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்தி வருகிறார்கள். மக்களைப் பல்லாயிரக் கணக்கில் அகதியாக்குகின்றனர், அகதிகளாக்கிய மக்களை மீள தமது பாதுகாப்பிற்காக தாம் நிலை கொண்டுள்ள பிரதேசங்களை நோக்கி இழுத்துச் செல்கின்றனர், கதறக் கதற.

இந்த நிலையில் தான் கோத்தபாய ராஜபக்ச இக்குறிப்பின் தொடக்கத்தில் வந்த கருத்தினைக் குறிப்பிடுகின்றார்.

மூதூர் முதல் வாகரை வரையான இராணுவ வெற்றிகள், வடக்குக்கான பொருளாதார தடை பற்றி யாரும் அதிகம் அலட்டிக் கொள்ளாத நிலை என்பன கோத்தபாய ராஜபக்சவுக்கு இத்தகைய ஒரு அறிவிப்பை ஏற்படுத்தும் நம்பிக்கையைக் கொடுத்திருக்கக் கூடும்.

ஆனால் கடந்த மூன்று மாதத்தில் நடந்த அரச படைகளின் தாக்குதலில் இரண்டு லட்சத்திற்கும் மேலான மக்கள் அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னொரு இரண்டு லட்சத்திற்கும் மேலான மக்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்குகின்றனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். முன்னூறு பேர்களுக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர். அவசர சிகிச்சை மற்றும் மருத்துவ வசதிகளின்றி தவிப்போர் தொகை சரியாக தெரியவில்லை. ஆயினும் அவையும் பல நூறைத் தாண்டியுள்ளதாக பத்திரிகைகளில் வரும் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

இந்த நிலையில், அவர் சொல்வதையிட்டு அவருக்கு எந்த சந்தேகமும் இருக்க முடியாது தான்.

புலிகளை முற்றாக ஒழித்து விட முடியும் என்று நம்பும் ஒரு பாதுகாப்பு அமைச்சினால் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்கு போகக் கூடிய ஒரு மனோநிலைக்கு திரும்ப முடியும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. புலிகளுடன் யுத்தம் செய்த போதும் தமிழ் மக்களது பிரச்சினைக்கு அரசினால் தீர்வு முன்வைக்கப்படும் என்றும் அவர் சொல்கிறார் (தீர்வை முன்வைக்கும் நோக்கம் இருந்தால் அதை முன் வைத்தாலே பிரச்சினை தீர்ந்து விடும் அல்லவா?) புலிகளை ஒழிக்கும் நடவடிக்கை, இவ்வளவு பொருளாதார மனிதவள அழிவின் மத்தியில் எதற்காக என்று ஒரு கேள்வி மக்களிடம் இயல்பாகவே எழக் கூடும். அந்தக் கேள்விக்கு பதில் ஒன்றில் தீர்வு என்று அவர் சொல்வது உலகை ஏமாற்றுவதற்கான ஒரு கதைவிடல். அல்லது, புலிகள் இருக்கும் வரை, அவர் முன்வைக்க உள்ள தீர்வு தமிழ் மக்களின் குறைந்தபட்ச அபிலாசையையும் திருப்திப்படுத்தும் ஒன்றாக இருக்கப்போவதில்லை என்பது தான்.

இந்த நிலையில் தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? பாராளுமன்றத்தில் எதிர்க்குரல் எழுப்புவதும் கண்டன அறிக்கை இடுவதும், வெளிநாட்டு அரசுகளிடம் தலையிடுமாறு முறையிடுவதும், நிலைமையை சுமுகமாக்க போதுமானது என்று அவை நினைக்கின்றனவா? இன்று லட்சக் கணக்கில் மக்கள் நிர்க்கதியாக உண்ண உணவோ, உடுக்க உடையோ உறைவிடமோ இன்றி இடம்விட்டு இடம் மாறிமாறி இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் நிலைக்கு இந்த அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் காரணம் இல்லையா? அல்லது இந்த நிலைமைக்கு இவர்கள் யாரும் பொறுப்புச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையா? ஆளும் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டு அரசின் இன்றைய நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் தம்மையும் பொறுப்பாக்கிக் கொண்டிருக்கும் தமிழ் மலையக, முஸ்லிம் அரசியல் கட்சிகள், பதவிக்காக ஓடிப்போய் அரசுடன் இணைந்து கொண்ட பிற அரசியல் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சியில் இருந்தபடி இந்த அரசாங்க நிகழ்வுகட்கும் இருப்புகளுக்கும் நியாயம் சேர்த்துக் கொண்டிருக்கும் அனைத்துக் கட்சிகள், அவற்றின் உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப்புலிகள், அதிலிருந்து பிரிந்து தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என்று தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டு அரசுடன் சேர்ந்து நின்று யுத்தத்தில் பங்குபற்றும் கருணா அணி என்று இவர்களில் யாரும் விதிவிலக்கில்லாமல் எல்லோருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமே இந்த அவலத்தில் பொறுப்பில்லையா? இன்று மக்கள் தமது வாழ்வாலும் உதிரத்தாலும் கொடுத்துக் கொண்டிருக்கும் விலைக்கு இவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்புச் சொல்ல வேண்டியது அவசியம் இல்லையா?


அரசியல் போராட்டம் என்பது மக்களதும் நாட்டினதும் நாட்டு வளங்களினதும் மேம்பாட்டுக்காகவும் சுபீட்சத்துக்காகவும் நடாத்தப்படுகின்ற ஒன்று. அடக்குமுறைக்கு எதிராக போராடுவது என்பது இந்த மூன்றையும் பாதுகாப்பதற்கான போராட்டமே. ஆனால் மக்கள் அழிகின்றனர், நாடு சின்னாபின்னமாகின்றது. அதன் உடல் முழுவதும் யுத்தத்தின் கொடுமையால் புண்ணாகிக் கொண்டிருக்கிறது. வளங்கள் எல்லாம் அந்நியர்களாலும், அடக்குமுறையாளர்களாலும் அள்ளிச் செல்லப்படுகின்றன. அவர்களது உலகச் சுரண்டல் வியூகங்களுக்காக எமது வளங்கள் தாரைவார்க்கப்படுகின்றன. இவை எல்லாம் நம் எல்லோரதும் பிரச்சினை அல்லவா? இவை எல்லாம் நடந்து கொண்டிருக்கையில் போராட்டம் என்பது வெறுமனே பிரதேசத்தை கைப்பற்றல், மக்களை அகதிகளாக்கல் என்ற எல்லைக்குள் குறுகிவிட்டால் அந்தப் போராட்டத்தில் என்ன அர்த்தமிருக்கிறது? அந்த அர்த்தமற்ற ஒரு நிலைமையை அனுமதித்துக் கொண்டே அல்லது அதற்கான சூழலின் உருவாக்கத்தினை பார்த்துக் கொண்டே இருப்பது எந்த வகையில் நியாயம்? எந்த வகையான பொறுப்பு?

ஊடகங்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் யாருக்கும் இதில் சம்பந்தமில்லையா? மௌனமாக்கப்பட்டிருக்கிறோம் என்ற வெறும் வார்த்தையால் எமது இருப்பையும் இயக்கத்தையும் நியாயப்படுத்தி விடும் அளவுக்கு பலமானதாக இருக்கிறதா?

இது நாம் ஒவ்வொருவரும் வெட்கப்பட வேண்டிய ஒரு சூழல் அல்லவா? இன்றைய எமது வெட்கம் கெட்ட இருப்பு எதிர்கால சந்ததியினர் எம்மை நினைத்து வெட்கம் கொள்ளும் நிலையில் எம்மை தள்ளி விடப் போகிறது! வெட்கம் கெட்ட சூழலையும், அரசியலாரையும் விட்டு விடுபட்டு நாம் எழுந்து வருவோமா? ●

# கைது, கடத்தல், காணாமல் போதல்

சுப்ரமணியம் ராமச்சந்திரன் (37), 2001 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தினக்குரல், வலம்புரி பத்திரிகைகளின் செய்தியாளராகக் கடமையாற்றி வருபவர். கடந்த பெப்ரவரி 15ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருக்கிறார்.



இரண்டு பிள்ளைகளின் தந்தையான ராமச்சந்திரன் கரவெட்டியில் தான் நடாத்தும் கல்வி நிலையத்திலிருந்து மாலை ஆறு மணியளவில் வீடு திரும்பும்போதே காணாமல் போயிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக கைதுகள் கடத்தல்கள், படுகொலைகள் அதிகரித்து வரும் வரும் ஒரு சூழலில் இவர் காணாமல் போயிருப்பது அச்சத்தைத் தருவதாக உள்ளது என்று சுதந்திர ஊடக அமைப்புத் தெரிவித்துள்ளதோடு யார் அவரைக் கடத்தியிருந்தாலும் உடனடியாக அவரை விடுவிக்குமாறு கோரிக்கையும் விடுத்துள்ளது.

---

கடந்த நான்கு மாதங்களாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மௌபிம பத்திரிகையாளரான முனுசாமி பரமேஸ்வரி (25) மார்ச் 22ம்திகதி விடுவிக்கப்பட்டுள்ளார்.

"புலிச்சந்தேக நபராக" அவர் கைது செய்யப்பட்ட போதும் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க ஆதாரம் எதுவும் இல்லாததால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.



பரமேஸ்வரி வசித்து வந்த அதே இடத்தில் தங்கியிருந்தவரும் பரமேஸ்வரியோடு சேர்த்து கைது செய்யப்பட்டவருமான தம்பிராசா சுசந்தி இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. ஆனால் இவர்களோடு கைது செய்யப்பட்ட சுசந்தியின் சகோதரர் டிசம்பர்18ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

பரமேஸ்வரியைக் கைது செய்தவர்கள் மௌபிம பத்திரிகையில் அவர் எழுதுவதை நிறுத்தம்படி எச்சரித்திருக்கிறார்கள். அவர்மீதான குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாத நிலையில் உயர்நீதிமன்றம் அவரை விடுதலை செய்ய உத்தரவிட்ட போது அந்தச் செய்தியை "புலிச்சந்தேக நபரான பரமேஸ்வரி விடுதலை" என்று தான் அரச ஊடகங்கள் இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கின்றன. யாருடைய சந்தேகமும் தீர்ந்தாலும் இந்த ஊடகங்களின் சந்தேகம் ஒரு போதும் தீராது போலும்.

---



மௌபிம பத்திரிகையின் வங்கிக்கணக்குகள் யாவும் முடக்கப்பட்டுள்ளன. அதன் பணிப்பாளர் துஸ்யந்த பஸ்நாயக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். மௌபிம பத்திரிகை நிறுவனத்தின் இயக்குனர்களுக்குச் சொந்தமான வேறும் பல நிறுவனங்களின் வங்கிக்கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டம் மீள அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட போது ஜனாதிபதியும் ஊடகத்துறை அமைச்சரும் இந்தச் சட்டம் ஊடகத்துறையையோ ஊடகவியலாளரையோ ஒரு போதும் பாதிக்காது என்று வாக்குறுதி அளித்திருந்தனர். அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள் வழமைபோல் நீரின்மேல் எழுத்தாகிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை – அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம்


## இலங்கை இறைமைக்கு வைத்த வேட்டு

இலங்கை அரசாங்கம் கிழக்கிலே யுத்தத்தை நடத்தி வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருப்பதாகவும் எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து கொண்டிருப்பதாகவும் அறிவித்துக் கொண்டிருக்கையில், மின்னாமல் முழங்காமல் கடந்த மார்ச் 5ஆம் திகதி கொழும்பில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இலங்கையின் சார்பில் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவும், அமெரிக்காவின் சார்பில் அமெரிக்கத் தூதுவர் றொபேட் பியோக்கும் இந்த "நசுக்கிடாமல்" நடந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். பி.பி.சியின் சந்தேசிய சிங்கள சேவையில், ஒப்பந்த விபரம் விரைவில் அறிவிக்கப்படும் என்று இலங்கை அரசின்சார்பில் அறிவித்த கெஹெலிய ரம்புக்வெல அறிவித்ததோடு சரி. இன்றுவரை எந்த விபரமும் வெளிவரவில்லை. புலிகளின் வீழ்ச்சியில் சந்தோசப் பட்டுக் கொண்டிருக்கும் தென்னிலங்கைக்கு மேலும் சந்தோசம் ஊட்டவென்று சொல்வதற்கு ரம்புக்வெலவுக்கு நிறையவே தகவல்கள் இருப்பதால் அவரிடம் யாரும் இது பற்றிக் கேட்கவில்லை.

ஆனால் அமெரிக்க உயர் ஸ்தானிகராலயம் இந்த ஒப்பந்தம் பற்றி இவ்வாறு தெரிவித்தது. இந்த ஒப்பந்தம் இலங்கை, அமெரிக்க அரசுகளுக்கு போக்குவரத்துத் தொடர்பான வழங்கல்களை மாற்றிக் கொள்ளவும், வழங்கவும், உதவி மற்றும் எரிபொருள்த் தேவைகளை விருப்பத்தின் பேரிலோ அல்லது விலைக்கோ செய்யவும், சமாதான பாதுகாப்பு நடவடிக்கைகளின் போதும், மனிதாபிமான நடவடிக்கைகளின் போதும் வேண்டிய கூட்டு நடவடிக்கைகளுக்கும் இது உதவுகிறது. 'புதிய கொள்வனவுகள் மற்றும் மாற்றுச் சேவைகள் ஒப்பந்தம்' (The new Acquisition and Cross Servicing Agreement) என்ற பெயரில் கைச்சாத்தான இந்த ஒப்பந்தம், அமெரிக்காவுக்கு இன்னுமொரு இராணுவத் தளத்தை உருவாக்குவதற்கான ஒரு ஒப்பந்தமே என்பதை காலம் விரைவில் உணர்த்தப் போகிறது.

உண்மையில் இத்தகையதொரு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கான முயற்சி 2002 இலேயே நடந்தது. அப்போது இலங்கை வந்த கிறிஸ்டினா றொக்காவின் தலைமையிலான குழு அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பணவுடனும் இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர். 2002 யூலை 22 இல் கைச்சாத்திட இருந்த இது போன்ற ஒரு ஒப்பந்தம், இந்திய அரசாங்கம் தனது அதிருப்தியை வெளிக்காட்டியமையினால் கைவிடப்பட்டது. இது பின்னர்





**கிழக்கை விடுவிப்பதில் எந்த இறைமையைத் தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் இன்று யுத்தத்தில் இறங்கியிருக்கிறதோ, அந்த இறைமையை அமெரிக்காவிடம் ஒரு கைச்சாத்தின் மூலம் வழங்கி விட்டிருக்கிறது இலங்கை!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 இல் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் அமெரிக்கர்களுடனான சந்திப்பின் போது, தாம் இந்த ஒப்பந்தத்திற்கு தயார் என அறிவித்ததை அடுத்து மீளவும் இது முடுக்கி விடப்பட்டது. ஆயினும் பின்னர் அது கைச்சாத்தாகவில்லை. அந்த ஒப்பந்தம் தான் இப்பொழுது யாரும் அறியாத நேரத்தில் "நசுக்கிடாமல்" கைச்சாத்தாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்காவுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட 90ஆவது நாடாக இலங்கை ஆகியுள்ளது. இதுவரை 89 நாடுகள் ஏற்கெனவே கைச்சாத்திட்டிருப்பதால், இந்த ஒப்பந்தத்தின் விளைவுகள் எப்படிப்பட்டவை என்று அறிந்து கொள்வது ஒன்றும் கடினமானதல்ல. ஆயினும் மார்ச் 5ஆம் திகதி கைச்சாத்தான இந்த ஒப்பந்தம் பற்றி யாரும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

இந்த ACSA ஒப்பந்தத்தின் உண்மையான அர்த்தம் தான் என்ன? இந்த ஒப்பந்தத்தைப் பற்றி மேலோட்டமாகப் பார்க்கையில் தெரிவது என்னவென்றால், அது அமெரிக்க இராணுவம் பரஸ்பர போக்குவரத்துத் தளபாட உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு சட்டபூர்வ கட்டமைப்பாக மட்டுமே தோன்றும். ஆனால் இதற்குப் பல ஆழமான அர்த்தங்கள் உண்டு. இந்த ஒப்பந்த மூலமாக, வெளிநாட்டு இராணுவ விற்பனைகள் மிகவும் வினைத்திறனுள்ள முறையில் செயற்படுத்தப்பட முடியும். ஆரம்பத்தில் NATO நாடுகளுக் கிடையில் இருந்து வந்த ஒத்துழைப்புச் சட்டம் பலமுறை இருந்து வந்த பல்வேறு மூலோபாய நோக்கங்களுக்காக திரும்பத் திரும்பத் திருத்தப்பட்டு NATO அல்லாத நாடுகளும் சேர்ந்து கொள்ளக் கூடிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது. இப்போது கைச்சாத்தான ஒப்பந்தமும் அப்படி மாற்றப்பட்ட ஒப்பந்ததமே மார்ச் 5ஆம் திகதி ஒப்பமிடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தமானது. அதன் ஆரம்பத்திலேயே அமெரிக்காவின் பயங்கரவாதஒழிப்பும், இறையாண்மையைக் காத்தலும் என்ற உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. இந்த ஒப்பந்தத்தில் இதைவிட பல மிக முக்கியமான விடயங்கள் கவனிக்கப்படாமலேயே விடப்பட்டுள்ளன. முக்கியமான விடயம்



என்ன வென்றால், இந்த ஒப்பந்தத்திற்கு NATO வில் இல்லாத ஒரு நாடு தெரிவு செய்யப்படுவதற்கு எந் தெந்த அடிப்படைத்தகுதிகள் அவசியம் என்பதாகும். இதை யாரும் கவனிக்கவில்லை. NATO இல் அங்கம் வகிக்காத ஒரு நாடு. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமானால் அது இத்தகைய தகுதினை அல்லது அவற்றில் ஒன்றைக் கொண்டிருக்கவேண்டும். அது அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாட்டில் இருத்தல் வேண்டும். அல்லது அமெரிக்கப் படை வந்து தங்க அனுமதிக்க வேண்டும். அல்லது அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் அங்கு வருவதை அனுமதிக்க வேண்டும். அல்லது அமெரிக்கப் படைகள் தமது நடவடிக்கைகளை அந்த நாட்டில் செய்ய அனுமதிக்க வேண் டும்.

இந்தத் தகவல்களை அமெரிக்க அரசின் பாதுகாப்புக் கட்டளைகளிற் காணலாம். இன்னும் பல இரகசியக் கட்டளைகள் வெளியிடப்படாமல் இருக்கின்றன. இந்த ஒப்பந்தம் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதை அனுமதிக்காது என்று அமெரிக்காவால் கூறப்படுகின்ற போதும், இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதராலயம் வெளியிட்ட அறிவிப்பில் ஆயுதம் வழங்குவது தொடர்பான விபரமான குறிப்பு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எந்த விதமான விசாரணையும் இல்லாமல் எந்த விதமான யுத்த ஆயதங்களும் இதன் மூலம் வழங்கப்பட முடியாது என்று கொழும்பு ஊடகங்கள் அரச அறிவித்தலைத் திரும்பத் திரும்பத் தெரிவிக்கின்றன. ஆனால் உண்மை அதுவல்ல. இந்த ஒப்பந்தத்தின் பின்னரும் அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பொருட்களில் எண்ணெய், ஒயில், உதிரிப்பாகங்கள் என்று ஒரு நீண்ட பட்டியல் இருக்கிறது. இப்பட்டியலின் இறுதியில் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நாடுகளுக்கு அனுமதித்திருக்கும் ஆயுதங்களில் சிறியரக ஆயுதங்கள், தோட்டாக்கள், மோட்டார்கள், தானியங்கிப் பீரங்கிகள், எறிணைகள், கப்பற் துவக்குத் தோட்டாக்கள், தொகுதிக்குண்டுகள் (Cluster Bombs) நிலைக் கண்ணிகள், எறிகுண்டுகள் என்று ஒரு பெரும்பட்டியலே இருக்கிறது. இதுதான் இந்த ஒப்பந்தத்தின் உண்மை நிலைமை.

மேற்குப் பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவில் அமெரிக்கா தனது இராணுவ ஆதிக்கத்தை பலப்படுத்துவதில் பிலிப்பைன்ஸ் நீண்ட காலமாக பயன்படுத்தப் பட்டு வந்தது. பிலிப்பைன்ஸில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அந்த நாட்டில் ஏற்படுத்திய நிலைமை எமக்கு ஒரு நல்ல உதாரணமாகும். மின்டனோ எழுச்சியைத் தொடர்ந்து வந்த சுதந்திரப் போராட்டம் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தை அங்கு குவிக்கக் காரணமாக மாறியது. பிலிப்பைன்ஸில் நிறுவப்பட்ட கடற்படை மற்றும் விமானப் படைத் தளங்கள் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு

**தமது நீண்ட கால அமெரிக்க அடக்குமுறை அனுபவத்தின் காரணமாக பிலிப்பைன்ஸ் மக்கள் இந்த ஒப்பந்தத்தில் மறைந்திருக்கும் நோக்கங்களை அறிந்து கொண்டார்கள். ஒரு பலமான எதிர்ப்புப் போராட்டமொன்றை அவர்கள் இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக நடத்தினார்கள். அவர்களது போராட்டம் இன்னமும் தொடர்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு பயன்பட்டன என்பது வரலாறு. கொரிய யுத்தம் மற்றும் விக்ரோறியன் யுத்தம் போன்ற வற்றிற்கு எவ்வாறு பிலிப்பைன்ஸ் அமெரிக்காவின் செயற்பாட்டுத் தளமாக இருந்தது என்பது ஒன்றும் மறந்து போன கதையல்ல.

அமெரிக்காவின் இந்த புதிய வழியிலான ACSA ஒப்பந்தம் ஒன்று 1992 நவம்பரில் பிலிப்பைன்ஸில் கைச்சாத்திடப்பட்டது. அமெரிக்கர்கள் இந்த ஒப்பந்தத்தை ஒரு மிகச் சிறப்பான நட்பு ரீதியான ஒரு ஒப்பந்தம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இன்றுவரை இலங்கையிலுள்ள யாரும் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடங்கிய விடயங்கள் பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், தமது நீண்ட கால அமெரிக்க அடக்கு முறை அனுபவத்தின் காரணமாக பிலிப்பைன்ஸ் மக்கள் இந்த ஒப்பந்தத்தில் மறைந்திருக்கும் நோக்கங்களை அறிந்து கொண்டார்கள். ஒரு பலமான எதிர்ப்புப் போராட்டமொன்றை அவர்கள் இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக நடத்தினார்கள். அவர்களது போராட்டம் இன்னமும் தொடர்கிறது.

இலங்கையில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் அமெரிக்காவின் செயற்பாடுகளை இலங்கையில் அதிகரிப்பதற்கான ஒரு திட்டமே. பாரசீகக் குடாப் பிராந்தியத்திலும் மத்திய ஆசியாவிலும் இன்றுள்ள உலக அதிகார அரசியல் நிகழ்ச்சி நிரல்கள், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவத்தை முன்னெப்போதையையும் விட அதிகரித்துள்ளன.

அமெரிக்காவின் இலங்கையுடனான ஒப்பந்தம் இந்த முக்கியத்துவத்தை கணக்கிலெடுத்துச் செய்யப்பட்ட ஒரு இராணுவ நோக்கிலான ஒப்பந்தமே. கிழக்கை விடுவிப்பதில் எந்த இறைமையைத் தலை மீது தூக்கி வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் இன்று யுத்தத்தில் இறங்கியிருக்கிறதோ, அந்த இறைமையை அமெரிக்காவிடம் ஒரு கைச்சாத்தின் மூலம் வழங்கிவிட்டிருக்கிறது.

இந்த இறைமை இழப்புக்கு இக்கைச்சாத்து ஒரு ஆரம்பம் மட்டுமே. விளைவுகள் இனித்தான் வெளித் தெரியப் போகின்றன.



# சாவு

*எங்கே அந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டது?*
*அந்தச் சடலத்தைக் கண்டவர் யார்?*
*சடலத்தைக் கண்டெடுத்தபோது அது இறந்தே கிடந்ததா?*
*எவ்வாறு அந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது?*

*யாராக இருந்தவன் சடலமாயினன்?*

*இறந்த, கைவிடப்பட்ட சடலத்தின்*
*தந்தை அல்லது மகள் அல்லது சகோதரன்*
*அல்லது மாமா அல்லது சகோதரி அல்லது தாய்*
*அல்லது மகனாக யாரிருந்தவர்?*

*கைவிடப்பட்டபோது சடலம் இறந்திருந்ததா?*
*சடலமாகவே அது கைவிடப்பட்டிருந்ததா?*
*அது யாரால் கைவிடப்பட்டிருந்தது?*

*இறந்த சடலம் நிர்வாணமாயிருந்ததா?*
*அல்லது*
*ஒரு பயணத்திற்கான ஆடையணிந்திருந்ததா?*

*சடலம் இறந்தே விட்டது என்பதை*
*எதைக் கொண்டு நீ பிரகடனப்படுத்தினாய்?*
*சடலம் இறந்துவிட்டது என்று தான் நீ*
*பிரகடனப்படுத்தினாயா?*
*சடலம் பற்றி உனக்கு எவ்வாறு நன்கு தெரியும்?*
*சடலம் இறந்தேயிருந்தது என்பது உனக்கெப்படித் தெரியும்?*

*சடலத்தை நீ கழுவினாயா?*
*அதன் இரு கண்களையும் மூடிவிட்டாயா?*
*அதை நீ புதைத்தாயா?*
*அதை நீதான் கைவிட்டுச் சென்றாயா?*
*சடலத்தை நீ முத்தமாவதிட்டாயா?*

**ஆங்கிலத்தில் /ஹரோல்ட் பின்டர்**
**தமிழில் /எம்.கே.எம். ஷகீப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாகரை: கலைபடும் பறவைகளாய் அலைபடும் மக்கள்!

சுனிலா அபேசேகர

வாகரை என்றதும் எனது ஞாபகத்திற்கு வருவது 1960களில் பறவைகளைப் பார்த்து ரசிக்கப் போபோன ஒரு இடம் என்பது தான். அக்காலப் பகுதியில் திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கு மிடையிலான ஏ -15 வீதியூடான பயணம் இலகுவானதாக இருந்தது. சன சந்தடி. ஆரவாரங்களற்ற மிக அழகு வாய்ந்ததொரு இடமாக அது இருந்தது. அப்பகுதியில் நீர்ப் பறவைகள் மிகுதியாகக் காணப் பட்டன. ஆனால், 1980 களில் பிறந்த தலைமுறையினரைப் பொறுத்த வரையில், வாகரை வெறுமனே யுத்தத்தினால் சின்னா பின்னமாகிப் போய்விட்ட ஒரு பிரதேசம் என்பதே அவர்களது மனதளவில் நிலைத்து நிற்கும் பதிவாக இருக்க முடியும்.

மேலும் டிசம்பர் 2004இல் சுனாமி காரணமாக வாகரை பெரிதும் பாதிப்படைந்திருந்தது. டிசம்பர் 2006இல் இலங்கை இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலில் "வெற்றி யீட்டியதை" அடுத்து அது குடிமக்களற்றதொரு பிரதேசமாகவும் மாறியது.

வாகரையின் பூர்வீககுடிகளாக சிறிய தொகையிலான மீனவர்கள், விவசாயிகள் மற்றும் மரமுந்திரிகைச் செய்கையாளர் ஆகியோர் இருந்தனர். எப்போதுமே இப் பிரதேசம் மறக்கப்பட்டதொரு பிரதேசமாகவே இருந்து வந்துள்ளது. அரசாங்கம், அபிவிருத்தி முகவர் நிறுவனங்கள், அரசியல்வாதிகள் மற்றும் சமூக இயக்கங்கள் சகலவற்றாலுமே இது மறக்கப்பட்டதொரு பிரதேசமாக இருந்தது. அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் எத்தகைய சேவைகளுமே அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட வில்லை. நாட்டில் மிகவும் அபிவிருத்தி குன்றிய சமூகங்களி லொன்றாக வாகரைப்பகுதி மக்கள் இருந்தனர். இனப்பிரச்சினை 1980களில் மிகவும் தீவிரமடைந்த காலப் பகுதியில் வாகரை ஒரு தொடர்ச்சியான நிலப்பகுதி கொண்ட தமிழர் தாயகத்தை உருவாக்கும் அரசியல் திட்டம் கொண்டோருக்கு முக்கியத் துவம் வாய்ந்ததொரு இடமாக இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குக்கான இராணுவ அரசியல் ரீதியிலான நிகழ்ச்சித்திட்டத்தைப் பொறுத்த வரையிலும் வாகரை சௌகரியமானதொரு மறைவிடமாகவும் ஆட்திரட்டலுக்கானதொரு பொருத்தமான இடமாகவும்



சோதனைச் சாவடியில் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்துள்ளது. தவிரவும் இலங்கை இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக் குமான மோதல்களுக்குரிய கள மாகவும் இது மேலும். இருந்து வந்துள்ளது. 1990களின் நடுப் பகுதி வரை அரசினால் கைவிடப் பட்ட ஒரு ஒதுங்கிய பிரதேசமாக இருந்ததன் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வரப் பட்டது.

ஒகஸ்ட் 2006 காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தினர் மூதூர்ப் பகுதியிலிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக முதலாவது பாரிய தாக்குதலை முன்னெடுத்த போது, மூதூரின் தென் பகுதியிலிருந்து கூடிய எண்ணிக்கையில் தமிழர்கள் வெருகல் ஆறு வழியூடாக வாகரைக்குள் தப்பியோடி வந்த னர். இந்தப் பாரிய இடப் பெயர் வினை அடுத்து வாகரையின் சனத்தொகை ஆகக் குறைந்தது நாற்பதாயிரம் பேரால் அதிகரிக் கப்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இந்த மக்கள் கதிர வெளி, பால்சேனை வம்மி வெட்டுவான், கண்டலடி மற்றும் வாகரை நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டனர். ஏற் கெனவே வாகரையில் நிலவிய வசதிகளுக்கான தட்டுப்பாடுகள் மனித சகிப்புத் தன்மையின் எல்லையையும் கடந்த ஒன்றாக மாறியது. அவ்வாறு இடம் பெயர்ந்தோர் சில பாடசாலை களிலும் ஏனையோர் கிடுகுகளால் தற்காலிக ஒதுக்கிடங்களை தமக்கென அமைத்துக் கொண்டும் தங்கினர். இவையும் கிடைக் காதோர் பெருவெளிகளில் இருந்து கொண்டு மர நிழல்களின் கீழே ஒதுங்கிக் கொண்டனர். வாகரை யில் இயங்கிய சில மனிதாபிமான தொண்டுமுகவர் நிறுவனங்கள் வாகரையில் நிலவும் அவலங்கள் குறித்து, தொடர்ச்சியாக பொது மக்களதும் அரசாங்கத்தினதும் கவனத்திற்குக் கொண்டு வந்த போதிலும் அம்மக்களுக்கு வழங் கப்படக் கூடியதான நிவார ணங்கள் மற்றும் அவசர உதவிகள் போன்றன யாவும் துரதிர்ஷ்ட வசமாக இராணுவ ரீதியிலான நிபந்தனைகள் காரணமாக தடைப் பட்டுப் போய் விடுவனவாயி ருந்தன.



வேதனையின் விளிம்பில் தாய்மார்

ஒக்ரோபர் 2006 காலப்பகுதியில் வாகரையை விட்டு தமிழீழ விடுதலைப் புலிகளை வெளியேற் றுவதற்கான இரண்டாவது கட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்ப மானது. ஒக்ரோபர் 27 கஜூவத்த மற்றும் மாங்கேணி இராணுவ முகாம்களைக் கடந்து வாகரைக்குள் பிரவேசிப்பதற்கு இருக்கக் கூடிய தான ஒரேயொரு பாதையூடாக வாகரைக்குள் செல்ல தொண்டு முகவர் நிறுவனங்களுக்கான அனுமதி இராணுவத்தால் மறுக்கப்பட்டது. இந்த வகையில் வீதி மூடப்பட்டதால் போக்கு வரத்துக்கள் குழம்பிப் போனதுடன் இடம்பெயர்ந்த மக்களையும் உள்ளடக்கிய வாகரை மக்களுக் கான அத்தியாவசிய விநியோகங் களை செய்யமுடியாது போனது. வாழைச்சேனை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு வியாபாரக் கொடுப்பனவுகளுக்காக வாகரையி லிருந்து சென்ற மக்கள் உட்பட பொருட்கள் வாங்குவதற்காக சென்றவர்களால் திரும்ப முடிய வில்லை. அவர்கள் சுனாமி காரணமாக இடம் பெயர்ந்தோருக் காக வாழைச் சேனை விநாயகபுரம் பாடசாலையி லும் பெந்தகொஸ்த மிஷனிலும் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக ஒதுக்கிடங்களிலும் தங்க வைக்கப்பட்டனர். வாரங்கள் கழிந்தும் அவர்கள் தமது குடும்பங் களுடன் இணைந்து கொள்வதற் கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாத நிலையிலேயே காணப்பட்டனர்.

வாகரையில் தங்க வைக்கப் பட்டிருக்கும் இடம்பெயர்ந்தோர் எதிர்கொள்ளும் நெருக்கடி களையும் அவர்களது அவல நிலைகளையும் கவனத்தில் கொள்ளுமாறு தொண்டு முகவர் நிறுவனங்களும் ஏனைய மனிதா பிமான அமைப்புகளும் விடுத்த வேண்டுகோள்கள் எவையும் ஏற்கப்படாத நிலையில் வீதிகள் திறக்கப்படவில்லை. நவம்பர் 8ஆம் திகதி இராணு முகாம் களிலிருந்து அப்பகுதி எறிக ணைத் தாக்குதல்களுக்கும், ஆகாய மார்க்கமான குண்டுத் தாக்குதல்களுக்கும் இலக்கானது. ஷெல்வீச்சுகள் கதிரவெளி விக்கினேஸ்வரா வித்தியால யத்தில் வீழ்ந்தன. அங்கு தான் மூதூர் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டி ருந்தனர். இதற்கு மேலாக அயலில் சுனாமியால் இடம்பெயர்ந்தோரும் மீளக் குடியமர்த்தப்பட்டிருந்தனர். இங்கு வீழ்ந்து வெடித்த எறிகணையால் 42 பேர் கொல்லப் பட்டனர். 120க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கொல்லப பட்டோரில் ஆறு மாதங்களுக்கும் குறைந்த வயதுடைய சிசுக்கள் ஆறு. இந்த வகையில் காயமடைந் தோருக்குத் துரிதமான மருத்துவ வசதிகள் பெற முடியாத நிலை காரணமாக, சில மரணங்களும் சம்பவித்தன. ஒரேயொரு மருத்து வர் மாத்திரம் சேவை செய்யும் வாகரை ஆஸ்பத்திரியில் திடீரெனக் கொண்டு செல்லப்படும் காயமடைந்தோரதும் மரணம டைந்தோரதும் தேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்ற முடியாத வசதியீனங்களும் பல்வேறு தட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன. ஷெல் தாக்குதல்களையடுத்து நான்கு மணித்தியாலங்களுக்குப் பின்னரும் கூட வாழைச்சேனை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து அவசர அவசரமாக வந்த அம்புலன்ஸ் வாகனங்கள் மாங்கேணி சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்ல இராணுவத்தினரால் அனுமதிக்கப்படவில்லை. காயமடைந்த 40க்கும் அதிகமானோர் வாழைச்சேனை மற்றும் மட்டக்களப்பு வைத்திய சாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஒரு பெண்ணும் குழந்தையும் வழியில் மரண மாகினர்.

வாகரையிலிருந்து வாழைச்சேனைக்கும், மட்டக்களப்பிற்கும் அன்றைய தினம் கொண்டு செல்லப்பட்ட மக்களது பரிதாப நிலை அங்கு எத்தகைய தொரு அவலநிலையும், துன்ப துயரங்களும் குடிகொண்டிருக்கின்றது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. நீண்ட காலம் கடுமையாக நிலவிய உணவுத் தட்டுப்பாட்டினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி நலிவடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தோர் சகலரும் சத்திர சிகிச்சைக்கு முன்னதாக, உடனடியாகக் குருதியூடாகப் போசனை செலுத்தப்பட வேண்டிய நிலையில் இருந்தனர். ஷெல் வீச்சுக்களினால் பதற்றமடைந்த மக்கள் கதிரவெளிப் பகுதியில் சிதறியோடியதன் காரணமாகப் பல குடும்பங்கள் பிரிந்திருந்தன. காயமுற்றோர் குழந்தைகள் உட்பட முதலில் வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னர் மட்டக்களப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டனர். இவர்களில் அநேகம் பேருடன் குடும்ப அங்கத்தவர் எவரும் இருக்கவில்லை. வாழைச்சேனையில் காயமடையாது ஒருவாறு தப்பியிருந்தோர் மத்தியிலும், தமது உறவினர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பாக ஏக்கமும் கவலையும் நிலவியது. காயமடைந்தோர் தமது குடும்ப அங்கத்தவர்கள் எவருக்கும் அறிவிக்கப்படாத நிலையிலேயே வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். மட்டக்களப்பிற்குச் சென்று தமது குடும்ப அங்கத்தவர்கள் அங்கிருக்கிறார்களா என்று பார்த்து வருவதற்கான பஸ் கட்டணத்தைச் செலுத்தக் கூடிய நிலைகூட இல்லாதவர்களாகவே இடம் பெயர்ந்தோரில் பெரும்பாலானவர்கள் இருக்கின்றார்கள். நவம்பர் 9ஆம் திகதி நான் அம்பாறையில் இருந்து மட்டக்களப்பிற்கு வந்தேன். மட்டக்களப்பிலிருந்து வந்த சகாக்களுடன் சேர்ந்து மரணமாகிய பெண் ஒருவரின் சடலத்தை அவரது முழுக் குடும்பத்தினரும் வாழும் கதிரவெளிக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமுகமாக நான் வாழைச்சேனைக்கும் மட்டக்களப்பிற்குமிடையே அடிக்கடி பயணம் மேற்கொள்ள நேர்ந்தது.

**வாகரையில் இயங்கிய சில மனிதாபிமான தொண்டு முகவர் நிறுவனங்கள் வாகரையில் நிலவும் அவலங்கள் குறித்து, தொடர்ச்சியாக பொதுமக்களதும் அரசாங்கத்தினதும் கவனத்திற்குக் கொண்டு வந்த போதிலும் அம்மக்களுக்கு வழங்கப்படக் கூடியதான நிவாரணங்கள் மற்றும் அவசர உதவிகள் போன்றன யாவும் துரதிர்ஷ்டவசமாக இராணுவ ரீதியிலான நிபந்தனைகள் காரணமாக தடைப்பட்டுப் போய் விடுவனவாயிருந்தன.**

கதிரவெளி குண்டு வீச்சையடுத்து ஒரு சில தினங்களுக்குள் அலன் றொக், சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல்கள் தொடர்பான பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி ஆகியோர் நவம்பர் 10 ஆம் திகதி வாகரைக்கு விஜயம் செய்தது ஏதேச்சையாகவே நடந்த ஒன்றாகும். அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க விசேட அனுமதியின் பேரில் ஐநா பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் சகிதம் அவர் வாகரை வந்தார். அங்கு கதிரவெளியில் விடப்பட்டு வந்த குடும்பங்களை அவர் சந்தித்தார். அதன் பின்னர் அவர் புறப்பட முற்பட்டபோது அவரது காருக்கு முன் மக்கள் வீதியில் அமர்ந்து, செல்ல விடாது தடுத்தனர். அவர்கள் அவரைத்



இலங்கை ராணுவத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்ததற்குக் காரணம் அவர் புறப்பட்ட அடுத்த கணமே ஷெல் வீச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகி விடும் என்ற அச்சம் தமக்கு ஏற்பட்டுள்ளதாலேயே எனத் தெரிவித்தனர்.

மனிதாபிமான சட்டங்கள் மற்றும் நியமங்கள் அப்பட்டமாக மீறப்படுவது குறித்து உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் கண்டனக் குரல்கள் எழுந்த போதும் அரசாங்கம் வாகரை மீது தரை, ஆகாய மற்றும் கடல் ஆகிய மும்முனைகளிலுமிருந்து தாக்குதல்களைத் தொடர்ந்த வண்ணமிருந்தது. மேலும் மனிதாபிமான தொண்டு முகவர் நிறுவனங்களுக்கான அனுமதி மறுப்புகள் தொடர்ந்த நிலையில், பல கண்டனங்கள், வற்புறுத்தல்களையடுத்து நவம்பர் 29ஆம் திகதி உணவு விநியோகங்களைக் கொண்ட வாகன அணி அப்பகுதிக்கு உட்செல்ல அனுமதிக்கப்பட்டது. உணவு விநியோகங்களுக்கான வற்றை உள்ளடக்கிய நிலையில், உட்செல்வதற்கான அனுமதிக்காக 'ட்ரக்குகள்' அணிவரிசையாக நிறுத்தப்பட்டிருந்த போது மாங்கேணி சோதனைச் சாவடிக் கருகில் குழுமிய மக்கள் குழுவினர் ஓடிச் சென்று பொருட்களைச் சூறையாடினர். அதேவேளை அச்சூறையாடலைத் தடுத்து நிறுத்த எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்காது படையினர் பாராமுகமாக நின்றனர். இடம் பெயர்ந்தோருக்காகக் கொண்டு செல்லப்பட்ட பொருட்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் சூறையாடிச் சென்றதாக வெளியாகிய சில அறிக்கைகள் இந்த வகையில் முரண் படுவனவாய்க் காணப்படுகின்றன. இதன் பின்னர் மீண்டும் மனிதாபி மான தொண்டு முகவர் நிறுவனங்களுக்கு தடை கொண்டு வரப்பட்டது.

2006 டிசம்பர் காலப் பகுதி முற்றாகவும் வாகரை மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. ஆட்புலப் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சண்டையில் ஈடுபடுகையில் இடம் பெயர்ந்தோரும், குடிமக்களுமே அதற்கான விலையைச் செலுத்த வேண்டியவர்களாயிருந்தனர்.


பெண் புலிகள்

டிசம்பர் 8 ஆம் திகதி ஷெல் தாக்குதல்களுக்கு வம்மிவெட்டுவான் இடம் பெயர்ந்தோர் குடியமர்த்தப்பட்ட பகுதி இலக்காகியதை அடுத்து 9 சடலங்கள் வாகரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டன. மேலும் பல சடலங்கள் தமது பகுதிகளி லேயே புதைக்கப்பட்டன என்றும் அவர்கள் தெரிவித்தனர். டிசம்பர் 10ஆம் திகதி நாட்டின் ஏனைய பகுதிகளும் உலகமும் மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டித்த போது கண்டலடி, இடம்பெயர்ந்தோர் பகுதி மீது ஷெல்கள் வந்து வீழ்ந்தன. இதையடுத்து 19 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர். இறந்தோர் தொகை எண்ணிக்கையினை உறுதிப்படுத்த முடியாமைக்குக் காரணம், சில சடலங்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படாமலேயே எங்கெங்கு காணப்பட்டனவோ அங்கங்கேயே புதைக்கப்பட்டன. மீண்டும் அதே நிலைமை தான் வாகரை ஆஸ்பத்திரியில். காயமடைந்து கொண்டு செல்லப்பட்டோருக்கு சிகிச்சையளிக்க முடியாதவாறு அங்கு வசதிகள் மிகவும்தட்டுபாடான நிலையில் இருந்தன என்பதுடன் வாழைச்சேனைக்கான வீதி மூடப்பட்டமையும் காரணங் களாகும்.

இந்தப் பாரதூரமான நிலைமை தொடர்ந்ததால், மக்கள் என்ன நடக்குமோ என்று பீதியும், கலவரமுமடைந்ததுடன் என்ன விலை கொடுத்தேனும் வாகரையை விட்டு வெளியேறி விட வேண்டுமெனவும் தவித்தனர். ஷெல் தாக்குதல்கள் கடூரமாக இருந்தன. மிகவும் தீவிரமான நோக்குடனேயே இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. வாகரை மக்கள் கால் நடையாகவே அப்பகுதியை விட்டு நகரத் தொடங்கினர். பல நாட்களாக அவர்கள் யானைகள் நிறைந்த காடுகளிடையே இடைவிடாது நடந்து இறுதியில் மட்டக்களப்பிற்கான பிரதான வீதியை அடைந்தனர். மக்கள் வெளியேற்றத்தைத் தடுக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் அவர்கள் சென்ற திசையை நோக்கி தமிழீழ விடுதலைப்புலிகள் ஷெல் வீச்சுக்களை நடாத்தினர். பசித்தும், திகிலடைந்தும் போயிருந்த மக்கள், கூட்டம் கூட்டமாக வெளிகந்த பகுதிகளிலும் அவற்றைச் சூழ்ந்ததாக உள்ள காடுகளுக்கு ஊடாகவும் நடந்து பல்வேறு இடங்களிலும் வெளிப்பட்டனர். றெதிதென்னவை சனங்கள் வந்து சேர்விடமாகக் குறிப்பிட்டிருந்த படையினர், பின்னர் அவர்களை வாழைச் சேனைப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கத் தொடங்கினர். இடம்பெயர்ந்த ஏனையோர் வெருகல் ஆற்றைக் கடந்து திருகோணமலை மாவட்டத்திலிருக்கும் தமது பூர்விக இடங்களுள்ள பகுதிகளுக்குச் சென்றனர். ஆனால் அங்கும் அவர்களுடைய வீடுகள் தொடர்ந்தும் யுத்த நடவடிக்கைகளுக்குரிய பகுதிகளில் அமைந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ருந்ததனால் அவர்கள் அங்கிருந்தும் நலன்புரி நிலையங் களுக்கே செல்ல வேண்டிய நிலையேற்பட்டது.

வாகரையைச் சேர்ந்த ஏனையோர் படகுகளின் மூலம் வாழைச் சேனையைச் சென்றடைய முயற்சித்தனர். இந்தப் பாதை சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் மிகவும் கடுமையாக நோய் வாய்ப் பட்டிருந்த மக்களை வாழைச் சேனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முன்பு பயன் படுத்தப்பட்டது. நெருக்கடிகள் சூழ்ந்த காலங்களில் மக்கள் சிலவேளைகளில் ஆளொன்றுக்கு 3 ஆயிரம் ரூபா போன்ற பெருந் தொகைப் பணத்தை குறுந்தூர ஆனால் ஆபத்து நிறைந்த பயணம் ஒன்றை வாழைச் சேனையிலுள்ள பேய்த்தாழை இறங்குதுறைவரை மேற்கொள் ளும் பொருட்டு கொடுக்கின்றனர். பருவப் பெயர்ச்சிக் கால நிலை என்பதால், கடல் கொந்தளிப்பு அதிகமாக இருந்தது. சிறிய ஆனால் நிறையப் பேர்கள் ஏற்றப்பட்டு பாரங் கூடியிருந்த வள்ளங்களில் ஒன்று பரந்த கடற்பரப்பிலிருந்து வாவிக்குச் சென்று வரும்போது கவிழ்ந்ததை யடுத்து குறைந்தது 15 பேர் மாண்டனர். இவர்களுள் 7 பேர் 9 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர் களுள் பலர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு தாய் 24, 17, 10 வயதுடைய தனது பிள்ளை களுடன் 6 மாத கால குழந்தை யையும் பறிகொடுத்து எல்லாமாக நான்கு பிள்ளைகளை இழந்துள் ளார்.

டிசம்பர் 18 வரையில் எல்லாமாக 14 ஆயிரம் பேர்வரை வாகரையி லிருந்து இடம் பெயர்ந்தோர் வாழைச்சேனையில் இருந்தனர். இராணுவ நடவடிக்கைகளுக்கு தம்மைத் தயார் செய்தோர், தாக்குதலையடுத்து பெருந் தொகையான குடிமக்கள் இடம்பெயர நேரிடும் என்பதை கணக்கிலெடுத்ததாகத் தெரிய வில்லை. பாரிய அளவில் குடிமக்கள் இடப்பெயர்கை ஒன்று நேரும்போது, அத்தகைய நிலைமையினை எதிர் கொள்ளத் தக்க வகையில் அல்லது சமாளிக்கும் வகையில் எத்தகைய முன்னேற்பாடுகளும் செய்திருக்க ப்படவில்லை. தொண்டு முகவர் நிறுவனங்களுக்கு அவர்களுக் கான தற்காலிக ஏற்பாடுகளைச் செய்வ தில் பல சிரமங்கள் ஏற்பட்டன. சிறிய அளவு தொகை யினராக வாகரையிலிருந்து ஏற்கெனவே இடம்பெயர்ந்து வந்திருந்தோரைத் தங்க வைப்பதற்குப் பயன்படுத்த ப்பட்ட சுனாமி காலத் தங்கு மிடங்கள், திடீரென வந்திருக்கும் பெருந் தொகையினரைத் தங்க வைக்க கொஞ்சமேனும் போதாது. எனவே தற்காலிக இடங்கள் அவசர அவசரமாகத் தெரிவு செய்யப்பட்டு, தற்காலிக தங்குமிடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இதேவேளை, இராணுவ நடவடிக் கைகள் மேலும் தொடர்ந்த தால், பால்சேனை கதிரவெளி ஆகிய இடங்களிலிருக்கும் இடம் பெயர்ந் தோருக்கான தங்குமி டங்கள் முற்றாகச் சேதப்படுத்தப் பட்டன. வாகரை மக்களைப் பொறுத்த வரையில் 2007 காலை, அவர்கள் வீட்டைவிட்டுத் தப்பியோடும் அவல நிலையு டனேயே விடிந்தது. ஜனவரி 18ஆம் திகதி வாகரை ஆஸ்பத்திரியில் ஷெல்கள் வீழ்ந்த வேளை, எஞ்சியிருந்தோரில் கொஞ்ச நஞ்சமாக இருந்தோரும் ஒன்று கூடி விட்டனர். குறைந்தது எல்லாமாக 4 ஆயிரம் மக்கள் அச்சமயத்தில் அங்கிருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. கடைசியாக எஞ்சியிருந்த கிட்டத்தட்ட 9 ஆயிரம் வரையிலான குடிமக்கள் கஜூவத்த படை முகாமுக்குச் சென்று விட்டனர். மருத்துவர் தனது இருப்பிடத்தை விட்டுச் சென்று விடத் தீர்மானித்தார். ஆஸ்பத்திரி மூடப்பட்டது. ஜனவரி 21ஆம் திகதி வரையளவில் வாகரையில் குடிமக்கள் எவரும் இருக்க வில்லை. ஜனவரி முடிவில் மட்டக்களப்பில் குறைந்தது 70 ஆயிரம் பேரளவில் இடம் பெயர்ந்தோர் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர் களுள் குறைந்தது 40 ஆயிரம் பேர் வாகரையிலிருந்து டிசம்பர் மற்றும் ஜனவரி காலப் பகுதியில் வந்தவர் கள். சனநெருக்கடியும் அடிப்படை வசதிகளும் குறைந்த நலன்புரி நிலையங்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டனர்.

இடம்பெயர்ந்தோர் எதிர்நோக்கிய முக்கியமான, பாரதூரமான பிரச் சினை அவர்களுடைய வசதியீ னங்கள் என்பதல்ல, அவர்களு டைய பாதுகாப்பின்மை தொடர்பி லானவையாகும். நலன்புரி நிலையங்களுக்கு நிரந்தரமான பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்க வில்லை. மட்டக்களப்பிற்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அங்கத்தவர்களை இடம்பெயர்ந் தோர் போல ஊடுருவச் செய்து விடலாம் என்ற அச்சம் காரணமாக இடம் பெயர்ந்தோர் மிகக் கடுமையான முறையில் சோத னைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். மேலும் நலன்புரி முகாம்களுக்குள் அனுமதிக்கப்படுவதற்கு முன்ன தாக அவர்கள் முதலில் படையின ராலும், மற்றும் கருணா பிரிவின ரைச் சேர்ந்தோராலும் விசாரணைகளுக்கு உட்படுத்தப் படுகின்றனர். இந் நடைமுறை பேய்த் தாழைப் பகுதியில் மிகக் கடுரமான முறையில் நடைமுறைப் படுத்தப் படுவதைக் காணக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக இருந்தது. படகுகளில் வந்தோர் தமது உறவினர்களையும் தமது பிள்ளைகளையும் பறி கொடுத்து வந்த நிலையில், (படகு கவிழ்ந்ததால்) அழுது புலம்பிய வாறு இருந்த போது எத்தகைய தயவு தாட்சண்யமுமின்றி, இறங்கு துறைக்கு அப்பாலுள்ள தனியிடத் திற்குக் கொண்டு செல்லப்பட்டு கருணா குழுவினரால் அவர்கள் தாக்கப்பட்டார்களெனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கருணா பிரிவைச் சேர்ந்தோர் தானென்பது பாதிக்கப் பட்டவர்களுக்கு எத்தகைய சந்தேகங்களு மின்றி நன்கு தெரியவந்திருப்பதால், அவர்கள் அதிகாரிகளுக்கு முறையிடத் தயக்கம் காட்டி வருகின்றனர். தாம்



வெளியேறும் மக்கள்

தீவிரமான முறையில் விசாரணை களுக்கு உட்படுத்தப்படுவதை காணக் கூடியதாக இருந்தது. இதோடு நின்று விடாது அவர்களுடைய விசாரணைகளை யடுத்து, பேய்த்தாழையிலுள்ள படையினரது காரியாலயத்திற்கு மேலதிகமான விசாரணைகள் மற்றும் பதிவு நடைமுறை களுக்காக அவர்கள் கையளிக்கப் படுகின்றனர். தற்போது மட்டக் களப்பிலுள்ள நலன்புரி நிலையங் கள் சகல விதமான தாக்குதல் களுக்கும் சோதனை நடவடிக் கைகளுக்கும் உட்படுத்தப்படும் அபாய நிலையில் உள்ளன. சாதாரண உடைகளை அணிந்து ஆயுதங்கள் சகிதம் நலன்புரி நிலையங் களுக்குள் பிரவேசித் தோர் அங்குள்ளோரை விசாரணை களுக்கு உட்படுத்தி அவர்களை அடித்து, அச்சுறுத்தியதுடன் கையடக்கத் தொலை பேசிகள் உட்பட வேறு பொருட் களையும் களவாடியதுடன் இளைஞர்களைக் கடத்திச் சென்றார்களெனவும் முறைப்பாடுகள் உள்ளன. பல சந்தர்ப்பங்களில் தாய்மார்கள் கடத்தல்களை தடுக்க முற்பட்ட வேளைகளில் மிகக் கடுமையாகத் பழிவாங்கப்படலாம் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். இதற்குப் பதிலாக மட்டக்களப்பு நகரிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) காரியாலயங்களுக்கும் மற்றும் அவர்களது முகாம்களுக் கும் சென்று தமது பிள்ளைகளைத் தேடி வருவதுடன் அவர்களை விடுதலை செய்யுமாறு மன்றாடியும் வருகின்றனர். இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கொலை நடவடிக்கைகளைத் தொடருவது டன் படையினருக்கு ஒத்துழைப் புப்புரிந்து வருவோரெனக் காணப் படும் முகாம்வாசிகளைச் சுட்டுக் கொலை செய்தும் வருகின்றனர்.

திருகோணமலையைத் தமது பூர்வீக மாவட்டமாகக் கொண்ட இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக அவர்களது எதிர்காலம் குறித்த கேள்வியானது இரண்டாவது முக்கிய பிரச்சினையாகும். திரு கோணமலை மாவட்ட மீள்வரவு குறித்த பிரச்சினை யானது, அதற்காக எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளையடுத்து தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே பதற்ற நிலைமைகளைத் தோற்று வித்து வந்துள்ளது. கடந்த ஒருவருட காலத்திற்கு மேலாக திருகோணமலையில் இனங் களிடையே கொந்தளிப்பானதொரு நிலைமை உருவாகி வந்துள்ளது. மட்டக்களப்பிற்கு உயிர் பிழைக் கும் பொருட்டுத் தப்பியோடிய இடம் பெயர்ந்த மக்களது திரும்புதலும், மீளக் குடியமர்த்தப் படுதலும் எதிர்காலம் தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சி னையாக இருக்கும். இந்த வகையில் மட்டக்களப்பில் தற்போது இருக்கும் சகல இடம்பெயர்ந் தோரும் பாரபட்சமின்றி, நீதியான முறையில் தனியே நலன்புரி நிலையங்களிலுள்ளோரை மாத்திர மின்றி, வேறு குடும்பங் களுடன் நண்பர்களுடன் மற்றும் வாடகை இடங்களில் இருப்போரையும் கவனத்துடன் கணக்கிலெடுத் துப்பதியப்படுவதாக இருக்க வேண்டியது மிகவும் அவசிய மாகும். இந்த அடிப்படையில் பதற்ற நிலைமைகள் எவ்வாறு தோன்றக் கூடியதாக இருக்கும் என்பது குறித்து, அதன் சாத்தியங்களை சிந்தித்துள்ள தொண்டு முகவர் நிறுவனங்கள், திருகோணமலைப் பகுதியில் தற்காலிக இடங்களை முன் கூட்டியே அடையாளப் படுத்தி வைத்துள்ளன. அத்தகையதொரு இடமான கிளிவெட்டியில் ஏற்கெனவே தற்காலிக தங்கு மிடங்கள் அல்லது இடைத்தங்கல் ஒதுக்கிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இந்த மக்கள் தங்களுடைய கிராமங் களுக்குத் திரும்பக் கூடிய விதத்தில் பாதுகாப்பு நிலைமை சீரடையப் போவதில்லை. சம்பூரில் உத்தேசிக்கப்பட்டுள்ள அனல்மின் நிலையத்திற்குரிய பகுதியைச் சூழ ஒரு உயர் பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்து முகமாக விசேட பொருளாதார வலயங்களை உருவாக்கும் திட்டத்தினாலும் மற்றும் திருகோணமலையில் நவீன நகரமயவாக்கத்தை ஏற்படுத் துவதற்கான துரித திட்டங்கள் போன்றவற்றாலும் குறிப்பாக இந்த மாவட்டத்தில் காணி ஒதுக்கீடு தொடர்பில் பல்வேறு சிக்கல்களும் குழப்பங்களும் உருவாகும். இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்ப முடியுமோ இல்லையோ, இதனால் பல பாதிப்புகள் ஏற்படலாம்.

<u>தமிழில்</u> : ஜி.ரி.கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்: திறந்த வெளிச்சிறைச்சாலை

அமு ஜோசப்

ஏ9 நெடுஞ்சாலை மூடப்பட்டதோடு யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை தீவிர நெருக்கடிக்குள்ளானது. இந்த நெருக்கடிக் காலத்தில் யாழ்ப்பாணம் சென்று வந்த இந்தியப் பத்திரிகையாளர் அமு ஜோசப் எழுதிய கட்டுரை இது. வடக்கு கிழக்கின் அரசியல் தொடர்பான அவரது பார்வை சரிநிகரின் பார்வையில் இருந்து வேறுபட்டதாயினும் யாழ் நிலைமை பற்றி அவரது அவதானங்கள் முக்கியமானவை. யாழ்ப்பாணத்தின் நெருக்கடி நிலைமையை தன்னுடைய பார்வையில் அவர் எழுதிச் செல்கிறார். யாழ்ப்பாணத்தின் நிலைமையில் இற்றைவரை எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையில் நான்கு மாதங்களுக்கு முதல் இக்கட்டுரை எழுதப்பட்டிருந்தாலும் இன்னமும் பொருத்தப்பாடாய் தோற்றுகிறது.

இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கிழக்கு மாவட்டங்களாகிய திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களில் மீண்டும் உக்கிரமடைந்த மோதல்களை அடுத்து மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய அவலநிலை மக்களுக்கு ஏற்பட்டது. உயிராபத்துக்கு மத்தியில் கடந்த டிசம்பர் 15ஆம் திகதி மழைகாலத்தில் கடலில் எதிர்கொள்ள நேர்ந்த பாதகமான நிலைமைகளையும் மீறி வாகரைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அவசர அவசரமாக வள்ளங்களில் வெளியேற முயற்சி எடுத்த போது குழந்தைகள் உட்படப் பலர் பலியான சம்பவங்களும் அதனிலும் அதிகமானோர் காணாமற் போன சம்பவங்களும் நேர்ந்தன.

கிழக்குக் கரையில் புதிதாக மூண்ட இந்த நெருக்கடிநிலை ஓகஸ்டிலிருந்து யாழ் குடாநாட்டை முடக்கி நீடித்து நிலை கொண்டிருக்கும் இன்றைய நிலைமையிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். விடுதலைப் புலிகளின் பெரியளவிலான தாக்குதலின் எதிரொலியாக இலங்கை இராணுவம் மேற்கொண்ட பதில் நடவடிக்கையின் விளைவாக முகமாலையிலிருந்து வடக்கு நோக்கி யாழ்ப்பாணத்தையும் கண்டியையும் இணைக்கின்ற ஏ-9 நெடும் பாதை மூடப்பட்டது. யாழ்ப்பாண முற்றுகையால் இரு பக்கங்களுக்குள்ளும் இடிபாடுகளுக்குள்ளாகும் மத்தளத்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யொத்த இக்கட்டானதொரு நிலைக்கு மக்கள் ஆளாகியுள்ளதாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல் தெரிவித்தார்.

கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக குடாநாட்டு மக்களின் துன்பம் தொடர்கின்றது. இன்று வரை நீடித்து வரும் இந்த அவலமானது வெளியுலக மக்களின் கவனத்தையும் அதிகாரிகளின் நடவடிக்கைகளையும் கோரி அறைகூவல் விடுத்த வண்ணமிருக்கின்றது. உண்மையிலேயே மக்களின் தலைக்கு மேல் சென்று விட்ட இந்த யுத்தத்தில் யாழ்.குடாநாட்டு அனுபவங்கள் குறித்தான எச்சரிக்கையானது கிழக்கு நிலைமை கட்டுமீறிப் போவதிலிருந்து தணிப்பதற்கு ஒருவேளை உதவக் கூடும்.

ஒருவகையில் யாழ்ப்பாணமானது அழகிய சிறிய நகரம். இந்தியாவின் சிறிய நகரங்களை அவற்றின் முகம் தெரியாது உருக்குலைத்துவிட்ட நகரமயமாக்கல் என்னும் பாதிப்புகளில் அடிபட்டுப் போய்விடாத ஒரு நகரமாகவே அது இன்னும் காட்சியளிக்கின்றது. எனினும் நிச்சயமாகவே 'மால்குடி' போன்றதொரு புனைவும் அல்ல. பலாலி விமானத் தளத்தில் கால்பதித்த உடனேயே யாழ் மண்ணின் அசாதாரண சூழ்நிலையைக் காணக்கூடியதாக இருந்தது. விமானத் தளத்திலிருந்து பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனம் யன்னல்கள் மறைக்கப்பட்டு இருட்டாக்கப்பட்டு சாரதி மாத்திரமே முன் செல்லும் பாதையினை பார்க்கக் கூடியவாறு அமைக்கப்பட்டிருந்தது. நீண்ட நாட்களாகவே கைவிடப்பட்டிருக்கும் குண்டு வீச்சுகளுக்கு இலக்காகி உருக் குலைந்த வீடுகளையும் குண்டுகளால் தாறுமாறாகத் துளைக்கப்பட்டிருந்த கட்டிடங்களையும் உள்ளடக்கியதான உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து எம்மை வெளியே கொண்டு சென்ற போது ஆயுதந் தாங்கிய படைவீரர்கள் வாகனங்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் கூடவே வந்தனர். பாதுகாப்பு வலயத்தின் வெளியே பொது மக்களை யாழ் நகருக்குள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பல்வேறு வகையான ஆபத்துக்களை (கண்ணிவெடிகள் உட்பட) எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சம் காரணமாக, இராணுவ வாகனத் தொடரணிகள் பயன்படுத்துகின்ற வீதிகளை தவிர்த்தே பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ் நகரத்துக்குள்ளே மூலை முடுக்குகளில் அமைந்த காணிகள், கட்டிடங்கள் படையினரால் பொறுப்பேற்கப்பட்டு சூழவும் அரண்கள் அமைக்கப்பட்ட நிலையில் பாதுகாப்புக் கடமையில் சீருடை தரித்த படையினர் நிரந்தரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலய யாழ்ப்பாண அலுவலகத்தின் தகவலின்படி ஆகக் குறைந்தது 37,000 மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இதில் இலங்கை இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயங்கள், கனரக பீரங்கித் தளங்களுக்கு அண்மையில் வசிப்பவர்களும் நாளாந்தமாக தற்போது அதிகரித்துக் காணப்படும் எறிகணை வீச்சுகளுக்கு அஞ்சி தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்தோரும் அடங்குவர். நீண்ட காலமாகவே குடிபெயர்ந்து வாழ்பவர்களின் பட்டியலில் இவர்களும் இணைந்துள்ளனர். நீடித்து வரும் போரின் விளைவாக அண்மையில் இடம்பெயர்ந்த 37,000 மக்களில் 8,000 பேர் தற்காலிக நலன்புரி நிலையங்களில் வசிக்கும் அதே வேளை ஏனையோர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

குடாநாட்டை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கின்றதும் யாழ் மக்களின் ஜீவாதாரத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் போக்குவரத்துச் செய்வதற்குமான ஒரேயொரு நெடுஞ்சாலையாகிய ஏ-9 சாலை மூடப்பட்டிருப்

**ஒருவகையில் யாழ்ப்பாணமானது அழகிய சிறிய நகரம். இந்தியாவின் சிறிய நகரங்களை அவற்றின் முகம் தெரியாது உருக்குலைத்துவிட்ட நகரமயமாக்கல் என்னும் பாதிப்புகளில் அழுபட்டுப் போய்விடாத ஒரு நகரமாகவே அது இன்னும் காட்சி யளிக்கின்றது. எனினும் நிச்சயமாகவே 'மால்குழ' போன்றதொரு புனைவும் அல்ல. பலாலி விமானத் தளத்தில் கால் பதித்த உடனேயே யாழ் மண்ணின் அசாதாரண சூழ்நிலை யைக் காணக்கூழயதாக இருந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதானது குடாநாட்டு மக்களை யுத்தப் பிராந்தியத்திற்குள் சிக்க வைத்திருப்பதுடன் வெளியிலி ருந்து அவர்களுக்கு எந்தவொரு உணவுப் பொருளும் கிட்டவிடாது தடுத்துள்ளது. கடல் மற்றும் ஆகாய மார்க்கப் போக்குவரத்தா னது இருதரப்புகளுக்கும் இடை யிலான மோதல்கள் முரண்பாடுகள் காரணமாகப் பெருமளவில் பாதிப் புக்குள்ளாகியுள்ளது. கொழும்புக் கும் யாழ்ப்பாணத்திற்கும் இடை யிலான வர்த்தக விமானப் போக்கு வரத்துக் கூட நவம்பர் மாத இறுதி வாரத்திலேயே ஆரம்பிக்கப்படக் கூடியதாக இருந்துள்ளது.

குடாநாட்டு மக்களைப் பொறுத்த வரை அவர்கள் அனுபவித்த இரு தசாப்த கால யுத்த கொடுமைகளை விட கடந்த ஒகஸ்ட் மாதத்திலி ருந்து அனுபவித்து வரும் இன்னல் களானது மிகக் கடுமையானதாக வுள்ளது. கடந்த இரு மாதங்களுக் கும் மேலாக குடாநாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாடானது அம் மக்களின் பிரதான பிரச்சினையாக உருவெடுத்துள்ளதுடன் வரை யறுக்கப்பட்ட உணவுப் பங்கீட்டின் மீது அநேகமாக முற்று முழுதாகத் தங்கியிருக்க வேண்டிய கட்டாய நிலைமையினையும் இது ஏற்படுத் தியுள்ளது. அரிசி, மா, சீனி, பால்மா மற்றும் தானியங்கள் ஆகியன ஒரு கூட்டுறவுக் கடையில் விநியோகிக் கப்படுகின்ற அதேவேளை ஏனைய அத்தியாவசிய உப உணவுப் பொருட்களாகிய வெங்காயம், மிளகாய், சமையல் எண்ணெய் ஆகியன வேறொரு கூட்டுறவுக் கடையினூடாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன. குடாநாட்டு மக்கள் மிகச் சொற்ப அளவிலேயே விநியோகிக்கப் படுகின்ற இந்த அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு மணிக் கணக் காக நீண்ட வரிசைகளில் காத்து நிற்க வேண்டிய நிர்ப்பந் தங்களுக் குள்ளாகி இருக்கின்றனர். போதிய ளவு பொருட்கள் கிடைக்க முடியா திருப்பது மட்டுமல்லாது குழந்தை களுக்கான பால்மா போன்ற அத்தி யாவசியமான உணவுப் பண்டங் கள் நேரத்திற்கு நேரம் கிடைக்க முடியாமற் போய்விடு கின்றன.

திறந்த சந்தையில் கிடைக்கக் கூடிய காய்கறிகள் போன்ற ஒரு சில பொருட்களின் விலைகள் கூட கடந்த ஒகஸ்ட் மாதத்திலிருந்து மூன்று நான்கு மடங்குகளாக அதிகரித்து அனேகமான மக்க ளுக்கு எட்ட முடியாதனவாகவும் போயுள்ளன. பேராசிரியர் குமார வடிவேல் சுட்டிக் காட்டியது போல உயிர் வாழ்வதற்கு அரிசி மாத்திரம் போதுமானதல்ல. சவர்க்காரம் மற்றும் சுகாதாரப் பொருட்கள் உட்பட காகிதாதிகள் இன்னும் பல பொருட்கள் சாதாரண வாழ்க்கைக்கு அவசியமாகும். பெற்றோலும், டீசலும் சந்தையினுள் மீள நுழை கின்ற அதேவேளை, மண்ணெண் ணெயின் விநியோகம் மிகக் குறைந் தளவிலேயே இன்னும் காணப் படுகின்றது.

இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷவின் நவம்பரில் மேற் கொள்ளப்பட்ட இந்தியப் பயணத் தின் இறுதியில் தமிழ் நாட்டி லிருந்து உணவு மற்றும் அத்தியா வசியப் பொருட்களை கொள் வனவு செய்து நேரடியாகவே அவற்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப் போவதாக அறிவித்திருந்தார். இது மிகவும் இலகுவானதும், மிகவும் விரைவா னதுமான வழியெனவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார். ஆனால் கடந்த டிசம்பர் மத்தி வரை எந்தப் பொருளும் தமிழ் நாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு முற்று கைக்குள்ளான குடாநாட்டு மக்க ளுக்குப் போய்ச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. எவ்வாறாயினும் டிசம்பர் 16ஆம் திகதி வெளியான இலங்கை உள்ளூர்ப் பத்திரிகைகள் உணவுப் பொருட்கள் இந்தியாவி லிருந்து சென்று கொண்டிருப்பதாக செய்திகள் வெளியிட்டன. இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினை உணவு விநியோகத்தை மேற் பார்வை செய்யுமாறு இலங்கை அர சாங்கம் கேட்டுக் கொண்டதாகவும் இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

யுனிசெப்பின் யாழ் அலுவலகத் தலைவர் யூடித் புறுானோவின் கணிப்பின்படி குடாநாட்டின் ஆறு இலட்சம் மக்கள் தொகைக்கு ஆகக் குறைந்தது 10,000 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களேனும் மாத மொன்றுக்குத் தேவையென்ப தாகும். நிச்சயமாகக் கப்பல் மூலம் கொண்டு வரக் கூடிய அதுவும் குறிப்பாக மழை காலத்தில் கொண்டு வரப்படக்கூடிய உணவுப் பொருட்களின் அளவிற்கு ஓர் எல்லை உண்டு என்பது வெளிப் படை.

இந்த மக்கள் எதிர்கொள்கின்ற பாரிய பிரச்சினைகளைக் குறைத் துக் கொள்ளும் முகமாகவும் தாங்கள் ஒரு திறந்த சிறைச் சாலைக்குள் துன்பத்தை அனுப வித்து வருகின்றோம் என்ற மன உணர்விலிருந்து அவர்களை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை செய்வதற்காகவும் ஏ-9 பாதையானது மீளத் திறக்கப்பட வேண்டிய அவசர தேவையினை தொடர்ச்சியாக யாழ் ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் வலியுறுத்தி வருகின்றார். இருப்பினும் அவரது விண்ணப்பமானது சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களது பிடிவாத நிலைப்பாடுகள் மேலும் கசப்புணர்வுகள் காரணமாக செவிடன் காதில் ஊதிய சங்கு போல் பயனற்றதாய் போய் விட்டது.

பொதுமக்களுக்கு ஏற்பட்டுவரும் சுகாதாரத் தேவைகள் தொடர்பான குறைபாடுகள் மற்றையதோர் முக்கிய பிரச்சினையாகும். உணவுத் தட்டுப்பாட்டுடன் பொதுமக்களால் இயலக் கூடிய விலையில் உணவுப் பொருட்கள் அவர்களுக்குக் கிட்டாமையும் வெளிப்படையாகவே போஷாக்கின்மைப் பிரச்சினை பெருமளவில் உருவாக வழிவகுத்து வருகின்றது. உள்ளூர் மருந்தகங்கள் பெரும்பாலானவை மருந்துகளற்ற நிலையிலேயே காலத்தைக் கடத்துகின்றன. யாழ் குடாநாட்டிலுள்ள வைத்திய சாலைகள் சர்வதேச முகவர்கள் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட முக்கிய சில மருந்துகள் மற்றும் சாதனங்களது உதவியுடனேயே தமது செயற்பாட்டைத் தொடர வேண்டிய நிலையிலுள்ளன. எவ்வாறாயினும் ஒட்சிசன் சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு, மின் பிறப்பாக்கிகளுக்குரிய எரிபொருள் தட்டுப்பாடு என்பவற்றின் காரணமாக கடுமையான சுகவீனமுற்றதால் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கண்காணிக்கப்பட வேண்டியவர்களும் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டியவர்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானத்தின் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஏற்கெனவே சிக்கலாகிவிட்ட இந்த நிலைமை அண்மையில் மிக வேகமாகப் பரவி வருகின்ற சிக்குன்குனியா தொற்று நோயினாலும் அதற்குத் தேவையான மருந்து வகைகளின் பற்றாக்குறைகளினாலும் மேலும் மோசமாகி விட்டது.



கல்வியும் கூடப் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கடந்த இரு மாதங்களாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் முகமாக அண்மையில் மீளத் திறக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருந்தாலும் நவம்பர் மாதத்தில் பிள்ளைகள் பாடசாலை நேரங்களிலும் உணவுப் பொருட்களுக்கான நீண்ட வரிசையிலேயே காத்து நிற்பதைக் காணமுடிந்தது. ஒரு காலத்தில் புகழ் பெற்றிருந்த யாழ் பல்கலைக்கழகம் உத்தியோக பூர்வமாக மூடப்படாது விட்டாலும் கூடக் கற்பித்தல் நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு மாணவர்களின்றியே இயங்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியிருப்பதை துணைவேந்தர் சூசகமாகத் தெரிவித்தார். மூன்றிலொரு பகுதி மாணவர்கள் குடாநாட்டுக்கு வெளியிலுள்ளவர்கள். ஓகஸ்ட் மாதத்தில் பிரச்சினைகள் ஆரம்பமான வேளை திக்கற்ற இளம் மாணவர்களை இரு மாதங்களுக்குத் தங்குமிடம் மற்றும் உணவு அளித்து பராமரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு பல்கலைக்கழகம் உள்ளானதுடன் ஆயுதப் படைகளின் ஒத்துழைப்புடன் அவர்களை வீடுகளுக்கும் அனுப்பி வைத்தது. பல்கலைக்கழக நிர்வாகத்தினர் ஜனவரியளவில் (2007) மீண்டும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் விதத்தில் துரிதமாகச் செயற்பட்டு வருகிறார்களெனப் பேராசிரியர் குமாரவடிவேல் தெரிவித்தார். மேலும் வேறு மாவட்டங்களிலிருந்து மீண்டும் மாணவர்களை அழைத்து வரத்தக்கதாக அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு உட்பட தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் போன்றவற்றுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மேற்கூறிய பிரச்சினைகள் மாத்திரமன்றி மேலும் பரந்தளவில் வேலையில்லாப் பிரச்சினைகளையும் எதிர் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் யாழ் சமூகத்தினர் மத்தியில் புதிதாகத் தோன்றியுள்ளது. "பாதுகாப்பு" என்ற பெயரில் மீன்பிடித் தடை காரணமாக பெருந் தொகையானோர் தமது ஜீவனோபாய மார்க்கத்தினை இழந்துள்ளனர். மூலப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகளால் தேர்ச்சியான திறன்படைத்த தொழிலாளர்களும், ஏனையோரும் தமது தொழில்களைத் தொடர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பல்வேறுபட்ட பொருட்களது வழங்கலில் ஏற்பட்டுள்ள பற்றாக் குறைகள் தட்டுப்பாடுகள் காரணமாக கடைகள் மற்றும் நிறுவனங்களது உரிமையாளர்கள் அவற்றை மூடிவிட வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். இது மேலும் ஒரு தொகுதி மக்களை வேலையற்றவர்களாக ஆக்கியுள்ளது. எரிபொருளுக்கு நிலவுகின்ற தட்டுப்பாடானது போக்குவரத்துத் துறையிலுள்ளோருக்கு குறிப்பாக போக்குவரத் துத்துறை ஓட்டோ சாரதிகள் போன்றோருக்கான வருமானத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தொழிற் திணைக்களக் கணிப்பீட்டின்படி இந்தவகையில் சிறிய அளவிலான தனியார் துறையினைச் சேர்ந்த இரண்டாயிரம் பேர் தமது தொழில் வாய்ப்புகளை முற்றாக இழந்துள்ளனர். தட்டுப் பாடுகள் மற்றும் பல மடங்கிலான அதிகரித்த விலைவாசி உயர்வு களுக்கு மத்தியில் பெருந்தொகையானோர் தமக்குரிய தொழில் வாய்ப்புகளையும், ஜீவனோபாய வழிவகைகளையும் இழந்துள்ளது குடாநாட்டு சமூகத்தின் அவலத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பன் மடங்காகப் பெருக்கியுள்ளது.

இதேவேளை பெருமளவிலான ஆயுதப்படையினரின் அதிகரித்த பிரசன்ன நிலையிலும் மாலை முதல் அதிகாலை வரை ஊரடங் குச் சட்டம் கடுமையாக அமுலாக் கப்பட்ட வேளையிலும் ஆட்கள் காணாமற் போதலும், நீதிக்குப் புறம்பான வகையில் பாரதூரமான ஆட்கடத்தல் கொலைகளும் தொடர்கின்றன. இரவில் முகமூடி அணிந்த ஆயுததாரிகள் வெள்ளை வான் சகிதம் வந்து வீட்டிலிருந்து ஆயுதமுனையில் ஆட்களைக் கடத்துவதையும் ஏனையோர் எத்தகைய சுவடுகளுமின்றிக் காணாமற் போவது குறித்தும் தமது திகில் அனுபவங்களை அக்கம் பக்கம் பார்த்துக் காதோடு காதாக மக்கள் கதைத்துக் கொள்கின்றனர். வெள்ளைவான் விவகாரம் இலங் கையைப் பொறுத்த வரையில் இன்று நேற்று முளைத்த ஒன்றல்ல. 1980களிலிருந்து நாட்டின் பல பாகங்களிலும் வெவ்வேறு காலப் பகுதிகளில் காணாமற் போவோர் தொடர்பில் சம்பந்தப்பட்டது தான் இந்த வெள்ளைவான்.

சகலரையும் அச்சுறுத்திய வெள்ளைவான் பயங்கரயுகம் மீண்டும் தலையெடுத்துள்ளதாக வும் ஓகஸ்டிலிருந்து நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாக வும் யாழ் வாசிகள் தெரிவித்தனர். காணாமற் போவோர் குறித்து குடும்பங்களோ உறவினர்களோ எதையும் செய்ய முடியாத வலுவற்றவர்களாகவே இருக்கின் றனர். கொலை குறித்து நீதி கோருவதோ அன்றி காணாமல் போவோரை தேடுவதோ அவர்கள் சக்திக்கு அப்பாற்பட்டதாகவே இன்றுவரை இருந்து வருகின்றது. திருமணம் நடைபெற்று இருவார காலப் பகுதிக்குள் தனது கணவனை கடத்திச் சென்று விட்டதாக இளம் மனைவி யொருவர் தெரிவித்தார். உள்ளூர் மனித உரிமைகள் ஆணை க்குழுவைப் பொறுத்த வரையில் இந்த வகையிலான மர்மக் குற்றங் களை ஆவணப்படுத்துவதைத் தவிர வேறெதனையும் செய்ய முடியாததொரு நிலையே காணப் படுகின்றது.

உள்ளூரிலிருந்து வெளியாகும் மூன்று சிறிய தமிழ்ப் பத்திரிகை களும் அச்சுறுத்தல்களுக்கும் வன்முறைகளுக்கும் இலக்காகி யுள்ளன. நவம்பர் மாத இறுதிக் காலப்பகுதிக்குச் சற்று முன்னதாக மாவீரர் தினத்துடன் தொடர்புடைய எத்தகைய செய்திகள் மற்றும் உரைகள் போன்றவை உட்பட விடுதலைப் புலிகள் சம்பந்தமான செய்திகள் எவற்றையும் பத்திரி கைகளில் பிரசுரிக்கக் கூடாதென அச்சுறுத்தலுடன் கூடிய கண்டிப் பான உத்தரவுகள் அப்பத்திரிகை களுக்கு ஆயுதப் படையினரால் இடப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இத்தகைய தான நிலை தர்மசங்கடமானதொரு நெருக்க டிக்கு பத்திரிகைகளை உட்படு த்தியது மாத்திரமன்றி இதை யடுத்து இரு தரப்பினர்களாலுமே அவற் றுக்கு ஆபத்தோ அல்லது இடையூறோ நேரலாம் என்ற அச் சத்தையும் தோற்றுவித்திருந்தது.



இவற்றுள் ஒரு பத்திரிகையான உதயன் பல மாதங்களாக நேரடித் தாக்குதல்களுக்கு உள்ளாகி வந் தது. உலக பத்திரிகைகளுக்கான சுதந்திர தினத்துக்கு சற்று முன்னதாக அவர்களுடைய காரியாலயத் திற்குள் அத்து மீறிப் பிரவேசித்த ஆறு ஆயுததாரிகளான இளைஞர் களால் காரியாலயம் தாக்கிச் சேதப்படுத்தப் பட்டதுடன் ஊழியர் கள் இருவர் கொலை செய்யப் பட்டனர். ஏனைய இருவர் படு காயங்களுக்கு உள்ளாகினர். ஆயுததாரிகள் இரு பத்திரிகை யாளர்களைக் கேட்டுக் கொண்டே காரியாலயத்திற்குள் பிரவேசித் தனர். ஆனால் அவர்கள் அங்கு வந்த போது தேடப்பட்ட இருவரும் அங்கிருக்கவில்லை. (ஒருவர் ஒருசில நிமிடங்களுக்கு முன்பே வெளியேறியிருந்தார்). இதன் பின்பு காரியாலயத்திற்குத் திரும்பிய பத்திரிகையாளர்களால் அடுத்த நாளுக்குரிய பத்திரிகை தவறாது வெளிக் கொண்டுவரப் பட்டது. கொல்லப்பட்ட இருவர் களின் புகைப்படங்களை முன் பக்கத்தில் தாங்கியவாறு இப்பத்திரி கைப் பதிப்பு வெளியானது. அன்றைய பணியில் ஈடுபட்ட பத்திரிகையாளர்களிருவர் உயிரா பத்துக்கள் நேரலாமென அஞ்சி காரியாலயத்திற்குள்ளேயே பல வாரங்களாக தங்கியிருக்க நேர்ந்த தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓகஸ்ட் காலப் பகுதியில் இப்பத்தி ரிகைக்காகப் பணியாற்றிய சாரதி ஒருவர் கொல்லப்பட்டதுடன், அச்சு சாதனங்களை உள்ளடக்கிய களஞ்சியப்பகுதிகள் முற்றாகவே எரிக்கப்பட்டது. செப்ரம்பரில் பத்திரிகைக் காரியாலயத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்த இருவர், அவர்களில் ஒருவரின் கையில் பிஸ்ரல் இருந்தது. இவர்களி ருவரும் தமது அறிக்கையினைப் பத்திரிகையில் வெளிவரச் செய்யா விடில் அதன் விளைவாக வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளை அனைவரும் எதிர் கொள்ள நேரிடுமென அச்சுறுத்திச் சென்றனர். மிக அண்மைக் காலத் தில், டிசம்பரில் பத்திரிகைக் காரியாலயத்திற்கு வெளியே காவற் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ்காரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. துரதிர்ஸ்டவசமாக தாமே முன்வந்து சுயதணிக் கையில் ஈடுபட வேண்டிய நிர்ப் பந்தம் தமக்கு ஏற்பட்டிருப்பதாக உள்ளூர் பத்திரிகையாளர்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் உட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் கூட யாழ்ப்பாணத் தில் இயங்கி வருகின்ற தமது காரியாலயங்களைச் சுற்றி அண் மைக் காலத்தில் பாதுகாப்புக் களைப் பலப்படுத்தியிருக்கும் நடவடிக்கைகளானது பிரச்சினை யின் தாற்பரியத்தை மிகத்து லாம்பரமாக எடுத்துக் காட்டுவதாக வுள்ளது. இவை அமைந்துள்ள அயல் பகுதிகளில் ஆட்கடத்தல் கள் உட்பட பல வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்திருந்தன. இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு இத்தகைய நிறுவனங்களே இலக்காகி வரும் போது சாதாரண மனிதர்களின் நிலைமை எவ்வாறி ருக்குமென ஊகிக்க முடியும்.

யாழ்ப்பாண மக்கள் தமது மனோ வலிமையினால் பலர் இக்கடின நிலையினை உள்ளடங்கிய விசனங் களுடன் தாங்கிக் கொள்ள முடியு மென்றாலும் இவற்றையும் மீறி சாதாரண மக்கள் தமது இயலாமை யையும் பீதியையும் வெளிக் காட்டவே செய்கின்றனர். கடந்த பல மாதங்களாக முள் அடர்ந்த கடின பாதையாகிய சமாதான நோக்கிலி ருந்து இரு தரப்பினரும் முற்றாக விலகிச் சென்று விட்டதற்கான பெருவிலையினைக் குடாநாட்டு பொதுமக்கள் செலுத்தி வருவதை மிக வெளிப்படையாகவே காண முடிகிறது.

நவம்பர் 24ஆம் திகதி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்ற வுள்ள மாவீரர் தின உரை குறித்த பதற்றங்களும், எதிர்பார்ப்புகளும் நிலவிய வேளையில், "இராணுவத் தீர்வினை அவர்கள் தேர்வு செய்யக் கூடாதென்ற எதிர்பார்ப்புடன் பிரார்த்தனை செய்கிறேன்" என யாழ் ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்தார். நாட்டின் அரசியல் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு முயற்சிகள் இறுதியில் தோல்வியிலேயே முடிந்துள்ளதை அவர் இத்தருணத்தில் சுட்டிக் காட்டினார். ஒரு சில நாட்க ளின் பின்னர் பிரபாகரன் தனது உரையின் போது "தமிழ் ஈழ மக்களுக்குச் சுதந்திரத் தனியரசை விட வேறு வழி எதுவுமில்லை" என உறுதியாகவும், அறுதியாகவும் கூறிய வேளை, இதற்கான அரசாங் கத்தின் பதில் களத்தில் என்னவாக இருக்கப் போகிறது என்பது குறித்து பலத்த அங்கலாய்ப் பினையே யாழ் மக்கள் மனதில் தோற்றுவித்தது.




**தமிழில்** : ஜி.ரி.கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டர் ஐவன்

# லலித் காமினியின் பிரேமதாச பகைமையும் மங்கள, சிறிபதியின் ராஜபக்ச பகைமையும்

பிரேமதாசவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட குற்றவியல் பிரேரணையின் போது நீங்கள் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக உற்சாகமாக செயற்பட்டீர்கள். எனினும் ராஜபக்சவுக்கு எதிரான போராட்டத்தில் நீங்கள் கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்வதிலிருந்து விலகியிருக்கிறீர்கள் என்பது தெளிவாகப் புரிகின்றது. ஏன்?



நான் நன்கறிந்த நபர் ஒருவர் என்னிடம் இவ்வாறு வினவினார். அவர் மங்கள குறித்தும் சிறிபதி குறித்தும் மிகவும் ஆர்வத்துடன் உரையாடிக் கொண்டிருந்தார். ஆயினும் அவரின் கேள்விக்கு நான் அளித்த பதிலினால் அவரது ஆர்வம் மறைந்து விட்டமையை அவதானிக்கக் கூடியதாக விருந்தது.

உண்மை தான். அவர் கூறுவதைப் போன்று காமினியும் லலித்தும் முன்னெடுத்த கிளர்ச்சிக்கு நான் மிகவும் உத்வேகத்துடன் ஆதரவளித்திருந்தேன். அவர்களது அரசியல் கிளர்ச்சி எனக்குள் பெரும் உத்வேகமான நிலையை ஏற்படுத்தியிருந்த போதிலும் மங்கள மற்றும் சிறிபதியின் கிளர்ச்சி வேடிக்கையை அன்றி எனக்கு ஆர்வம் எதனையும் ஏற்படுத்தவில்லை.

எனினும் இந்த இரண்டு கிளர்ச்சிகளிலும் சில விடயங்களில் ஆச்சரியமான ஒற்றுமைகள் நிலவுகின்றன. லலித் மற்றும் காமினி முன்னெடுத்த வேலைத் திட்டம் மீண்டும் புதிய ரூபத்தில் வந்துள்ளது என்று பலருக்கும் தோன்றுவது அதனாலேயே எனலாம்.

குற்றவியல் பிரேரணை பகிரங்கமடைவதற்கு முன்னர் பிரேமதாச விரோத உள்ளக கிளர்ச்சியொன்று இரகசியமாக ஏற்பாடாகி வருவதை நான் அறிந்திருந்தேன். சுதந்திரக் கட்சியிலிருந்த அனுரவையா அல்லது அவரது அன்னையையா இந்த வேலைத்திட்டத்துடன் இணைத்துக் கொள்வது என்ற பிரச்சினை ஆரம்பத்திலேயே அவர்களுக்கிருந்தது.

லலித்தினதும் காமினியினதும் விருப்பு தாய்க்கு அன்றி மகனுக்கே இருந்தது. இத் தெரிவு தவறானது என்று காமினிக்கு நான் விளக்கமளித்திருந்தேன். வயதாகியிருந்தாலும் சுதந்திரக் கட்சியை வழிநடத்தும் அதிக அதிகாரம் தாய்க்கே உண்டு என்றும் இவ்வாறான நடவடிக்கையில் அதிக நம்பகத் தன்மையை வைக்கக் கூடிய தகுதி அவருக்கே உண்டு என்றும் இவ்வாறு நம்பகத் தன்மையுடன் அனுரவுடன் செயற்பட முடியாது என்றும் நான் தெளிவுறுத்தினேன். எனது கருத்தை லலித் ஏற்றுக் கொண்டார். இதன்படி குற்றவியல் பிரேரணை தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் திருமதி பண்டாரநாயக்கவுடன் இணைந்து செயற்படுத்தப்பட்டது. அவருடனான தொடர்புகளின் போது இடைத்தரகராக அனுருத்த செயற்பட்டார். குற்றவியல் பிரேரணையை பகிரங்கப்படுத்தும் வரையில் அவ்விடயம் பற்றி அனுருத்தவுக்கும் ஏனையோருக்கும் அது இரகசிய விடயமாகவே இருந்தது.

பிரேமதாச மீது லலித்திற்கு விருப்போ நம்பிக்கையோ இல்லாத போதிலும் ஆரம்பத்தில் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அவருடன் இணைந்து செயற்பட்டார் என்பதை நான் அறிவேன். 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் அவர் ஒரு விடயத்தைப் பின்வருமாறு கூறினார். 'கொம்பினேஷன் லலித் - பிரேமதாசவாக இருந்தால் அது மிகச் சிறந்த கொம்பினேஷனாக இருந்திருக்கும். ஆனால் பிரேமதாச லலித் கொம்பினேஷனிலும் பிழையில்லை'

ஜனாதிபதி பதவி லலித்திற்கு கிடைத்து பிரேமதாச பிரதமராகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தால் இது மிகச் சிறந்த இணைப்பாக விருந்திருக்கும் என்பதே அவரின் அக்கருத்தின் உட்பொருளாகும். பிரேமதாச ஜனாதிபதியானால் லலித் பிரதமரா வதும் மோசமான இணைப் பாகவிருந்திருக்காது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

பிரதமர் பதவி கிடைக்காதது லலித்திற்கு வேதனையான விடயமாகவிருந்தது. ஆனால் அது மனவேதனை யாக மட்டுமே இருந்தது. பிரேமதாசவை வெறுக்கும் அளவுக்கு அவரை தள்ளி யது ரிச்சட் டி சொய்சாவின் படுகொலைச் சம்பவமாகும். ரிச்சர்ட்டுடனும் அவரது தாயார் மனோராணியுடனும் லலித்திற்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. ரிச்சர்ட்டின் படுகொலை தன்னைப் பழிவாங்கும் முகமாக மேற் கொள்ளப் பட்ட செயல் என்று லலித் விளங்கிக் கொண்டார். அப்படுகொலை பிரேம தாசவின் ஆணையின் பிரகாரம் மேற் கொள்ளப் பட்ட படுகொலை என்று அவர் நம்பினார். ரிச்சர்ட் டிற்கு ஏற்பட்ட முடிவு வருண கருணா திலக்க வுக்கு ஏற்படும் என்றும் கருதினார். அவ்வாறான முடிவு வருணவுக்கு ஏற்படக் கூடாது என்று கருதிய லலித் அவரை தனது வீட்டில் மறைத்து வைத்திருந்தது மட்டுமன்றி பாதுகாப்பிற்காக நாட்டை விட்டு வெளியேற விமான நிலையத்திற்கு தனது உத்தி யோகபூர்வ வாகனத்திலேயே அழைத்துச் சென்றிருந்தார்.

எனினும் ரிச்சர்ட்டின் படுகொலை க்கு லலித்தின் நட்பு காரணமல்ல என்பது பிற்காலத்தில் தெரிய வந்தது. வருணவுக்கு ஜே.வி.பி யுடன் தொடர்பு இல்லாத போதிலும், ரிச்சர்ட்டிற்கு ஜே.வி.பி யுடன் தொடர்பு இருந்தது. ஜே.வி.பியுடன் ரிச்சர்ட்டிற்கு நீடித்த நட்புறவு இருந்ததை பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன அறிந்துக் கொண்டார். அத்தகவல் ரஞ்சன் விஜேரத்னவை ஆத்திரமடையச் செய்ததுடன் அவரது ஆத்திரம் படுகொலை யில் முடிவுற்றது. ரிச்சர்ட்டின் ஜே.வி.பியுடனான தொடர்பு குறித்து ரிச்சர்ட்டின் தாயார் (மனோராணி சரவணமுத்து) நன்கறிந்திருந்தார். ரிச்சர்ட்டின் கொலை தொடர்பாக விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு வொன்றை நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க முன்வந்த போதிலும் இவ்வாறான விசாரணைகள் தேவையற்ற தகவல்கள் வெளியாக



காரணமாகி விடும் என்ற காரணத்தினால் ரிச்சர்ட்டின் தாயார் அந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

நான் அறிந்த அரசியல்வாதி களிலேயே மிகவும் colourfull ஆன நபர் என்று லலித்தைக் கூறி விட முடியும். அவர் புத்திக் கூர்மையில் உயர்ந்த நிலையில் இருந்தார். அறியாத விடயங்கள் தொடர்பில் துரித அறிவைப் பெறும் திறமை அவருக்கிருந்தது. அவர் உயர்மட்ட புத்திசீவியாக மாறுவதை விடுத்து நடைமுறைச் சாத்தியமான அரசியல்வாதியாகவே திகழ்ந்தார்.

துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் அவரது வேலைத் திட்டத்திற்கு உலக வங்கி எதிர்ப்பு தெரிவித்திருந்தது. உலக வங்கி யின் எதிர்ப்பையும் பொருட் படுத்தாது அவர் அந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். இறுதியில் அவர் முன்னெடுத்த திட்டத்தினால் நாட்டிற்கு பெரும் வருமானம் ஈட்டக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. சதொசவை சாதாரண பொது மக்களும் நாடக் கூடிய சந்தையாக அவர் மாற்றினார். அதன் ஊடாக சந்தையில் பொருட் களின் விலைகளை சாதா ரண நிலையில் வைத்துக் கொள்ளக் கூடிய வலைய மைப்பை அவர் ஏற்படுத்திக் கொண்டார். மகாபொல திட்டமும் அவரால் உருவாக்கப்பட்ட சிறந்த திட்டமாக அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடை யிலான தூரத்தைக் குறைப்பதன் மூலம் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று அவர் கருதினார். யாழ்ப்பாணத்தி லிருந்து கொழும்பினூடாக அம்பாந்தோட்டை வரை செல்லும் அதிவேக பாதை குறித்து அவர் கனாக் கண்டது மட்டுமன்றி அத்திட்டத்தை நிறைவேற்ற தேவையான செலவீனம் தொடர் பான திட்டமும் அவரிடமிருந்து இருந்தது. இவ்வாறான அபிவிருத்தி வேலைத்திட்டம் அம்பாந் தோட்டை மற்றும் கொழும் புக்கிடையிலும், மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கிடையிலும் ஏற்படுத்து வதினூடாக தூரத்தைக் குறைத்து கிராமிய சிங்கள தமிழ் இளைஞர் களின் விரக்தி நிலையைப் போக்க முடிவதுடன், அவ்வாறான வேலைத் திட்டத்தின் மூலம் வேலையின் மையைப் போக்க முடியும் என்றும் அவர் கருதினார்.

அவர் பிரேமதாச தொடர்பில் கடும் பகைமை நிலையைக் கொண்டி ருந்தார் என்பது உண்மையாகும். ஆயினும் அவர் மங்கள மற்றும் சிறிபதி போன்று போராட்டத்தை தனிநபர் ஒருவரை அடிப்படை யாகக் கொண்டு முன்னெடுக்க வில்லை. பிரேமதாசவை தோற்கடி ப்பதுடன் மட்டுமல்லாது நிறை வேற்று ஜனாதிபதி முறையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவதனூடாக அரசியல் முறையை மாற்றி பலப்படுத்த லலித் முயற்சித்தார். நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை உருவாக்கிய 77வது அரசியல் அமைப்பை தயாரிக்கும் பணிகளில் அவரும் ஈடுபட்டிருந்தார். தனிநபர் ஒருவருக்கு மட்டும் அதிகாரங்களை வழங்கும் இவ்வகையான நடவடிக்கையில் தாமும் பங்குபெற நேர்ந்தது குறித்து அவர் மனம் வருந்தியிருக்கக் கூடும். குற்றவியல் பிரேரணை ஒன்றின் மூலம் மட்டும் புதிய அரசியலமைப்பின்படி நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஒருவரை பதவி நீக்க முடியாது என்பதை அவர் அறிந்திருக்கக் கூடும் என்றே நினைக்கின்றேன். எனினும் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேறு வழியில்லாததினால் அது தொடர்பான திட்டங்களை சட்டரீதியாக அன்றி சட்டவிரோதமாக அவர் பயன்படுத்திக் கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரு பகுதியினர் கைச்சாத்திடாத போதிலும் அன்று சபாநாயகராகவிருந்த எம்.எச். மொகமட், ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை பொறுப்பேற்றுக் கொண்டதாக (குற்றவியல் பிரேரணைக்கு தேவையான அரைவாசிக்கு குறையாத கையொப்பம் இல்லாத போதும்) ஜனாதிபதிக்கும் முப்படை தளபதிகளுக்கும் உத்தியோக பூர்வமாக அறிவித்தார். குற்றவியல் பிரேரணை ஆரம்பிப்பதற்கு தேவையான கையொப்ப எண்ணிக்கைகள் இல்லாத போதிலும் அந்தக் குற்றவியல் பிரேரணையை பகிரங்கப்படுத்தியதன் மூலம் குற்றவியல் பிரேரணைக்கு தேவையான கையொப்ப எண்ணிக்கைகள் கிடைத்துள்ளதாக நாட்டிற்கு வெளிப்படுத்த திட்டமிடப்பட்டது. அதன் பின்னர் குற்றவியல் பிரேரணைக்கு தேவையான கையொப்பங்களை காமினியும் சபாநாயகரும் தமது ஆதரவாளர்களிடமிருந்து இரகசியமாக திரட்டியவேளை சுதந்திரக் கட்சியின் கையொப்பங்களை சிறிமா திரட்டிக் கொண்டிருந்தார். லலித் பெற்றுக் கொண்ட கையொப்பங்கள் அடங்கிய ஆவணக்கோப்பினை எச்சந்தர்ப்பத்திலும் அவர் சபாநாயகரிடம் கையளிக்கவில்லை. அவர் மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து அவரது மரணத்திற்குப் பின்னரேயே அந்த ஆவணக் கோப்பு தற்செயலாகக் கைப்பற்றப்பட்டது. குற்றவியல் பிரேரணை தொடர்பான நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்கினாலும் அதன் வெற்றி குறித்து அவர் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்றே தோன்றுகின்றது. தன் மீது நம்பிக்கை கொண்டு கையொப்பமிட்டவர்களை பாதுகாக்கும் நோக்கத்தை அவர் கொண்டிருந்திருக்கக் கூடும்.

மங்கள மற்றும் சிறிபதி ஆகியோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக ஆரம்பித்துள்ள வேலைத் திட்டமும் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக லலித் மற்றும் காமினி ஆகியோர் ஆரம்பித்த வேலைத் திட்டமும் வெளித் தோற்றத்தில் ஒற்றுமைத் தன்மையைக் கொண்டிருக்கின்றது.



ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன பிரேமதாசவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் அந்தஸ்தைக் கொடுத்தது விருப்பத்துடன் அல்ல. செய்வதற்கு வேறு வழியின்றி அவர் அவ்வாறு செய்தார். அவர் அரசியல் அமைப்பில் மூன்றாவது தடைவையும் திருத்தம் கொண்டு வர யோசித்திருந்தார். நாட்டில் இரத்த ஆறு ஓடிக் கொண்டிருந்த சூழ் நிலையில் அந்தக் கிளர்ச்சிக்கும் பிரேமதாசவுக்கும் தொடர்பிருப்பதாக நம்பிய அவர் பிரேமதாச மீது கொண்டிருந்த அச்சவுணர்வு காரணமாக சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கினார். எனினும் அவர் ஜனாதிபதியின் வெற்றியை அல்ல தோல்வியையே எதிர்பார்த்தார். பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பலத்தை பயன்படுத்தவுள்ள வாய்ப்புகளைத் தடுக்க அவர் ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகள் வெளியாவதற்கு முன்பே பிரேமதாசவுக்கு அறிவிக்காமல் பாராளுமன்றத்தைக் கலைத்தார். தெற்கில் வாக்களிப்பு சதவீதம் மிகக்குறைவான மட்டத்தில் இருந்த நிலையிலேயே பிரேமதாச தேர்தலில் வெற்றி அடைந்தார். சுதந்திரக் கட்சியின் புதிய அரசாங்கம் பதவியேற்பதற்கு இடமளிப்பதை விடுத்து இருந்த பழைய அரசாங்கமே பதவியேற்கும் சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் தமது ஆயுதக் கிளர்ச்சியை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என நம்பிய ஜே.வி.பியினர், பிரேமதாசவின் வெற்றியை உறுதிப்படுத்த தேவையான சகல நடவடிக்கை களையும் அதிக பட்சம் முன்னெடுத்தனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் மகிந்த ராஜபக்சவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் என்ற அந்தஸ்தை வழங்கியது விருப்பத்துடன் அல்ல. மாறாக வழங்காமல் இருக்க முடியாது என்ற காரணத்தினால் அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**ரணசிங்க பிரேமதாசவை தேசத்துரோகியாக்க அவருக்கு புலி முத்திரை குத்தப்பட்டது. புலிகளுக்கு வாகனங்களும் பணமும் வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டது. தற்போது மகிந்தவுக்கும் அவ்வாறான குற்றச்சாட்டே சுமத்தப்பட்டுள்ளது. மகிந்தவுக்கு புலிகளுடன் உடன்படிக்கைகள் ஏதுமிருந்திருந்தால் அதனை மங்களவோ சிறிபதியோ அறியாதிருக்க வாய்ப்பில்லை.**

தந்திரோபாயங்களையும் பயன் படுத்தி அரசியலமைப்பை மாற்றி மேலும் அதிகாரத்தில் தரித்திருக் கும் அவரது கனவை நீதிமன்றத் தின் தீர்ப்பு வெளியாகும் வரை அவர் கைவிடவில்லை. நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் அவரது எதிர் பார்ப்பு ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியாகவே அமைந்தது பிரேமதாசவின் ஜனாதிபதித் தேர்தலில் போன்று மகிந்தவின் ஜனாதிபதித் தேர்தலிலும் ஜே.வி. பியினர் மகிந்தவுக்கு அதிகபட்ச ஆதரவினை வழங்கினர். அவர் களின் தந்திரமும் நோக்கமும் ஒரே வகையாக அமைந்திருந்தது. ரணிலின் அரசாங்கத்தை விட மகிந்தவின் அரசாங்கத்தில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள் ளும் நோக்கத்தை இலகுவில் அடைந்து விடலாம் என்பதே அவர்களின் நம்பிக்கை.

பிரேமதாச அதிகாரத்திற்கு வந்த பின்னர் ஏற்பட்ட உயர் மட்ட வகுப்பினர் மற்றும் உயர் மட்ட வகுப்பினர் அல்லாதோர் மோதல் நிலை அவ்வாறே தற்போது மீண்டும் தலைத் தூக்கியுள்ளது. உயர் வகுப்பினர் என்ற அந்தஸ்து நிலைக்கு சாதி நிலை மட்டும் செல்வாக்கு செலுத்தாது. வேறு சமூகக் காரணிகளும் இதில் செல்வாக்கு செலுத்தும். உயர் மட்டத்தினருக்கு மகிந்த சரியாக ஆங்கிலம் தெரியாத கிராமத்தான் என்றே தோன்றும்.

பிரேமதாச ஆட்சி முறையில் அவலட்சண நிலைமை காணப் பட்டாலும் நாட்டின் வறுமை நிலையைப் போக்கி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டிய ஒரே தலைவராகவே அவர் திகழ்ந்தார். ஆடைத் தொழிற்சாலை வேலைத் திட்டம் குறித்து விமர்சனங்கள் எழுந்தாலும் இன்றும் அதன் பலனை கிராமிய இளைஞர் யுவதிகள் அனுபவித்துக் கொண் டுதானிருக்கின்றனர். கிராமிய இளைஞர் யுவதிகள் தமது திருமணத்திற்குத் தேவையான பொருளாதாரங்களை ஆடைத் தொழிற்சாலைகளிலிருந்தே பெறு கின்றனர். சமுர்த்தி நலன் பெறுவோருக்கு 25 ஆயிரம் ரூபாவுக்கு நிரந்தர வைப்புகளைப் பெற்று தருவதாக அவர் உறுதியளித்திருந்தார். அது வெறும் வாக்குறுதி என்று எதிரிகள் பிரசாரம் செய்தனர். 25 ஆயிரம் ரூபா வைப்புள்ளோருக்கு கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதே அவரது உத்தியாகவிருந்தது. சுய தொழில் புரிவோருக்கு இதனால் பலன் கிடைத்தது. அவர் சாதாரண பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அதிகப்பட்ச அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

பிரேமதாச விரோத குற்றவியல் பிரேரணை நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக மக்கள் தலைவர் ஒருவரின் வாழ்க்கை முடிவுற்ற துடன் நாட்டை நவீனமாக்கும் புத்திசாதுரியத்தைப் பெற்றிருந்த மக்கள் தலைவர் லலித் அத்துலத் முதலியின் வாழ்க்கையும் முடிவுற் றது. இந்த இரு தலைவர்களும் புலிகளினால் படுகொலை செய்யப்



பட்டனர் என்று நாட்டில் பரவலான கருத்து நிலவுகின்றது. எனினும் புலிகள் அல்லாத மூன்றாம் தரப்பினரால் இந்தக் கொலைகள் நிகழ்த்தப் பட்டிருக்கலாம் என்றே நான் கருதுகின்றேன். அது உண்மை யாயின் புலிகள் என்ற போர் வையில் அவர்களுக்கு ஒப்பான வகையில் கொலைகளை நிகழ்த்த மூன்றாம் தரப்பு ஒன்று உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள நேரிடும்.

ஜே.வி.பி, ரணில், சந்திரிகா அனுசரணையில் மங்கள மற்றும் சிறிபதி ஆகிய இருவரும் ஆரம்பித்துள்ள மகிந்த விரோத போராட்டத்தின் முடிவு எவ்வாறு அமையும் என்று இப்பொழுதே கூறிவிட முடியாது. முடிவினை காண்பதற்கு முன்னர் சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் ஆச்சரியமான ஒற்றுமைத் தன்மை கள் நிலவுவதைக் காண முடிகின் றது. ரணசிங்க பிரேமதாசவை தேசத்து ரோகியாக்க அவருக்கு புலி முத்திரை குத்தப்பட்டது. புலிகளுக்கு வாகனங்களும் பணமும் வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டது. தற்போது மகிந்த வுக்கும் அவ்வாறான குற்றச் சாட்டே சுமத்தப்பட்டுள்ளது. மகிந்தவுக்கு புலிகளுடன் உடன் படிக்கைகள் ஏதுமிருந்திருந்தால் அதனை மங்களவோ சிறிபதியோ அறியாதிருக்க வாய்ப்பில்லை. அவர்கள் அதனை அறிந்திருந்த தாகக் கூறுகின்றனர். அது உண்மை யாயின் அன்று அவர்களுக்கு அந்த விடயம் ஏன் தவறானதாகத் தோன்றவில்லை? அவ்வாறான கொடுக்கல் வாங்கல் பற்றி மங்கள அறிந்திருந்தாராயின் ஜே.வி.பியி னரும் அறிந்திருக்க வேண்டும்.

லலித் காமினியின் பிரேமதாச விரோத கிளர்ச்சியில் உயர்மட்ட வகுப்பு என்ற விடயம் முக்கிய காரணியாக செல்வாக்குச் செலுத்தி யது. அந்த மோதல்களுக்கு மத்தியிலும் அரசியல் முறையை மறுசீரமைக்க தேவையான பலமான எதிர்கால நோக்கு அவர்களிடம் காணப்பட்டது. அது ஒரு நபரை நீக்கி விட்டு இன்னொருவரை அந்த இடத்தில் அமர்த்தும் போராட்டமாக மட்டும் இருக்கவில்லை. தனி நபர் என்ற விடயத்திற்கு மேலதிகமாக அரசியல் முறைகளை மாற்றும் போராட்டமாகவே அது காணப் பட்டது. அந்த நிலையுடன் ஒப்பிடும் போது இச்சந்தர்ப் பத்தில் மங்கள மற்றும் சிறிபதி உட்பட மகிந்த விரோதச் சக்திகள் மிகவும் பிற்போக்கான மட்டத் திலேயே உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் மகிந்தவை மாற்றும் தேவையிருந்த போதிலும் அரசியல் முறையை மாற்றும் தேவையில்லை என்பதையே காண முடிகின்றது. அரசியல் முறையை மாற்றாமல் நபர்களை மாற்றும் நடவடிக்கைகளினால் நாட்டிற்கு நன்மையில்லை. ஒரு சர்வாதிகாரிக்கு பதில் இன்னு மொரு சர்வாதிகாரி பதவியில் அமரும் நிலை மட்டுமே இதனால் ஏற்படும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தமயம்: மனித உரிமைகளும் சிவில் சமூகமும்

சுனந்த தேசப்ரிய

சுதந்திர ஊடக இயக்கத்தினரான எமக்கு கடந்த பெப்ரவரி ஐந்தாம் திகதி நித்திரையற்ற இரவாகியது. முன்னாள் ஊடகவியலாளரான லலித் செனவிரத்ன தனது வீட்டிலிருந்து கடத்தப்பட்டதே இந்த நிலைமைக்கு காரணமாகும். அவரது உயிரைக் காப்பாற்ற எடுக்கப்பட வேண்டிய சகல முயற்சிகளையும் நாம் அனைவரும் அன்றைய இரவுப் பொழுதில் மேற்கொண்டிருந்தோம்.

அந்த இராப்பொழுதில் நித்திரை கலைந்து எழுந்து பொலிசாருடன் உரையாட தயாராகவுள்ள சிவில் சமூக செயற்பாட்டாளரை தேடிக் கொள்ள எம்மால் முடியவில்லை. அரசியல்வாதியான வாசுதேவ நாணயக்கார மட்டுமே அன்று எமக்கு உதவினார். இந்த கடத்தல் தொடர்பாக நாம் தொலைபேசிகள் மூலம் அனுப்பிய குறுந்தகவல்களுக்கு பதிலளிக்கக் கூட சிவில் சமூக செயற்பாட்டாளர்களால் முடியவில்லை.

வழக்கு விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள மவ்பிம பத்திரிகையின் ஊடகவியலாளரான பரமேஸ்வரியை விடுவிக்கக்கோரி தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்துடன் இணைந்து கடந்த ஜனவரி 31ம் திகதி நாம் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தோம். பரமேஸ்வரியை விடுவிக்கக் கோரும் கடிதங்களை அன்றைய தினம் நாட்டின் பிரதானிகளுக்கு அனுப்புமாறு நாட்டில் உள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நாம் இலத்திரனியல் கடிதங்களை அனுப்பியிருந்தோம். எனினும் அவ்வாறான கோரிக்கைக் கடிதத்தை மூன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டுமே அனுப்பியிருந்தன. சர்வதேச ரீதியில் பதினாறு நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர் அமைப்புகள் இந்த நடவடிக்கையில் இணைந்திருந்தன.

கொள்ளைக்காரர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நால்வர் கடந்த பெப்ரவரி ஒன்பதாம் திகதி பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களில் இருவர் கைது செய்யப்பட்டதன் பின்னரேயே மரணமடைந்துள்ளனர். ஒரு மாதத்திற்கு முன்பு எல்பிட்டியவில் இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவர் பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தனர். இச்சம்பவத்திற்கு முன்னர் இரத்கமவில் இவ்வாறான இரண்டு உயிரிழப்புகள் நிகழ்ந்தன. இந்த உயிரிழப்புக்கள் குறித்து கேள்வியெழுப்ப மனித உரிமை அமைப்புக்கள் ஒன்று கூட முன்வரவில்லை.

வடக்கு கிழக்கில் ஒவ்வொரு நாளும் பொதுமக்கள் இவ்வாறே உயிரிழக்கின்றனர். சாவு அவர்களின் அன்றாட வாழ்வாகிவிட்டது. தன்னைக் கொல்வது யார் என்று அறிந்து கொள்ளும் உரிமை கொல்லப்பட்டவருக்கும் இல்லை. உயிரோடிருப்பவர்களுக்கும் இல்லை.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் எரிக்கப்பட்ட நிலையில் நான்கு சடலங்கள் அனுராதபுரத்திற்கு அண்மித்தான இடமொன்றில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டன. குருணாகலை கல்கமுவவில் இவ்வாறான சடலமொன்று பெப்ரவரி 6ம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. இவை கண்டுபிடிக்கப்பட்ட முதலாவதும் இறுதியானதுமான சடலங்கள் அல்ல. இவ்வாறு கொலைகளுக்காளாவது எமது நாட்டினர் என்று கூறப்படும் மக்களாவர். அவர்களுக்கு மனித உரிமைகள் இல்லை என்றாகி




*சாவை சந்தித்துக் கொண்டே அச்சத்திலிருந்து விடுபட்டு உயிருக்கு ஒரு புதிய நாளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் காலம் வந்துள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. இது பற்றி எவரும் பேசுவதும் இல்லை.

இலங்கையில் நிகழும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாடுகளுக்கு குறைவில்லாத போதிலும் இந்நாட்டு மக்களுக்கு புரியும் வகையில் சிங்கள தமிழ் மொழிகளில் மனித உரிமைகள் தொடர்பில் மாதாந்த அறிக்கைகளை வெளியிடும் மனித உரிமை அமைப்புகளும் இங்கில்லை என்றே கூற வேண்டும்.

நாட்டில் வன்முறைச் சூழல் நிலவுகின்றமை உண்மையே. அரசாங்கமும் புலிகளும் அறிவிக்கப்படாத மாபெரும் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றமையும் உண்மையே. யுத்தத்தின் பேரில் புலிகளும் அரசாங்கமும் அனைத்துவித அடக்கு முறைகளையும் நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றமையும் உண்மையே. புலிகளின் முதல் தேவை ஈழமாகும். இரண்டாவதே உரிமைகளாகும். அரசாங்கத்தின் முதல் தேவை நாடு. அடுத்ததே உரிமைகள்.

அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் எந்தவொரு முயற்சியினதும் பின்னணியில் புலிகள் நேரடியாகவும் மறைமுகவாகவும் உள்ளனர் என்று அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார். இதன்படி அரசாங்கத்தின் எந்தவொரு செயற்பாட்டிற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கைகளுக்கு இடமில்லை. ஏனெனில் இவ்வாறான நடவடிக்கைகளை புலிகளுடன் தொடர்புபடுத்தி அவமானப்படுத்தவும் தண்டனைக்குட்படுத்தவும் முடியும்.

நாம் இவற்றுக்கு எதிராகவே சிந்திக்கின்றோம். அதாவது உரிமைகள் பாதுகாக்கப்படாத போது மக்களுக்கும் பாதுகாப்பில்லை. இதனால் உரிமைகளை இரண்டாம் இடத்திற்கு தள்ள நாம் இணங்கப் போவதில்லை.

லலித் செனவிரத்ன கடத்தப்பட்ட அன்றைய தினத்திலேயே புகையிரத தொழிற்சங்கத்தின் அக்குணு பத்திரிகையின் இரு செயற்பாட்டாளர்களான சிசிற பிரியங்கர மற்றும் நிகால் சேரசிங்க ஆகியோரும் கடத்திச் செல்லப்பட்டனர். ஜனநாயக நாட்டில் சட்டத்தினால் அமுல்படுத்தப்படும் செயற்பாடுகளைக் கருத்திற் கொள்ளாது பலாத்காரமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே இவ்வாறான கடத்தல்களாகும்.

சுதந்திர ஊடக இயக்கத்தினரான நாம் இந்த மூன்று கடத்தல் சம்பவங்களையும் வன்மையாகக் கண்டித்தோம். அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜராக்குமாறும் கேட்டுக் கொண்டோம்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் நம்பிக்கையைக் கொண்ட புதிய காலனித்துவக் கொள்கைக்கு எதிரான இயக்கத்தின் பங்காளர்கள் என்றும், புலிகளுடன் இணைந்து செயற்படுபவர்கள் என்றும், தெற்கில் ஆயுத வன்செயல்கள் பலவற்றை புரிந்துள்ளனர் என்றும் அந்த மூன்று நபர்களும் ஏற்றுக் கொண்டதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இவ்வாறான குழுக்கள் 1980களின் நடுபாகத்தில் ஆரம்பமானது. இவர்கள் கைது செய்யப்பட்டனர். எனினும் இறுதியில் இலங்கை இந்திய உடன்படிக்கையின் தயவில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவர்களில் சிலர் தற்போது ஆலோசனை பணிகளில் ஈடுபட்டுள்ளனர். சிலர் அமைச்சுப் பதவிகளையும் வகித்து வருகின்றனர்.

தற்போது இந்த தொழிற்சங்க ஊடக செயற்பாட்டாளர்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயத்தின் காரணமாக நாம் அவர்களை கடத்திச் சென்ற போது வெளியிட்ட அறிக்கையும் குற்றச்சாட்டிற்குள்ளாகுமா? நாம் அவர்களின் ஆயுத இயக்கத்தின் பங்காளர்களாகின்றோமா?

மகிந்த ராஜபக்சவின் கடந்த காலம்
மகிந்த ராஜபக்சவும் 1988-90 களில் எம்முடன் இணைந்து அக்கால கட்டத்தில் நிகழ்ந்த இவ்வாறான கடத்தல்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தார். மனித உரிமைகள் இயக்கங்களுடன் இணைந்து மகிந்த ராஜபக்ச தெற்கில் தீவிரவாதத்தை அடக்கும் பேரில் நிகழ்ந்த கடத்தல் சம்பவங்களையே அவ்வாறு எதிர்த்து செயற்பட்டார். இவ்வாறான கடத்தல்களை கண்டித்து அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி கட்டியெழுப்பப்பட்ட அன்னையர் முன்னணி போன்ற இயக்கங்களின் ஊடாகவே ஜனாதிபதி பதவியை நோக்கிச் சென்ற பாதைக்கு தேவையான பிரசித்த நிலையை மகிந்த ராஜபக்சவுக்கு பெற்றுக் கொண்டார். கடத்தல்களாகட்டும் அல்லது பொதுவாக மனித உரிமைகள் மீறப்படுவதாகட்டும், ஆயுத இயக்கங்களினாலாயினும் அரசாங்கத்தினாலாயினும் இவ்வாறு கடத்திச் செல்லப்படும் நபர்களின் அரசியல் செயற்பாடுகளைக் கருத்திற் கொள்ளாது அவற்றுக்கு எதிர்ப்பு காட்டும் வழமை இங்கு உண்டு. இந்நாட்டின் எந்த அரசியல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இன்று பெரும்பான்மையான மனித உரிமை அமைப்புகள் ஆழ்ந்த நித்திரையில் உள்ளன. ஊடகத் துறையிலும் இன்று பொதுவாக கவலைக்குரிய அமைதி நிலையே காணப்படுகின்றது. அன்று மனித உரிமைகளை தமது கொடியாக சுமந்து கொண்டு செயற்பட்ட ஊடகத்துறை இன்று அர்த்தமற்ற மௌன நிலையில் ஆழ்ந்துள்ளது.**

கட்சியாகட்டும் அவை எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது இவ்வாறான எதிர்ப்பைக் காட்டியுள்ளன. கட்டியெழுப்பியுள்ளன.

எனினும் திடமான அடிப்படையின் கீழ் சட்டத்தின் கட்டுப்பாட்டின் படி செயற்படுமாறு கோரி கடத்தல் களுக்கு எதிராகவும் காணாமற் போதல்களுக்கு எதிராகவும் இந்நாட்டின் சில மனித உரிமை அமைப்புகளில் ஒரு சிலர் மட்டுமே செயற்பட்டுள்ளனர். இன்று பெரும்பான்மையான மனித உரிமை அமைப்புகள் ஆழ்ந்த நித்திரையில் உள்ளன. ஊடகத் துறையிலும் இன்று பொதுவாக கவலைக்குரிய அமைதி நிலையே காணப்படுகின்றது. அன்று மனித உரிமைகளை தமது கொடியாக சுமந்து கொண்டு செயற்பட்ட ஊடகத்துறை இன்று அர்த்தமற்ற மௌன நிலையில் ஆழ்ந்துள்ளது. அந்த தொழிற்சங்க ஊடகவிய லாளர்களின் கடத்தல் தொடர்பா கவும் பிற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் சுதந்திர ஊடக இயக்கத்தினரான நாம் எடுத்த நிலைப்பாடுகளை மனித உரிமைகள் மற்றும் இந்த வரலாற்று அனுபவங்களின் அடிப்படையி லேயே நாம் பாதுகாக்கின்றோம்.

உண்மையான சவால்

ஜனநாயக சமூகத்தில் ஒழுக்க விழுமியங்களைக் காப்பாற்றும் உண்மையான சவால் நிலை ஏற்படுவது சமாதான காலத்தில் அல்ல. ஜனநாயகம் அற்ற சக்திகளைச் சந்திக்கும் போதே உண்மையான சவால் நிலை ஏற்படுகின்றது. இதனால் எந்த நிலையிலும் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள், சித்திரவதைகள், கொலைகள் என்பனவற்றை கண்டிப் பதற்கு ஜனநாயக சக்திகளுக்கு உரிமையுண்டு. ஆனால் துரதிருஷ்ட வசமாக அவ்வாறான சக்திகள் இன்று அரிதாகி விட்டன.

மகிந்த ராஜபக்சவின்படி அவரு டன் இணைதலா அல்லது இல்லையா என்ற தெரிவு மட்டுமே உண்டு. அதாவது வடக்கு கிழக்கு மக்களுக்கு புலிகளுடன் இருப்பதா இல்லையா என்ற தெரிவை மேற்கொள்ள நேர்ந்தது போன்றதே இதுவாகும். தற்போது நிலைமை சற்று மாற்றமடைந்துள்ளது. கருணா தரப்பா அல்து நாமா என்ற தெரிவை மேற்கொள்ள கட்டாயப் படுத்தும் புதிய பலாத்கார நிலை தோன்றியுள்ளது.

எமது நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு யுத்தம் பிரதான விடயமாகும். அரசியலும் பொலி சும் அரசாங்கமும் தற்போது யுத்த மயமாகியிருப்பதற்கான காரண மும் இந்த யுத்த பின்னணியே. எமது செயற்பாடுகளுக்கான கோணத்தை தெரிவு செய்து கொள்ளுமாறு எம்மைக் கட்டாயப் படுத்தும் அடிப் படையும் அதுவே.

அனைவருக்கும் சம உரிமைகள் உண்டு என்ற மனித உரிமைகள் நோக்கில் செயற்படும் எமக்கு வேறு தெரிவும் உண்டு. வன்முறைகளுக்கும் அனைத் துவித மனித உரிமை மீறல்களுக் கும் எதிரான நிலைப்பாடே அத் தெரிவாகும். இலங்கை யில் சமாதானம் என்பது மனித உரிமை என்று அர்த்தப்படுத்திக் கொள்ளவும் இதனால் எமக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. அதற்கு இரையாவது யார், அதனை மேற் கொள்வது யார் என்பதை கருத்திற் கொள்ளாது மனித உரிமைகள் தொடர்பாக எம்மால் போராட முடியாது.

இவ்வாறான காலகட்டத்தில் சுதந்திர ஊடகத்துறையை முடிவாகக் கருதாது ஜனநாயகத் தின் பரந்த செயற்பாட்டின் பிரிக்க முடியாத அங்கமாகவே கருத வேண்டும். ஆனால் இவ்வாறு பரந்த வகையில் செயற்படும் மனித உரிமை அமைப்பு இன்று இந்நாட் டில் இல்லாததே பிரச்சினையாகும்.


இன்று நாம் எதிர்நோக்கும் சவாலும் இதுவே. இந்த சவாலை தனித்து சந்தித்து வெற்றி கொள்ள முடியாது. ஆயினும் யுத்தத்தினாலும் அரசியலினாலும் பிரிக்கப்பட் டுள்ள எமது சமூகத்தின் சிவில் சமூகம் இவற்றை விட மோசமாகப் பிரிந்து போயுள்ளது.

2006ஐ தோற்கடிக்கும் வகையில் 2007ம் ஆண்டு யுத்த ஆண்டாகி யுள்ளமை குறித்து தற்போது எவரும் ஐயம் கொள்ளலாகாது. இந்த ஆண்டு மென்மேலும் வன்முறைகள், அடக்கு முறைகள், கருத்துக்களை மதிக்காமை, கொடூரங்கள் நிகழும். மரணங் களை கணக்கெடுக்கும் நிகழ்வுக ளுக்கு அப்பால் சென்று வாழ்க்கை யை உயிராக மதிப்பதற்கு எமக்கு புதிய ஆரம்பம் ஒன்று அவசியமா கும் 1990களின் சொற்களில் கூறுவதாயின் சாவை சந்தித்துக் கொண்டே அச்சத்திலிருந்து விடுபட்டு உயிருக்கு ஒரு புதிய நாளை ஏற்படுத்திக் கொடுப்பதற் கான நடவடிக்கைகளில் ஈடுபடும் காலம் கனிந்துள்ளது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை: புதிய தலைமை



பிரபா

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வுகோரி நடாத்திய வேலைநிறுத்தப் போராட்டம் அதன் இலக்கை அடைய முன்னரே தொழிற்சங்கங்களின் நேர்மையற்ற போக்கால் முடிவுக் குக் கொண்டு வரப்பட்டது. எனினும் அப்போராட்டம் தொழிலாளர்கள் சுயமாகக் கள மிறங்கத் தயாராகி விட்டதை மிகவும் தெளிவாக உணர்த்தி யுள்ளது.

தொண்டமானின் வேண்டுகோ ளைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மெதுவாக வேலை செய்யும் போராட்டமாக ஆரம்பித்த தோட்டத் தொழிலாளர்களின் இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் 300ரூபா மொத்த சம்பளம் கோரி டிசம்பர் 4ஆம் திகதி முதல் முழு அளவிலான வேலை நிறுத்தப் போராட்டமாக மாறியது. இதை அனுசரிக்க முடியாத கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தொழிற்சங்கங்கள், தொழிலாளர் களின் போராட்டத்திலிருந்து ஒதுங்கி நின்றன. இவ்வேலை நிறுத்தப் போராட்டம் அனைத்துத் தோட்டங்களுக்கும் பரவியதுடன், ஆங்காங்கே தொழிலாளர்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடத்தலாயினர். இவற்றைத் தொழிலாளர்கள் சுயமாகவே செய்தனர். தொழிற் சங்கங்களின் கண்மூடித்தனமான போக்குக் கண்டு தொழிலாளர்கள் கொதித்தெழுந்தனர். தங்களது போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்காது, தங்கள் சந்தாப்பணத்தி லும், அமைச்சுப் பதவிகளுடனான சுகபோக வாழ்க்கையிலும் மட்டு மே குறியாக இருக்கும் ஆறுமுகன் தொண்டமான் என்று கூறி அவரது கொடும்பாவியை பல இடங்களி லும் தீயிட்டுக் கொழுத்தினர். இது மலையக தொழிற்சங்கப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனை எனலாம். தோட்டத் தொழிலாளர்க ளின் பெரிய தொழிற்சங்கத்தலை வர் எனக் கூறிக் கொண்டு அத் தொழிலாளர்களின் போராட்டத்து க்கு ஒத்துழைக்காத தலைவரின் கொடும்பாவியை எரித்து மக்கள் தங்கள் எதிர்ப்பை முதற் தடவை யாக வெளிக்காட்டி நின்றனர்.

இவ்வாறு தொழிலாளர்களின் போராட்டம் சக்திமிக்கதாய் மாற்ற மடைந்து வருகையில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் குறிப்பாக டி.வி.சென்னன் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி, திகாம்பரம் தலைமையி லான தொழிலாளர் தேசிய சங்கம் என்பன தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி ஒத்துழைப்பு நல்கிய தருணத்தில் தான் மலையக மக்கள் முன்னணி யின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனும் இவர்களுடன் இணைந்து கொண்டார். வழமை யாகவே வாக்குறுதிகளை அள்ளி வீசக் கூடியவர் இவர் என்ற அபிப்பிராயம் பொதுவாகவே உண்டு. பெயரளவிலாவது அமைச்சராக இருப்பதை விரும் பும் இவர் எவ்விதத்திலும் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவ ரல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் போராட்டம் தங்கள்கைகளை மீறிப் போய்விடக் கூடாது என எண்ணிய சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியினர் மக்கள் வழி நடத்திய போராட்டத்திற்கு இடைநிலையில் தலைமை கொடுக்க எண்ணி தங்கள் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். சந்திரசேகரனின் முன்னெடுப்புகளை மலையக புத்திஜீவிகள் மிகுந்த அவதானத்துடனேயே நோக்கினர். ஏனெனில், இவரது கடந்த காலக்காட்டிக் கொடுப்புகள் பற்றிய அனுபவம் அனைவரையும் சிந்திக்க வைத்திருந்தமையே! சிறைமீண்ட இவர் 1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் வெற்றி பெற்று அன்று யார் அரசாங்கத்தை அமைப்பது என்பதில் தீர்மான சக்தியாக மலையக மக்கள் முன்னணி இருந்த போது ஆறு அம்சக் கோரிக்கையை முன் வைத்து பிரதியமைச்சரான பிறகு அக்கோரிக்கைகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டன. பிறகு மாறி மாறி வந்த அரசாங்கங்களில் தொண்டமானைப் போன்றே அமைச்சரான சந்திரசேகரன், வடக்குக் கிழக்குத் தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை கோரி சிறைச்சாலைகளில் சாகும்வரை உண்ணா விரதம் இருந்த போதெல்லாம் அரசாங்கத்தின் பிரதிநிதியாக உண்ணாவிரதப் போராட்டக் கைதிகளைச் சந்தித்து விடுதலைக்கான உறுதிமொழிகளைக் கொடுத்து போராட்டத்தை முடித்து வைத்த போதும் இது வரையில் இக் கைதிகளில் ஒருவர் கூட விடுதலை செய்யப்படாத பரிதாப நிலையே காணப்படுகிறது.

மேலும் 2000ஆம் ஆண்டு சம்பள உயர்வுப் போராட்டத்தின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் கைகோர்த்து தொழிலாளர் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தார். அதே போன்றே மேல் - கொத்மலை நீர் மின்வலுத் திட்டத்திற்கு எதிராக தலவாக்கலையில் இளைஞர் குழுவொன்று சாகும் வரை உண்ணா நோன்புப் போராட்டத்தை முன்னெடுத்த போது அரசாங்கத்தின் சார்பில் பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து அப்போராட்டத்தை முடித்து வைத்து மலையகத்தில் இடம் பெறும் போராட்டங்கள் தமது தலைமைத்துவத்தையும் மீறிப் போகாமல் பார்த்துக் கொண்டார். இதேவேளையில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் ஹட்டன் நகரில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனிடையே மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி என்பன முதலாளிமார் சம்மேளனத்துடன் மேற்கொண்ட பேச்சுக்கள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன.

இதனையடுத்து மேற்குறித்த தொழிற்சங்கத் தலைமைகள் தொழில்அமைச்சர் அதாவுடசெனவிரத்னவுடன் பேச்சுக்களை நடத்தின. இதன் போது முதலாளிமார் சம்மேளனம் 160 ரூபா அடிப்படைச் சம்பளத்துடன் கூடிய 250 ரூபா மொத்த சம்பளத்தை முன் வைத்தது. ஆனால் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையான 300 ரூபாவை வேண்டிப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இது ஒருபுறமிருக்க சர்வமதக் குழுவொன்று போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் அதிகாரத் தரப்பினரால் களத்தில் இறக்கப்பட்டது. இக்குழு தலவாக்கலையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட மலையக மக்கள் முன்னணியின் பாரதிதாசனூடாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனை அணுகியது. இச்சர்வமத குழுவுக்கும் பிரதித்தொழில் அமைச்சர் மேர்வின் சில்வாவிற்குமிடையே நெருங்கிய தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத் தொடர்பின் ஊடாக பிரதித் தொழிலமைச்சர் மேர்வின் சில்வா தலைமையிலான குழு தொழிலாளர்களை சந்தித்து முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பான கருத்துக்களை எடுத்துரைப்பதற்கும், தொழிலாளர்களை வேலைக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்துவதற்கும் ஹட்டன் சென்றது. அங்கு மேர்வின்சில்வா, தொழிலாளர்களைப் பணிக்குத் திரும்புமாறும், ஜனாதிபதி ஆணைக்குழு மூலம் சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் கூறினார். ஆனால் தொழிலாளர்கள் மேர்வின் சில்வாவின் கருத்தை நம்பத்தயாராக இருக்கவில்லை. (இதே மேர்வின் சில்வா தான் முன்னர் ஒரு பொழுது மலையகத் தமிழர்களை மிகவும் கீழ்த்தரமாகப் பேசியவர்). மேர்வின் சில்வா தொழிலாளர்களின் கேள்விக் கணைகளுக்குப் பதிலளிக்க முடியாது கொழும்பு திரும்பினார்.



இதனைத் தொடர்ந்து. தன்னை இடதுசாரி பாரம்பரியத்தில் வந்தவரெனக் கூறிக் கொள்ளும் தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன வெளிப்படையாகவே முதலாளிமார் சம்மேளனத்தின் நிலைப்பாட்டை ஆதரித்து கருத்து வெளியிட்டார். இதனிடையே சர்வமதக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப் போராட்டத்தை தோல்வியடையச் செய்வதற்கான அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு களத்தில் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. இக் குழுவிற்கு தொழிலமைச்சின் பூரண ஆசீர்வாதம் இருந்தது. ஆனால் இக்குழு தொழிலாளர்கள் பக்கம் நிற்பதாகக் காட்டிக் கொண்டது.

இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாய் இன்னொரு விடயமும் நடந்தேறியது. தங்களை மலையகத்தின் பெரிய தொழிற்சங்கமெனக் கூறிக் கொள்ளும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் கொட்டகலையிலுள்ள காங்கிரஸ் தொழிலாளர் நிலையத்தில் (Congress Labour Foundation - CLF) தோட்டத் தலைவர்களுக்கு விருந்துபசாரம் நடந்தது. இதன் போது அங்கு கூடியிருந்த தோட்டக்கமிட்டித் தலைவர்களிடம் பேசிய ஆறுமுகன் தொண்டமான். முதலாளிமார் சம்மேளனம் கொடுக்க இணங்கியுள்ள 250 ரூபா மொத்த சம்பளத்தை ஏற்றுக் கொண்டு அனைத்துத் தொழிலாளர்களையும் பணிக்குத் திரும்புமாறும், அதற்கான தூண்டுதல்களை தோட்டக் கமிட்டி தலைவர்கள் செய்ய வேண்டுமென்றும் மிகவும் கண்டிப்புடன் கேட்டுக் கொண்டார். இதன் ஒரு வெளிப்பாடாகவே ஹட்டன் - செனன் தோட்டத்தில் சில தொழிலாளர்கள் பணிக்குத் திரும்ப எடுத்த முயற்சி ஆகும். இம் முயற்சி ஏனைய தொழிலாளர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இவ்வாறானதொரு சூழலில் தொழிலாளர்களின் 300 ரூபா கோரிக்கையுடனான போராட்டம் பல தடைகளையும் மீறி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இப் போராட்டம் முன்னெடுப்பில் தகுதி வாய்ந்த ஒரு தலைமை இல்லாதிருந்தது பெரும் குறையாகவே காணப்பட்டது. இக்கட்டத்தில் தான் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் தனது வழமையான காட்டிக் கொடுப்புத் துரோகத்தனத்தை மீண்டும் அரங்கேற்றினார். தொழிலாளர்கள் எந்தத் தலைவரதும் ஒத்துழைப்பையும் கோராது முன்னெடுத்த போராட்டத்திற்கு தானே தலைமை தாங்குவதாகக்காட்டிக் கொண்டு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு கடிதமொன்றை எழுதினார். இக் கடிதத்தில் தனது இயலாமையையும், தொண்டமானின் ஒத்துழைப்பையும் கோரி அவர் காலடியில் விழுந்தார். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்துக்கொண்டிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி என்பன வாய்ப்பை நழுவவிடாது மறுதினமே டிசம்பர் 19ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் முதலாளிமார் சம்மேளனத்துடன் மீண்டுமொரு இரண்டு வருட காலத்திற்கு கூட்டு ஒப்பந்த மொன்றைச் செய்தனர். இதில் இ.தொ.கா சார்பில் அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், இ.தே.தோ.தொ.ச சார்பில் வேலாயுதமும் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி சார்பில் இராமநாதனும் கைச்சாத்திட்டனர்.

இப்புதிய கூட்டு ஒப்பந்தம் மூலம் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு எவ்வித ஊதிய உயர்வும் வழங்கப்பட மாட்டாது. மேலும் அடிப்படைச் சம்பளமாக நாளொன்றுக்கு 170 ரூபாவும் வேலை வழங்கப்படும் மொத்த நாட்களில் 75வீதத்திற்கு மேல் தொழிலுக்கு சென்றால் நாளொன்றுக்கு 70 ரூபாவும் தேயிலை விலை அதிகரிப்பிற்கேற்ப நாளொன்றுக்கு 20 ரூபாவும் என மொத்த நாட்சம்பளம் 260 ரூபாவென இணங்கப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோ தேயிலைக் கொழுந்திற்கு 9 ரூபா வழங்கப்படுமெனவும் இணங்கப்பட்டுள்ளது.

அடிப்படையில் இதுவொரு ஊதிய வடிவம் (wage Structure) மட்டுமே ஒழிய ஊதிய கொடுப்பனவு (Wage Payment) அல்ல! ஏனெனில் யாருக்கும் நிச்சயமாய் நாளொன்றுக்கு 260 ரூபா மொத்த ஊதியம் கிடைக்குமென உறுதியாகக் கூற முடியாது. ஆனால் இக் கூட்டு ஒப்பந்தத்தில் உள்ள ஒரு சாதகமான விடயமெதெனில் முதற் தடவையாக தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு சமஊதியம் வழங்குவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளமையாகும். இதற்கு முன்னர் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை விடவும் குறைவான ஊதியமே வழங்கப்பட்டு வந்துள்ளது.



பிரதான தொழிற் சங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போதிலும் தொழிலாளர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. கூட்டு ஒப்பந்தங்களின் பின்னர் தொழிற்சங்கங்களுக்கு எதிரான தமது எதிர்ப்பைப் பல வழிகளிலும் வெளிக்காட்டி நின்றனர். இந்நிலையில் போராட்ட காலத்தில் மக்களுடன் இருப்பதாக முகம் காட்டி நின்ற சென்னன் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி, திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெ.சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன தொடர்ந்தும் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்க முடியாத நிலையில் தொழிலாளர்களை வேலைக்குத் திரும்புமாறு வேண்டிக் கொண்டன. இது உண்மையில் இச்சங்கங்களின் இயலாமையையும், திட்டமிட்டுச் செயற்பட முடியாத தலைமைத்துவ வெற்றிடத்தையுமே வெளிக்காட்டி நின்றன. மேலும் ஒருபடி மேலே சென்று அமைச்சரான பெ.சந்திரசேகரன் தனது வழமையான ஏமாற்றுப் பாணியில் "மலையக மக்களின் அனைத்துப் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று உடனடியாக அமைக்கப்படுமெனவும், அதற்கு ஜனாதிபதி முழு அளவில் இணங்கியுள்ளதாகவும்" அறிவித்தார்.



ஆனால் இன்று மாதங்கள் பல கடந்த நிலையிலும், ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கான எந்த அறிகுறியும் தென்படாத நிலையில் இதுவும் பெ.சந்திரசேகரனின் வழமையான நிறைவேறாத வாக்குறுதிகளில் ஒன்றாகவே அமைந்துவிடுமென தொழிலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதில் இன்னொரு முக்கியமான விடயம் என்னவென்றால் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட அனைத்துத் தொழிற்சங்கங்களும் தலைவர்களும் (ஐ.தே.க. தொழிற்சங்கம் தவிர) இன்றைய அரசாங்கத்தின் பங்காளிகளாக உள்ளனர் என்பது தான்.

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள இன்றைய நிலையில் தொழிற்சங்கங்கள் மாதாந்த சந்தாவை 50 ரூபாவிலிருந்து 70 ரூபாவரையில் அதிகரிப்பது பற்றிப் பேசி வருகின்றன. ஆனால் மறுபுறத்தில் பெருந்தோட்டத்துறை தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்காத தொழிலாளர்களின் எண்ணிக்கை 20 சதவீதத்திற்கு மேல் என்பது தொழிலாளிமார் சம்மேளன வெளியீடுகளிலிருந்து புலனாகின்றது. அத்துடன் இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி என்பவற்றில் அங்கத்துவர்களாக இருந்தோர் பெருமளவில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஏனைய புதிய சிறு சங்கங்களில் அங்கத்தவர்களாய் உறுப்புரிமையை மாற்றி வருவதையும் அறிய முடிகிறது.

மே தினத்தையே களியாட்ட நாளாக மாற்றி விட்ட இன்றைய மலையக தொழிற்சங்கங்களுக்கு உண்மையில் தொழிலாளர்கள் மீது அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. தொழிற்சங்கத் தலைவர்களின் அரசியல் அபிலாஷைகளை ஈடேற்றிக் கொள்வதற்கான ஒரு மார்க்கமாகவே இன்று பெருந்தோட்டத்துறைத் தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றன. கூட்டு ஒப்பந்தங்களுக்கான பேச்சுவார்த்தைகளுக்குக் கூட முதலாளிமார் சம்மேளனத்தினர் முழுமையான தயாரிப்பு நிலையிலேயே வருகின்றனர். ஆனால் பெருந்தோட்டத் துறைத் தொழிற்சங்கங்கள் போதுமான தயாரிப்புகள் இல்லாமலேயே பேச்சுக்களில் கலந்து கொண்டன.


இம் முறை கூட ஆரம்பத்தில் 195 ரூபா அடிப்படைச் சம்பளமும் 295 ரூபா மொத்த சம்பளமுமென அனைத்து தொழிற்சங்கங்களும் இணங்கி பொதுக் கோரிக்கையாக முன் வைத்த போதும், அதற்கொரு அடிப்படை இருக்கவில்லை. பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும், மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழு உறுப்பினருமான விஜயசந்திரன் மட்டுமே இம் முறை பேச்சுக்களின் போது சில புள்ளி விபரங்களுடன் வந்ததாகவும், அவையும் கூட பொருளாதார புள்ளி விபரங்களே அன்றி பேச்சுக்களில் தாக்கத்தினை செலுத்தக் கூடியளவில் இருக்கவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

இவை அனைத்தும் ஒரு முக்கிய விடயத்தை உணர்த்திச் செல்கிறது. அதாவது மலையகத் தோட்டத் துறையில் தொழிலாளர்கள் பால் உண்மையான அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படக் கூடிய தொழிற்சங்கங்களின் தேவையும், அவசியமும் மிகவும் அவசரமாகத் தேவைப்படுவதாகும். தொழிலாளர்களை தங்கள் அரசியல் சுயநல தேவைகளுக்குப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தாத, அவர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய திறமையுள்ள தலைமைத்துவத்தையே இன்று மலையகத் தொழிலாளர்கள் வேண்டி நிற்கிறார்கள். சமூக சிந்தனை கொண்ட மலையக புத்திஜீவிகள் மற்றும், உண்மையாக உழைக்கும் தொழிலாளர் வர்க்கமும் இணைந்த கூட்டுத் தலைமைத்துவத்தால் மட்டுமே இந்தத் தலைமைத்துவ வெற்றிடத்தை நிரப்ப முடியும். இல்லாவிட்டால் தொடர்ந்தும் மலையக தொழிலாளர் வர்க்கம் இன்றுள்ள தொழிற்சங்கத் தலைமைகளால் ஏமாற்றப்படுவது தவிர்க்கவியலாத ஒன்றாகிவிடும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் மரணம் புதிய அரசியல் எழுச்சியை அவசியமாக்கியுள்ளது



சிராஜ் மஷ்ஹூர்

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் அரசியலில் பெற்றிருந்த மைய இடம் மெல்ல மெல்ல தளர்ச்சியடைந்து வருகிறது. 90களின் நடுப்பகுதியில் அது பெற்றிருந்த உச்சகட்ட வளர்ச்சியில் மிகப்பெரிய தொய்வு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கான குறிப்பான காரணங்களை ஆராய்வதுடன், புதிய தலைமுறையினரிடையே வளர்ச்சியடைந்து வரும் அரசியல் செல்நெறியில் புது விசை பாய்ச்சப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இக் கட்டுரை ஆராய்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் செல்வாக்குமிக்க அரசியல் சக்தியாக இருந்து வந்தது. ஏறத்தாழ ஒரு தசாப்த காலமாக 'கிங் மேக்கராக' அது பெற்றிருந்த அரசியல் முக்கியத்துவம் இப்போது முற்றாக இல்லை என்றாகிவிட்டது. வடக்குக் கிழக்கு முஸ்லிம்களது அரசியல் பிரச்சினைகளையும் அஷ்ரபின் தனிமனித ஆளுமையையும் தலைமைத்துவப் பண்புகளையும் மூலதனமாகக் கொண்டே முஸ்லிம் காங்கிரஸ் உன்னத வளர்ச்சியடைந்தது. 2000ம் ஆண்டு அஷ்ரப் மரணித்ததன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸினுள் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டு, பின்னர் துண்டுதுண்டாக அது சிதறியது.

இன்றளவும் முஸ்லிம் காங்கிரஸ் ரவூப் ஹக்கீமின் தலைமையில் இயங்கி வருகிறது. பிரிந்து போனவர்கள் வேறு பெயர்களிலேயே இயங்கி வருகின்றனர். அவர்கள் பெருமளவு பிராந்திய ரீதியான ஆதரவுத் தளங்களையே கொண்டுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் தான் வடகிழக்கு முழுவதும் பெருமளவு முஸ்லிம்களது ஆதரவைக் கொண்ட கட்சியாக உள்ளது. இந்த பண்பு காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் தான் இன்று வரை வடக்குக் கிழக்கில் முன்னணி முஸ்லிம் கட்சியாக உள்ளது. இனி ஒரு தேர்தல் வருமாயினும் கூட, முஸ்லிம் காங்கிரஸ் பெருமளவு வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும் என எதிர்பார்க்கலாம்.

ஆயினும், இங்கு எடுத்தாளப்படுகின்ற பிரச்சினை தேர்தல் அரசியலையும் அதன் வெற்றிகளையும் மையப்படுத்திய ஒன்றல்ல. மாறாக முஸ்லிம் அரசியலின் உயிர்ப்பு மெல்ல மெல்ல அற்றுப் போய் விட்டது என்பதே உண்மை. அதன் ஆன்மா இறந்து கொண்டிருக்கிறது. அதற்கான பாதையை முஸ்லிம் காங்கிரஸே வரைந்து கொடுத்தது. அதன் உருவாக்க காலத்தில் விடப்பட்ட பாரிய அரசியல் தவறுகளே இன்றைய வீழ்ச்சி நிலைக்கு அடித்தளம் இட்டிருக்கிறது. இதில் அஷ்ரபினதும் அவர் உருவாக்கிய கட்சிக் கட்டமைப்பினதும் பங்கு மிகவும் அதிகம். பின்னர் ஏற்பட்ட சமூக அரசியல் போக்குகளும் கட்சியை முன்னெடுத்த வர்களும் இதில் கணிசமான செல்வாக்கை ஏற்படுத்தியிருப்பதையும் மறுக்க முடியாது.

தற்போதைய அரசில் முஸ்லிம் காங்கிரஸ் எந்த நிபந்தனைகளோ ஒப்பந்தமோ இன்றி இணைந்துள்ளது. முஸ்லிம் சமூக நலனை முன்னிறுத்தி தாம் அரசிற்கு நிபந்தனை விதித்துள்ளதாக ஊடகங்களில் வந்த செய்திகள் வெறும் பசப்பு வார்த்தைகள் மட்டுமே. ஒரு காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரசியல் அபிலாசைகள் அரசுடன் இணைவதற்கான முன் நிபந்தனைகளாக இருந்தன. பின்னர் முழு, அரை மந்திரிப் பதவிகளுக்கான மற்றும் தூதுவர்கள், கூட்டுத்தாபனத் தலைவர்கள் பதவிக்கான ஒப்பந்தமாக இது மாறியது. இப்போது பெயருக்குக் கூட அவ்வாறான ஒப்பந்தமொன்றைச் செய்ய முடியாத அரசியல் பொறிக்குள் முஸ்லிம் காங்கிரஸ் சிக்க வைக்கப்பட்டுள்ளது. அரசியல் மரணத்திற்கு இதைவிடவும் போதிய சான்று அவசியமில்லை.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் மரணத்தை தர்க்கரீதியாக நியாயப்படுத்திய பிரதான காரணியாக கட்சிக்குள் பேணப்படும் ஜனநாயகமற்ற பண்பை சுட்டிக் காட்ட முடியும். தலைவர் என்ற தனி நபருக்கு அக்கட்சியின் பாரம்பரியமும் யாப்பும் வழங்கியிருக்கின்ற வரன்முறையற்ற அதிகாரமே அதன் இயற்கை மரணத்துக்கான வழியைத் திறந்து விட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தினுள் நிலவும் பன்முக அரசியல் போக்கை அவற்றின் தேவைகளை உரிய முறையில் வெளிப்படுத்துவதற்கான பொறிமுறைக் கட்டமைப்புகள் இதன்மூலம் இல்லாமல் ஆக்கப்பட்டது. சமூகத்தின் அரசியல் போக்குகளை அலசி ஆராய்ந்து, அவற்றின் அடியாக அரசியல் நிலைப்பாடுகளைக் கண்டடையும் நிலை இல்லாமலானது. மாறாக நபர்களின் விருப்பு வெறுப்புகள், அதிகார மோகம், இருப்புக்கான தேவை என்பனவற்றின் அடிப்படையில் அவை உருவாக்கப்படத் தொடங்கின. இது தான் மிக மோசமான வீழ்ச்சியின் வலைக்குள் அவர்கள் சிக்க வைக்கப்பட வழிவகுத்தது.

முஸ்லிம் காங்கிரஸிற்கு என்று நன்கு வடிவமைக்கப்பட்ட அரசியல் வேலைத் திட்டம் எதுவும் இல்லை. முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு குறித்த மிக மையமான விவகாரத்தில் கூட அதற்கு உறுதியான நிலைப்பாடுகள் இல்லை. அவ்வப்போது வெளிப்படுத்தப்படுகின்ற உதிரியான அபிப்பிராயங்களின் தொகுப்பு மட்டுமே அக் கட்சியிடம் உள்ளது. அவற்றை உள்ளடக்கிய பலவீனமான ஆவணத்தை அவர்கள் தயாரித்துள்ளதாக அடிக்கடி கூறிவந்துள்ளனர். அதைக்கூட வெளிப்படுத்தும் துணிவு அவர்களுக்கு இன்றளவும் இல்லை.

கட்சியின் பன்மைத்துவப் பண்புகளுக்கு இடம்கொடுக்காத தன்மை பல்வேறு முகாம்களாக



அது உடைந்து சிதறியுள்ளதன் மூலம் நன்கு வெளிப்படுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு பிரிவினரும் தமக்குச் சரியெனப்படும் முடிவுகளை முஸ்லிம் சமூகத்தின் பொது அரசியல் முடிவாக முன் வைக்கின்றனர். இவை பொதுத் தளத்தில் பெரும் அரசியல் நெருக்கடிகளை அவ்வப்போது உண்டுபண்ணி வந்துள்ளன. முஸ்லிம் பொது மக்களைப் பொறுத்தவரை ஒரு குழப்பமான அரசியல் சூழலுக்குள் அவர்கள் தள்ளப்பட இது களம் அமைத்துக் கொடுத்தது. பிரதான அரசியல் பிரச்சினைகளை முன்னிறுத்தாது, உள் முரண்பாடுகளின் அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பதற்கான அரசியல் பொறிக்குள் ஒவ்வொரு முஸ்லிம் தனி மனிதனும் அகப்பட்டுள்ளான்.

முஸ்லிம்களது இருப்பு, மனித உரிமைகள், சமூக, பொருளாதார, கலாசார, கல்விப் பிரச்சினைகள் போன்றவை பற்றிய ஆழமான கவனமின்மை, பேச்சளவில் மட்டுமே இவற்றைக் கையாண்டு, செயலற்ற நிலைக்கு ஆளாகியிருக்கின்றமை என்பன இன்று ஒரு மிகப் பெரும் சமூகப் புற்றுநோயாக மாறியுள்ளது. அபிவிருத்தி அரசியல் பற்றிய பெருமிதங்களை உருவாக்கி விட்டு, நலன் சார்ந்த தேவைகளுக்குள் குறுகிப் போன அரசியல் கலாசாரத்தின் பிதாமகர்களாக முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் வாரிசுகள் மாற்றப்பட்டு விட்டனர். விடுதலை வேட்கைகள் அவர்களது - அல்லது அஷ்ரப் அடிக்கடி சொல்வது போல போராளிகளது - ஆள்மனங்களிலிருந்து சாகடிக்கச் செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம் விவகாரங்களை நுணுக்கமாகவும் அரசியல் தொலை நோக்கோடும் கையாள்கின்ற தலைமைத்துவ வெற்றிடம் உருவாவதற்கு முஸ்லிம் காங்கிரஸின் புறந்தள்ளும் மனப்பான்மை மிக முக்கியமான காரணமாக இருந்து வந்துள்ளது. ஆளுமை மிக்க திறமைசாலிகள் கட்சியிலிருந்து வெளியே வீசப்பட்டனர். போதியளவு புதிய தலைமுறை ஆளுமைகளை உள்வாங்க அவர்களது அரசியல் நகர்வில் எந்த இடமும் இருக்கவில்லை. அதற்கான முயற்சிகளும் செய்யப்படவில்லை.

தேசிய அரசியல் கட்சிகளை என்ன நியாயங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் விமர்சித்ததோ, அந்த நியாயங்களுள் கணிசமானவற்றை முஸ்லிம் காங்கிரஸ் தன்னகத்தே கொண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. இது முஸ்லிம் அரசியலை ஆரம்பித்த இடத்திற்கே மீண்டும் கொண்டு வந்து சேர்க்கும் அரசியல் துரோகமாகும். சிலவேளைகளில் அதனை விடவும் பின்னடைவான நிலைக்கு அது இட்டுச் சென்றிருக்கிறது.

வரலாறு வெற்றிடங்களை விட்டு வைப்பதில்லை என்பார்கள். உண்மையில் முஸ்லிம் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடத்தை முஸ்லிம் காங்கிரஸே நிரப்பி வருகிறது. இது முழு விருப்பத்தோடு செய்யப்படுகின்ற ஒன்று அல்ல. முஸ்லிம் சமூகத்தினுள் புதிய அரசியல் போக்கானது தேவைகளின் அடிப்படையில் வளர்த்தெடுக்கப்படாத அரசியல் ஆழமான சமூக அரசியல் மாற்றத்தை அவாவி நிற்கின்ற புதிய தலைமுறையினர் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளனர். ஆயினும் ஒரு விரிவான வலையமைப்பினுள் அவர்கள் இணைக்கப்படவில்லை. ஆக்கபூர்வமான அரசியல் செயற்பாடுகளை இவர்கள் வெளிப்படுத்தி வந்துள்ள போதிலும், சமூகத்தின் இன்றைய தேவையை அவை ஈடு செய்வதாக இல்லை.

இதுதான் மிகப்பெரிய சவாலாகும். இந்த சவால் முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால அரசியலை முன்னோக்கி நகர்த்துவதற்கான சவாலாகும். இலங்கை அரசியலின் சமன்பாடுகள் மிக வேகமாக மாற்றப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டு வருகின்ற அரசியல் நகர்வுகள் நன்கு ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டும். தென்னிலங்கையிலுள்ள சிங்கள மற்றும் தேசிய அரசியல் சக்திகளை எவ்வாறு கையாள்வது? அரசாங்கத்தினுள் ஊடுருவி எமது அரசியல் அபிலாசைகளை வென்றடைவது எவ்வாறு? இதற்கான அழுத்தங்களை மேற்கொள்வது எவ்வாறு? இவை பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

இவை எல்லாவற்றையும் முஸ்லிம் காங்கிரஸ் செய்வதற்கான ஆற்றலை இழந்துள்ளது. அதன் அரசியல் மரணம் புதிய அரசியல் போக்கின் தேவையை இரட்டை முக்கியத்துவம்

**இன்றுள்ள நிலையில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே முன்னெப்போதையும் விட ஆழமான அரசியல் புரிதல் அவசியமாகியுள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டு வருகின்ற அரசியல் நகர்வுகள் நன்கு ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டும்.**

வறுமையின் வெளிப்பாடே இதுவாகும்.

எல்லோரும் செயலற்ற ஒரு நிலைக்குள் அமிழ்ந்து போயிருக்கிறார்கள். இதிலிருந்து முழு சமூகத்தையும் மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் பல்வேறு சிவில் சமூக சக்திகளால் அவ்வப்போது எடுக்கப்பட்டே வந்துள்ளன. எனினும் இவை ஒருமுகப்பட்டதாக ஒருங்கிணைக்கப்பட்டு முன்னெடுக்கப்படவில்லை. சிதறலாக, துண்டு துண்டாக, போதிய தயாரிப்பின்றி இவை மேற்கொள்ளப்பட்டதால் இவற்றினூடாக எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் திருப்திகரமாக அமையவில்லை.

முஸ்லிம் சமூகத்தினுள் அபிப்பிராயம் உருவாக்குபவர்களாக ஜே.வீ.பி. யினர் மாறியுள்ளனர். சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டது போல் இப்போது ஹெல உறுமயவினர் தான் ‘கிங் மேக்கர்’. சிங்கள தேசியவாத சக்திகள் மிகத் தீவிரமாக தமது இரகசிய நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்தி வருகின்றனர். அரச மற்றும் அதிகாரக் கட்டமைப்பினுள் மிக ஆழமாக ஊடுருவி, அவர்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே முன்னெப்போதையும் விட ஆழமான அரசியல் புரிதல் அவசியமாகியுள்ளது. குறிப்பாக வாய்ந்த ஒன்றாக மாற்றியுள்ளது. இந்தத் தேவை சரியான கோணத்தில் - சரியான சக்திகளால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வரலாறு வெற்றிடத்தை விட்டு வைப்பதில்லை தான். ஆனால் அந்த வெற்றிடத்தை பொருத்தமான சக்திகளே நிரப்ப வேண்டும். முஸ்லிம் சமூகம் மிக நீண்டகாலமாக அசைவற்றிருக்கிறது. தேக்க நிலையிலிருந்து முஸ்லிம்களை மீட்டெடுக்க வேண்டிய காலம் கடந்து கொண்டே இருக்கிறது. தாமதங்கள் பற்றிய கவலைகளை விடவும் முன்னோக்கிய பார்வையும் செயற்பாடும் தான் விடுதலைக்கான பாதையை புது விசையுடன் முன்னகர்த்தும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானம்: தோல்வி எங்கிருந்து ஆரம்பித்தது ?

ச.பா.நிர்மானுசன்

இலங்கை தீவினுடைய இனக்குழும மோதுகைக்கு தீர்வு காண்பதற்கான "திறவு கோல்" போன்று கனிக்கப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டுக்கு 5 வருடங்கள் நிறைவடைந்துள்ளது. இந்த திறவு கோலை பல்வேறு தரப்பினரும் வித்தியாசமான நேரங்களில் வெவ்வேறு வடிவங் களில் திறக்க முற்பட்டதனால், திறவு கோல் இன்று நெளிவடைந்து தற்போது பயனற்ற ஒன்றாக காணப்படுகிறது. இருப்பினும் இது எதிர்காலத்திற்கு பயன்படுத்த முடியாத படுபாதகமான நிலையை அடையவில்லை. இந்த நெளிவை சீர்படுத்தக்கூடிய ஒரு கடுமை யான, நேர்மையான, நெளிவடைந் தமைக்கான காரணத்தை சரிவர விளங்கிக் கொள்ளக் கூடிய "உழைப்பாளிகள்" தேவை. அவ் வாறான உழைப்பாளிகள் தேவை யென்றால் கடந்தகால அல்லது நிகழ்கால உழைப்பாளிகள் செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாத பணிகள் என்ன என்பதை ஆராய் வது எதிர்கால தேடல்களுக்கு பயனுள்ளதாக அமையும். அந்த நோக்கிலேயே இந்தப் பத்தி பயணிக்கிறது.

சாதிப்புக்கள் பாதிப்புக்கள் என்ற எல்லைகளுக்கு அப்பால் 5 வருடங்களைப் பூர்த்தி செய்த போர் நிறுத்த உடன்பாடு மிகுந்த முக்கியத் துவத்தை உணர்த்தி நிற்கின்றது. அது யாதெனில், இலங்கை தீவினு டைய இனக்குழும மோதுகைக்கு தீர்வு காண்பதற்கான "தாய் உடன் பாடாக" அது எதிர்காலத்தில் திகழப் போகிறது. அது எவ்வாறெ னில் இனக்குழும மோதுகைக்கு தீர்வு காண்பதற்கான பல்வேறு விதமான அவசியம் நிறைந்த படிப்பினைகளை இது வழங்கியு ள்ளது. இந்தப் படிப்பினையூடாக காணப்படப் போகும் தீர்வு அரசியல் தீர்வாக மட்டுமன்றி அது இராணுவ தீர்வாகக் கூட அமையக்கூடும்.

மேற்கூறிய இரு தீர்வுகள் தொடர் பாகவும் பொதுமக்களிடத்தில் மாறுபட்ட கருத்துக்கள் காணப் படுகிறது.

அவையாவன,

1. அரசியல் தீர்வாக அமையுமாயின் அது தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை எந்தளவிற்கு பூர்த்தி செய்யும் என்ற சந்தேகம்.

2. இராணுவத் தீர்வாக அமையு மாயின் மேலும் அவலங்களை சுமக்க வேண்டும் என்ற ஏக்கம்.

மேற்கூறிய இரண்டு நிலைகளு க்கும் ஊடாகவே சாதாரண மக்களுடைய வாழ்வு பயணிக் கிறது. இது ஒரு இக்கட்டு நிலை. அடுத்து என்ன நடக்கும் என எதிர்வு கூற முடியாத ஒரு "அந்தர சூழல்".

இவ்வாறானதொரு "அசாதாரண சூழல்" ஏன் ஏற்பட்டது? அதற் கான விடைக்கு குறைந்தது ஆறு தரப்பினர் தரப்பினர் பொறுப்பாளி கள் ஆவர்.

1. சிறீலங்கா அரசாங்கம்

2. தமிழீழ விடுதலைப் புலிகள்

3. ஊடகவியலாளர்களில் ஒரு பிரிவினர்

4. சிவில் சமூகம்

5. மூன்று இனக்குழுமங்களையும் சார்ந்த மக்கள்

6. சர்வதேச சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இதில் சிறீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அசாதாரண சூழல் ஏற்பட்டமைக் கான காரணத்திற்கான குற்றச் சாட் டுக்களை பரஸ்பரம் முன்வைத்துள் ளமையை பெரும்பாலான சமூகங் கள் அறியும்.

சிவில் சமூகத்தின் குறைபாடுகளை பல சந்தர்ப்பங்களில் ஊடகங்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. குறிப் பாக சிவில் சமூகத்தின் ஒரு பகுதி செய்திட்டமாகவே அணுகியது டன் பொதுமக்களை பொதுத்தளம் ஒன்றில் அணி திரட்ட ஊக்கம் காட்டவில்லை.

ஊடகங்கள் சமாதான செயன் முறை தொடர்பாக விழிப்பு ணர்வை ஊட்டக் கூடிய செய்தி களை- தகவல்களை பொது மக்களுக்கு வழங்கவில்லை. சில ஊடகங்கள் சமாதான செயன் முறைகளுக்கு எதிரான கருத்துக் களைத் தூண்டும் முகமாக மக்களிடத்தில் திரிபுபடுத்தப்பட்ட தவறான செய்திகளை- தகவல் களை வழங்கின.

பொதுமக்களைப் பொறுத்தவரை சமாதான செயன்முறை தொடர் பான நம்பகமான செய்திகளை- தகவல்களை அறிவதில் போதிய அக்கறை செலுத்தவில்லை. அத் துடன் பொதுத்தள அணிதிரள்வு ஒன்றுக்கு முயற்சிக்கவில்லை.

சர்வதேச சமூகத்தை பொறுத்த ளவில், சமாதான செயன்முறையை சரிவர கட்டமைப்புப்படுத்த வில்லை. முக்கியமான அமுலாக் கல் விடயங்களுக்கு காலவரை யறை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இறுக்கமாக செயற்பட்டிருக்க வேண்டிய சில முக்கிய தருணங்க ளில் மென்போக்காக நடந்து கொண்டதோடு சில காலகட்டங் களில் சமாதான செயன்முறையின் பிரதான தரப்புகளில் ஒரு தரப்பினர் மீது மட்டும் கடும் அழுத்தத்தை பிரயோகித்தமை. சர்வதேச சமூகத் துக்குள்ளேயே இலங்கை தீவீனு டைய இனக்குழும மோதுகைக்கு தீர்வு காண்பதற்கு பொதுவான கருத்து நிலவாமை. (உதாரணமாக ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடைவிதித்த போது அந்த தீர்மானம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்குள் ளேயே முரண்பாடான கருத்துக்கள் நிலவியமையைக் குறிப்பிடலாம்.)



கட்டமைப்புப்படுத்தல் என்னும் போது மோதுகை தொடர்பான சரியான பின்புலம், பொருத்தமான சூழல், தரப்புகளுக்கிடையிலான உறவுநிலை, விசையியக்க ஆற்றல் ஆகியவற்றை மிகச் சரிவர பகுப் பாய்வு செய்திருக்க வேண்டும். அவ்வாறான பகுப்பாய்வின் அடிப் படையில் சமாதானத்திற்கான சூழலை பேணல். (இதனை முன் பேச்சுவார்த்தைக் காலம் எனவும் குறிப்பிடலாம்.) அவ்வாறான சூழல் ஊடாக சமாதானத்தை உண்டாக்கல், அதனடிப்படையில் சமாதானத்தை கட்டியெழுப்பல் ஆகிய முறைமைகள் செயற்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய செயன்முறை இலங்கை தீவினு டைய இனக்குழும மோதுகைக்கு தீர்வு காணும் முயற்சிகளில் இடம் பெற்றிருக்கிறதா என்ற வினா மேற் கிளம்பியுள்ளது.

சமாதானத்திற்கான சூழலைப் பேணல் என்னும் போது பாது காப்பு சம்பந்தப்பட்ட விடயங்க ளில் கவனம் செலுத்துதல், வன் முறையை குறைத்தல், சமாதானப் படையை உருவாக்கல் அல்லது போர் நிறுத்த கண்காணிப்பை உருவாக்கல், மனிதாபிமான உதவி கள் ஆகியவை இடம்பெறல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சமாதானத்தை உண்டாக்கல் என்னும் போது, பேச்சுவார்த் தைகள், மத்தியஸ்தம், சொல்லா டல்கள், பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் செயன்முறைகள் ஆகிய வற்றைக் குறிப்பிடலாம்.

சமாதானத்தைக் கட்டியெழுப்பல் என்னும் போது அபிவிருத்தி செயற்பாடுகள், மனித உரிமைகள், ஜனநாயக மயப்படுத்தல், சிவில் சமூகம், மீள்கட்டமைப்பு ஆகி யவை தொடர்பான செயற்பாடுகள் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றுடன் வன்முறையை கட்டுப் படுத்தக் கூடிய நடவடிக்கை களும், நேரகால எச்சரிக்கை நடவடிக்கைகளும் இடம் பெற்றி ருக்க வேண்டும்.

இவையனைத்தும் இடம்பெற்றதா? மக்களினுடைய இயல்பு வாழ் வென்பது எப்படி காணப்படுகிறது?

ஆக்கபூர்வமான சமாதானத்தை நேசிக்கின்ற அனைவரும் மேற் கூறிய வினாக்களுக்கு பொருத்த மான பகுப்பாய்வினூடாக விடை காண முயற்சி செய்ய வேண்டும். அந்த தேடல் முயற்சி எதிர் காலத்தில் இலங்கைத் தீவீனுடைய இனக்குழும மோதுகைக்கு தீர்வு காண்பதற்கான உறுதியான அடித்தளமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அறிமுகக் குறிப்பு**


இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பொது இணக்கப்பாட்டினை ஈட்டிக் கொள்வது எவ்வாறு என்பதே இலங்கை எதிர்நோக்கும் பெரும் பிரச்சினையாக உள்ளது. அந்த உரிமையை வழங்க மறுப்பதன் மூலம் தமிழர்களுக்கு சிங்களவர்களால் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. எனினும் இந்த அநீதியை வென்றெடுக்க உள்ள ஒரே வழிமுறையாகவும் சிறந்த வழியாகவும் வன்முறையைக் கொள்ள முடியாது. தனிநாட்டை தமது கோரிக்கையாக்கிக் கொண்ட போது அந்தத் தனிநாட்டை வெற்றி கொள்ள வன்முறையை முன்னெடுக்க வேண்டியுள்ளதைப் போன்று தனிநாட்டிற்கான எல்லைகளுக்கான உரிமைகளையும் முன்வைக்க வேண்டியுள்ளது. போரிடும் இரு தரப்பினரும் தமது கடும் போக்குகளைக் கைவிட்டு அனைவரதும் கௌரவத்திற்கு ஏற்ற இடைக்காலத் தீர்வை ஏற்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

பிரிவினைவாதத்தைத் தோற்கடிக்க இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் யுத்தம் நாட்டின் கௌரவத்திற்கு ஒருபோதும் பாத்திரமாகாது. அதேபோன்று தனிநாட்டிற்காக போராடும் விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் யுத்த நடவடிக்கைகளும் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்குக் காரணமாக இல்லை.

இரு தரப்பும் தமது அடிப்படைவாத நிலைகளினால் ஏற்படுத்திக் கொண்டுள்ள மற்றும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பயங்கரமான விளைவுகள் குறித்து மீள் பரிசீலனைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் ஈழவிரோத யுத்தத்தினால் சிங்களவர்களுக்கு எந்த விதமான நன்மைகளும் ஏற்படாதது போன்று விடுதலைப் புலிகளின் ஈழப் போரினால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படவில்லை. ஒருவரையொருவர் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்திலிருந்து மீண்டு இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அமைதி வழியில் தீர்வைக் காணும் வழிக்குள் பிரவேசிக்க வேண்டும். சிங்கள தமிழ் மக்களின் வாழ்விலும் நாட்டிலும் சிறந்த மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதன் ஊடாகவே ஆரம்பிக்கும் எனலாம்.


டெஸ்மன் மல்லிகாராய்ச்சி


நீத்தா ஆரியரத்ன


ஏ.எம்.எம்.நௌஷாத்

## சமஷ்டி முறை பிரச்சினைக்கு தீர்வா?

ஒற்றையாட்சி தொடர்பான எமது சிந்தனைகளில் ஏற்பட்ட பிளவு நிலை சந்தர்ப்பத்திலேயே நாம் இனப் பிரச்சினையை நாட்டின் முக்கிய விவகாரமாகப் பேச ஆரம்பித்தோம். தேசியப் பிரச்சினை தொடர்பாக பேசும் போது ஒற்றையாட்சி என்ற சிறைக்குள் சிறைப்பட்டிராமல் மாற்றாக சமஷ்டி தீர்வு குறித்து சிந்தித்துப் பார்க்க முடியாதா?

இவ்விடயம் குறித்து பேராதெனிய பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானக் கல்விப் பிரிவைச் சேர்ந்த கலாநிதி டெஸ்மன் மல்லிகாராய்ச்சி கருத்துத் தெரிவிக்கையில் 'மாட்டிற்கு தும்பிக்கையைப் பொருத்தியவுடன் மாடு ஒருபோதும் யானையாக முடியாது. அதனால் தும்பிக்கையுடன் யானைக்குரிய இதர அங்கங்களைப் பொருத்தினால் மட்டுமே அது யானையாக முடியும்' என்றார்.

### சமஷ்டி புதிய அரசியலுக்கான ஒரு பிரவேசமா?

**கலாநிதி டெஸ்மன் மல்லிகாராய்ச்சி**
**சமூக விஞ்ஞானக் கல்விப் பிரிவு**
**பேராதெனிய பல்கலைக்கழகம்**

இந்தியாவில் பல்லின மொழி மத சமுதாயம் கொண்ட மக்கள் வாழ்வதை முன்னிட்டு அவர்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் முகமாகவே சமஷ்டி முறை உருவாக்கப்பட்டது. இனங்களுக்கிடையில் மொழிகளுக்கிடையில் கலாசாரங்களுக்கிடையில் உள்ள பன்மைத் தன்மையை சகித்துக் கொள்ள சமஷ்டி வழிவகுக்கின்றது. இந்தியாவில் இனங்களுக்கிடையில் அரசியல் மோதல்கள் குறைவாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமஷ்டியின் மூலம் இனங்களுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்படுவது பற்றி நாம் அறிவோம். தத்தமது அடையாளங்களைப் பேணிக் கொள்ள அந்த அதிகாரங்கள் உதவியாக உள்ளன. இந்த முறையானது அரசியல் நிறுவனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ரொஹான் எதிரசிங்க


அனுருத்த பிரதீப்


விஷாக்கா தர்மதாச


டெஸ்மன் மல்லிகாராய்ச்சி

திற்குள் கட்டமைப்பாக்கப்பட்ட பின்னர் அதில் சிக்கற் தன்மைகள் தோன்றுவதில்லை. இந்திய மக்களின் சிந்தனைகளுக்குள் சமஷ்டி முறை ஊறி விட்டது. சமஷ்டி என்பது பிறர் சார்ந்த அரசியல், ஜனநாயக, கலாசார, சமூக மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பாக சிந்திக்கத் தூண்டும் ஒரு சிறந்த அப்பியாசமாகும். ஒற்றையாட்சி வரையறைக்குள் பெரும்பான்மை இனத்திற்கு தாம் தொடர்பான ஓர் சுயநலசிந்தனை நிலை ஏற்படுகின்றது. பிற இனத்தவரை அடிமைப்படுத்தும் இம்மியளவு எண்ணத்துடன் அன்றி திறந்த மனதுடன் சமஷ்டிக்குள் பிரவேசிப்பதுவே எமது நாட்டின் இனப் பிரச்சினைக்கு தீர்வுக்கு சிறந்த வாய்ப்பாக அமையும்.

இனப்பிரச்சினையே ஒற்றையாட்சி என்ற வரையறையை ஏற்படுத்தியது. மாறாக சமஷ்டி அல்ல. தற்போது எமக்குத் தெரிந்த தீர்வாக சமஷ்டியே உள்ளது. அது ஓர் அரசியல் வடிவமாகும். நாட்டின் பொருளாதாரம் மற்றும் இதர அங்கங்கள் இங்கு பொருந்தி வரவேண்டும். அதாவது தும்பிக்கைக்கு ஏற்ப பொருளாதாரம், மனித உரிமைகள், கலாசார உரிமைகள், ஜனநாயகப் பண்புகள் குறித்து நாம் புதிய சிந்தனைகளை ஏற்படுத்திக் கொள்ளல் அவசியமாகும். இலங்கையில் சமஷ்டி அறிமுகப்படுத்தப்படும் நாளிலேயே இலங்கையின் உண்மையான அரசியல் வரலாறு ஆரம்பமாகின்றது.

## எந்தப் பெயரிலாவது அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுங்கள்!

**விஷாக்கா தர்மதாச**
**பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தின் தலைவி**

பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தின் தலைவி விஷாக்கா தர்மதாச பின்வருமாறு தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றார். இனப்பிரச்சினை தீர்வாக முன் வைக்கப்படும் சமஷ்டியோ அல்லது வேறு எந்த அதிகாரப் பகிர்வு விடயமோ அது தமிழ் மக்களுக்கு நீதியான முறையில் அதிகாரப் பகிர்வு செய்யப்படும் விடயமாக அமைய வேண்டும். அதிகாரம் பகிரப்படாதிருக்கும் நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. 25-30 வருட கால வரலாறு அதனை நிரூபித்து விட்டது. அதனால் தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ளும் வகையிலான அதிகாரத்தை வழங்கும் தீர்வே அவசியமாகும். அவ்வாறான யோசனைகளையே முன்வைக்க வேண்டும். தமிழ் மக்களினால் முன்பு முன் வைக்கப்பட்ட நிர்வாக அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களை அன்று நிறைவேற்றாது இன்று நிறைவேற்றுவது குறித்து தென்னிலங்கை தலைவர்கள் பேச்சுக்களை நடத்துவது பலனற்றதாகும். அது தமிழர்களின் அபிலாஷைகளை மீறும் செயலாகவே அமையும். சமஷ்டியோ அல்லது வேறு எந்த அதிகாரப் பகிர்வு விடயமோ அவ்வாறு முன்வைக்கப்படும் தீர்வு ஒரே நாட்டிற்குள் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய அதிகாரத்தை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும்.

## புலிகளுடன் என்ன சமஷ்டி?

**அனுருத்த பிரதீப்**
**அரசியற்துறை விரிவுரையாளர்**
**ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**

இலங்கையில் அரசியலமைப்பு பிரச்சினை நிலவாத காரணத்தினால் ஒற்றையாட்சியோ அல்லது சமஷ்டியோ அதன் மூலம் அரச அதிகாரத்தை சவாலுக் குட்டுபடுத்தும் பிரச்சினைக்கு தீர்வுகிட்டாது என்று ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அரசியற்துறை பிரிவின் விரிவுரையாளர் அனுருத்த பிரதீப் தெரிவிக்கின்றார்.

அரசுக்கும் மக்களுக்கும் இடையில் நிலவும் நிபந்தனையான அரசியலமைப்பினை ஏற்றுக் கொள்ளாது கருத்தியல் மற்றும் ஆயுதரீதியில் புலிகள் அரசுக்கு சவால் விடுத்துள்ளமையே இங்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கும் நெருக்கடி நிலைகளுக்கும் காரணமாகும். அரச அதிகாரத்தை பலப்படுத்துவதே இதற்குத் தீர்வாக அமையும். மாறாக உடன்படிக்கைகளின் மூலம் கட்டியெழுப்பப்படும் அரசியலமைப்பு தீர்வினை எட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முடியாது. அதாவது சமஷ்டியோ ஒற்றையாட்சியோ இதற்குத் தீர்வாக அமையாது. தீர்வு வேறு இடத்தில் உள்ளது. இன முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள சமஷ்டி இந்தியாவுக்கு உதவியாக உள்ளமை உண்மையே. எனினும் இந்திய அரசியலமைப்பின் தந்தையான டாக்டர் அம்பேத்கர் அதனை சூட்சுமமாகவே உள்ளடக்கியுள்ளார். சாதாரண சந்தர்ப்பங்களில் சமஷ்டியாகவும் முரண்பாடுகள் மோதல்கள் நிகழும் விசேட சந்தர்ப்பங்களின் போது ஒற்றையாட்சி முறையாகவும் மாறிச் செயற்படும் வகையில் அரசியல் அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது சமஷ்டி அடிப்படை தத்துவங்களுக்கு முரணானது. சமஷ்டியின் அடிப்படைத் தத்துவம் வழங்கும் அதிகாரத்தை மீளப் பெற முடியாது என்பதாகும். அதற்கு முரணாக அதிகாரம் பகிரப்பட்டுள்ளதால் இந்திய நாட்டை அரைகுறை சமஷ்டி நாடு என்றே கூற வேண்டியுள்ளது. ஏன் இந்தியா அவசர சந்தர்ப்பங்களில் அதிகாரக் குவிப்பை நாட வேண்டும் என்று சிந்தித்தது என்பது பற்றியே நாம் முக்கியமாக ஆராய வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசு பலமடைந்திருக்க வேண்டும் என்பதற் காகவே அவ்வாறான அரசியலமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை அரசாங்கம் அடையாளம் தொடர்பான சிக்கலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் நாம் சமஷ்டி தீர்வை முன்னெடுப்பதானது இந்திய சமஷ்டிக்கு முரணாகவே அமையும். நாம் இந்திய சமஷ்டியை முன்னுதாரணமாகக் கொள்ளவே கூடாது.


நீத்தா ஆரியரத்ன

தந்திரோபாயமான ரீதியில் சமஷ்டியை முன்னெடுக்க முடியாதா என்ற கேள்வியும் எழுகின்றது. எனினும் அதற்கான பதில் ஆம் என்றே கூற வேண்டும். எனினும் சமஷ்டி அடிப்படைவாதிகளினால் அதற்கான உரிய ஆதரவு கிடைக்காது. எமக்கு ஏற்புடைய சமஷ்டி முறையை உருவாக்குவது குறித்து புத்திசீவிகள் சிந்தித்துப் பார்க்க முடியும். சமஷ்டிவாதிகளே புலிகளினால் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் நாம் மறந்து விட முடியாது. இதன் மூலம் அவர்கள் இணக்கப்பாட்டிற்கு தயாரில்லை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.


ஏ.எம்.எம்.நௌஷாத்

டைசி என்ற அரசியல் ஞானியின் கருத்தின்படி சமஷ்டிக்கு இரு காரணிகள் முக்கியமாகத் தேவை. சிறிய குழுக்கள் ஒன்றுபட வெளிப்படுத்தும் அக்கறை மற்றும் அடையாளத்தைப் பேணிக் கொள்ளும் அவசியம் என்று இவற்றைக் குறிப்பிடலாம். இந்த இரண்டு காரணிகளும் இல்லாத போது ஒற்றையாட்சியே நிகழுகின்றது. இல்லாவிட்டால் இரண்டு ஒற்றையாட்சி களாகும். புலிகள் இந்த விடயங்களை ஏற்கின்றனரா என்பது குறித்து தெளிவான விளக்கத்தை சமஷ்டி தீர்வை முன்வைப்பதற்கு முன்னர் சிந்திக்க வேண்டும்.


ரொஹான் எதிரசிங்க

## சமஷ்டி முறை நாட்டை ஐக்கியப்படுத்தும்

**கலாநிதி ரொகான் எதிரிசிங்க**
**சட்டபீட விரிவுரையாளர்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

மனித உரிமைகள், பன்மைத்துவம் மற்றும் ஜனநாயகம் என்பன சமஷ்டியின் அடிப்படைத் தத்துவங்களாகும் என்கிறார் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட விரிவுரையாளர் கலாநிதி ரொகான் எதிரிசிங்க. நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் அதேவேளை தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறை வேற்றும் முறையாக சமஷ்டியை அவர் இனம் காண்கின்றார்.


அனுருத்த பிரதீப்

இனங்களுக்கிடையிலான பிரச்சினையை யுத்தத்தினால் தீர்க்க முடியாது. யுத்தம் என்ற பக்கமும் இங்கிருக்கலாம். எனினும் இது அரசியல் பிரச்சினை என்பதால் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு அரசியல் தீர்வாகவே அமைய வேண்டும். அத்தீர்வு சமஷ்டியாக இருப்பதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறந்ததாகும். இதனால் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்படும். அவர்களுக்கு உள்ளகசுயாட்சி உரிமை கிடைக்கும். இந்த யோசனை புலிகளுக்குச் சார்பானதாக இருக்கலாமே எனினும் இதன் மூலம் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்திற்கு வழியேற்படும்.

## தமிழ் மக்கள் நியாயத்தையே கேட்கின்றார்கள்

**ஏ.எம்.எம்.நௌஷாத்**
**சமூக செயற்பா ட்டாளர்**

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மத்திய அரசாங்கத்தினால் தீர்க்க முடியாததினால் தான் தமது தாயகத்தை தாமே ஆளும் அதிகாரத்தை தமிழ் மக்கள் கோருகின்றனர் என்று முஸ்லிம் சமூகத்தின் செயற்பா ட்டாளரான ஏ.எம்.எம்.நௌஷாத் கூறுகின்றார்.

தமிழ் மக்கள் சமஷ்டி தேவை என்பதற்காக ஆயுதம் ஏந்தவில்லை. 1948லிருந்து பொய் வாக்குறுதிகளை வழங்கி, அவர்களின் ஆதரவுடன் வாக்குகளைப் பெற்று ஆட்சியமைத் தாலும் தென்னிலங்கை நிர்வாகத்தினால் எந்த நன்மையும் இல்லை. பிரதேசங்கள் அபிவிருத்தி அடையவில்லை. இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பில்லை. இந்தப் பிரச்சினை களைத் தீர்த்துக் கொண்டு நியாயத் தைப் பெற்றுக் கொள்ளவே தமிழ் மக்கள் தாயக சுயாட்சியைக் கோருகின்றனர். 71-89ல் தெற்கில் இளைஞர்கள் போராடியது சமஷ்டி கேட்டல்ல, சமூக நீதியைக் கேட்டே போராடினர். தமிழ் மக்களின் கோரிக்கையும் அதுவே.


விஷாக்கா தர்மதாச


டெஸ்மன் மல்லிகாராய்ச்சி

## இறுதி முடிவு தமிழ் மக்களின் கைகளில்


**நீத்தா ஆரியரத்ன**
**தலைவி**
**சர்வோதய சுவசேவை சங்கம்**

சர்வோதய சுவசேவை சங்கத்தின் தலைவி நீத்தா ஆரியரத்னவின் கருத்தின்படி தீவிரவாதச் செயல்களை தடுக்கும் அதே வேளை தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு உதவி செய்ய வேண்டும். சமஷ்டி தீர்வு பிரச்சினை களுக்கு தீர்வாக அமையுமா என்பதைத் தமிழ் மக்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகின்றார்.

கொழும்பில் வாழும் மக்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை சிங்கள மொழியில் வழங்குகின்றார்கள். இதுவே பெரும் அநீதி அல்லவா? சிங்கள மொழி யிலேயே விசாரணைகளும் நடை பெறுகின்றன. அறிவிப்புகள் கூட சிங்கள மொழியில் வழங்கப் படுகின்றது. சிங்களவர்களான எமக்கு தமிழில் கடிதங்கள் கிடைத்தால் எப்படியிருக்கும். இது பற்றி நாம் சிந்திப்பதும் இல்லை.


நீத்தா ஆரியரத்ன

இவை சிறிய நிர்வாகப் பிரச்சி னைகள். இந்த சிறிய பிரச்சினைகள் பெரும் பிரச்சினையான இனப் பிரச்சினையைத் தோற்றுவித்தது. இப்பிரச்சி னையை சமஷ்டியோ அல்லது வேறு எந்த வழிவகையிலோ தீர்க்க வேண்டும்.


ஏ.எம்.எம்.நௌஷாத்

இலங்கை மக்கள் தமிழ் சிங்கள மொழிகள் இரண்டையும் கற்றிருப்பது அவசியம் என்று நீத்தா ஆரியரத்ன சுட்டிக் காட்டுகின்றார். எதிர்வரும் சந்ததியினருக்கு இரு மொழிகளையும் பயிற்றுவிக்க நாம் இப்பொழுதே நடவடிக்கைகளை எடுப்போமாயின் எதிர்காலச் சந்ததியினருக்கு இப்பிரச் சினையை விளங்கிக் கொள்ள முடியுமாக விருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**கலந்துரையாடியவர்- விமலநாத் வீரரத்ன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகளை கைவிட்டிருந்தால் சிங்கள சமூகத்தின் எதிர் விளைவுகள் வேறுபட்டிருக்கும்.

இன்னும் இரண்டு வருடங்களின் பின்னர் இரு தரப்பினரும் சோர்வடைந்து தோல்வியுறுவது உறுதியே. எனினும் புலிகள்




# தெற்கிற்கு பொருளாதார யுத்தம் குறித்த உணர்வு உண்டா?

சட்டத்தரணி ஷிரால் லக்திலக்க

தெற்கில் இப்பொழுது பிரபலங்களின் அரசியலே முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது புதிய விடயமல்ல. 1956ஆம் ஆண்டு முதலே இந்த நிகழ்வு சீ சோ போல் மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்த போக்கினை அவதானிக்க முடியும். தமிழர்கள் மீது பொறாமைப்படும், வெறுக்கும் போக்கு சிங்களவர்கள் மத்தியில் உண்டு. புலிகளும் சிங்களவர்களை மகாவம்சத்து சிங்கள சமூகம் என்றே அழைத்தனர். புலிகளின் அரசியல் தொடர்பாக சிங்களவர்கள் காட்டி வரும், காட்டிக் கொண்டிருக்கும் செயற்பாடுகளே இந்நிலையை மேலும் உக்கிரமடையச் செய்தது.

புலிகளுக்கு அரசியல் என்ற ஒன்றில்லை. அவர்களிடம் இராணுவ தந்திரோபாயங்களே உள்ளன. இலங்கை இந்திய உடன்படிக்கையை மீறியமை, ராஜீவ்காந்தியின் படுகொலை, தலதாமாளிகை தாக்குதல் போன்று கருணாவுடன் பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பம் இருந்த போதிலும் அவரைக் கொல்ல முயற்சித்தமை என்பன புலிகளின் யுத்த வெறியையே வெளிப்படுத்துகின்றது. யுத்தத்தின் மூலம் முன்னோக்கிச் செல்ல புலிகளாலும் முடியாது. அரசாங்கத்தினாலும் முடியாது.

56-70களில் நிலவிய சிங்கள உளவியலை மிக மோசமான இனவாதத்திற்குள் தள்ள மேலே கூறப்பட்ட யுத்த வெறியின் மூலம் பிரபாகரன் நடவடிக்கை எடுத்தார். அவர்கள் மேற்கொண்ட தனி நபர் குறிப்பிட்ட காலம் முதலே இலங்கைக்கு எதிர்க்கட்சியின் பணிகள் சிறந்த வகையில் கிடைக்காததன் காரணமாக நாட்டின் நிகழ்ச்சி நிரல்களை தயாரிக்கும் வாய்ப்பு இனவாதிகளின் கைகளுக்குள் சென்றடைந்தது. 2003 ஆம் ஆண்டு வடக்கின் நிகழ்ச்சி நிரல்கள் புலிகளினால் தயாரிக்கப்பட்ட வேளை தெற்கில் அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் ஜே.வி.பியினால் தயாரிக்கப்பட்டன. நாட்டின் இரு பிரதான



கட்சிகளுக்கும் அதில் பங்கெடுக்க முடியாதிருந்தது. அதற்கு அடுத்த மிக முக்கிய கதாபாத்திரத்தை சர்வதேச சமூகம் வகித்தது. அரசாங்கம் பிறர் கூறுவதற்காக சமஷ்டி பற்றி பேசவும் ஆரம்பித்தது.

இன்று வேகமாக ஆவியாகும் நிலையே காணப்படுகின்றது. உக்கிரமான யுத்தத்தின் பின் நீண்ட கெரில்லா பாணி யுத்தத்தை முன்னெடுத்திருப்பது தெற்கிற்கு எவ்விதத்திலும் ஏற்புடையதாகாது.

எந்த இனத்திற்கும் யுத்தத்தில் ஒப்பீட்டளவில் வெற்றி கிட்டும். ஆனால் அந்த ஒப்பீட்டு வெற்றி குறித்த உணர்வு அரசாங்கத்திற்கு இல்லை. புலிகள் அரசாங்கத்தை பொருளாதார யுத்தத்திற்குள் தள்ளிக் கொண்டிருக்கின்றனர். 20 வருடகால யுத்தத்தினால் சோர்வடையாத சிங்களவர்களுக்கு எண்ணெய் குதங்கள் மீதான தாக்குதல்கள், கட்டுநாயக்க மீதான தாக்குதல் பெரும் அதிர்ச்சியை தரும் என்பதை புலிகள் அறிவர். அதாவது சிங்களவர்களை பொருளாதார யுத்தத்தினாலேயே தோற்கடிக்க முடியும். புலிகளின் தற்போதைய யுத்த உபாயமும் அதுவே.

புலிகள் தாக்குதலின் மூலம் காலி துறைமுகத்தை தகர்க்கும் நோக்கத்துடன் வரவில்லை. அங்கு நிலைமைகளைக் குழப்பி விடுவதே அவர்களின் நோக்கமாகும். இதனால் காலியில் உல்லாசப் பிரயாணத் துறை மோசமடைந்தது. கொழும்பு துறைமுகத்தை தாக்க முற்படுவதன் நோக்கமும் காப்புறுதி கட்டணங்களை அதிகரித்து ஏற்றுமதி நடவடிக்கைகளை பாழ்படுத்துவதாகும். புலிகளின் உபாயத்தை புரிந்து கொள்ளாத சிங்கள சமூகம் யுத்த நடவடிக்கைகளையே வேண்டி நிற்கின்றது. இதுவே புலிகளின் தேவை. எமது புத்திஜீவிகளும் முக்கியஸ்தர்களும் நாட்டைப் பற்றி சிந்திப்பதாகவும் இல்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கவிதை

நிறுத்துங்கள்...!
நிறுத்துங்கள்...!
இந்தச் சண்டையை நிறுத்துங்கள்!

எல்லாள மன்னா!
யானையிலிருந்து இறங்குங்கள்
துட்டகைமுனு அரசரே!
எல்லாளருக்கு ஆசனம் வழங்குங்கள்

மரத்திற்கு மரம் சென்று
பால் எடுத்துக் கொண்டு வரும்
அம்மா சரஸ்வதி
அவள் உதட்டில் புன்சிரிப்பு
எல்லாளனின் சிரிப்பைப் போன்றதாம்

தேயிலைச் செடிகளுக்குள்
கைகள் வலிக்க வலிக்க
பனியில் நனைந்து கொண்டு
காவி படிந்த கண்களுடன்
கறுத்த வியர்வைத் துளிகளுடன்
நித்தியகலா எல்லாளனின் சகோதரி

சரஸ்வதி - நித்தியகலா

மாணிக்கக் கங்கையில் குளித்த நாம்!
சிவனடிபாத மலையை வணங்கிய நாம்!
பாடசாலையில் ஒன்றாக இருந்த நாம்!
தோசைக் கடையில் உணவருந்திய நாம்!.

அலுவலகத்தில் 'சோமாதேவிக்கு'
கதிர்காமத்தின் முகவரியைக்
கொடுத்தது சிவலிங்கம்...

எல்லாளன் துட்டகைமுனு சமர்
துட்டகைமுனுவுக்கு வெற்றி மேல் வெற்றி
எல்லாளனின் சடலம் யானையின் மீது
.....................................
கைதட்டல்களை நிறுத்துங்கள்!
கைதட்டல்களை நிறுத்துங்கள்!
கைதட்டல்களை நிறுத்துங்கள்!
கைதட்டல்கள் யாருக்காக?
ஒரு... கண்ணீர்... துளியையாவது
அந்தப் பெயருக்காகச் சிந்த
எவராவது இப்போது இருக்கின்றனரா?

அன்று எம்மவரே இறந்தார்!
எமது வீட்டின்
இரத்த உறவினர்...!

**பராக்கிரம கொடிதுவக்கு**

'பொடிமல்லியே' கவிதை நூலிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### ஆசிரியர் குறிப்பு:

நாடு இரண்டாகப் பிளவு பட்டுக் கிடக்கிறது. இந்தப் பிளவு நாளாந்த வாழ்விலும், ஊடகங்கள், அரசியல் வாதிகள், அரச நிறுவனங்கள் மற்றும் அரச நடவடிக்கைகள் அனைத்திலும் தெட்டத் தெளிவாக வெளிப்பட்டு வருகிறது. வடக்கிலும் கிழக்கிலும் நடாத்தப்படும் யுத்தம் பயங்கரவாதிகள் நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிக்க முடியாது என்ற நோக்குடன் நடாத்தப் படுவதாகக் கூறினாலும் இது நாளுக்கு நாள் மக்களது மனோ நிலையில் பிளவை மேலும் விரிவு படுத்திக் கொண்டே செல்கிறது.

இந்த நிலையில் நாட்டை எப்படி இணைப்பது, பிளவுபட்டு நிற்கும் தேசிய இனங்களிடையே ஐக்கியமும் புரிந்துணர்வும் கொண்ட ஒரு சமத்துவமான சமாதானம் நிறைந்த வாழ்வு என்ற கனவை எப்படி நிதர்சனமாக்குவது என்பது பற்றிச் சிந்திப்பதே தர்க்க ரீதியானது. பிளவை இனங்காண விரும்பாதவர்கள் வன்முறையால் பிரிவைத் தடுக்க முயலும் கேலிக் கூத்தை என்றென்றைக்குமாக தமது நலன்களுக்காக செய்து கொண்டு தான் இருப்பார் கள். அவர்களால் ஒருபோதும் இந் நாட்டில் மக்களுக்காக எதையும் செய்துவிட முடியாது. அவர்கள் செய்யப் போவதும் இல்லை.

எனவே, இன்றைய நிலையில் சமாதானம் நிலவக்கூடிய ஒரு ஐக்கியத்தை எப்படி உருவாக்குவது என்பது பற்றிச் சிந்திப்பதும் அதற்காகச் செயற்படுவதுமே அவசியமானது. இங்கு நிலவும் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக அல்லாமல் பயங்கர வாதப் பிரச்சினையாகப் பார்ப்பவர்களால் இதைப்பற்றிச் சிந்திக்க முடியாது. அரசியல் ரீதியாகச் சிந்திப்பவர்கள் சமஷ்டி முறையிலான அரசியலமைப்பைப் பிரேரிக்கின்றனர். இந்தச் சமஷ்டி முறைமை வெற்றிகரமாகப் பல நாடுகளில் இனப்பிரச்சினையைக் கையாள உதவி இருப்பதாக அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால் சமஷ்டி என்றாலே பிரிவினைக்கு வழிகோலும் ஒன்று என்று அதைக் கண்மூடித்தனமாக எதிர்க்கும் போக்கு ஒன்றினை அரசியல்வாதிகள் பரப்பிவருகின்றனர். இது எந்தவித ஆதாரமும் அற்ற வெறும் அரசியல் லாபத்திற்காகக் கூறப்படும் கோசம் மட்டுமே என்பது இன்னமும் பலருக்குப் புரியவில்லை.

மக்கள் மத்தியில் சமஸ்டி முறை சம்பந்தமாக கருத்தாடல் வளர்வது இந்த நிலைமையை மாற்றி அமைக்க வழிவகுக்கும் என்று நம்புகிறோம். எனவே இந்த இதழில் தமிழ் வாசகர்கள் மத்தியிலான கருத்தாடலுக்காக சமஸ்டியை முன் வைக்கிறோம்.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நிலவி வருகின்ற போர்ச் சூழல் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் கருத்துப் பகிர்வு மற்றும் கருத்தாடல் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதுவும் அண்மைக்காலத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கைதுகள், கடத்தல்கள் காணாமல் போதல் என்பன தமிழ்ச் சூழலை ஒரு உறைநிலைக்குக் கொண்டு போயிருக்கின்றது. ஏறத்தாழ ஒரு மயான அமைதி.

சமஷ்டி முறைமை பற்றிய இந்த கருத்துப் பகிர்வுக்காக புத்திஜீவிகள் பலருடன் தொடர்பு கொண்டோம். சிலர் அண்மைக்காலத்தில் தொலை பேசி எண்களையே மாற்றி விட்டார்கள். "இன்னுஞ் சிலர் இப்ப இருக்கிற சூழலில் வேண்டாமே" என்றார்கள். வேறு சிலரோ படத்தையோ பெயரையோ பாவிக்காமல் எழுத முடியாதா என்றார்கள்.

சமூகத்திற்கும் புத்திஜீவிகளுக்குமான உறவை எமது காலனிய காலக் கல்வி முறை கட்டிப் போட்டிருக்கிறது என்கிற குற்றச்சாட்டு ஏற்கெனவே நிலவி வருகிறது. எமது உயர்கல்வி நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் பின் காலனித்துவத்திற்குத் தேவையான மூளை உழைப்பாளர்களையே உருவாக்கி வருகின்றது என்று குற்றஞ் சாட்டுவோர் கூறுவர். கணிணி மென்பொருள் துறையினையும், ஆங்கில மொழி மூலமான கல்விக்கு நமது சமூகங்கள் திரும்பிக் கொண்டிருப்பதனையும் அண்மைய நல்ல உதாரணங்களாகவும் அவர்கள் காட்டுவர். இதனையும் மீறி வெளிவருகின்ற ஒரு சில புத்திஜீவிகளை எமது உயர்கல்வி நிறுவனங்களின் அதிகாரக் கட்டமைப்பு வெளித் தள்ளி விடுகிறது. போதாக்குறைக்கு மாறுபட்ட அபிப்பிராயங்களையும், கருத்தாடலையும், கருத்து வெளிப் பாட்டுரிமையையும் ஏற்றுக் கொள்ள மறுக்கிற போர்ச்சூழல் அவர்களை மொத்தமாகவே மௌனிக்க வைத்து விட்டது.

இந்தப் பின்காலனியச் சூழலும் போரும் இலங்கையில் வாழும் தேசிய இனங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும், கௌரவத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்தத் தவறி விட்டன. பதிலாக நம்பிக்கையின்மையும், அச்சமும், பாரபட்சமுமே மேலோங்கியுள்ளன. இது இலங்கையின் சுயாதிபத்தியம், இறைமை, அபிவிருத்தி, வளர்ச்சி என்பவற்றுக்கு உதவப்போவதில்லை.


இந்தப் பின்புலத்திலிருந்து தான் ராவயவும் சரிநிகரும் FLICT இன் அனுசரணையோடு இனங்களுக்கிடையேயான கருத்துப்பரிமாற்றத்திற்கும் புரிந்துணர்வுக்கும் ஒரு வழியாக இந்தச் செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளன. இதை இன்னும் சிறப்பாக மேற் கொள்ளவும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், கௌரவமான சமாதானம், அனைத்துத் தளைகளிலிருந்துமான விடுதலை என்கிற உயரிய குறிக்கோளை நோக்கிப் பயணிக்கவும் வாசகர்கள், படைப்பாளிகள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர் என்போரிடம் பங்களிப்பையும் ஆதரவையும் கோரிக்கைகளை நீட்டுகிறோம். எங்களின் இந்த நீண்ட பயணத்தில் கைகோர்க்க வாருங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## ஐக்கியத்துக்கு நுழைவாயில் சமஷ்டித் தீர்வே!

**ச.பா.நிர்மானுசன்**
**சமூக செயற்பாட்டாளர்**

கடந்த பெப் 4ம் திகதி சிறிலங்கா தனது 59ஆவது சுதந்திர தினத்தை வெகுவிமர்சையாகக் கொண்டாடியது. சிறிலங்காவினுடைய சுதந்திரம் என்பது தனித்து ஒரு இனக்குழுமத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டது அல்ல என்பது மெய்நிலை. சிறிலங்காவில் வாழ்ந்த ஒவ்வொரு இனக் குழுமமுமே தமது தேசத்தின் சுதந்திரத்திற்காக தமது பங்களிப்பினை நல்கியுள்ளன. அவ்வாறான பங்களிப்பினை நல்கிய ஒவ்வொரு இனக்குழுமமும் சுதந்திர தினத்தினை மனப்பூர்வமாக அனுஸ்டிக்கும் நிலை இன்று இல்லை. அது மட்டுமன்றி சிறிலங்கா அரசாங்கத்தால் தனது ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசமென்று சொல்லப்படுகின்ற பகுதிகளிலேயே சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக் கொடியை சவால்களின்றி ஏற்ற முடியாத இக்கட்டு நிலை. மேற்குறிப்பிட்ட எனது கருத்தானது இலங்கைத் தீவில் நிலவுகின்ற இனக்குழும மோதுகையை எடுத்துக் காட்டுவதற்கான மிக அண்மைய உதாரணம்.

தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டது என்பதையும் அவர்க ளுக்குப் பிரச்சினை உண்டு என்பதையும் சிறிலங்காவினுடைய பெரும்பாலான ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தமிழர் தரப்பினரும் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள், காட்டப்பட்ட பாரபட்சங்கள் மற்றும் தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைகள் ஆகியவற்றிற்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறார்கள். இங்கு பொதுவானதும் நேர்முனையானதுமான விடயம் யாதெனில் இருபிரதான தரப்புக்களுமே தமிழ் மக்களுக்கு பிரச்சினை உள்ளதென்பதில் "ஒருவித" உடன்பாட்டு நிலையில் உள்ளன. ஆனால், இருபிரதான தரப்பும் பிரச்சினையைச் சொல்கின்ற விதமும், அதற்காக முன்வைக்கின்ற தீர்வும் அதனை நின்று சொல்கின்ற தளமும் வேறுபடுகின்றது.

அது மட்டுமன்றி இன்னுமொரு மிகப்பயன் வாய்ந்ததும் பொது வானதுமான நேர்முனை வாய்ப்புள்ளது. அதாவது பிளவுபடாத இலங்கைக்குள் அதிஉச்ச அதிகாரப் பரவலாக்கம் என்ற அரசாங்கத்தின் கருத்துக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவை முன் வைத்து அதற்குத் தகுந்த பதிற்குறியை கொழும்பு காட்டாததால் தற்போது தனியரசு என்ற நிலைப்பாட்டிலுள்ள விடுதலைப் புலிகளின் கருத்துக்கும் இடையில் ஒரு பொதுவான தீர்வு வழி உள்ளது. அது இன்று இலங்கைத் தீவு சந்தித்துள்ள பல்வேறு நெருக்கடிகட்கும் தீர்வு காண்பதற்கான நுழைவாயிலாகவும் அமை யும். அந்தத் தீர்வு சமஷ்டித் தீர்வே என்று உறுதியாகக் கூறலாம். ஆனால் அந்தப் பயணமும் சவால் மிக்கதொன்றே. இலங்கைத் தீவில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றிணைவதனூடாக அத்தகைய சவாலை முறியடித்து நிலைபேறான நியாயமான கௌரவமான சமாதா னத்திற்கு வழிசமைக்கலாம்.

## சமஷ்டி எந்தளவுக்கு ஈடாகப் போகிறது?

**கீதா**
**ஒருங்கிணைப்பாளர்**
**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்**

சமஷ்டி அடிப்படையிலான தீர்வு இப்போதிக்கும் காலகட்டத்தில் இலங்கைக்கு ஒவ்வாது. தமிழர்களைப் பொறுத்த வரையில் இரு தசாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தகாலத்திற்கு முந்தியேனும் தீர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் அனுபவித்த துன்பதுயரங்கள் மற்றும் இழப்புக்கள், உயிர்ச் சேதங்கள் மிகவும் பாரதூரமானவை. எவ்வாறெனினும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அவர்கள் பல்வேறுபட்ட மனோநிலை களில் பாரிய நெருக்கடிகளையும், பாரதூரமான சோதனைகளையும் கடந்து வந்திருக்கின்றனர். இந்நிலையில் கிடைக்கவிருக்கும் தீர்வானது எந்தளவுக்கு ஈடாகப் போகிறது? காலம் பிந்திக் கிடைக்கும் சொற்ப அளவினதானதாக அது ஒரு போதும் இருந்து விடக்கூடாது. (too little, too late)

முற்பட்ட காலங்களை விட்டுவிட்டு மிக அண்மைக்காலமாகிய ஐந்து ஆண்டுகளை எடுத்துப்பார்த்தால் கூட தமிழர்களது உயிர், பொருள் சேதங்கள் மற்றும் இழப்புக்கள், இடப்பெயர்வுகள் என்பவை சொல்லுந்தரமன்று.



சரி, சமஷ்டி வழங்கப்படுவதாக இருந்தால் எப்போது வழங்கு வார்கள்? எந்தளவுக்கு வழங்கப் போகிறார்கள்? இது எவ்வாறு உறுதிப் படுத்தப்படப் போகிறது? தமிழ் மக்களுக்கு அளிக்கப்படும் அதிகார ங்களை தலையீடற்ற நிலையில் எந்தளவுக்குப் பிரயோகிக்கலாம்.? தமிழ் மக்கள் சுயாதீனமாக அவற்றை அனுபவிக்க முடியுமா?


நிச்சயமாக இந்தியாவைப் போன்ற அடிப்படையிலான மிகப் பலவீனமான சமஷ்டி முறை எமது அபிலாசைகளுக்கு உகந்தது அல்ல. கன்ரோன் முறை அடிப்படையிலான சுவிற்சலாந்து முறையை ஒட்டிய மாதிரியே எமக்குப் பொருத்தமானதாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.




## சமஷ்டிக்கு ஏன் இந்த கால தாமதம்?

**பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை**

உலகத்தை எடுத்துப்பார்த்தோமானால் பலவித அரசுகள் இருக்கின் றன. ஆனால் இந்த நிலைமையை சற்று ஆராய்ந்தால் கனடா, அவுஸ் ரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலெல்லாம் சமஸ்டி முறையிலான ஆட்சி தான் நிலவுகின்றது.



தனியாக ஒரு தலைவர் நடாத்திய ஆட்சியை எடுத்துக் கொண்டால் அதற்கு உதாரணமாக ஜேர்மனி மற்றது இத்தாலி ஆகிய நாடுகளைக் கொள்ளலாம். ஆனால் இவ்விரு நாடுகளிலும் கடைசியாக நடந்தது என்ன? ஒரு தலைவர், தான் விரும்பியபடி ஆட்சி நடாத்தி இறுதியில் அவை அழிந்து போயின. அதைப் போலவே ரஷ்யாவிலும் கார்ல் மாக்ஸ் எழுதியபடி ஆட்சி நடக்கவில்லை. ஆட்சி முறையும் அமைக்கப்படவில்லை.



இப்பொழுது எங்களுடைய அயல்நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் கலாநிதி அம்பேத்கார் தலைமையில் ஆலோசித்து எடுத்துக் கொண்ட ஆட்சிமுறை, பெருமளவுக்கு சமஷ்டி முறை யினைப் பின்பற்றி அமைக்கப்பட்ட ஒன்றாகும். இதற்குக் காரணம் என்னவெனில் இந்தியாவில் பல இனங்கள் இருந்தன. மொழி, கலாசாரம் மற்றும் வாழ்க்கை நடைமுறைகளை எடுத்துக் கொண்டு பார்த்தோமானால் மொழியாக இருந்தாலோ அல்லது அனுசரிக்கப் படும் வாழ்க்கை முறைகளாக இருந்தாலோ வேறுபாடுகள் இருந்தன. ஆதலால் மத்திய அரசாங்கத்தை நிறுவி, அதன்பின் வேறுபட்ட பகுதிகளுக்குப் பொருத்தமான அரசுகளை அமைத்தனர். உதாரணம் கூறவேண்டுமானால் கேரளா, சென்னை, கர்நாடகா, ஆந்திரப்பிரதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சம், உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அவ்வப்பகுதிகளிலுள்ள அரசுகளுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. அதேவேளை வெளிநாட்டுத் தொடர்புகள், இராணுவம், நீதி செலுத்துதல் போன்ற அதிகாரங்களை மத்திய அரசாங்கம் கொண்டிருந்தது. இதனால் இன்று வரை நாட்டைப் பிளவு படுத்தக்கூடிய பிரச்சினைகள் தோன்றவில்லை. ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், பிராந்தியத்தின் தலைவர் மத்திய அரசாங்கத்துடன் ஆலோசித்து அப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம்.

இந்த நிலையில் இன்று இலங்கை பற்றிச் சிந்தித்தால் சுதந்திரம் கிடைத்த காலத்திலேயே சமஷ்டியினைக் கைக்கொண்டு நெருக்கடிகளை விலக்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.


### இதய சுத்தி இல்லாத வரை தனிநாடே தீர்வு

**மனோராஜசிங்கம்**
**சூழலியலாளர்**



இந்தக் கேள்விக்கு ஒரு சொல்லில் பதில் அளிக்கலாம். இல்லை. ஏன் இல்லை என்று கேட்டால் அதற்குப் பல நூறு பக்கங்களில் பதில் கூறலாம். நான் ஒரு சில நூறு சொற்களில் எனது நிலைப்பாட்டைக் கூறுகிறேன்.

"சமஷ்டி" என்றால் என்ன? பலருக்கும் பல மாதிரியான கருத்துக்கள். இந்திய சமஷ்டி, கனேடிய சமஷ்டி, ஜேர்மனிய சமஷ்டி, சுவிஸ் சமஷ்டி அல்லது புதிதாக அமைத்துக் கொண்ட ஏதோவொரு சமஷ்டி. எந்த சமஷ்டியைப் பற்றிப் பேசுகிறீர்கள்?




நல்ல கடற்காற்றும் நிம்மதியான நித்திரையும் பயமற்ற சூழலும் இருந்தால் ஒரு குடிசையும் சந்தோசமாக இருக்கும். மாறாகப் பக்கத்துக் காணிக்காரன் சேட்டைவிடுகிறான், அயலில் அவ்வளவு வசதி இல்லையென்றால் ஒரு மாளிகையைக் கட்டிக் கொண்டு அதைச் சுற்றி பத்தடி மதில் கட்டினால் தான் நிம்மதி இருக்கும் என்று எண்ணத் தோன்றும்.



இப்படித்தான் சமஷ்டியும், நீதியும் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய பொறிமுறைகளையும் கொண்ட நிர்வாகத்துறையும் நம்பிக்கை வளர்க்கக் கூடிய அரசும் இருந்தால் சமஷ்டி என்பது பற்றிக் கதைக்கலாம். ஏன் சமஷ்டி இல்லாமல் கூட இருக்கலாம். குடிசையே போதும் என்ற மாதிரி.

ஆனால், தமிழ் மக்களின் இன்றைய நிலையைப் பார்ப்போம். சமஷ்டி கேட்டுக் கட்சி கட்டிய செல்வநாயகத்திற்கு பிராந்திய சபைகள் கூட 1959இல் பண்டாரநாயக்காவினாலும், பின் 1960களில் டட்லி சேனாநாயக்காவினாலும் மறுக்கப்பட்டது. 1976இல் வட்டுக்கோட்டையில் ஈழப்பிரகடனம் செய்யப்பட்ட பின்னும் 1981 இல் என்ன நடந்தது?



ஒரு நகரசபை போல் அதிகாரம் கொண்ட மாவட்ட சபைகள் என்ற ஒன்றைத் தீர்வாக வைத்தனர்.

1987இல் வடக்குக் கிழக்கு இணைக்கப்பட இந்திய இலங்கை ஒப்பந்தமும் இதைப்பற்றி ஒன்றும் செய்யாமல் 20 வருடங்கள் இருந்துவிட்டு இன்று நீதித்துறையால் பிரிக்கப்பட்டு விட்டது. தமிழ் மக்களின் குறைந்தபட்ச ஒரு அபிலாஷை கூடத் தூக்கி எறியப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிகாரத்தைத் துஷ்பிரயோம் செய்யும் லஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடும் அரசாங்கம். அரசியல் மயமாக்கப்பட்டுள்ள நீதித்துறை, முழு நாடும் இராணுவ மயமாக்கப்பட்டு இருக்கும் நிலை. ஆட்கடத்தல், கொலை என்பன ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டிருந்தாலும் அதைப்பற்றி ஒன்றும் செய்யாமல் இருக்கும் அரசு.

இன்று தமிழ் மக்களின் குறைந்தபட்ச பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதும் இந்த அரசு தான். இந்த அரசாங்கம் தான்.

அடிப்படையில் சிறிலங்கா அரசு சீர்திருத்தப்படாமல் சமஷ்டி என்னவொரு ஒழுங்கான கிராமசபையைக் கூட நடத்த முடியாது.

இன்று தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை இன்னொரு கண்ணோட்டத்தில் பார்த்தால் இது இந்த அரசை சீர்திருத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம். ஏனென்றால் போராட்டங்கள் இல்லாமல் சீர்திருத்தங்கள் வருவதில்லை. இதைப் புரிந்து கொண்டவர்கள் எத்தனை பேர் அரசாங்கத்தில், எதிர்க்கட்சிகளில் இருக்கிறார்கள்? எத்தனை பேர் அரசு அதிகாரிகளாக இருக்கிறார்கள்?

எங்கள் மத்தியில் அரசாங்கத்தில் சரி பொதுவாக அரசியலில் சரி உண்மைகளை மறைத்து, மறுத்து, மறந்து செயற்படுபவர்கள் இருக்கு மட்டும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு சமஷ்டியோ அல்லது அதன் வடிவங்களாகவோ இருக்க முடியாது. இந்த நிலைமை மாறும்வரை தனிநாட்டைத் தவிர வேறு வழியில் இதைத் தீர்க்க முடியுமென்று தோன்றவில்லை. ●

## செத்துப் போனவர்களின் சம்பாசனை

உனது கையில்
இருந்தது துப்பாக்கி
எனது கையிலும்
இருந்தது துப்பாக்கி

நீ சுட்டு
நான் சாக
நான் சுட்டு
நீ சாக -

நேர்ந்தவை மரணங்கள்

நீ
மக்களுக்காய் மரணித்தாய்
எனவும்
நான்
மாக்களுக்காய் மரணித்தேன்
எனவும்
"மக்கள்" சொல்கிறார்கள்

சுவரொட்டிகள் கூட
அப்படித்தான் சொல்கின்றன

உன்னை நான்
சுட்டதற்கும்
என்னை நீ
சுட்டதற்கும்
காரணங்கள்
எமக்கென்றால் தெரியாது

இறப்பவர்கள் பற்றி
இருப்பவர்களுக்குக்கவலையில்லை

எண்ணிக்கை யந்திரத்தின்
இரும்புப் பசிக்கு
இருவருமே சிறுதீனி

செத்ததெல்லாம்
மனித உயிர்
சிதைந்தழுகிக்
காகம் குதறி
நாய் பிடுங்கக்
கிடந்ததெல்லாம்
மனித உடல்

இவையெல்லாம்
நிகழ்ந்த பின்னும்
இன்னும்
சனங்களேதும்
பேசாதிருத்தல் அதிசயம் தான். ●

**கவிதை : இளவாலை விஜயேந்திரன்**
**நன்றி : நிறமற்றுப் போன கனவுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "அர்த்தமுள்ள" சமஷ்டியாக இருத்தல் அவசியம்

**பாக்கியசோதி சரவணமுத்து**
**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

சமஷ்டி என்னும் எண்ணக் கருவின் மையத்தில் இருப்பது அதிகாரப்பகிர்வு தொடர்பான மையக் கருத்தும், சுயாட்சி, பகிர்ந்த ஆட்சி என்பவற்றின் மீளிணக்கத்தில் அதனை வெளிப்படுத்துவதுமாகும்.

மத்தியில் அதிகாரம் செறிந்து கிடக்கும் ஒற்றையாட்சி முறைகளுக்கும் சமஷ்டிக்குமிடையிலான வேறுபாடுகளும் கவனிக்கப்பட வேண்டியவை. இதன்படி ஆட்சிக் கட்டமைப்பில் உள்ள சுய அதிகாரம், பரஸ்பரம் தங்கியிருத்தல், ஐக்கியம் என்பவற்றின் தொகுப்பானது சமஷ்டிக்கும் அதனை இலங்கையில் அடைவதற்கும் ஒஸ்லோ பிரகடனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிரதான இடையாடலாக அமைகின்றது. சமஷ்டியின் அவசியமான பண்புகள் மற்றும் ஆட்சிமுறை என்ற வகையில் அதன் தொழிற்பாடு தொடர்பாக அக்கறையுள்ளவர்கள் மற்றும் பொதுமக்கள் மட்டத்தில் தகவல் அறிவு என்பன இல்லாதிருக்கும் அளவிற்கு இந்த விடயங்களில் ஏதோ ஒன்று அல்லது இரண்டும் தொடர்பாக பிரதான நடிகர்களான இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் பொதுவான புரிந்துணர்வைக் கொண்டுள்ளார்களா என்ற பிரதான கவலையும் இங்கு காணப்படுகிறது. இணையாட்சி என பொதுவாக அங்கீகரிக்கப்படுகின்ற ஆட்சி முறையினை பரந்தளவில் உள்ளடக்கும் விதத்தில் பொதுப் பெயராக சமஷ்டி கருதப்பட வேண்டுமா என்பது மற்றுமொரு அக்கறைக்குரிய விடயமாகும். பொலிஸ், நிதி, நீதி, நிர்வாகம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் சமஷ்டி அலகுகளில் காணப்படும் அரசாங்கங்களுக்கும் மையத்திற்கும் இடைப்பட்ட பங்குகள் - உறவுகள் தொடர்பானவையாக ஏனைய கவலைகள் அமைந்துள்ளன. அமைப்புகளினதும், சமூகங்களினதும் அரசியல் தேவைகளையும் அரசியல் அபிலாஷைகளையும் கருத்தில் கொண்டு அவற்றை சமநிலைப் படுத்தி முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்பினரால் சமாதானப் பேச்சின் போது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாகவே இவையுள்ளன.



ஆயினும், அர்த்தமுள்ள சமஷ்டி முறையில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட சில அடிப்படை அம்சங்கள் கோட்பாடுகள், விழுமியங்களை நிறுவன மற்றும் நடைமுறை ரீதியாக வெளிப்படுத்துவதை அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. சுயாட்சி, பகிர்ந்த ஆட்சி, சுய அதிகாரம், பரஸ்பரம் தங்கியிருத்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவசியமானவையாக இருப்பதுடன் பின்வரும் விடயங்களையும் உள்ளடக்குகின்றன.

யாப்பின் முதன்மை மையத்தினதும் சமஷ்டி அலகுகளினதும் அதிகாரங்களையும் தெளிவாக வரையறை செய்கின்ற ஒரு எழுதப்பட்ட யாப்பு மையத்துக்கும் சமஷ்டி அலகுகளுக்குமிடையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான பிணக்குகளின் பக்கச்சார்பற்ற நடுவராகச் செயற்படும் மிகவும் உயர்ந்த நீதிமன்றம் என்ற வகையில் அமைந்த உச்சநீதிமன்றம்.

சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு அமைவாக அமைந்த சகல பிரஜைகளுக்குமான உரிமைகள் சட்டமூலம். மையத்தின் சட்டவாக்கத்தில் சமஷ்டி அலகுகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற இரண்டாவது சபை. சமஷ்டி அலகுகளுக்கு போதுமான அளவு நிதி வளங்கள்.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் தரப்பினர் நியமங்களினது அடிப்படையிலானதும் நிறுவன ரீதியானதும் நடைமுறைகள் தொடர்பானதுமான சமஷ்டி வரையறைக்கு உட்பட்ட அரசியல் தீர்வொன்றுக்கு உட்பட்டுப் போக முடியுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். நிச்சயமாக இது இலகுவானதாக இருக்கமாட்டாது. மேலும் அதிகாரங்கள் தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்கு அப்பால் அல்லது அனேகமாகக் கலந்துரையாடலுக்கு முன்னர் பிரதேசம் தொடர்பான விவகாரங்கள் அதிகாரப்பகிர்வில் காணப்படும் சமச்சீரற்ற தன்மை தொடர்பான கோட்பாடுகள் ஆகியவை தொடர்பாக இணக்கம் காணப்பட வேண்டியுள்ளது. மேலும் எதிர்காலத்தில் எட்டப்பட வேண்டியதும் இறுதியில் ஒரு புதிய சமூக ஒப்பந்தம் அரசு



**ஐந்தரை தசாப்தங்கள் நீடித்த இன முரண்பாடு, ஒற்றையாட்சி முறையின் கீழ் மோசமடைந்து வரும் ஆட்சிமுறை என்பவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது எமது அரசியல் மற்றும் யாப்புத் தொடர்பான படிமுறை விருத்தியில் அவசியமான ஒரு பாரிய மாற்றத்தின் தெளிவான இலக்காக சமஷ்டி தன்னைப் பலமாக விதந்துரைக்கின்றது. நாங்கள் அதனைப் பற்றி அறிவு பெற்று எமது தேவைகளுக்கு ஏற்ப அதனை உருவமைத்து செயற்பட வைக்க வேண்டியுள்ளது. இது சுவாரசியமானதாகவும் விரக்தியை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். ஆகவே நாம் அனைவரும் பங்காளர்கள் என்ற வகையில் ஈடுபட்டு எமது உரிமைகளையும், கடமைகளையும் காத்திரமான வகையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.**

என்பவற்றைக் கொண்டதுமான ஒரு அரசியலமைப்புத் தீர்வாக இது இருக்கின்றமையால் இன்பிரச்சினையின் சூழமைவு என்பதைக் கருத்தில் கொள்ளாது ஆட்சி முறையை மேலும் முன்னேற்றுவதற்கான கட்டமைப்பு என்ற வகையில் சமஷ்டி முறைக்குச் சார்பான விவாதங்கள் இனிமேல் தான் முன்வைக்கப்பட்டு கவனிக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன. மேலும் பரந்த வீச்சில் இருக்கக் கூடிய பங்காளர்களுக்குப் பங்கு பற்றலையும் உள்ளடக்கும் கட்டத்துக்கு யாப்பு ஆக்கச் செயன்முறை நகரும் போது இது நிச்சயமாக நடை பெறும்.


இங்கு மீண்டும் மீண்டும் மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவென்றால் சமஷ்டி என்பது எமது தற்போதைய துன்பங்கள் அனைத்துக்குமான ஒரு சர்வரோக நிவாரணி அல்ல என்பதாகும். எமது தேவைக் கேற்றதாக அமைக்கப்பட்டு அமுலாக்கத்திற்கு விடப்பட்டதும், வெளிப்படும் குறைபாடுகள் சீர் செய்யப்படும். உண்மையில் ஜனநாயக ரீதியான சமாதானத்திற்கும் ஆட்சி முறைக்குமான சமஷ்டித் திட்டம் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கும் தன்மையை எப்போதும் கொண்டிருக்கும். எனினும் ஐந்தரை தசாப்தங்கள் நீடித்த இன முரண்பாடு, ஒற்றையாட்சி முறையின் கீழ் மோசமடைந்து வரும் ஆட்சிமுறை என்பவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது எமது அரசியல் மற்றும் யாப்புத் தொடர்பான படிமுறை விருத்தியில் அவசியமான ஒரு பாரிய மாற்றத்தின் தெளிவான இலக்காக சமஷ்டி தன்னைப் பலமாக விதந்துரைக்கின்றது. நாங்கள் அதனைப் பற்றி அறிவு பெற்று எமது தேவைகளுக்கு ஏற்ப அதனை உருவமைத்து செயற்பட வைக்க வேண்டியுள்ளது. இது சுவாரசியமானதாகவும் விரக்தியை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். ஆகவே நாம் அனைவரும் பங்காளர்கள் என்ற வகையில் ஈடுபட்டு எமது உரிமைகளையும், கடமைகளையும் காத்திரமான வகையில் எடுத்துக் கொள்ள வேண்டும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எங்கள் புரட்சி வெற்றி பெற்றது!”

## மாவோயிஸ்ட் இயக்கத் தலைவர் பிரசண்ட



அண்மைக்காலத்தில் ஆயுத மோதல்கள் நடைபெற்ற பல நாடுகளில் சமாதானத்துக்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அவ்வாறு சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட நாடுகளில் இலங்கைக்கு அண்மையில் உள்ள நேபாளமும் ஒன்று. அங்கு இரண்டு தசாப்தங்களாக அரசுக்கு எதிராக மக்கள் விடுதலைக்காக போராடி வந்த மாவோயிஸ்ட் போராளிகளுக்கும் நேபாள அரசாங்கத்திற்குமிடையே உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது. அவ்வுடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் 2006ஆம் ஆண்டின் பிற்பகுதியல் இத்தாலியப் பத்திரிகை ஒன்றுக்கு நேபாள மாவோயிஸ்ட் இயக்கத்தின் தலைவர் பிரசண்ட வழங்கிய நேர்காணல் இது. நேர்கண்டவர் அலெக்ஸ்ஸான்ரா கிலியோலி.

■ பிரசண்ட, நாங்கள் தற்போதைய நிலைமைகளிலிருந்து ஆரம்பிப்போம். இப்போது போர் முடிவுக்கு வந்து விட்டது. நீங்கள் காத்மண்டுவுக்கு வந்து விட்டீர்கள். போக்குரவத்திலிருந்து நகரை தூய்மையாக வைத்திருப்பது உட்பட அனைத்து வழிகளிலும் இப்போது மாவோயிஸ்ட் பொலிஸார் தலைநகரை நிர்வகிக்கிறார்கள். உங்களுடைய சுவரொட்டிகள் எங்கும் காணப்படுகின்றன. இவையனைத்தும் நீங்கள் ஏற்கெனவே போரில் வென்று விட்டதாகவே எனக்குத் தோற்றுகின்றது. அது உண்மை தானா?

● நாங்கள் இதனை முற்றாகச்சரி எனக்கூற முடியாது. ஆனால் நீங்கள் கூறியது எல்லாமே நடைபெறுகிறது. எங்களுடைய புரட்சி இன்னமும் முழுமையாக வெற்றியடையவில்லை. இன்று நாட்டில் நாங்களே பிரதான அரசியல் சக்தி என்றவகையில் சமூக பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைத்தல், மக்களுக்கு அதிகாரத்தை அளித்தல் ஆகிய நடவடிக்கைகளை - பாரியளவில் முன்னெடுத்து வருகிறோம். நாங்கள் நினைக்கிறோம். அவற்றில் 60 வீதமான இலக்கை இப்போது நாம் அடைந்து விட்டோமென்று. மீதி 40 வீதத்தையும் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலின் மூலம் அடைந்து விடலாம் எனவும் நினைக்கிறோம்.

■ இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

● ஒரு வருடம் வரை செல்லலாம் என நினைக்கிறேன். நாங்கள் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை 6-7 மாதங்களில் வைக்க முயற்சி எடுத்து வருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேகாலப்பகுதியில் நாட்டினுள் மிகப் பெரிய சமூக பொருளாதார மாற்றங்கள் நிகழும். அதனோடு இதில் வெற்றியடைவோமென்று நான் நம்புகிறேன்.

■ **உங்களுடைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?**

● எல்லா ஜனநாயக சக்திகளையும் இணைத்து குடியரசுக்கான முன்னணி ஒன்றை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை உத்தேசித்துள்ளோம். தனியே இடதுசாரிகளைக் கொண்டதல்ல அது. தாராளவாதிகள், முற்போக்குவாதிகள் அனைவரையும் கொண்டதாக அது இருக்கும். நிலப்பிரபுத்துவ அதிகாரத்துவத்திற்கு எதிராக நாங்கள் நாட்டில் உள்ள எல்லா குடியரசு சக்திகளையும் ஐக்கியப் படுத்தவே விரும்புகிறோம்.



■ **குடியரசு அரசாங்கம் ஒன்றை கருத்துக் கணிப்பினூடாகவா அல்லது அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலூடாகவா அமைக்க எண்ணுகிறீர்கள்?**

● சரியாகச் சொன்னால் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் வாய்ப்பாக உள்ளது. கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு என்பது இப்போது சாத்தியமில்லை. ஏனெனில் காங்கிரஸ் கட்சி போன்றன இந்த விடயத்தில் வேறுபட்டுள்ளன. நாங்கள் கருத்துக் கணிப்புக்கு உடன்படுகிறோம். இந்த விடயத்தில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அரசியல் நிர்ணயசபைக்கான தேர்தல் என்பது அதைவிட மிகமுக்கியமானது.

■ **மன்னர் கஜேந்திராவின் நிலை என்னவாக இருக்கும்?**

● மன்னர் என்ற நிலையில் அவர் தமது பங்கிற்கு ஏற்ப எந்த நிலைப்பாட்டை எடுக்கிறாரோ அதைச் சார்ந்ததாக அவருடைய நிலை இருக்கும். அங்கு அவருக்கு எந்த அரசியல் பாத்திரமும் இருக்கப் போவதில்லை. இந்த நாட்டில் மன்னராட்சி முற்று முழுதாக ஒழிக்கப்படும். மக்களின் ஆணையை கஜேந்திரா ஏற்பார் என்றால் அவர் சாதாரண குடிமகன் போல நேபாளத்தில் இருப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர் அதனை ஏற்கவில்லை என்றால் குடியரசுக்கு எதிராக அவர் ஏதாவது சதியில் ஈடுபடுவாராகில் அவர் நசுக்கப்படுவார். சிலவேளைகளில் அரசு அவருக்கு கொஞ்ச நிலத்தையும், சொத்துக்களையும் வழங்கலாம். ஆனால் அவர் அரசியலிலிருந்து தூர விலகியிருக்க வேண்டும்.

■ **அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் எவ்வளவு வாக்குகளை அல்லது எவ்வளவு வீதத்தை மாவோயிஸ்ட் கட்சி பெறும் என்று நினைக்கிறீர்கள்?**

● சனத்தொகையில் பெரும்பான்மையானோர் எங்களுக்கு வாக்களிப்பர் என நான் நினைக்கிறேன். 50 வீதத்திற்கு மேல் எங்களுடைய கட்சிக்குக் கிடைக்கும். எமது கணிப்பின்படி கிராமப்புறங்களில் 80 வீதத்திற்கு மேலான மக்கள் எங்களுடைய கட்சியை ஆதரிக்கிறார்கள். நகர்ப் புறங்களிலும் வேறு பிரதேசங்களிலும் நிலைமை மாறி மாறி இருக்கிறது. இப்போது நாங்கள் நகர்ப்புற மக்களுடைய வாக்குகளையும் பெறுவதற்கு கடுமையான முயற்சி செய்கிறோம். எப்படியிருந்த போதிலும் மாவோயிஸ்ட் கட்சி 50 வீதத்திற்கு மேற்பட்ட ஆதரவை நாட்டில் பெறும் என்று நான் நினைக்கிறேன். ஜனநாயக சக்திகளும், குடியரசுவாதிகளும், இடது மற்றும் முற்போக்காளர்களும் என எல்லாமாக 75 வீதத்திற்கு மேலான வாக்குகளைப் பெறுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

■ **மாவோயிஸ்ட்களையும் கம்யூனிஸ்களையும் கொண்ட ஒரு கட்சி தேர்தலில் வென்று புதிய நேபாள அரசாங்கத்தை அமைப்பதை அமெரிக்க அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? 1970களில் சிலியில் நடந்தது போல சதிமூலம் தோற்கடிக்கப்படலாம் என்று நீங்கள் பயப்படவில்லையா?**

**நேபாளத்தின் சமாதான முயற்சியை ஆசியாவில் அமெரிக்காவின் பிரசன்னம் முறியடிக்க முயற்றி செய்கிறது. அவர்கள் எப்போதும் ஜனநாயகத்தை எதிர்த்து அரசரையே ஆதரித்து வருகிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இது மிகவும் முக்கியமான விடயம். நேபாளத்தின் சமாதான முயற்சியை ஆசியாவில் அமெரிக்காவின் பிரசன்னம் முறியடிக்க முயற்றி செய்கிறது. அவர்கள் எப்போதும் ஜனநாயகத்தை எதிர்த்து அரசரையே ஆதரித்து வருகிறார்கள். அமெரிக்கத் தூதுவர் ஜேம்ஸ் மொறயாரி இப்போதும் நேபாளத்தின் பல பிராந்தியங்களுக்கும் சென்று மாவோயிஸ்ட் கெட்டவர்கள் அவர்களை நம்ப வேண்டாம் என்று ஒவ்வொருவருக்கும் சொல்லி வருகிறார். ஆக சி.ஐ.ஏ எங்களுடைய இயக்கத்திற்கு எதிராக சதிகளில் ஈடுபடலாம். நாங்கள் கவனத்துடன் இருக்கிறோம். நாங்கள் எதற்கும் தயாராக இருக்கிறோம். குடியரசையும் ஜனநாயகத்தையும் நோக்கிய எங்கள் வீறுநடையை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

■ **மாவோயிஸ்ட் 50 வீத்திற்கு மேலான வாக்குகளைப் பெற்றால் நீங்கள் தனித்து அரசாங்கத்தை அமைப்பீர்களா?**

● இல்லை. நாங்கள் இடது மற்றும் முற்போக்கு ஜனநாயகவாதிகளையும் இணைத்துக் கொண்டே முன்னேற முயற்சிப்போம். நாட்டை முன்னேற்றுவதற்கு எமக்கு கூட்டமைப்பு மிக அவசியம். ஆனால் தேர்தலில் மாவோயிஸ்ட் வெற்றி பெற்றால் நாங்கள் இயல்பாகவே குடியரசின் தலைமைத்துவத்தைக் கோருவோம்.

■ **உங்களுடைய இடம் இதில் என்ன பிரசண்ட?**

● நல்லது. கட்சி அதனை முடிவு செய்யும். ஆனால் தனிப்பட எனக்கு ஜனாதிபதியாக வர விருப்பமில்லை. எங்களுடைய நாட்டின் சமூக பொருளாதார அடித்தளத்தை முற்றாக மாற்றும் முயற்சியில் ஈடுபடவே நான் விரும்புகிறேன். ஆனால் இதற்கு அரசாங்கத்தில் இருக்க வேண்டும் என்பதோ பதவியை ஏற்க வேண்டும் என்பதோ அல்ல...


■ **நேபாளத்தில் மிக அவசியமாக சீர்திருத்தப்பட வேண்டிய அம்சங்கள் எவை என்று எண்ணுகிறீர்கள்?**

● முதலாவதாக முழு அரசையும் புதிய சமஸ்டி முறைமையின் கீழ் மீளக்கட்டமைக்க வேண்டும். கடந்த 230 வருடங்களாக உள்ள நிலப் பிரபுத்துவ முறைமையை நாங்கள் மாற்றியமைக்க வேண்டும். அரச கட்டமைப்பை அடிப்படையில் நாங்கள் ஜனநாயக பூர்வமானதாக மாற்றியமைக்க வேண்டும். நாங்கள் 9 அல்லது 10 சுயாட்சியுடன் கூடிய பிராந்தியங்களைக் கொண்ட சமஸ்டி அடிப்படையிலான அரசு ஒன்றை உருவாக்க வேண்டும். அதே வேளையில் எங்களுடைய முன்னுரிமை புரட்சிகரமான நிலச் சீர்திருத்தமே. மிகப்பெரிய நிலப் பிரபுக்களின் நிலங்களை நாங்கள் சுவீகரிக்க விரும்புகிறோம். அவர்களுடைய நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு வறியமக்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

■ **நேபாளத்திலும் வெளிநாட்டிலும் இருக்கும் சிலர் மாவோயிஸ்ட்டுகளை ஒரு ஜனநாயகக் கட்சி என இன்னமும் நம்பத் தயாராகவில்லை. அவர்கள் நினைக்கிறார்கள் நீங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு தந்திரோபாயமாகவே பலகட்சி முறைமையை ஏற்றுக் கொள்கிறீர்கள் என. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

● ஓம், நான் இந்தக் குரல்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது என்னவெனில் நாங்கள் உண்மையாகவே சோசலிசத்தை நம்புகிறோம். இதேவேளை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலும் கூட பலகட்சி முறைமைக்கான ஒரு பங்குபற்றல் உண்டு. நாங்கள் இந்த முடிவுக்கு எங்களுடைய கட்சியில் நடைபெற்ற விவாதத்தூடாகவே வந்தோம். பலகட்சி முறைமை இல்லாமல் நவீன சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்ற புரிதல் எங்களுக்கு இருக்கிறது. ஆனால் இதில் எங்களுக்கு மிகமுக்கியமான விடயம் ஒன்று உள்ளது. இந்த பலகட்சி முறைமையும் ஜனநாயகமும் யாருக்காக? மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு உதவாத பல்வேறு ஜனநாயக முறைமைகளை நாங்கள் நேரடியாகக் கண்டுள்ளோம். அவை ஒரு சில வர்க்கங்களுக்கு அல்லது பிராந்தியத்திலுள்ளவர்களுக்கே உதவின. மக்களுக்கு உண்மையாகவே நன்மை பயக்கக் கூடிய ஜனநாயகமே எங்களுக்குத் தேவை. இது ஜனநாயகம் பற்றிய எங்கள் எண்ணப்பாடு. இதில் தந்திரோபாயமோ மூலோபாயமோ எதுவுமில்லை. எம் மீது குற்றம் சுமத்துவோர் எப்போதும் நிலப் பிரபுக்களினதும், முதலாளித்துவ வாதிகளதும், மக்கள் மீது குண்டு பொழியும் யுத்த வெறியர்களதும் (ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் போல்) பக்கத்திலேயே நிற்பவர்கள். அவர்கள் உண்மையில் ஜனநாயகவாதிகள் இல்லை. அவர்களைப் போல நாங்கள் இருக்க முடியாது.

■ **உலகில் உங்களுக்கு நெருக்கமான தலைவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்று உணர்கி றீர்களா? பிரேஸிலின் லூலா, வெனிஸ்வெலாவின் சாவோஸ், தென்னாபிரிக்காவின் மண்டேலா ...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


● நான் நினைக்கிறேன். வேறு முதலாளித்துவ தலைவர்களோடு ஒப்பிடும் பொழுது இவர்கள் நெருக்கமாக இருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் கோட்பாட்டு ரீதியாக நாங்கள் அவர்களிடமிருந்து வேறுபடுகிறோம். அவர்கள் மத்தியதர வர்க்கத்தையே பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். நாங்கள் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினரையும், பாதிக்கப்பட்டவர்களையும் நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்.

**■ பிடல் காஸ்ரோவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

● நாங்கள் உண்மையிலேயே பிடலுக்கு அந்தளவு நெருக்கமாக இல்லை. மக்கள் யுத்தத்தை நடாத்தும் போது சேகுவேரா விடமிருந்து சில முன்மாதிரிகளை நாங்கள் எடுத்துக் கொண்டோம். ஆனால் இன்று வரை நாம் எமது வழியிலேயே பயணிக்கிறோம். மக்கள் இயங்கியலைப் புதிய தளத்திற்குக் கொண்டு செல்ல விரும்புகிறோம். அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகப் போரிட்ட உயர் குழாத்தினரையே நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் கோட்பாட்டு ரீதியாக நாங்கள் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் அல்ல என்றே நான் நினைக்கிறேன். உண்மையில் எங்களுடைய புரிதலும் எங்களுடைய தளமும் உலகில் உள்ள எந்த கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் வேறுபட்டதாகவே இருக்கிறது. நாங்கள் மார்க்சியத்தை 21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ற வாறு வியாக்கியானப்படுத்த முயல்கிறோம். நாங்கள் உலகெங்கிலும் உள்ள சோசலிஸ்ட்களுடனும், கம்யூனிஸ்ட்களுடனும் இடதுசாரி இயக்கங்களுடனும் இது பற்றி விவாதித்து வருகிறோம். இது தெற்காசியாவுக்கு மட்டும் முக்கியமானது அல்ல. உலகெங்கும் உள்ள மக்கள் அனைவருக்கும் தேவையானது.

**■ நீங்கள் கம்போடியாவின் பொல்பொட்டின் கமர் ரூப்பைப் போன்றவர்கள் என்று சிலர் கூறுகிறார்களே...**

● இல்லை. இல்லை நாங்கள் முழுமையாக அவர்களிலிருந்து வேறுபட்டவர்கள். ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் பொல்பொட்டுக்கு இருந்திருக்கலாம். ஆனால் அவருடைய தந்திரோபாயங்களும் கொள்கைகளும் முழுக்க முழுக்கத் தவறானவை. நாங்கள் எங்களுடைய கட்சிக்குள்ளே மிகமுக்கியமான விவாதத்தை இது தொடர்பில் நடாத்தியிருந்தோம். அத்தோடு பெருவியன் மாவோயிஸ்ட் பற்றியும் விவாதித்திருக்கிறோம். எனவே நாங்கள் நினைக்கிறோம் அவர்களிலிருந்து



நாங்கள் முற்றிலும் வேறுபட்டவர்கள் என்று. நாங்கள் வீறாப்பான கொள்கைவாதிகள் அல்ல. நாங்கள் குழுவாதம் கொண்டவர்களும் அல்ல. நாங்கள் பாரம்பரிய வாதிகளும் அல்ல. நாங்கள் நவீனத்துவத்தைப் புரிந்து கொண்டு, எங்களுடைய சூழலுக்கேற்றவாறு அதிக இயங்கியல் பூர்வமாக செயற்பட விரும்புகிறோம்.

**■ உலக வர்த்தக மையத்துக்கு எதிரான சர்வதேச இயக்கம், மற்றும் உலகமயமாக்கலுக்கு எதிரான இயக்கம் குறித்து என்ன நினைக் கிறீர்கள்?**

● தத்துவார்த்த ரீதியாக நாங்கள் வேறுபடுகிறோம். ஆனால் உலகமயமாக்கலுக்கு எதிராக ஈடுபாட்டுடன் இருக்கிறோம் உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டத்தினை ஆதரிக்கிறோம்.

**■ இன்றைய காலத்திற்கு கம்யூனிசம் பொருந்துமா?**

● இது ஒரு பெரிய கேள்வி. மார்க்ஸ்லெனின் மாவோவிலிருந்து ஆரம்பிக்கிறது. அவர்கள் அரைக் காலனிய நாடுகளில் இதனைப் பரீட்சிக்க முயன்றார்கள். இன்றும் எமக்கு மார்க்சியம் தேவையாக உள்ளது. ஆனால் 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவாறு, நாங்கள் மார்க்சிய விஞ்ஞானத்தை புதிய புரிதலுடன் பிரயோகிக்க வேண்டும். சமூக பொருளாதார தொழில்நுட்ப மாற்றங்களை வீறாப்பான கொள்கைவாதம் குழுவாதம் என்பவற்றிலிருந்து நீங்கியவர்களாக அணுக வேண்டும். கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்தவற்றிலிருந்து வேறுபட்டதான முற்றிலும் புதிய எண்ணக் கருவை நாங்கள் உருவாக்க வேண்டும். நாங்கள் ஆட்சிக்கு வரும் போது எங்களுடைய பரிசோதனை ஒவ்வொருவருக்கும் ஆச்சரியமளிக்கும். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிநாட்டிலிருக்கும் மக்களது ஆதரவு எமக்குத் தேவை. எனவே தான் உலகில் உள்ள ஏகாதிபத்தியத்திற்கும், நிலப் பிரபுத்துவத்திற்கும் எதிரான சக்திகளை அழைக்கிறோம். நேபாளத்தில் நாங்கள் முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனைக் காலகட்டத்தில் நிற்கிறோம். நீதியையும் சமத்துவத்தையும் கோரி வறிய மக்கள் அதிகாரத்துவத்திற் கெதிராகப் போராடுகிறார்கள். நாங்கள் தெற்காசியாவில் சிறிய நாடாக இருந்த போதிலும் எங்களுடைய புரட்சி முழு உலகத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். நாங்கள் நேபாள மக்களுக்காக மட்டும் போராடவில்லை. முழு உலகத்திலுள்ள மக்களுக்காகவும் போராடுகிறோம். நாங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் பங்களிப்பையும் உதவியையும் எதிர்பார்க்கிறோம்.

**■ சீனா முதலாளியத்தை நோக்கித் திரும்பிய போதும் ஏன் நீங்கள் உங்களை இன்னமும் மாவோயிஸ்ட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என அழைக்கிறீர்கள்? இத்தாலிய கம்யூனிஸ்ட்டுகள் 16 வருடங்களுக்கு முன்னர் செய்தது போல நீங்கள் ஏன் பெயரை மாற்றக் கூடாது?**

● நாங்கள் மக்கள் யுத்தத்திற்கு முன்பதாக கடந்த காலத்தில் பல முறை எங்கள் பெயரை மாற்றியிருக்கிறோம். நிலைமைகளுக்கு ஏற்றவாறு நாங்கள் பெயரை மாற்றிக் கொள்ளலாம். அதில் எங்களுக்கு எந்த விதமான இறுக்கமும் இல்லை. ஆனால் மாவோ மிக முக்கியமான மெய்யியல் ஒன்றை உருவாக்கியிருக்கிறார் என நாங்கள் நினைக்கிறோம் சீனா கூட மாவோயிசத்தைப் பின்பற்றாமல் தனது நிறத்தை மாற்றிக் கொண்டது. மாவோயிசத்தில் கோட்பாட்டு ரீதியாக சில அம்சங்கள் இருக்கின்றன. அவை ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் இன்றும் கூட பொருத்தமானவையாக உள்ளன. எனவே இந்த நிலையில் நாங்கள் பெயரை மாற்றப் போவதில்லை. சிலவேளைகளில் எதிர்காலத்தில் அதைப் பற்றி யோசிக்கலாம்.

■ **இன்றிலிருந்து 10 அல்லது 20 வருடங்களுக்குப் பிறகு நேபாளம் எப்படி இருக்கும்?**

● எங்களுடைய நாட்டைச் செழிப்பாக்குவதற்கான சந்தர்ப்பங்கள் எங்களுடைய நாட்டுக்கும் மக்களுக்கும் நிறைய உள்ளன. நாங்கள் இப்போது ஏழை நாடாகவிருக்கிறோம். அதற்குக் காரணம் எங்களிடம் இயற்கை வளங்களும் மனித வளமும் இல்லையென்பதாலல்ல. நாங்கள் ஏழைகளாக இருப்பது நிலப் பிரபுத்துவ மன்னர் கஜேந்திரா நடைமுறைப்படுத்திய தவறான கொள்கைகள் காரணமாகவே. நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வளம் எம்மிடமுண்டு. இமாலயத்திலிருந்து பெருமளவிலான நீர் கிடைப்பதையிட்டு நாங்கள் நன்றி கூற வேண்டும். சுற்றுலாத்துறையும் எங்களுக்குப் பணத்தைக் கொண்டு வரக்கூடிய ஒரு துறையாக உள்ளது. அதற்கான அதியற்புதமான எங்களுடைய மலைகளுக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமய இடங்களும் இயற்கையான பூங்காக்களுக்கும் நாங்கள் நன்றி சொல்ல வேண்டும். விவசாயத்தைப் பொறுத்த வரையிலும் எம்மிடம் வளம் கொழிக்கும் ரேறை போன்ற நிலப்பகுதிகள் உண்டு. இவற்றோடு சேர்ந்த ஒரு நல்ல ஆட்சி மூலம் நாம் தெற்காசியாவில் செல்வந்த நாடுகளில் ஒன்றாக வர முடியும். ஆனால் எங்களுக்கு போக்குவரத்து வசதி, உயர் தொழில் நுட்பம், மற்றும் விஞ்ஞான பூர்வமான திட்டங்கள், அடிப்படை வசதிகள். அத்தோடு அதிகளவிலான துணிவும் அர்ப்பணிப்பும் தேவை. இன்னும் பத்து வருடத்தில் இந்த நாட்டை ஒரு வித்தியாசமான நாடாக மாற்றி விடுவோம். 20 வருடத்தில் சுவிற்சலாந்து போல மாறிவிடுவோம். இது நேபாளம் பற்றிய எனது இலக்கு.

■ **'வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை நம்பினால் மட்டுமே இது சாத்திய மாகும் ....**



● ஓம் எனக்குத் தெரியும். உலகத்தின் தாராளமயமாக்கலின் முழுப் போக்கையும் எங்களால் நிராகரித்துவிட முடியாது. ஆகவே, நாங்கள் கலப்புப் பொருளாதாரத்தையே எங்கள் நாட்டில் பிரயோகிப்போம். நாங்கள் சொல்லவில்லை நாங்கள் நேரடியாகவே சோசலிசப் பொருளாதாரத்தைக் கொண்டு வருவோம் என்று. அதே போல் மேற்கத்திய தாராளவாதத்தையும் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றப் போவதில்லை. எங்களுக்குச் சில தேசிய முன்னுரிமைகள் இருக்கின்றன. நாங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்து. அந்த முதலீடுகளை நேபாளத்தின் நலனுக்காகப் பயன்படுத்துவோம்.

■ **நீங்கள் ஒரு தேர்ந்த அரசியல்வாதியைப் போலப் பேசுகிறீர்கள். ஆனால் கடந்த 10 வருடங்களாக மக்கள் யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான படையினர் மலைப்பாங்கான இடங்களில் உங்களை ஒவ்வொரு நாளும் தேடிய போது நீங்கள் ஒரு கெரில்லா இயக்கத் தலைவராக வாழ்ந்துள்ளீர்கள். அக்காலகட்டத்தல் உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது?**

● நல்லது. அது மிகவும் சிரமமானது. எப்போதும் அபாயங்களை எதிர்கொள்ள வேண்டிய தன்மை வாய்ந்தது. சில காலங்களில் நான் இந்தியாவில் இருந்தேன். மற்றைய நேரங்களில் நோபாளத்துள் நாங்கள் போராடிய பல பிரதேசங்களில் மாறி மாறி இருந்திருக்கிறேன். நான் எப்போதும் நகர்ந்தவாறே இருந்தேன். அத்தகைய நிலைமைகளில் நகர்வே பாதுகாப்பானது. எனினும் பல பிரச்சினைகள் சம்பவங்கள்... ..

■ **சில வாரங்களுக்கு முன்னர் உங்களுடைய வாழ்க்கையும், ஆளுமையும் முழு உலகத்திற்குமே ஒரு மர்மமாக இருந்தது. நீங்கள் யார்?**

● என்னைப் பற்றிக் கதைப்பதில் எனக்கு ஆர்வமில்லை. எவ்வாறிருந்தாலும் நான் பொக்காராவுக்கு அருகிலுள்ள கஸ்கி மாவட்டத்தில் ஒரு கீழ் மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தேன். பின்னர் எனது பெற்றோர் தெரையிலுள்ள சிற்வன் மாவட்டத்திற்குச் சென்றார்கள். அது புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட மாவட்டம். நேபாளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த மக்கள் இருந்தார்கள். இது எனக்கு முக்கியமான அனுபவத்தைத் தந்தது. அங்கு இடைக்காலக் கல்வியை முடித்துக் கொண்டு கல்லூரிக்குச் சென்றேன். அங்கு விவசாய விஞ்ஞானத்தைப் படித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன். அதன் பின்னர் பட்டதாரியாகி பாடசாலை ஆசிரிய ரானேன். அதேவேளை பொது நிர்வாகத் துறையில் முதுமாணிப் பட்டத்திற்காகப் படித்தேன். ஆனால் அக்காலகட்டப் பகுதியில் இயக்கத்தில் சேர்ந்து முழுநேர ஊழியரானேன். கத்மண்டுவில் தலைநகரத்தில் 10 வருடங்களாக வாழ்ந்த நான் மக்கள் யுத்தம் ஆரம்பமானதும் மலைப்பாங்கான பல இடங்களுக்குச் செல்ல வேண்டி இருந்தது.

**■ நீங்கள் எப்படி கம்யூனிஸ்ட் ஆனீர்கள்?**

● எல்லாவற்றுக்கும் முதலாக எங்களுடைய குடும்பம் வசதியானதல்ல. என்னுடைய பெற்றோர் கடுமையாக உழைக்க வேண்டி இருந்தது. வாழ்க்கை எங்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. அதனால் நான் எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன் ஏன் இங்கு சமூக நீதி இல்லாமலிருக்கிறது? ஏன் ஒரு பகுதியில் செல்வந்தர்களும் மறுபகுதியில் சரியான உணவு இல்லாமல், சரியான உடையில்லாமல், கல்வி இல்லாமல் மக்களும் இருக்கிறார்கள். இரண்டாவதாக எனது இடை நிலைப் பள்ளிகூட காலத்தில் - எனக்கு அப்போது வயது 14 அல்லது 15 ஆக இருக்கும் - மார்க்சியம், கம்யூனிசம், சீனப்புரட்சி என்பவை பற்றி மிகப் பெரிய விவாதங்கள் நடைபெற்றன. அக்காலகட்டத்தில் என்னுடைய பாடசாலையில் எனக்கு மிகவும் பிடித்ததமான ஆசிரியர்களில் ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தார். அவர் மிகவும் நல்ல மனிதராகவும் எப்போதும் ஏழைகளுக்காகப் பரிந்து பேசுபவராகவும் இருந்தார். அவர் கம்யூனிஸ்ட் என்று நான் இனங் காண்பதற்கு முன்னரேயே அவர் பால் எனக்கு மிகுந்த விருப்பம் ஏற்பட்டது. அவருடன் நெருக்கமாகப் பழகத் தொடங்கியதும் எனக்கு கம்யூனிசத்தில் ஆர்வம் எழுந்தது. அவரிடம் பல கேள்விகளைக் கேட்டேன். ஒருநாள் மாவோவின் மேற்கோள்கள் அடங்கிய ஒரு சிறிய புத்தகத்தை அவர் எனக்குக் கொடுத்தார்.



**அரச கட்டமைப்பை அடிப் படையில் நாங்கள் ஜனநாயக பூர்வமானதாக மாற்றியமைக்க வேண்டும். நாங்கள் 9 அல்லது 10 சுயாட்சியுடன் கூடிய பிராந்தியங் களைக் கொண்ட சமஸ்டி அடிப் படையிலான அரசு ஒன்றை உரு**

**■ நீங்கள் ஏதாவது மதத்தில் நம்பிக்கை கொண்டவரா?**

● இல்லை. முற்றாக இல்லை. ஆனால் மக்கள் யுத்தக் குழுவில் இந்துக்கள், பௌத்தர்கள் மற்றும் வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களும் இருந்தார்கள். மக்களுடைய எல்லா மத நம்பிக்கைகளையும் நாங்கள் மதிக்கிறோம். ஆனால் எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் விஞ்ஞா பூர்வமான கண்ணோட்டம் கொண்டவர்களாகவும், மதம் சாராதவர்களாகவும் உள்ளனர்.

**■ நீங்கள் ஏதாவது குறிப்பிடத் தக்க புத்தகத்தை அல்லது திரைப்படத்தை இசையை விரும்புகிறீர்களா?**

● நான் இந்திய அமெரிக்க இலக்கியங்களைப் படிக்கிறேன். முழு அளவில் உலகம் பூராவிலிருந்து வெளிவரும் அரசியல் பத்திரிகைகளை வாசிக்கிறேன். நான் ஆசிரியராக இருந்த போது நடனமாடினேன் அத்துடன் சில இசைக் கருவிகளையும் இசைத்திருக்கிறேன். நான் மாணவனாக இருந்த போது திரைப் படங்கள் பார்ப்பதில் ஆர்வமுள்ளவனாக இருந்தேன். இந்திய, அமெரிக்க திரைப் படங்களைப் பார்த்திருக் கிறேன்..

குறிப்பாக ...

எனக்கு மிகவும் பிடித்த திரைப்படம் ஸ்பார்ட்ட கஸ், ஸ்ரான்லி குப்ரிக் என்ற நெறியாளரால் நெறியாள்கை செய்யப்பட்ட ஒரு வரலாற்றுத் திரைப்படம் அது. இதில் ஹேக்டக்ளஸ் பிரதான பாத்திரமேற்று நடித்துள்ளார். இத்திரைப்படம் ரோமாபுரியில் அடிமைகளாக இருந்தோரின் புரட்சியை சித்திரிக் கின்றது.

●

தமிழில் : சிவகுமார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயம்வரம்

வீட்டு வாசலில் நின்ற வேப்பமரத்தின் வேர் மீது அமர்ந்தவாறு சுகுணவதி, தூரத்தே தெரிந்த உன்னஸ்கிரிய மலைக்குப் பின்னால் சூரியன் தன் கடைசிக் கதிரையும் மறைத்துக் கொள்ளும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள். மறுபுறம் உயர்ந்து வளர்ந்த திம்புலாகல மலையுச்சி. மறைந்து கொண்டிருக்கும் அக்கதிர்களைப் பார்த்தவாறே அவள். "இப்போது மறைந்து போனாலும் நாளை நீ என்னிடம் வரத்தானே வேண்டும்.." என்பது போலிருந்தது.

தூரத்தே போய் மறைந்தது. மண்வெட்டியால் அடித்ததும் "டாண்" என்ற சத்தத்தைத் தரும் விதத்தில் வறண்டு போன நிலம். ஒரு துளி நீர்கூட இல்லாது அடுப்பில் காயும் வெற்றுச் சட்டியிலிருந்து வெளியான புகையை அவளுக்கு ஞாபகப் படுத்தியது.

இரவு வந்ததுமே சுகுணவதிக்கு ஒரு பயம் வந்து விடும். எந்த நேரம் எந்தப் பக்கத்தால் துப்பாக்கி வெடிகள் வருமோ என்ற பயமே அது. ஆயினும்



ஓவியம் – நிர்மலவாசன்

குண்டு மல்லி வேலியிலிருந்து வந்த தென்றல் அலைகள் காய்ந்த இலைகளோடு சரசர என்ற ஒலியோடு சுகுணவதியைக் கடந்து வந்து சேரும் ஒவ்வொரு இரவிலும் அவளுக்கு ஏதோ ஒரு வித விருப்பமும் இருக்கத்தான் செய்தது. அந்த உணர்வு அவளது



- சுமீகா பெரேரா -

குருநாகல் இப்பாகமுவவில் பிறந்தவர். பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் பணி புரிகிறார். "எய" சஞ்சிகையின் தொகுப்பாசிரியர்களுள் ஒருவர்.

நன்றி: பெண்கள் தொடர்பு ஊடகக் கூட்டமைப்பு வெளியிட்ட 'குர்பான் செய்த கனவு' என்கிற சிங்கள தமிழ் சிறுகதைத் தொகுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தில் ஒரு மூலையில் இருந்த சிறு புள்ளி போல இருந்தது. இரவை விரும்புவது என்பது ஏதோ முகம் பார்க்க விரும்பாத அரக்கனைப் பார்ப்பது போலவே இருந்தது. அந்த எண்ணம் அந்தச் சிறு புள்ளியைச் சிதறடித்துக் கொண்டு சுகுணவதியின் இதயத்தில் நின் றும் வெளிப்பட்டது. இருப்பினும் எத்தனை கொடுமை என்றாலும் ஒவ்வொரு இரவும் பெறுமதி மிக்கதே என்று சுகுணவதி மனதைத் தேற்றிக் கொண்டாள். காரணம் ஒவ்வொரு இரவுடனும் வாழ்வின் மற்றுமொரு நாள் கழிந்து விடுகிறதே என்பதுதான். இருப்பினும் ஐந்தாறு வருடங் களாகச் சுகுணவதியிடம் வந்த சில இரவுகள் பற்றி அவள் விரக்தி கொண்டாள். நேற்றைய இரவும் அவ்வாறு அவளுக்கு வேதனை யைக் கொடுத்த மறக்க முடியாத இரவாகவே அமைந்தது.



பசியோடு வந்து இடது கையில் அமர்ந்த நுளம்பை அவள் வலது கையால் மெல்லமாக அடித்தாள். ஆனாலும் அந்த வேளையில் அவள் உடலில் தோன்றிய மெல்லிய வேதனை அவளது முழு உடலையும் வருடிச் சென்றது.

இடுப்பைப் பிடித்துக் கொண்டு சுகுணவதி எழும்பும் போது தன்னையறியாமலேயே ஒரு முனகல் வெளியேறியது. உடலை அடித்துப் போட்டது போன்ற ஒரு வலி. இந்த இடத்தில் தான் என்று சொல்ல முடியாதளவுக்கு நோவு. உடலின் ஒவ்வொரு சிறு நரம்பினூடாகவும் பரந்து சென்றது.

"பிள்ளை... ஏன் இன்னும் விளக்கைப் பற்ற வைக்கல்ல..."

"அதில் எள்ளளவும் எண்ணெய் இல்ல..."

நேற்றைய தினம் ஒருசதமேனும் சம்பாதிக்க முடியாது போன குறை மறுபடியும் சுகுணவதியின் மனதைக் கிள்ளி விட்டது. "எனக்கு ஒரு பத்து ரூபாயாவது தராமல் போன இவனுகளுக்கு இடிதான் விழணும்..." சுகுணவதி தானாகப் புலம்பினாள்.

வேலையைச் செய்து முடித்த பிறகு எட்டி உதைக்கிறார்கள். சிலர் உயிரைக் கூடத் தருவோம் என்ற தோரணையில் கிட்ட வருகிறார்கள். சேறு, மணல்மேடு, வைக்கோல் என்று தாம் இருக்கும் இடத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கட்டிப் புரளும் போது இவர்கள் சரியாகச் சேற்றில் ஊறிப் போன எருமைகள் போல நடந்து கொள்கிறார்கள். நேற்று இரவு பத்து மணியாகும் போதே ஒருவர் பின் ஒருவராக எத்தனை பேர் உடல்மீது ஏறி இறங்கினார்கள். மூச்சு எடுக்கக் கூட முடியாது போனதல்லவா என்று சுகுணவதி நினைத்துக் கொண்டாள்.

"ஐயா... என்னோட பணம்"

"என்ன பணம்டி... இப்போ நாலாவது பொயின்ட்ல இருந்து 2115 வருவார். என்னோட பணத்தையும் சேர்த்துத் தருவாரு.."

ஐயோ சேர்... அப்படிச் செய்யாதீங்க... நாளைக்கு அரிசி சாமான் வாங்கக் கூட எனக்கு வசதியில்ல..." சுகுணவதி கையை விரித்து, இடுப்பில் தன் உடையை அரையும் குறையுமாக உடுத்திக் கொண்டே கூறினாள்.

இருளில் அவனது கையைப் பிடித்த போது, "சரிதான் போடீ..." என்றவாறு அவளது கைகளைத் தட்டி விட்டு மேலும் எதையோ முனங்கிக் கொண்டு தயாசேன சேர் வெளியேறி விட்டார். இனி என்ன செய்வது என்று நினைத்துப் பார்க்கக் கூட சுகுணவதியால் முடியவில்லை.

"என்ன நீ பேயறைஞ்சது போல நிக்கிறே... இங்கே வா..."

இவர்களை விட பேய் பிசாசு நல்லது போல... சுகுணவதி நினைத்துக் கொண்டாள்.

நான்காவது பொயின்ட்டின் விக்கிரமசிங்க துரையின் குரலில் ஒருவித பரிவு காணப்பட்டது. இப் பரிவு இன்னும் கொஞ்ச நேரத்துக் குத் தான் என்பது சுகுணவதிக்குத் தெரியும். என்றாலும் காய்ந்த வைக்கோல் மீது பெரும் எதிர் பார்ப்போடு சாய்ந்து கொண்டாள். வாழைக் குலையை வெட்டிய பின் நடுமரத்தில் விழும் வெட்டுக்கு சாய்ந்து விழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம்போல விக்கிரமசிங்க சுகுணவதியின் உடல் மீது சரிந்து விழுந்தார்.

"ஊய்......" சுகுணவதி தானாகவே முனகினாள்.

"ஏன் உனக்கு நோகுதா?..."

விக்கிரமசிங்க அன்போடு கேட்டார். அந்த வசனங்களோடு பழைய கசிப்பு நாற்றம் வீசுவதையும் சுகுணவதி உணர்ந்தாள். கமலதாசன் இருந்த காலத்திலும் கசிப்பு, கள்ளு குடித்த நாட்களில் சுகுணவதி சற்றுத் தள்ளியே படுத்துக் கொண்டாள். சுகணவதியின் இப்போக்கினை அறிந்த கமலதாசன் அவ்வாறான நாட்களில் அவள் மீது கைகளையேனும் படாமல் தவிர்த்துக் கொண்டான்.

சுகுணவதியின் எண்ணங்கள் சிறகடித்துப் பறந்தாலும் அதற்கு அவகாசம் இருக்கவில்லை.

"உன்னோட முதுகில முள்ளுக் குத்தும். ஒரு துணியையாவது விரித்திருக்கலாம் தானே. இந்தப் பற்றையில் விஷமுட்களும் இருக்கலாம்..." விக்கிரமசிங்க மற்ற நாட்களைவிட பரிவோடு நடந்து கொள்வதை சுகுணவதி உணர்ந் தாள். உயர்ந்த தடித்த விக்கிரம சிங்க அவள் உடல் மீது புரண்டு இருக்கையில் சுகுணவதியால் மூச்சு எடுக்கவும் முடியாதிருந்தது.

"என்ன நீ பயந்து போன மாதிரி... கருணாசேன உனக்கு என்ன செய்தான்..."

"அவனுக அப்படித்தான்... எல்லாரையும் ஏமாத்துவானுக..."

"நீ ரொம்பவும் மெலிஞ்சிட்டே...



உடல் தேறக்கூடிய எதையாவது சாப்பிடு..." சுகுணவதியின் சோர்ந்து போன முலைகளைப் பிசைந்தவாறு விக்கிரமசிங்க சேர் சொன்னார். வயிறாரச் சாப்பிடுவதைவிட இரண்டு பிள்ளைகளோடு நக்கிச் சாப்பிடவேனும் ஏதும் கிடைக்காததை சுகுணவதி நினைத்துக் கொண்டாள்.

சேர்மாருக்கு என்ன... மாதத்திற்கு ஒரு முறை அரிசி பருப்பு என்று மூட்டை மூட்டையாக லொறியிலை வந்து இறங்குது. அது மட்டுமா காட்டில் வேட்டையாடிக் கிடைக்கிற காட்டுப் பன்றி, காட்டெருமை, முயல்

"அம்மாடியோ... கீழே இறங்குங்க தொரை... என்னால மூச்சு எடுக்க முடியல்ல..." மாடு மேய்க்கும் பையன் மாட்டை விரட்டிப் போய் நின்று களைப்பால் மூச்சு விடுவது போல களைப்புடன் மூச்சு விட்டுக் கொண்டிருந்தார் விக்கிரமசிங்க சேர்.

"எங்கேடி என்னோட கறுப்பு ஜட்டி..." இருட்டில் அங்குமிங்கும் தடவிக் கொண்டே கேட்டார்.

"சேர் என்னோட காசு..."

"இன்றைக்கு கையில ஒரு சதமும் இல்லேடி... இந்த மாசம் சம்பளம் எடுத்ததும் உனக்கு ஏதாச்சும் தாறேனே..."

"ஐயோ சேர்.. இன்னைக்கு ஏதாச்சும் தேவை... வீட்டில பிள்ளைகள் சாப்பிடுறதுக்கு ஒண்டுமே இல்லை சேர். நாளை காலையில பாண் எடுக்கவாவது முடியல்லேன்னா எப்படி...?"

"ஒருக்கா சொன்னாக் கேளேன். என்கிட்ட காசு இல்லாததால் தானே சொல்லுறன். போன மாத சம்பளத்தை அப்படியே வீட்டுக்கு அனுப்பிட்டேன். இந்தக் காட்டுக் குள்ள எதுக்குப் பணம். அதனால நான் காசு வச்சுக்கிறதில்லே. உனக்கு நான் நாளைக்குப் பாண் வாங்கக் காசு தாறேன். நாலாவது பொயிண்டுக்குப் பெரிய பையனை அனுப்பு..."

"அய்யோ சேர் அப்பிடிச் செய்யாதீங்க... முதல்ல வந்த தொரையும் ஒன்றுமே தரயில்லே...

**'உடனே இந்த வேலையை நிறுத்து...' அவர்கள் தமிழில் சொன்னார்கள். சுகுணவதி இராணுவத்திற்கோ, பொலிஸுக்கோ தகவல் சொல்வாள் என்று அவர்கள் பயந்தனர். யார் எதைச் சொன்னாலும் எங்களுக்கு சாப்பிடக் கொடுக்கக் கூடிய யாருமில்லையே - சுகுணவதி தனக்குள் நினைத்துக் கொண்டாள். அவளால் நீண்ட நேரம் மறைந்திருக்க முடியவில்லை.**

"காசு குடுக்காமல் திட்டிக்கிட்டே போனாரு..." கஷ்டப்பட்டு மூச்சு வாங்கிக் கொண்டே சுகுணவதி சொன்னாள்.

"ஒரு சதமும் தரவில்லையா...?"
"ம்ஹூ..."

போன்றவற்றின் இறைச்சி வேற. எதில குறையிருக்கு... வேணுமின்னா குறைக்கு உள்ளது இரவு முழுவதும் துப்பாக்கியைக் கையில பிடிச்சுக்கிட்டு, நுளம்பை விரட்டி விரட்டி நித்திரை முழிக்கிறதுதான்.

நாளைக்கு நான் எப்படி அரிசி, சாமான் வாங்குறது..."

"பொடியனை அனுப்பச் சொன்னேன்தானே... பாண் வாங்கப் பணம் கொடுத்து அனுப்புறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ சேர்..."

"இவளோட பெரிய தொல்லை.. மற்றவனுக வந்து ஏறிப்போட்டுப் போக மட்டும் சும்மா இருப்பா... அவனுக மிரட்டிக் கிட்டு வருவானுக... நான் கொஞ்சம் இரக்கமா பேசிட்டா தலையில ஏறப்பார்க்கிறா..." சுகுணவதி எதையும் பேச இடம் கொடுக்காமல் விக்கிரமசிங்க சேர் இருட்டிலேயே போய் மறைந்தார்.

இருளில் சுகுணவதியின் கண் களில் தேங்கி நின்ற கண்ணீர்த் துளிகளை யாருக்குமே தெரிய



வில்லை. இடுப்பில் சீத்தைத் துணியைச் சுற்றிக் கொண்டே சுகுணவதி முட்புதர்களுக்கூடாக வெளியேறினாள்.

"ஏய்.. நீ எங்கே போறே.. நில்லு.." முகத்தில் பட்ட டோர்ச் வெளிச சத்தில் சுகுணவதியின் கண்களில் இருந்து கனல் தெறித்துக் கொண்டி ருந்தது. அது இயக்கத்தினர் என்ற பயத்தால் சுகுணவதி உடனேயே புதருக்குள் மறைந்து கொண்டாள். கடந்த வாரமும் சுகுணவதியைச் சந்தித்த இயக்கத்தினர் அவளைக் கடுமையாகக் கண்டித்துச் சென்றனர்.

"உடனே இந்த வேலையை நிறுத்து..." அவர்கள் தமிழில் சொன்னார்கள். சுகுணவதி இராணு வத்திற்கோ, பொலிஸுக்கோ தகவல் சொல்வாள் என்று அவர்கள் பயந்தனர். யார் எதைச் சொன்னாலும் எங்களுக்கு சாப்பிடக் கொடுக்கக் கூடிய யாருமில்லையே. சுகுணவதி தனக்குள் நினைத்துக் கொண்டாள். அவளால் நீண்ட நேரம் மறைந்திருக்க முடிய வில்லை.

"ஏன் நீ நடுங்குறே...நீ எங்களுக்குத் தராம மாறிப் போகப் பார்க்கிறாய் இல்லையா?... இங்கே வா... "ஆறாவது மைல் கல்லுக்குப் பக்கத்திலிருந்த காம்பிலிருந்த வில்சன் சேர் சுகுணவதியின் கையைப் பிடித்து இழுத்தார். அவளது இடது கை தோளோடு கழன்று விட்டதோ என அவள் நினைத்தாள்.

"இங்கே வாயேன்... என்ன இது சுத்திக்கிட்டிருக்கிற துணி கழற்று அதை... நான் சீக்கிரமாப் போகணும்..."

சுகுணவதியால் மூச்சு வாங்கவும் நேரம் இருக்கவில்லை. கீழே கிடத்திய வேகத்தில் இடுப்பு உடையாமல் இருந்ததே போதும். உயர்ந்த தடித்த கருமையான வில்சன் சேர் உடல் மீது ஏறியதும். திம்புலாகல மலையே தன்மீது வந்து விழுந்து விட்டது போல இருந்தது சுகுணவதிக்கு. வில்சன் தொரையின் களைப்பின் மூச்சு மகாவலியின் அணைக்கட்டைத் திறந்து பாயும் நீரின் சப்தத்தைப் போல அவளுக்குக் கேட்டது.

"என்னடி இது... கும்பிப் போன முலைகள். கையில அகப்படுவதே இல்லே... இவள் எலும்பும் தோலுமா இருக்கா..."

"ஊய் தொறே..."

சுகுணவதி முனகினாள்.

"ஏன் வலிக்குதா உனக்கு? எனக்கு தான் வலிக்கணும்... உன் உடலின்ரை எலும்பு குத்துது- எங்ககிட்ட வந்தாத்தான் உனக்கு வலிக்குது. படையினர் வந்தா நல்லாத் தூக்கித் தூக்கிக் கொடுப்பே... பறவேசி."

"திட்டாதீங்க சேர்... நான் அப்பாவி..."

"திட்டாமல் உன்னைப் போல வேசிகளைச் சுட்டுக் கொல்லணும்"

"ம்... செத்த பிணம் போல கிடந்தது போதும்... எழும்பி உட்காரு.."

"சரிதான்... செய்யிறது எப்படின்னு நீ எனக்குப் படிப்பிக்கிறியா? நல்ல குணத்தோடு சொல்லுறேன். சுடுபடாமல் எழும்பி உட்காரு. ஏன் உனக்கு அசிங்கமா இருக்கா?"

எழுந்து ஓடிவிட நினைத்தாலும் சுகுணவதியை பயம் வாட்டியது. துப்பாக்கியோடு இருக்கும் அவர்களை நம்ப முடியாது.

**இருளில் சுகுணவதியின் கண்களில் தேங்கி நின்ற கண்ணீர்த் துளிகளை யாருக்குமே தெரியவில்லை. இடுப்பில் சீத்தைத் துணியைச் சுற்றிக் கொண்டே சுகுணவதி முட்புதர்களுக்கூடாக வெளியேறினாள்.**

பணம் எப்படிப் போனாலும் உயிரைப் பாதுகாத்துக் கொண்டால் போதும். என்று பெரியதுரை சொன்ன விதமாக. சுகுணவதி செய்தாள். எஜமானிடம் அடங்கிப் போகும் நாயைப்போல. பிறகு வில்சன் துரையோடு வந்த எத்தனைபேர் சுகுணவதி மீது ஏறினர் இறங்கினர் என்று அவளுக்கே தெரியவில்லை.

"அம்மா, பாண் வாங்கக் காசு கொடேன்..." மற்றைய நாட்களைப் போலவே சுட்டா காலையிலே எழுந்து சுகுணவதியின் உடலை உசுப்பி எழுப்பினான்.

"என்கிட்ட காசு இல்லே... பகலானதும் கடைக்குப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்குத் தர்றதாகச் சொல்லி கடனுக்குப் பாண் ஒரு ராத்தலை வாங்கு... காலையிலே போயிடாதே. தரமாட்டாங்க...

"பகலாகும் வரைக்கும் என்னால பசியோட இருக்க முடியாது. ஏன் உங்கிட்ட காசு இல்லையா?"

"சொன்னா கேளுடா... என்கிட்ட இல்ல... பெரிய தொந்தரவாப் போச்சு..."

"ஏன் நீ நேத்து ராவு காட்டுப் பக்கம் போகல்லியா..?"

"இல்லை..."

"பொய் சொல்லாதே... நேத்து நடுராவுல நான் உன்னைத்


ஓவியம் - ஸ்ரீமலதாசன்

தேடுறப்போ நீ காட்டுப் பக்கம் போனதாக அக்கா சொன்னாள் தானே..."

"என்னை சாகடிக்காம தொலைஞ்சு போ..."

"சுட்டா அம்மாவுக்குத் தொல்லை கொடுக்காமல் இங்கே வா.." சரோஜினி சுட்டாவைக் கடிந்து கூப்பிட்டாள்.

மூத்த மகளைப் பற்றி சுகுணவதி கவலைப்பட்டாள். வாழ்றதுக்கு நான் படுற கஷ்டம் அவளுக்குப் புரியுது. சுகுணவதி நினைத்துக் கொண்டாள். மகள் பெரியவளான தும் தனது இந்தத் தொழிலை கைவிட நினைத்திருந்த போதும் சுகுணவதியால் முடியவில்லை. அதற்காக சுகுணவதி தெண்டிக் காமல் இல்லை. கமலதாசன் செய்த வேலைகளில் சுகுணவதி உதவி ஒத்தாசைகள் செய்தாள்.

இருண்ட காட்டுக்குள் போய் கைகளில் முட்கள் குத்த, கீறல்கள் விழ பிரம்பு நார்களைப் பறித்து வந்து சரோஜினியுடன் சேர்ந்து பிரம்புக் கூடைகளைப் பின்னி னாள். அவற்றை மன்னம்பிட்டிப் பாலத்துக்கு அருகிலும் கொண்டு போனாள். பாதையால் போகும் வாகனங்களுக்குக் கைகாட்டி அழைத்தாள். இருப்பினும் சில நாட்களில் ஒரு கூடையையாவது விற்க முடிவதில்லை. பாதை மூடிய பின்பு வாகனப் போக்குவரத்தும் நின்று விட்டது.

பிரச்சினை அதிகரித்த பின்பு பிரம்பு வெட்டப் போகவும் முடியவில்லை. சுகுணவதியைப் போலவே கமலதாசனுக்கும் நல்ல கைராசி இருந்தது. பிரம்புக் கூடைகளை அழகாகப் பின்னு வான். யுத்தம் ஆரம்பிக்கு முன்பு அவர்கள் வீட்டு முற்றத்தில் இரவு காலங்களிலும் நீண்ட நேரம் இருந்து கொண்டு பிரம்புக் கூடைகளைப் பின்னினாள். ஆனால் அதற்குப் பின்பு வீட்டுக குள் ஒரு குப்பி விளக்கையேனும் பற்ற வைக்க முடியாது போயிற்று. யாருக்கும் எந்தத் தொல்லையும் கொடுக்காமல் வாழ்க்கையை ஓட்டிச் சென்ற கமலதாசனுக்கு உண்மையிலேயே என்ன நடந்தது?

ஏழையாக இருந்தாலும் அந்த நாட்களில் சுகுணவதியின் குடும்பம் எவ்வளவு சந்தோசமாக இருந்தது. ஒரு தமிழரை மண முடிக்க வேண்டாமென்று உறவினர்கள் சொல்லியும் சுகுண வதி மின்னேரியாவிலிருந்து கமலதாசனைக் கலியாணம் முடித்து இங்கு அழைத்து வந்தாள். அந்த நாட்களில் கமலதாசன் ஸ்ரீகாந்த அரிசி ஆலையில் லொறி ஒன்றில் வேலை செய்தான். அன்று வந்த கமலதாசன் மின்னேரியாவுக் குத் திரும்பிப் போகாத காரணம் தன்னைப் போலவே தமிழர்களைக் கட்டிய சிங்களப் பெண்களும், சிங்கள ஆண்களைக் கட்டிக் கொண்ட தமிழ்ப் பெண்களும் இங்கு நிறையவே இருப்பது தான். கமலதாசனால் சிங்களம் கதைக்க முடியாது போனாலும் சுகுணவதி சீக்கிரமே தமிழைப் பேசக் கற்றுக் கொண்டாள். பிள்ளைகள் இரண்டு மொழிகளிலுமே நன்றாகக் கதைப்பதையிட்டு சுகுணவதி சந்தோஷப்பட்டாள். அவர்களால் என்றைக்காவது ஒரு நாள் தன் உறவினர்களிடம் போக முடியும் என்று நினைத்துக் கொண்டாள்.

வாழ்க்கை எவ்வளவு சீக்கிரமாக மாற்றமடைகின்றது. வழமை போல பிரம்புக் கூடைகளை விற்கக் காலையில் சென்ற கமலதாசன் மாலையில் அரிசி சாமான்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்ப வில்லை. அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94ஆம் ஆண்டு ஓகஸ்ட் பத்தாம் திகதி. சுகணவதி யிடம் பலா் பலவிதமாக விசாரித்த தால் அவளால் இத்தினத்தை மறக்க முடியவில்லை. பொலன்னறுவை மாவட்டத்தில் அவள் தேடாத இடமோ, போகாத பொலிஸோ, முகாம்களோ, வேதஸ்தானங்களோ கிடையாது. கொழும்புப் பகுதிக்கு மட்டுமே வர முடியாது போயிற்று. சாஸ்திரம் ஏதும் பார்க்க முடியுமென்றால் கடன்பட்டாவது போகாமல் இருக்க மாட்டாள் தானே. சுகுணவதி தனிமையில் தவித்தாள்.

**'அவங்கள் அம்மாவைத் தட்டிக் கழிச்சாலும் எனக்கு அப்படிச் செய்யல்ல. நான் கேட்ட தொகையை அப்படியே தந்தாங்க. அவங்களை ஒரு நாளைக்காவது எங்களுக்கு முன்னால நாயைப் போல மண்டியிடச் செய்ய வேணும்.' சரோஜினி பயந்து பயந்து சொன்னாள். அக்குரலில் வேதனையும், கோபமும் சற்று வெறுமையும் கலந்திருந்தது.**

கமலதாசன் காணாமல் போன பின்பு தான் சுகுணவதி இத்தொழிலுக்கு இறங்கினாள். கமலதாசனைத் தேடிப் பொலிஸ் நிலையங்களுக்கும், முகாம்களுக்கும் அடிக்கடி போனதால் வந்த வினைதான் இது.

"அந்த மிருகங்கள் கிட்டப் போய் கேவலப்பட வேண்டாமென்று நான் அம்மாவுக்குச் சொன்னன் தானே" சரோஜினி சொன்னாள். நேற்றிரவு நடந்த சம்பவங்களைச் சுகுணவதி மகளிடம் சாடையாகச் சொல்லி வைத்த போது அவளின் கண்கள் கலங்கியதைச் சுகுணவதி பார்த்தாள். ஒரு தாய் தன் மகளிடம் சொல்லக் கூடிய கதைகளா இவை என்று யாராவது கேட்டுக் கொண்டிருப்போா சொல்வார்கள். இருப்பினும் சரோஜினிக்கோ, சுகுணவதிக்கோ இப்படியான கதைகள் ஒரு பெரிய விடயமல்ல.

"இந்த நாய்கள் அப்படி யென்றாலும், நல்ல மனிதா்களும் இருக்கத்தான் செய்கிறாா்கள். சந்திக்கடை பெரியவா் போல எத்தனை நல்ல மனிதா்கள் இருக்கிறாா்கள். ஒரு பெண்ணுக்கு எப்படி உதவுவது என்று அவா்களுக்குத் தெரியும். ஒரேயொரு பிரச்சினை இருட்டிய பின்பு அவர்களிடம் எப்படிப் போவது என்பது தான்,

"இருந்தாலும் அம்மா இனிமேல



இந்தத் தொழிலுக்குப் போக வேண்டாம்."

"அப்படிச் சொன்னால் நீ எதைச் சாப்பிடுவது? ஒரு நேரம் இல் லாட்டா இன்னொரு நேரமாவது ஒரு பாண் துண்டையாவது சாப்பிடலாம் தானே. இது ஒரு கெட்ட தொழில் அல்லவே. அவனுகள் எங்களைக் கேவலப் படுத்தாமல் நல்லபடி கவனிக் கணும்."

சரோஜினி கடைக்குப் போய்க் கொண்டு வந்த ரோஸ்பாணைச் சாப்பிட்ட பொடியன்கள் இரண்டு பேரும் விளையாடப் போய் விட்டனா். அவா்களை வீட்டுக்குள் கூப்பிட்டு எடுக்கச் சொல்லி மகளுக்கு சுகுணவதி சொல்லும் போது நேரம் இருட்டிக் கொண்டி ருந்தது. மிவும் களைப்போடு பாயில் விழுந்து நித்திரையில் ஆழ்ந்த சுகுணவதி பொடியன்கள் இரண்டு பேரின் சத்தம் கேட்டு கண்விழித்துக் கொண்டாள்.

"காலையிலேயே ஏன் தான் இப்படிக் கத்தித் தொலையிரே."

"பாருங்க அம்மா இவன்... என் னோட பணிசைப் பறிச்சிக் கிட்டான்."

"உனக்கு பணிஸ் எங்கால கிடைச்சுது?"

"கடனுக்கு எடுக்கல்ல.. பெரியக்கா கொடுத்த பண நோட்டைக் கொடுத்து வாங்கினேன். பொய் யென்றா கேட்டுப் பாருங்க. அவள்கிட்ட இன்னும் பண நோட்டுக்கள் இருக்கு..."

"மகள்... மகள்..." வெளியே அடுப்பு எரித்துக் கொண்டு முகத்தைத் தன் இரு கால்களுக்கும் நடுவே பதித்துக் கொண்டிருந்த சரோஜினியை அழைத்தவாறே சுகுணவதி சென்றாள்.

"பணிஸ் வாங்க உனக்கு எங்கால காசு." ஒரு பேச்சும் பேசாமல் கையில் சுருட்டி வைத்திருந்த பண நோட்டுக்களை சரோஜினி சுகுணவதியிடம் காண்பித்தாள்.

"உனக்கு இவ்வளவு பணம் எங்கால கிடைச்சுது?"

"அவங்கள் அம்மாவைத் தட்டிக் கழிச்சாலும் எனக்கு அப்படிச் செய்யல்ல. நான் கேட்ட தொகையை அப்படியே தந்தாங்க. அவங்களை ஒரு நாளைக்காவது எங்களுக்கு முன்னால நாயைப் போல மண்டியிடச் செய்ய வேணும்." சரோஜினி பயந்து பயந்து சொன்னாள். அக்குரலில் வேதனையும், கோபமும் சற்று வெறுமையும் கலந்திருந்தது.

சுகுணவதியால் உள்ளெடுத்த மூச்சை வெளியே விட முடியாது போயிற்று. ஒரு பானை சோற்றை வேகவைக்கும் அளவுக்கு சுகுணவதியின் உள்ளத்தில் கோபத்தீ இருந்தாலும் தன் மகளைப் பற்றி அவள் பெருமைப்பட்டுக் கொண்டாள். அவள் என்னைப் போல சோர்ந்து போனவள் அல்ல. சுகுணவதியின் மனம் சொல்லியது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிமோன்தி கவிதைகள்**

எதற்காக இந்தக் காத்திருத்தல்கள்
அறையின் தனிமைக்குள்
வெயில் வெக்கைக்குள்
மழையின் குளிருக்குள் என்று
எத்தனை விதமான காத்திருத்தல்கள்


ஒன்றும் புரியவில்லை
மானிட வாழ்விற்கான அர்த்தமும் கூட!

அவனின் சொற்கள்
தரும் ஏமாற்றங்களில்
என் ஆன்மாவும் அறிவும்
மழுங்கடிக்கப்பட்டு இயந்திரமாய்
ஓடும் அத்தருணங்களில் கூட
எனது வாழ்க்கை பற்றி
எனக்குப் புரியவில்லை !

எத்தனையோ கனவுகள்
சில வண்ணங்களாக
சில கானல் நீராக
காத்திருத்தல்களின் அர்த்தம் புரியாதனவாய்
எனக்குள் வருவதும் போவதுமாக
வந்து போய்க் கொண்டிருக்கின்றன !

எனது உணர்வுகளைச் சிதறடிக்கும்
உக்கிரம் கொண்ட அவர்களின்
வார்த்தைகள் போலத்தான்
இந்தக் காத்திருத்தல்களும்.
நான் வெறுத்து ஒதுக்கிவிட
தானாக வந்து எனை முத்தமிடுகிறது
விலகி ஓட முடியாமல்!

## புரியாமல் போனஎன் காத்திருத்தல்கள்!



ஓவியம் - கோ. கைலாசநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிமோன்தி கவிதைகள்

1.

வாழ்க்கையின் அஸ்தமனத்திற்குள்
புரிதல்கள் எப்படி உருவாகும்
புரிதல்கள் இல்லாத வாழ்க்கையும்
புரிந்து கொள்ளவே முடியாத அவனும்
எனக்குப் பழகிப் போனவை தான்

வண்ணக் கனவுகள் சுமந்து வரும்
என் இளமையின் எண்ணங்கள்
தவிடு பொடியாகி கருகிக்
காய்ந்து போகின்றன
அவன் வார்த்தைகளின் உஷ்ணத்தில்

சுட்டெரிக்கும் அனலில் என்
பெண்மையின் உணர்வுகளை
உருக வைத்து கசக்கிப் பிழியும்
அவனது மாயைக்குள் இருந்து
வெளிவரத் தெரியாமல்
முடங்கிப் போகும் ஒவ்வொரு கணமும்
என்னையே வெறுக்கின்றேன்
இந்த உலகையும் கூட!



ஓவியம் – கோ. கைலாசநாதன்

2.

காணும் கனவுகளும்
மிகையான கற்பனைகளும்
ஏதோ ஒன்றைத் தேடிச் செல்லும்
என் உணர்வுகளின் தோழியாகின்றன

தேடலின் வலியில்
விறைத்துப் போகும்
மனதின் தசைகளுக்குள்ளாக
ஏதோ ஓர் ஒளி எனைத்தேடி
வருவது போல் ஓர் பிரமை !

ஏன் எதற்கு என்ற
கேள்விகளின் மத்தியில்
தொலைந்து போன எதையோ நான்
தேடிக் கொண்டிருக்கிறேன் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமோன்தி கவிதைகள்

நாட்கள் நகர்ந்து கொண்டே போகின்றன
இருள்படிந்தவையாக
குரூரம் நிறைந்தவையாக
மனிதர்களின் இயல்பினை மாற்றுபவையாக!


இருள் மேகங்களின் ஆர்ப்பரிப்பும் அப்படித்தான்
வருவதும் போவதுமாக மழையும்,வெயிலும்
கால ஓட்டங்களின் கனதியான பொழுதுகளும்
மாற்றங்கள் ஏதுமின்றி
சோகத்தினையே வரவைக்கின்றன.

எனது இரத்தம் என்ன நிறம்
நுகர்ந்து பார்க்கின்றது துப்பாக்கி
எனது வியர்வை மணம் என்ன
மணந்து பார்க்கின்றன இலையான்கள்
நானோ இவையெதும் அறியாத பிணமாய்
அனாதைபோல் ஒரு சருகின் மேல்!

எனது இருப்பினை அழித்தவர் யார்?

அறிவாளி சொன்னான் நீ புதிரானவள் என்று
சன்னியாசி சொன்னான் நீ ஒளி பொருந்தியவள் என்று
அரசியல்வாதி சொன்னான் நீ அகிம்சாவாதி என்று
கெரில்லாவாதி சொன்னான் நீ தேசத்துரோகி என்று

எனது இருப்பினை அழித்தவர் யார்?



ஓவியம் — கோ. கைலாசநாதன்

## கனதியான பொழுதுகளில் அழியும் இருப்பு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனார் கவிதைகள்**

மழை ஈரம் காயாத தார் வீதி
நிரம்பிய மாலை
இருள் அடர்ந்து இறுகி, பிசாசுகளின் தோற்றங்களுடன்
மல்லாந்து கிடக்கும் மலைகளைக் கடந்து செல்கிறேன்
இருளின் இருளுக்குள்ளே
எவ்வளவு பிரகாசம் நீ
கூதல் காற்றுக் கற்றைகளில்
நாசியில் நன்னாரி வேர் மணக்க மணக்க
மிதந்து வருகின்றாய்
தூர அகன்ற வயல்களின் நடுவே
"றபான்" இசைக்கின்ற முதியவரின் கானலோவியம்
இரவை உடைக்கின்றது
மிருகங்களுக்கு பயமூட்டுவதற்காக
நிறுத்தி வைக்கப்பட்ட வைக்கோற்பொம்மைகள்
அளவற்ற பயத்தில் தாமே நடுங்கிக் கொண்டு நிற்கின்றன
அடி பெருத்த விருட்சங்கள்
தம் கனத்த வாழ்நாளின் நெடுங் கதையை
இலைகளால் கீறும் காற்றை உராய்ந்து
கரும்புக் காட்டை நடு வகிடென பிரிக்கும்
மணல் பாதையை எனக்கு முன் மஞ்சள் நிறப் பூனை
குறுக்கே பாய்ந்து கடக்கின்றது
நாடியில் அளவான மச்சமிருக்கும்
பெண்ணின் கீழ் உதடு, பிறை நிலா
மிக அருகே பேரழகுடன் அந் நட்சத்திரம்
இந்தப் பொழுதை ஒரு பூக்கூடையாய் நிரப்பி
தூக்கி நடக்கின்றேன்
நீளமான நூலாய் தெரிகின்றது இரவு
நான் தனித்த மண்புழு, சிறுகச் சிறுக நீளுகின்றேன்
தொடர்ந்து, நீளமான வெள்ளை நூல் தெரியும் வரை




## மண் புழுவின் இரவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனார் கவிதைகள்

## நிழலின் அலறல்

இருள்த் துவாரங்களுக்குள் விரியும்
உள்வெளியில் வியாபித்தேன்
மாபெரும் ஒளியாக
அகற்ற முடியா துன்பத்தின் சாயலாய்
**உன்** வாழ்வின் முழுமை மீது கவிந்திருக்கின்ற
பனிப்புகாரின் பிணைப்பாகவும்
மௌனத்தின் உறுப்புகள் விலகி
நீ திசைகள் குழம்பித் தத்தளிப்போடிருக்கையில்
அளவற்ற பதற்றத்துடன் உன்னை வந்தடைகிறேன்
எங்கெங்கோ மிதந்தலையும் இறகு
மடியில் விழுவதுபோல்
நிழலின் தடித்த திரைக்குள் உருகி வழிகின்ற
உணர்வின் ஏக்கத்தை
எல்லாத் துடிப்புகளுடனும்
உற்று நோக்கியபடியிருக்கிறது நட்சத்திரம்
அனாதரவான கருநீல இரவு
தனிமையுள் குமையும் நேரத்தில்
ஒப்பிடமுடியா சோகத்தின் இறுதியில்
ஏன் உன்னையே சரணடையத் தோன்றுகிறது
இழந்துவிட்ட சொர்க்கத்தின்
சாபம்படிந்த மணல் திட்டுக்களில்
சபிக்கப்பட்ட தீர்ப்புகளாய்
எனதற்ற நீ
உனதற்ற நான்



ஓவியம் – கோ. கைலாசநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஔவை கவிதைகள்**

கடலும் நதியும்
ஒருமுறை முரண்பட்டுக் கொண்டன
தேடி ஓடி வரும் நதியா
தாங்கி ஏற்று நிற்கும் கடலா உயர்ந்தது ?

எப்போதும் நீ கேட்கும்
எந்த ஆழத்திற்கும் நான் வருவேன் என்றது
நதி !
எப்போதுமே சலசலத்து ஓடும் உனக்கு
எனது ஆழத்திற்கு வரமுடியுமா என்றது
கடல் !

உயர இருக்கும் மலை உச்சிகளிலிருந்து
இறங்கி இறங்கி ஓடோடி
எவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்
நீண்டு விரிந்து மணல் பரப்பி
பச்சையாய் விரிந்து
என்னை மகிழ்வோடு முத்தமிடக்
காத்திருக்கும் நிலத்தை விட்டு விட்டு
ஓடோடி வந்தேன் உனக்கு
எனது ஆழம் புரியவில்லை
அலட்சியப் படுத்தி விட்டாய் என்றது
நதி

சிரித்தது கடல்
சிரிப்பால் சினந்தது நதி

எல்லா நதிகளையும் அரவணைத்து
மடிமேல் தவழவிட்டு மகிழ்ந்திருக்கும் உனக்கு
எனது ஆழம் தெரியாமல் இருப்பதில்
ஆச்சரியம் இல்லை என்றது
நதி,
கேலி வழிந்தது குரலில்

நிலமெல்லாம் முத்தமிட்டு
ஆடிப்பாடி அழகெல்லாம் கொட்டி
பச்சையாய் படரவிட்டு
வாழ்ந்து பின் நில்லாமல்
எதற்காக ஓடி வந்தாய்?என்றது
கடல் கோபமாக.


ஒரு கணம் மௌனமாகியது நதி!
மீண்டும் சிரித்தது கடல்
பின் நிதானமாகத் தொடர்ந்தது

எல்லா நதிகளும் என்மடிமேல் விழுந்தன
நான் அமைதியாக இருந்தேன்.
எல்லா நதிகளும் பாய்ந்தோடி விழுந்தன,
குதித்தன மகிழ்ந்தன கட்டி அணைத்து
முத்தமிட்டன.

ஆனால் நான் சிலிர்க்கவில்லை
அமைதியாக இருந்தேன்
நதியே!
உன்னைப் புரிகிறது

நீ என்னுள் சங்கமிக்க சங்கமிக்க
நான் என்னை இழந்து கொண்டிருக்கின்றேன்
எல்லா நதிகளையும் போலவே
நீயும் என் மடியில் விழுந்து
புரண்டு உறங்கி எழுந்து
கண நேரத்தில் கைகாட்டி விடை பெறுவாய்
என்று அச்சப்படுகிறேன் என்றது கடல்
நதி மிகவும் மௌனமாகிற்று.
நதிக்கு கடலின் காதல் புரிந்தது.
கடலிடம் ஆழம் இருந்தது.
நதியிடம் அன்பு இருந்தது.
இரண்டும் சேர்ந்து ஆழமான அன்பைத்
தெரிந்து கொண்டன.

கடலிடம் நதியும்
நதியிடம் கடலுமாக
ஒன்றுக்கொன்று தம்மை இழந்து
அர்ப்பணிப்புடன் ஓடத் தொடங்கின.
உண்மையான காதல் போல!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஔவை கவிதைகள்*


## பேசுவதன் சுவை இழந்தேன்

என்னைப் புரிய வைக்கலாம் என்றிருந்த
இறுதித்துளி நம்பிக்கையும் இன்று போயிற்று.
என்னை நம்ப மறுக்கும் உன்னை
எனது செயல்களை முழுமையின்றி நோக்கும் உன்னை
உனது புறக்கணிப்பை
உனது வார்த்தைகளின் கொடுமைகளைத் தாங்காது
எரிகிறது உடல்.
சிறகு அறுக்கப்பட்ட
குருவி பறக்க முனைவது போல
உன்னிடம் உண்மையை விளக்குவதற்குத்
தத்தளிக்கிறேன்.

உண்மைக்கேன் விளக்கம் ?

உன்னிடம் பேசுவதில்
இப்பொழுது சுதந்திரமில்லை.
பேசும் வார்த்தைகளை
தேர்ந்தெடுத்துத் தேர்ந்தெடுத்துப்
பேசுவதன் சுவையிழந்தேனோ ?
பலமிழந்தேனோ ?

மீண்டும் ஒரு முறை
சிறகு முளைக்கும் என்பது இக்கணம்
ஆழமான அவநம்பிக்கையாயிற்று.
என் சின்னச் சின்னக் கனவுகளோடு கூட
வாழ்தல் சாத்தியமற்றுப் போகிறதே என்று
ஒவ்வொரு முறையும்
சிறகு முளைக்கும்
காற்றில் பறக்கலாம்
காலத்தை வெல்லலாம்
என்ற நம்பிக்கையுடன்
காதலுக்காய் துயர் சுமக்கிறேன்.


ஓவியம் – கோ. கைலாசநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒளவை கவிதைகள்

# நூலிழை

நீ நம்புவாயா நம்பமாட்டாயா
என்பதல்ல எனது பயம்
காதல் பற்றிய எனது நம்பிக்கை
உடைந்து விழுமா என்பது தான்
காதலை நான் மிகவும் நேசிக்கிறேன்
நகை, உடை, பணம், பொருள், பரிசு
என்ற கடமை உறவின் சாட்சியங்களை
நான் உன்னிடம் ஒரு போதும் தேடவில்லை.
வாழ்வதற்கான உனது தேடலின்
அர்த்தத்தை நான் அறிவேன்.


நம்பிக்கையில் உயிர்த்தது எனது அன்பு
உனது எப்படியோ நானறியேன்.
பொங்கி எழும் காதலுடன் நானிருந்தேன்
என்பது மட்டும் புரிகிறது.
நம்பிக்கையில்லாத கடமை வாழ்வில் உனது
கடந்த காலம் கழிந்து போனது.
ஆயினும்
உனதும் எனதும் உறவு
நம்பிக்கையீனங்களில் வளர முடியாது.
ஒவ்வொரு தடவையும் உனது
நம்பிக்கையீனங்களை அளக்கமுனைகை
நூலிழையில் வாழும் இந்தப் பிணைப்பு
என்றென்றைக்குமாய் அறுந்துவிடுமா எ
அச்சம் என்னுள் தொடர்கிறது.

நான் உயிர்க்கும்
எமக்குரிய கணங்களில்
நீ உயிர்த்தாயா ?
இல்லை எனில்
எமக்குள் காதலில்லை.
எது நம்மை இணைத்திருக்கிறது ?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திக் பார்மக்

# ஓசாமா: ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு பொறி

மணிதர்ஷா

"நாங்கள் பசியுடன் இருக்கிறோம்."


"எங்களுக்கு வேலை கொடுங்கள்".

"எங்களுக்கென்று அரசியல் இல்லை"

"நாங்கள் விதவைகள்."

யார் இந்தப் பெண்கள். இவர்களின் குரல்கள் உங்கள் காதுகளில் விழுகிறதா? இந்தத் தேசத்திலுள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட ஒட்டு மொத்தமான பெண்களின் குரல்களாக இவை உங்களுக்குத் தெரியவில்லையா? சம்பவங்களின் சூழ்ச்சியினால், தேசத்தின் காவலர்களால் கணவன்மாரை இழந்த, மகன்மாரை இழந்த, சகோதரர்களை இழந்த பெண்களின் ஒட்டுமொத்த குரல்கள் அல்லவா இவை.

இந்தக் குரல்கள் தான் அடக்குமுறைக்குள்ளாகியுள்ள தேசமெங்கும் இப்பொழுது ஒலித்துக் கொண்டிருக்கிறது. சொல்லவொணாத் துன்பங்களை மனதோடு பூட்டி வைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அப்பாவிப் பெண்களை நாம் என்றாவது நினைத்துப் பார்த்திருக் கிறோமா? மறைமுகமாக ஒலித்துக் கொண்டிருந்த இந்தக் குரல்களை வெளியுலகிற்குக் கொண்டு வர நாம் முனைந்திருக்கிறோமா? ஆனால்




**ஓசாமா மிகவும் அழகானதும் உருக்கமானதுமான படம். ஆனால் துன்பகரமானதும் கூட...**

ஓம். அதற்காக நான் வருத்தம் அடைகிறேன். என்னுடைய நண்பர்களும் அதைப்பற்றிக் கூறினார்கள். கட்டாயம் அடுத்த தடவை ஒரு நகைச்சுவையான படத்தை எடுப்பேன்.

**ஓசாமாவிற்கு திரைக்கதை வசனம் கூட நீங்களே எழுதியுள்ளீர்கள். இந்தப் படத்தை எடுக்க வேண்டும் என்றயோசனை உங்களுக்கு எப்பொழுது வந்தது?**

நான் பாகிஸ்தானில் இருந்த போது, ஆப்கானிஸ்தான் சமூகத்தைப் பற்றிய நல்ல கதை ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தேன். அங்குள்ள சிறுவர்கள் ரோட்டோரங்களில் வேலை பார்ப்பதைப் பற்றிய நிறையக் கதைகளையும் நான் கேள்விப்பட்டேன். ஆனால், இந்தப் படத்திற்கான கதை வந்தது "சகா"விலிருந்து. "சகா" பஸ்ரன் மொழியில், பாகிஸ்தானிலுள்ள பெஸவர் என்ற இடத்திலிருந்து வெளிவரும் ஒரு ஆப்கான் பத்திரிகை.

தலிபான்களின் ஆட்சிக் காலத்தில், இஸ்லாமிய மத நம்பிக்கைகளுக்கு விரோதமற்ற ஆனால் தலிபான்களால் தடைவிதிக்கப்பட்ட பாடசாலை செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நாட்டுப் பெண்களின் அவலத்தை ஒசாமா எனும் திரைப்படத்தினூடாக, வெளியுலகிற்குக் கொண்டு வந்து எமது கண் முன் நிறுத்தியுள்ளார் இயக்குனர் சித்திக் பார்மக்.

1962இல் ஆப்கானிஸ்தானில் பிறந்த சித்திக் பார்மக், மொஸ்கோ திரைப்படக் கல்லூரியில் திரைப்படத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். புதிய அரசு உருவாக்கப்பட்ட பின்னர் 1992இலிருந்து 1996வரை ஆப்கானிஸ்தான் திரைப்பட நிறுவனத்தில் முகாமையாளராகக் கடமையாற்றியவர். தலிபான்களின் ஆட்சியில் இவருடைய படங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டிருந்தன. இவருடைய நான்காவது திரைப்படமான ஒசாமா 2003ஆம் ஆண்டு வெளி வந்தது. தலிபான்களின் ஆட்சியில் ஆப்கானிய மக்களுக்கு இழைக்கப்பட்ட குறிப்பாக பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் உண்மைக் கதைகளைக் கூறுவதாக இந்தப் படம் அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டு ஆப்கானின் ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் 2001ஆம் ஆண்டு வரை கொடுங்கோல் ஆட்சியை நடத்தினர். இங்கு கட்டாய பர்தா அணிதல், பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது, வேலைக்குச் செல்லக் கூடாது, களியாட்டங்கள் எதிலும் ஈடுபடக் கூடாது போன்ற பல கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தனர். அதன்படி நடந்து கொள்ளாதவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. திரைப்படங்கள் எடுப்பதற்குக் கூட தடை விதிக்கப்பட்டிருந்து. இந்தத் தடையையும் தாண்டி காபூல் நகர வீதியெங்



ஒரு சிறுமி பற்றி அந்தப் பத்திரிகையில் விபரிக்கப்பட்டிருந்தது. அந்தச் சிறுமி தனது அழகான கூந்தலை வெட்டி, ஒரு சிறுவனைப் போல் உடையணிந்து, மறைவிடத்திலுள்ள ஒரு பாடசாலைக்குச் செல்கிறாள். ஆனால் இந்த மறைவிடத்திலுள்ள பாடசாலையின் இரகசியம் வெளியாகிறது. அந்தப் பாடசாலையின் அதிபரும் தலிபான்களின் கலாசாரக் காவலர்களான அமர் பில் - மாறுப்பினால் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்படுகிறார். சிறுமியின் அடையாளமும் வெளிப்படுத்தப்படுகிறது.

அதுவொரு சின்னக் கதையாகத் தான் இருந்தது. ஆனால் நெருக்கடியினாலும், நிர்ப்பந்தங்களினாலும் அந்தச் சிறுமி, சிறுவனாக மாறியதையிட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். அதுவும் ஒரு வித பாசிசம் தான். உண்மையாகவே இத்தகைய தொரு கதை தான் என்னுடைய படத்திற்குத் தேவையாயிருந்தது. அதன் பிறகு நான் திரைக்கதையை எழுத ஆரம்பித் தேன், அதற்காக வேறு சில கதைகளையும் திரட்ட ஆரம்பித்தேன். ஆனால் அது சின்ன விடயமாக இருக்கவில்லை.

**இப்போது நீங்கள் காபூலிலா இருக்கிறீர்கள்?**

ஓம். ஆறு வருடங்கள் பாகிஸ்தானிலிருந்ததன் பிறகு நான் என்னுடைய குடும்பத்துடன், என்னுடைய அம்மா, அப்பா, மனைவி, இரண்டு மகள்கள், மகனுடன் காபூலில் வசித்துக் கொண்டிருக்கிறேன்.

**திரும்பவும் உங்களின் வீட்டிற்குப் போக அனுமதியளித்த போது எப்படி உணர்ந்தீர்கள்?**

அது ஒரு சிறப்பான உணர்வாக இருந்தது. நான் மீள்பிறவி எடுத்த மாதிரி இருந்தது. என்னால் ஒருபோதும் பனிப்பொழிவை மறக்க முடியவில்லை. பனிப் பொழிவுடனான ஆப்கானிஸ்தானின் இந்தக் காட்சியை நான் விரும்புகிறேன். அது கடவுள் நல்வரவு கூறுவது போல் இருந்தது.


**நீங்கள் பாகிஸ்தானில் இருந்தபோது உங்கள் படங்களிற் பலவற்றை தலிபான்கள் அழித்தனர். அவற்றை உங்களால் மீளவும் பெற முடிந்ததா? அவற்றுக்கு என்ன நடந்தது?**

என்னுடைய படங்கள் மட்டுமல்ல, மற்றைய இயக்குனர்களின் படங்களும் அழிக்கப்பட்டு விட்டன. தலிபான்கள் என்னுடைய வீட்டைச் சோதனையிட்ட போது என்னுடைய 8 MM கமெராக்கள், புகைப்படங்கள், புரஜெக்டர்கள், எல்லாவற்றையும் அழித்து விட்டனர். பாமியனிலுள்ள புத்தர் சிலையை அடித்து நொறுக்கியது மட்டுமல்லாமல், தேசிய கலைக்கூடம், தேசிய திரைப்படச் சுவடிக்கூடம், வானொலி கலைக்கூடம் ஆகியவற்றையும் தலைவர் முல்லா ஓமரின் கட்டளைப்படி அவர்கள் அழித்தொழித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் ஒசாமாவை உலாவ விட்டிருக்கின்றார் இயக்குனர் சித்திக் பார்மக். தலிபான் களைப் பற்றி எடுக்கப்பட்ட முதல் திரைப் படமும் இதுவாகும். இவர் மூன்று குறுந்திரைப்படங்களையும் இயக்கியுள்ளார்.



படத்தின் ஆரம்பமே பெண்களின் மீதான தலிபான்களின் வன்முறைகளை எடுத்துக் காட்டுகிறது. நீதி கேட்டுப் போராட்டம் நடத்தும் பெண்கள் துப்பாக்கியால் சுடப்பட்டும், தண்ணீரைப் பாய்ச்சியும் கலைக்கப்படுகின்றனர். சிதறியோடும் பெண்கள் கூட்டத்திலிருந்து தலிபான்களிடம் அகப்படும் பெண்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதைக் காட்டும் சித்திக், பின்னர் அதனைப் படம் பிடித்துக் கொண்டிருக்கும் வெளிநாட்டுக்காரரைத் தாக்கி கமெராவைப் பறிப்பதோடு தனது கமெராவை எமக்கு முன் நகர்த்துகிறார்.

பதின்ம வயதுச் சிறுமி, தாய், தாயின் தாய் என மூன்று தலைமுறைப் பெண்களைப் பின்னிப் பிணைந்ததாக இந்தக் கதை பின்னப்பட்டுள்ளது. போரில் தனது கணவனையும், சகோதரனையும் பலி கொடுத்த ஆண் துணையற்ற இந்தக் குடும்பத்தில் பட்டினிச்சாவு மட்டுமே முடிவு என்றாகின்றது. வைத்திய சாலையில் செய்து வந்த வேலையும் பெண்கள் வேலை செய்யக் கூடாது என்ற தலிபான்களின் கடுமையான உத்தரவின் பேரில் பறிபோக, செய்வதறியாது புலம்பும் அந்தத் தாயின் நிலை மனதைப் பிசைகிறது. இறுதியில் தனது மகளை ஒரு ஆணாக வேசமிட்டு வேலைக்கு அனுப்புவது என முடிவெடுக்கிறாள் அவள். தலைமயிர் வெட்டப்பட்டு, தனது கணவனின் ஆடைகளை தனது மகளுக்கு அணிவிக்கிறாள். தலிபான்களுக்குத் தெரிந்தால் தன்னைக் கொன்று விடுவார்கள் என்ற பேத்தியின் அச்சத்தை கதைகளைச் சொல்லித் தேற்றுகிறாள் பாட்டி. அவளுக்கு ஒசாமா என்று பெயரும் வைக்கப்படுகிறது.

இந்த இடத்தில் ஒரு சின்னப் பெண்ணின் கண்களில் தெரியும் பயம், சுற்றியிருப்பதெல்லாம் தலிபான்களாகத் தென்படும் அச்சம் என்பவற்றை மிகத் தத்ரூபமாக வெளிக்கொண்டு வந்துள்ளார் சித்திக். ஒவ்வொரு நிமிடமும் தலிபான்களிடம் அவள் அகப்பட்டு விடுவாளோ என்கின்ற அச்சம் எம்மையும் தொற்றி எம்மை இருக்கையின் விளிம்புக்குக் கொண்டு வந்து விடுகிறது. அதற்கு மரினா கொல்பகரியின் அற்புதமான நடிப்பே காரணம்.

அடுத்த நாள் தனது கணவனின்

உண்மையில் அவர்கள் திரைப்படச் சுவடிக் கூடத்திலிருந்தே தாக்குதலை ஆரம்பித்தார்கள். அதிர்ஷ்டவசமாக ஆப்கான் திரைப்படக் கல்லூரியிலிருந்த நல்ல இதயம் கொண்ட நண்பர்கள் சிலர் முக்கிய கட்டிடத்தின் கதவைப் பூட்டி, மூலப் பிரதிகளை தரைச்சட்டங் களுக்குக் கீழும், இருட்டறைகளிலும், கூரையின் மேலும், திரைகளுக்குப் பின்னாலுமென எல்லா மறைவிடங்களிலும் ஒளித்து வைக்க ஆரம்பித்தனர். அவர்கள் மின்சாரத்தையும் துண்டித்து விட்டதால் அந்தத் திரைப்படக் கூடம் முழுவதும் இருட்டாக இருந்தது.

தலிபான்களுக்கு அந்தக் கட்டிடத்தின் அமைப்புத் தெரிந்திருக்கவில்லை. ஆகவே மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருட்களை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் கட்டிடத்திற்கு வெளியே இருந்த சில பிரதிகளை அவர்கள் கண்டு பிடித்து விட்டனர். அவற்றுள் ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான், அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வந்த பல சிறந்த திரைப்படங்களும் இருந்தன. இரண்டு அல்லது மூன்று பிரிட்டனிலிருந்து வந்தவை. அண்ணளவாக அங்கிருந்த 2600 திரைப்படங்களை தலிபான்கள் எரித்தனர். அந்த இடத்தில் தான் நாங்கள் சுவடிக் கூடத்திற்கான புதிய கட்டிடம் ஒன்றை அமைக்க இருந்தோம். உண்மையிலேயே அது ஒரு பெரிய அனர்த்தமாகும்.

**ஆப்கானிஸ்தானில் திரைப்படங்களின் தற்போதைய நிலை என்ன?**

பாகிஸ்தான், லாகூரைச் சுற்றி 134 தியேட்டர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆப்கானிஸ்தானில் 1978 இற்குப் பிறகு எல்லாமாக 25 தியேட்டர்கள் இருந்தன. அதில் 18 காபூலில் இருந்தது. இதிற் பல யுத்தத்தில் அழிந்து விட்டன.

சினிமா குறித்து சொல்வதானால், நாங்கள் உண்மையாகவே ஆக்கநிலையில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்கு, நான் அரசாங்கத்தின் எந்த விதமான உதவியும் இல்லாமல் ஒசாமாவை எடுத்துள்ளேன். ஆப்கான் சினிமா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு முதலீட்டைப் பெற்று என்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து செயற்பட்டது நல்ல அனுபவமாகவும் இருந்தது. ஆனால் எல்லா அரசாங்கங் களும் கட்டாயம் தங்களுடைய திரைப்பட நிறுவனங்களுக்கு உதவித் தொகை யளித்து ஆதரவளிக்க வேண்டும். அவ்வகையான ஒரு சமூகம் உருவாகி னால் திரைப்பட இயக்குனர்களுக்கும் சுதந்திரம் கிடைக்கும். நாங்கள் இப்போது அதனையே செய்ய ஆரம்பித்திருக்கி றோம்.

**நீங்கள் ஆப்கான் சிறுவர்களின் கல்விச் செயற்பாட்டாளராகவும் இருக்கிறீர்களே...**

பிரபல ஈரான் திரைப்பட நெறியாளரான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனிடம் உண்மையைச் சொல்லி மகளை வேலைக்குச் சேர்த்து விடுகிறாள் தாய். அதன் பின்னரான அந்தச் சிறுமியின் எந்தவொரு செயலிலும், எங்கே தன்னைத் தலிபான்கள் அவதானித்து விடுவார்களோ, தன்னைக் கொன்று விடுவார்களோ என்ற பதற்றம் காணப்படுகிறது. தொழுகைக்குப் போகச் சொல்லி தலிபான்களிடம் இருந்து வரும் உத்தரவின் பேரில் தொழுகைக்குச் செல்லும் அவள் செய்ய வேண்டிய தொழுகைக்கான கடமைகளை தவறாகச் செய்வதை தலிபான் ஒருவன் அவதானிக்கிறான். இதனால் மற்றச் சிறுவர்களுடன் சேர்த்து தலிபான்களால் கட்டாயமாக மதரசாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறாள்.

மதரசாவில் இவர்களுக்கு மத போதனைகளுடன், சுகாதாரமாக இருத்தல் பற்றியும் கற்பிக்கப்படுகிறது. எஸ்பன்டி என்ற சிறுவனைத் தவிர மற்றச் சிறுவர்களுக்கு அவள் ஒரு சிறுமி என்பது தெரியாது. ஆனால் இவளினுடைய செயல்களை வைத்தும், குரலை வைத்தும் பெண் என்பதனைக் கண்டு பிடித்து விடுகிறார்கள். ஆனால் எஸ்பன்டி அவளை ஆண் என நிருபிக்கக் கடும் பிரயத்தனப்படுகிறான். ஒசாமாவை மரத்தில் ஏறிக் காட்டுமாறு கூறுகிறான். அவளும் மரத்தில் ஏறுகிறாள். பின் இறங்க முடியாமல் தவிக்கும் அவளைத் தலிபான்கள் இறக்கி, தண்டனையாகக் கிணற்றுக்குள் கட்டித் தொங்க விடுகிறார்கள். அந்த அதிர்ச்சியில் அவள் பருவம் அடைந்து விடுகிறாள். மதகுருவான முல்லாசாஹிப் அதனைக் கண்டு விடுகிறார். பின் அவள் பெண்ணென நிருபிக்கப் பட்டு தலிபான்களின் சிறையில் அடைக்கப்படுகிறாள்.

அதன் பின்னர் தண்டனைக்குரியவர்களுக்கு ஆண்களின் முன்னிலையில் வழக்கு நடக்கிறது. பெண்களின் போராட்டத்தை படம் பிடித்த வெளிநாட்டுக்காரர் உளவாளி என்று கூறிச் சுட்டுக் கொல்லப்படுகிறார். தலிபான்களின் ஆட்சியில் வைத்தியசாலையில் வேலை செய்ததற்காக வெளிநாட்டுக்காரர் என்றாலும் பெண் என்ற காரணத்திற்காக பெண் வைத்தியர் உயிருடன் மண்ணிற்குள் புதைக்கப்பட்டு கொலை செய்யப்படுகிறார். போராட்டத்தில் ஈடுபட்ட வேறும் சில பெண்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது. ஒசாமாவிற்கு தண்டனையாக அல்லாவின் பெயரினாலும், மதத்தின் புனிதத்தைக் கட்டிக் காப்பதற்காகவும் மன்னிப்பு வழங்கி மதரஸாவை நடத்தும் வயது போன



மொக்சென் மக்மல்பவ் கூட ஆப்கானின் நல்ல நண்பனாக இருக்கிறார். அவர் தன்னுடைய கந்தகார் படத்தை உருவாக்கிய பிறகு செப்ரெம்பர் 11 க்கு முன்னர், ஈரானிய எல்லையிலுள்ள அகதிச் சிறுவர்களுக்கு ஆப்கானிய சிறுவர் கல்வி இயக்கத்தினூடாக கல்வி புகட்ட வேண்டுமென்று தீர்மானித்தார். ஆப்கானியச் சிறுவர்கள் கல்வி கற்க அனுமதிக்கக் கூடியவாறு ஈரானிய அரசாங்கம் ஒரு விசேட சட்டத்தை அமுலாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சிறுமிகள் உட்பட, நடிப்பாற்றலுள்ள பல சிறுவர்களை பாடசாலைகளிலிருந்தும், சிறுவர் இல்லங்களிலிருந்தும், தெருவோரங்களில் இருந்தும் நாங்கள் கண்டு பிடித்தோம். ஒசாமாவில் நடித்த பல நடிகர்கள் நிஜவாழ்க்கையில் தெருவோரச் சிறுவர்களாக இருந்தவர்கள். இந்த தெருவோரச் சிறுவர்களிலிருந்து சிறந்த திரைப்பட இயக்குனர்களை உருவாக்க முடியுமென்ற நம்பிக்கையும் எனக்கிருந் தது. அவர்களுடைய எண்ணப்படி விவரணப் படங்களையும், குறுந்திரைப் படங்களையும் தயாரிப்பதற்கு நாங்கள் அவர்களுக்குக் கற்பிக்க முயன்றோம். அதற்கான வேறு சில வசதிகளையும் செய்து கொடுத்தோம்.

**தொலைக்காட்சியோ, திரைப்படங்களோ இல்லாத நாடொன்றில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுவர்கள் ஒசாமாவில் தங்களை இயல்பாக வெளிப் படுத்தியுள்ளது ஒரு வித்தியாசமான அனுபவமல்லவா?**

மக்கள் தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சூழலில் தங்களுக்குள்ளே வைத்திருக்கும் வலிகளையும், ஞாபகங்களையும், அனுபவங்களையும் இப் பொழுது வெளிப்படுத்த விரும்புகிறார்கள். இந்த அழிவுகளின் உண்மையின் பெரும் பகுதியாக சிறுவர்கள் தான் இருக்கிறார்களென நான் அபிப்பிராயப்படுகிறேன். அவர்களுக்கு அவர்களுடைய அனுபவங்களும் இருக் கின்றன. ஒசாமாவில் அவர்கள் அவற்றை வெளிப்படுத்தியிருப்பதைப் பாருங்கள். அவர்கள் தங்களுக்குள் பெருமளவு விவாதங்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஆப்கானிய மக்கள் இசை, ஆடுதல், பாடுதல் போன்ற களியாட்டங்களில் விருப்பமானவர்களாக இருக்கிறார்கள். இது எங்களுடைய கலாசாரத்தின் ஒரு பகுதி.


என்னுடைய புரிதல் என்னவென்றால் இவையெல்லாம் இஸ்லாமுக்கு எதிரானவை அல்ல என்பது தான். மேற்கத்தைய ஊடகங்கள் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற சொற் பிரயோகத்தைப் பயன்படுத்துவதையிட்டு நான் வருத்தமடைகிறேன். மூடநம்பிக்கை மூடநம்பிக்கை தான். ஒவ்வொரு மதத்திலும், ஒவ்வொரு கலாசாரத்திலும், ஜனநாயக கலாசாரத்திலும் கூட இந்த மாதிரியான பிரச்சினைகளை நீங்கள் காண்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவனான முல்லா சாஹிப்புக்கு தலிபான்களால் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. ஒரு சிறுமிக்கு இதை விடப் பெரிய தண்டனை என்னவாக இருக்கும்?

சிறுமியை தனது வீட்டிற்கு அழைத்து வரும் கிழவன் அவளை உள்ளே விட்டு வெளியில் பெரிய பூட்டாகப்



போட்டுப் பூட்டி விட்டுச் செல்கிறான். பூட்டப் பட்ட வீட்டிற்குள் தலிபான்களால் இந்தக் கிழவனுக்கு தானம் கொடுக்கப்பட்டு வாழ்க்கை சீரழிக்கப் பட்ட பல பெண்கள் காட்டப் படுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தாம் எப்படி இங்கு கொண்டு வரப் பட்டோம், எப்படிச் சகிப்புத் தன்மையுடன் வாழ்கிறோம் என்றெல்லாம் சிறுமியிடம் கூறுகிறார்கள்.

தலிபான்கள் எங்களுடைய வீடுகளை, எங்களுடைய காணிகளை, எங்களுடைய தோட்டங்களை எரித்து விட்டார்கள். எங்களுக்கென்று ஒன்றுமில்லை. அவர்கள் எங்களைக் கைது செய்து இந்த முல்லாவிற்குத் திருமணம் செய்து வைத்து விட்டனர். எமது வாழ்க்கையைப் பாழாக்கி விட்டனர். எமக்கு வாழ்வதற்கென்று அங்கே ஒன்றுமில்லை. நாங்கள்

**அடுத்த திரைப்படத்தை தயாரிக்கும் எண்ணம் உள்ளதா?**

அரபி, துருக்கி, பார்ஸி போன்ற மிகப்பெரிய இலக்கியச் செழுமை மிக்க மொழிகள் உள்ள நாடுகள் ஆப்கானிஸ் தானின் அண்டை நாடுகளாக உள்ளன. ஆனால் உண்மையாகவே உருது மொழி கவித்துமானது. ஆப்கானிஸ்தானுக்கு மொஹமட் இக்பால் முன்னுதாரணம் கொண்ட கவிஞர். சந்தர்ப்பம் வாய்த்தால் ஒருநாள் அவருடைய நல்ல கவிதையில் ஒன்றைத் திரைப் படமாக்குவேன்.

ஒசாமாவில், அதிகளவு நம்பிக்கையின்மையையும், அதிகளவு சந்தோசமின்மையையும் காட்ட வேண்டுமென்ற தேவை எனக்கிருந்தது. அடுத்த தடவை, இன்னொரு விதமான உண்மை நிலையினைப் படமாக்க வேண்டும். அதுவொரு துன்பம் கலந்த நகைச்சுவையாகவும் இருக்கலாம். திரும்பவும் நான் சிறுவர்களுடன் வேலை செய்வேன். ஆனாலும் அடுத்த தடவை வயதானவர்களுடன் எனக்கு வேலை செய்ய வேண்டி இருக்கிறது. ஏனெனில் அவர்கள் பல தவறுகளை மேற்கொள்கிறார்கள் அவற்றுட் சிலவற்றை நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

படத்தின் கடைசியில் பெண்கள் எல்லோரும் ஏதோவொரு பெரிய சிறைக்குள் இருப்பது போன்ற குறியீடு காட்டப் படுகிறது. அவை வரலாற்று ரீதியாக ஆண்களுக்கும், பெண்களுக்கு மிடையிலான ஏற்றத்தாழ்வையே காட்டுகிறது......

ஜனநாயக சமூதாயத்தில் கூட மக்கள் ஆண், பெண் என்று இரு பிரிவாகவே சிந்திக்கின்றனர். அது இன்னதென்று இனம் புரியாத ஆணுக்கும் பெண்ணுக்குமான உள்ளுறைந்த பிரச்சினை. கீழைத்தேச சமுதாயத்தில் அது கூடுதலாகத் தெரிகிறது. ஆனால் எல்லா இடங்களிலும் அது இருக்கிறது. ஆண்கள் அதிகளவில் ஆணவம் கொண்டவர்கள். சமுதாயத்தில் தங்களுக்கு இருக்கும் இடத்தைப் பெண்கள் பறித்து விடுவார்களோ என்று ஆண்கள் பயப் படுகிறார்கள்.

இன்று காபூலிலும், பெண்களுடைய சொந்த பெண்ணிய நிறுவனங்கள், காரியாலயங்கள், அவர்களுடைய சொந்த அரசியற்கட்சி, பெண்களுக்கு மட்டுமே யான வானொலி நிலையம் போன்றவற்றை நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முல்லாவை வெறுக்கிறோம். எங்களுடைய இளமையை, எங்களுடைய வாழ்க்கையை இந்தக் கொடியவன் பாழாக்கி விட்டான். ஆனால் எங்களால் என்ன செய்ய முடியும்? நாங்கள் அகதிகள்.


ஒரு பதின்ம வயதுச் சிறுமியின் கனவுகள், ஆசைகள், இளமை எல்லாம் சிதைக்கப்பட்டு, பெற்றவளிடமிருந்து பிரிக்கப்பட்டு அவளுக்கான ஆயுட் தண்டனையாக இந்தத் தீர்ப்பு வழங்கப்படுகிறது. மதவாதத்திலும் மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போன தலிபான்களால் வேறென்னத்தைப் பெரிதாகச் செய்து விட முடியும்? தலிபான்களின் காலத்தில் மக்கள் தங்களுடைய நம்பிக்கையை இழந்தவர்களாக இருந்தார்கள். தலிபான்கள் மூடநம்பிக்கையுள் மூழ்கி தமது ஆன்மாவை இழந்த கொடிய விலங்குகளாக நடமாடினார்கள். தாம் நினைத்தவாறே பெண்களும் இருக்க வேண்டுமென விரும்பினார்கள். தமது குரூர எண்ணங்களை பெண்களின் மேல் சுமத்தினார்கள். ஆண்கள் இல்லாத வீடுகளில் பெண்கள் பட்டினியால் சாவதை அவர்களால் பார்த்து இரசிக்க முடிந்தது.

ஆனால் சேற்றிலிருந்து செந்தாமரை என்று சொல்வார்களே அது போல் சிறுவன் எஸ்பன்டியைக் கூறலாம். இங்கு அவனை மட்டுமே மனித ஆத்மாவாக சித்திரித்துள்ளார் சித்திக். பெண்கள் போராட்டத்தை தலிபான்கள் சிதறடிக்கும் போது அவன் உண்மையாகவே அழுது, புலம்புகிறான். ஒஸாமா ஆணாக வேடமிட்ட ஒரு சிறுமி என்பது அவனுக்குத் தெரியுமாயினும் அவளைக் காட்டிக் கொடுக்காமல் அவளுக்குப் பக்கபலமாக நிற்கிறான். சிறுமி தலிபான்களிடம் பிடிபடும் பொழுது தனது கையாலாகாத்தனத்தை யிட்டு வருந்துகிறான். சிறுவர்கள் புனிதமானவர்கள், கள்ளங்கபட மற்றவர்கள். அவர்கள் ஆண், பெண், சாதி, மத, இன வேறுபாடுகளைக் கடந்தவர்கள். அவர்களின் உலகம் மிகப் பரந்தது. பெரியவர்களாகிய நாம் தான் அவர்களை மீளவே முடியாத பாதாளத்தில் தள்ளி விடுகிறோம் என்கிற எண்ணத்தை சித்திக் பார்மக் எங்களில் எழ வைத்து விடுகிறார்.

அது மட்டுமல்லாமல் தூங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வரினதும் ஆன்மாவையும் தட்டி எழுப்பி, பலமிழந்த பெண்களின் பலமுள்ள ஆன்மாவாக தன்னை நிலை நிறுத்தி, கலாசாரம் என்ற பெயரில் அடிமைத்தனத்தைக் கட்டிக் காப்பவர்களையும், மூடநம்பிக்கைகளுக்கு ஆட பட்டுப் போனவர்களையும் நோக்கித் தனது கேள்வி களை எழுப்புகிறார் சித்திக். எங்களுடைய கலாசாரத்தின் பேரிலான அடிமைத்தனங்களும், மூட நம்பிக்கைகளும் கூட பெண்களுக்கு மட்டும்தான். ஆண்களுக்கு அது கிஞ்சித்தும் கிடையாது என்பது வேறு விடயம். தங்களுக் குரிய விலையுயர்ந்த அஃறிணைப் பொருட்களைப் பத்திரமாகப் பூட்டி வைப்பது போல், உயிருள்ள பெண்களைத் தனது காம இச்சைகளுக் கு மட்டுமேயாக பூட்டி வைக்கும் கிழவன் முல்லாவின் தந்திரம், தற்போது பல வீடுகளில் நடந்து கொண்டிருக்கும் ஒன்று. அவரவர்களின் வீடுகளைத் திறந்து பார்த்தால் தான் தெரியும் அப்பாவிப் பெண்களின் அவல வாழ்க்கை.

பார்க்கலாம். ஆண்களுக்கு அந்தக் கதவு மூடப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக இது ஒருவித சிக்க லாகவும் இருக்கலாம்.

இந்த அபிவிருத்திகள் கூட ஒரு சாதகமான முன்னேற்றமே. ஆனால் கட்டாயம் காபூல் ஆப்கானிஸ்தான் அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். கீழுள்ள சின்னக் கிராமங்கள் உட்பட எல்லா இடங்களிலும் பெண்களுக்கான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். ஆயினும் அவர்கள் இன்னும் பல பிரச்சினைகளை எதிர் கொண்டாவாறே இருக்கிறார்கள். அங்கேயுள்ளவர்கள் விதவைகள். தங்களுடைய சகோதரர்களை, கனவன்மாரை, தந்தைமாரை இழந்தவர்கள். அவர்கள் எல்லோரும் அனாதைகள். ஒரு வேலையோ, வசதி வாய்ப்புக்களோ, அடிப்படையான



பொருட்களோ கூட அவர்களிடம் இல்லை. அவர்கள் வசிப்பிடங்கள் இல்லாமையால் தெருவோரங்களில் வாழ்க்கையை ஆரம்பித்துள்ளவர்கள். ஆனால் அது கூடப் போதுமானதல்ல. மனித ஆன்மாவைத் திருப்பிக் கட்டியெழுப்புவது மிகவும் கடினமானது. அதற்காக நாங்கள் எதனை உருவாக்கிக் கொண்டிருக்கிறோமென நான் யோசிக்கிறேன். இதன் பலன்களை அடுத்த தலைமுறையில் மட்டும் தான் நாங்கள் பார்க்கலாம். அது அடுத்த தலைமுறைக்குப் பின்பாகவும் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காரா: "சினிமா மொழியில்" ஓர் உன்மன யாத்திரை




படம்: மாயா

ஜி.ரி.கேதாரநாதன்

பசிய வனாந்தரத்திற்கும் கரும்புத் தோட்டங்களுக்குமிடையே அருமையான இயற்கைச் சூழலின் மத்தியில் அமைந்திருக்கும் பழமை வாய்ந்த அழகியதொரு சிறிய விகாரை. வசதி குன்றிய பௌத்த கிராமமொன்றின் உட்பகுதி. சந்தடிகளோ மற்றும் ஆரவாரங்களோ எவையும் தீண்டாத ஒரு ஒதுக்குப்புறம். விகாரையைச் சூழ ஒரு சில குடியிருப்புக்கள் மாத்திரமே. இந்த விகாரையின் பொறுப்பாளர் ஒரு முதிய பௌத்த துறவி. அவரே விகாரையைப் பராமரித்தும் வருகிறார். பழமை வாய்ந்த இந்த விகாரையின் உட்புறச் சுவர்களிலே நூறாண்டுகளுக்கு முற்பட்ட கால பௌத்த ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இவை காரை பெயர்ந்தும் மங்கியும் சில பகுதிகளில் சிதைவடைந்தும் இருக்கின்றன. பௌத்தசார கதையொன்றினை நுணுக்கமான விபரங்களுடன் இந்தத் தொடர் ஓவியங்கள் சித்திரிக்கின்றன. இவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் அதீத பற்றுக் கொண்டவராக முதிய பௌத்த துறவியிருக்கிறார்.

ஓவியங்களை சீரமைத்துப் புதுப்பித்து மெருகேற்றும் பணிகளுக்கு இளம் ஓவியரும் பௌத்த துறவியுமான ஆனந்த என்பவரது சேவையைக் கோரி அவருக்கு அழைப்பு விடுக்கிறார் முதிய பௌத்த துறவி.

சங்கார பிரசன்ன ஜெயக்கொடியின் முதலாவது திரைப்படமாகும். இத் திரைப்படம் முற்றிலும் வேறுபட்டதான பிராந்தியமொன்றின் மீது ஆழமானதொரு பார்வையைச் செலுத்தியிருக்கிறது. இந்த வகையில் இளம் துறவியொருவரின் மனவுலகே இந்தப் புதிய பிராந்தியமாகும். ஆசைகள், இச்சைகள் எவ்வளவு தூரம் இளம் துறவியொருவரது மன உலகை வியாபித்து அவரை அலைக் கழித்து, இம்சைப்படுத்துகிறது என்பதை நுண்ணுணர்வுடன் மிகத் துல்லியமாக வெளிக்கொணருகிறார் பிரசன்ன ஜெயக்கொடி. ஒரு வகையில் இது துணிகரமான முயற்சி. திரைப் படத்தில் கதாபாத்திரங்கள் மூன்றுக்கு மேற்படவில்லை. கதை கூறல் கட்டமைப்பு எதுவுமில்லாத வகையில், திரைப் படத்தில் இடம்பெறும் உரையாடல்கள் மிகச் சிக்கனமானவை. பத்து அல்லது பதினைந்து வசனங்களுக்குள் இவற்றை அடக்கி விடலாம். ஆனந்தவின் மனதில் எழும் சலனங்கள், போராட்டங்கள், எழுச்சிகள் மற்றும் விடுபடல்கள் போன்றனவே திரையூடகத்தின் மையக் கூறுகள். கலையுணர்வுடன் ஆனந்த சித்திரங்களை மீளுருவாக்கம் செய்யும் பணியில் ஈடுபடும்போது ஒருநாள் இளம் பெண் ஒருத்தியின் கூந்தலுக்குப் பயன்படுத்தப்படும் 'கிளிப்' ஒன்றினைக் கண்டெடுக்கிறார். கிளிப்பின் சொந்தக்காரியான அப்பெண் விகாரைக்கு அடிக்கடி வருபவர். இத்தகையதொரு பின்னணியில் ஆனந்தவின் உள்ளடக்கப்பட்ட உணர்வு

**ஆனந்தவின் மனதில் எழும் சலனங்கள், போராட்டங்கள், எழுச்சிகள் மற்றும் விடுபடல்கள் போன்றனவே திரையூடகத்தின் மையக் கூறுகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கிளர்ந்தெழுகின்றன. பெண்ணின் அருகாமையில் அவளது முன்னிலையில் பல்வேறு சலனங்களுக்கு அவர் ஆட்படுகிறார். அவர் பௌதீக நிலையில் வெளிப்படையான மாற்றங்களை மறைத்து வாழுகிற போதிலும் உள்மனநிலை ஆட்டங் கண்டு அவரது ஆன்மீக உலகு கொந்தளிப்பானதொரு சுழலுக்குள் அகப்பட்டு விடுகிறது. ஓவியன் என்ற நிலையிலும் இளம் துறவியென்ற நிலையிலும் வேறுபட்ட சவால்களை அவர் எதிர்கொள்ள நேரிடுகிறது. உலகியல் சுழலுக்குள் வீழ்ந்து விடாது தமது ஆன்மீக உலகை மெல்ல மெல்ல அணிமிக்கும் ஆனந்த, அதனைப் பற்றிக் கொள்கிறார்.



இளந்துறவி என்ற நிலையில் ஆனந்த இவ்வுலகத் தளைகளைக் கடந்து ஆன்மிக உலகுக்குள் பிரவேசிப்பதை அவரது படிப்படியான விடுபடல்களை கறாராக இருந்து விடாமல் நெகிழ்ச்சியானதொரு விழிப்பு நிலையிலிருந்து பார்வையாளர்களிடம் கொண்டு சென்றிருப்பது நெறியாளரின் வெற்றியெனவே நான் கருதுகிறேன். இந்த வகையில் திரைப்படம் கலையூடகம் என்ற சாத்தியப்பாட்டினை எய்தியிருக்கின்றது. இருப்பினும் இளம் துறவி ஆனந்தவின் உள்மனம் அலைந்து திரிவதை வெளிப் படுத்த அதற்காக இன்னுமொரு நடிகரிடம் தஞ்சம் புகுந்து அவர் மூலம் வெளிப்படுத்தியிருப்பதும், துறவியின் மஞ்சள் அங்கியின் புனிதம் கெட்டு விடாமல் 'காத்திருப்பதும்' சிருஷ்டியின் கூறுகளான கலையாக்கம், கருத்தாக்கம் என்ற இரு தளங்களிலும் நெறியாளர் ஒரேயடியாக சறுக்கி விழுந்திருப்பதையே எடுத்துக் காட்டுவதாயுள்ளது.



சங்கார திரைப் படத்தின் கதை கூறல் பாணியும், அதன் களமும் சற்றுப் புதுமை வாய்ந்தது. புதிரானது. மனித மனத்தின் உள்மன இயக்கத்தையும் அதன் தன்மைக் கூறுகளையும் வசனங்களில் மாத்திரமே வெளிப்படுத்தி விட முடியாது. ஆசைகள், இச்சைகள், சலனங்கள், போராட்டங்கள், விடுபடல்கள் போன்றவற்றை மிக ஆழமாக வெளிப்படுத்த இயற்கையான ஒலிகள், மௌனங்கள் போன்றவற்றை நல்ல முதிர்ச்சியுடன் மிக அருமையாகப் பயன்படுத்தியிருக்கிறார் நெறியாளர் பிரசன்ன ஜெயக்கொடி. இந்த வகையில் அவருடன் ஆற்றல் மிக்க ஒரு குழுவாக இயங்கியிருக்கிறார்கள் ஒளிப்பதிவாளர் பாலித பெரேரா, இசை வழங்கிய நதீகா குருகே ஆகியோர். இசையில் இயற்கையாக சுற்றாடலில் இயல்பாயிருக்கும் ஓசைகளை காட்சிகளின் தன்மைகளுக்கு ஏற்ப கூட்டியும், குறைத்தும் செயற்கை ஒலிகளையும் கலந்து பயன்படுத்தியிருப்பது திரைப் படத்திற்கு செறிவானதொரு அர்த்தத்தையும் புதிய பரிமாணத்தையும் ஏற்படுத்தியுள்ளதுடன் கலையாக்கத்தில் புதியதொரு அனுபவத் தையும் சாத்தியப் படுத்தியுள்ளது. இந்த வகையில் காட்சிகளும் இசையும் பரஸ்பரம் ஒன்றையொன்று அர்த்தப் படுத்தியும் ஆழப்படுத்தியும் கவித்துவமான சேர்க்கையாக மிக இயல்பாக இணைந்துள்ளன. மழை, காற்று, புயல், சுடர், நெருப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலசலப்புடன் ஓடும் நீர், சலனமின்றி இருக்கும் நீர்ப்பரப்பு, ஜீவராசிகளின் ஓசைகள், பறவைகளது நிசப்தம், அல்லது மௌனம், இறக்கைகளின் சடசடப்பு ஆகியன அர்த்தச் செறிவுடன் கூடியவை.

முதிய பௌத்த துறவி மிக அருமையானதொரு கதா பாத்திரமாகும். அவரது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும், முழுமையும் ஆழ்ந்த தியானமும் வெளிப்படுகின்றன. பற்று, பற்றின்மை பௌத்த சாரத்தின் வெளிப்பாடுகளாக மிக அருமையாக வெளிப்படுகின்றன. உள்ளடக்கத்திலும் பௌத்த தத்துவார்த்த சாரம் பொதிந்திருப்பது நெறியாளரின் முதிர்ச்சியினையும் அவரது பிரக்ஞைபூர்வமான கட்டுப்பாட்டினையும் புலப்படுத்துகிறது. உண்மையில் செயல்களில் அல்ல நோக்கத்திலேயே ஒரு காரியத்தின் முழுமையும், புனிதமும் அடங்கியிருக்கின்றது போன்ற பௌத்த தத்துவங்கள் வெளிப்படுகின்றன. மேலும் செறிவுடன் கூடிய பௌத்த சார தத்துவங்கள் உள்ளீடுகளாக உறைந்திருப்பது ஆழமான பார்வைக்கு அகப்படும்.


மூன்றாவது பாத்திரமான கிராமத்துப் பெண் மிகுந்த எச்சரிக்கை



படம் : மாயா

யுணர்வுடன் உருவாக்கப்பட்டுள்ளது. அர்த்தத்தளங்களை நன்கு விரிவு படுத்துவதற்கு இப்பெண் கதாபாத்திரத்தின் இயக்கமும், செயற்பாடுகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொரு பங்கினை வகிக்கின்றது. இளம் பௌத்த துறவிக்கும், முதிய பௌத்த துறவிக்குமிருக்கும் பாரிய இடைவெளி, பக்குவ வேறுபாடுகள் மற்றும் பற்று, பற்றின்மை ஆகியன எத்தகைய திணிப்பு மின்றி வெகு இயல்பாக காட்சிகள் மூலம் வெளிக் கொணரப்படுகின்றன. படிப்படியாக இளம் துறவி ஆனந்த ஆத்மீகத் தளத்தில் உள்ளொளி பெற்று வருகிறாரென்பதைக் காட்ட வெட்டுக்கிளி குறியீடாகப் பயன்படுத்தப் படுகிறது. மர இலை, தண்டு போன்றவற்றில் காணப்பட்ட வெட்டுக்கிளி திரைப் படம் முடிவடையப் போகும் தறுவாயில் விகாரையின் மணிக் கூண்டுக் கோபுரக் கயிற்றின் இடைநடுவில் காணப்படுகின்றது. சிற்றுயிரான வெட்டுக்கிளியின் அசைவின் மூலம் பேருண்மை புலப்படுத்தப் படுகின்றது. ஆனந்தவின் ஆன்மீகப் பயணம் ஆரம்பப் புள்ளியிலிருந்து முன்னேறிவிட்ட போதிலும் இன்னும் முடிவடைந்து விட வில்லை. திரைமொழியின் கூறுகளில் மிக ஆழமான விசாரணைகளுடன் கூடிய பௌத்தசார உட்கருத்தை எளிமையாகவும் கவித்துவ அழகுடனும் வெளிப்படுத்த முடியுமென்பதற்கு இத் திரைப்படம் சான்றாக உள்ளது. கலையாக்கத்திற்குரிய உயர்ந்த தளத்தில் நெறியாளர், ஒளிப் பதிவாளர், இசை வழங்கியவர் ஆகியோரின் உச்சபட்ச கூட்டு முயற்சி இதனைச் சினிமா மொழியில் சாத்தியமாக்கியுள்ளது.

●



படம் : மாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலி


# லெஸ்ரர்: காலத்துயர்

ஜி.ரி.கேதாரநாதன்

ரேக்காவ திரைப்படத்திற்கு முந்திய 1956க்கு முற்பட்ட இலங்கைச் சிங்களத் திரைப்படங்களை உற்று நோக்கினால் அவை யாவும் உள்ளடக்கம், வடிவமைப்பு மற்றும் பாடல்கள் உட்பட தென்னிந்திய சினிமாவின் கொச்சைத் தனமான நகல்களாக அவற்றின் மலினப்பட்ட கேளிக்கை வார்ப்புக்களாகவே தயாரிக்கப் பட்டிருப்பதை அவதானிக்க முடியும். உண்மையிலேயே சிங்களத் திரைப்படங்களின் ஆரோக்கிய வழிப்பட்ட பரிணாம வளர்ச்சி லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் ரேக்காவ திரைப்பட வருகையுடனேயே ஆரம்பிக்கின்றது. இந்த வகையில் சிங்கள திரைப்படங்களுக்கு மாற்று வடிவம் கொடுத்த முன்னோடியாக அதற்கு வழிகோலியதுடன் உறுதியான அடித்தளத்தை இட்டவராக லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸே கருதப்படுகிறார். ஆரோக்கிய தரமற்ற அபாய போக்கிலிருந்து சிங்கள சினிமாவை மீட்டெடுத்து, கலாசாரத் தளத்தில் ஒரு தேசிய இனங்காணலுக்கான அந்தஸ்தை ஈட்டிக் கொடுப்பதற்கு அரிய பங்களிப்பினை லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் நல்கியிருந்தார். எவ்வாறு பார்க்கிலும் சிங்கள சினிமாவின் வளர்ச்சியில் அவரது கால கட்டமே ஒரு வரலாற்றுத் திருப்பு முனையாக முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த வகையில் அவருடைய ஆரம்பகாலத் திரைப்படங்களான ரேக்காவ மற்றும் கம்பெரலிய ஆகிய இரு படைப்புகளும் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தவை. திரைப்பட ஊடகத்தின் மிகப் பலம் வாய்ந்த சாத்தியக் கூறுகளை ஓரளவு வசப்படுத்திய முதன்மை வாய்ந்த சிங்களத் திரைப்படக் கலைஞர் என்ற ரீதியில் அவரது கால கட்டத்துடனேயே கலைத்துவ பாரம்பரியம் ஒன்று சிங்கள சினிமாவுக்கு உருவாகியது எனலாம். இந்த வகையில், தமது பல படைப்புகளின் மூலம் உள்நாட்டு விமர்சகர்களதும் மற்றும் வெளிநாட்டு விமர்சகர்களினதும் கவனிப்பை ஈர்த்த நெறியாளராக அவர் மாறியிருந்தார். அத்துடன் தேர்வும் ரசனையும் கூடிய பார்வையாளர்களது எதிர்பார்ப்பிற்கும் அக்கறைக்குமுரிய நம்பிக்கையான நெறியாளராக அபிமானத்தையும் அவரால் பெற முடிந்தது.

லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் பெரும்பாலான திரைப்படங்கள் ஏற்கெனவே நாவல்களாகவும்,



படம் : மாயா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகளாகவும் இருந்தவற்றிற்கு திரைக்கதை எழுதப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்டவையாகும். இலக்கியப் படைப்புக்களை அடியொற்றியதாகவே அவற்றிற்கான திரைக்கதைகளும் அமைந்திருந்தன. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் லெஸ்ரர் தம்மை மட்டுப்படுத்தி கொந்தளிப்பான சமகால பிரச்சினைகளைத் தீண்டாது தவிர்த்துக் கொண்டாரென்ற சில விமர்சகர்களது அவதானிப்பில் ஒரு வகையில் நியாயமுள்ளதாகவே எனக்குப் படுகிறது. முன்னோடித் திரைப்பட நெறியாளர் என்ற ரீதியிலும், கலையாளுமை கைவரப் பெற்றவர் என்ற வகையிலும் இளந் தலைமுறை நெறியாளர்களுக்கு முன் மாதிரியான சில சவால்களை தமது காலகட்டத்தில் அவர் ஏற்கத் தவறியது தேர்வும் சிரத்தையும் கொண்ட பார்வையாளர்களின் மனத்தில் பெரியளவில் ஏமாற்றத்தினையே தோற்றுவித்திருந்தது. அத்தகையதொரு பின்புலத்தில் அவர் கடந்த தசாப்த காலத்திற்கு முன்பும் பின்பும் எடுத்த படங்கள் அடுத்தடுத்து அவரது குறைந்த பட்ச மேதமையைக் கூட பிரதிபலிக்கத் தவறியிருந்தன என்பது மிகத் துரதிர்ஸ்டவசமானது. இந்த நிலையில் இப்போது அவரது படைப்பாக வெளிவந்திருக்கும் "அம்மா வருணே" கூட பலத்த அதிருப்தியையே ஏற்படுத்தியிருக்கிறது.

அண்மையில் றீகல் தியேட்டரில் "அம்மா வருணே" தொடர்பான திரையிடல் விழாவொன்றின் போது கேள்வியொன்றுக்குப் பதிலளித்த லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ், சமூக ரீதியான கரிசனையைத் தாம் அம்மா வருணேயில் வெளிப்படுத்தியிருப்பதாகவும், சமகாலப் பிரச்சினையை மையமாகக் கொண்ட திரைப்படம் என்ற ரீதியில் ஆழமான சில விசாரணைகளை திரைப்படத்தில் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

**விரிந்ததொரு பார்வையினைத் தொலைத்து விட்டு வெகுஜனத் தளங்களில் கட்டமைக்கப்படுகின்ற கருத்தாக்கங்களுக்கும் படிமங்களுக்கும் 'அம்மா வருணே' யில் லெஸ்டர் ஆட்பட்டிருப்பது துரதிரஸ்டவசமானது.**

யுத்த எதிர்ப்புத் திரைப்படம் பற்றியோ அல்லது யுத்த பாதிப்புகளைச் சித்திரிக்கும் திரைப்படங்களின் வகைமைகள் தன்மைகள் பற்றியோ லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் நன்கு அறிந்தவர். அவர் சிறந்த கலைஞர் என்பதுடன் அனுபவமிக்க பழம்பெரும் பத்திரிகையாளருமாவார். தலை சிறந்த பிறநாட்டைச் சேர்ந்த யுத்த எதிர்ப்பு யுத்த பாதிப்புகள் அடங்கிய கலைப் படைப்புக்களான திரைப்படங்களை பார்க்காதவரல்ல அவர். இவற்றையும் நீக்கிவிட்டுப் பார்த்தோமானால், சிங்களத் திரைப்படங்கள் என்ற ரீதியில், லெஸ்ரரிலும் மிகவும் இளையவரான பிரசன்ன விதானகேயின் "புரஹந்த களுவர" திரைப்படம் பற்றியேனும் அவர் நன்கு அறிந்திருப்பாரென எதிர் பார்க்கலாம். மேலும் வெளிநாட்டுத் திரைப்பட விழாக்களின் போது விருதுகளுக்குரிய திரைப்படங் களைத் தெரிவு செய்யும் யூரர்கள் குழுவில் தலைவராகவும் யூரராகவும் கடமையாற்றி நீண்ட கால பழுத்த அனுபவமும் அவருக்கு இருக்கிறது.

இவற்றையெல்லாம் முற்றாக மறுதவிக்கும் வகையில் விரிந்ததொரு பார்வையினைத் தொலைத்து விட்டு வெகுஜனத் தளங்களில் கட்டமைக்கப்படுகின்ற கருத்தாக்கங்களுக்கும் படிமங்களுக்கும் "அம்மா வருணே"யில் அவர் ஆட்பட்டிருப்பது துரதிர்ஸ்டவசமானது. இந்தப் பின்னணியில் தாம் வாழும் சமூகத்தின் சமகாலப் பிரச்சினைகளை ஒரு தரிசன வீச்சுடன் கிரகிக்கத் தவறியதுடன் மெய்மை குன்றாததொரு சிருஷ்டி அனுபவமாக அவற்றைத் தரவும் அவர் தவறி விட்டதாகவே நான் கருதுகிறேன்.

இந்தவகையில் கருத்தாக்கத் தளத்தில் ரன்சலு, சந்தேசிய ஆகிய லெஸ்ரருடைய முன்னைய இரு திரைப்படங்களையும் ஒப்பு நோக்குவது பொருத்தமான்து என நான் கருதுகிறேன். பௌத்த சிங்கள பெரும்பான்மை நாடொன்றில் தாம் ஒரு ரோமன் கத்தோலிக்கர் என்ற உறுத்தலுக்கு லெஸ்ரர் ஆளாகியதன் ஒரு வெளிப்பாடு, அந்த இரு திரைப்படங்களிலுமே இயல்பை மீறி பௌத்த விழுமியங்களை திணித்த விதத்தில் வெளிப்பட்டி ருப்பதாக சிங்கள திரைப்பட விமர்சகர்கள் சிலர் சுட்டிக் காட்டியிருந்தது ஞாபகத்திற்கு வருகிறது. இறுதிக் காலத்தில் கூடுதலான உறுத்தலுக்கு அவர் ஆளாகியதன் விளைவு தான் "அம்மா வருணேயோ" என்ற சந்தேகம் மேலெழுவதை என்னால் தவிர்க்க முடியவில்லை. ●



படம் : மாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளிம்பு நிலைவாசிகளின் ரொட்டிகளும் ரோஜாப் பூக்களும்

ஜி.ரி.கேதாரநாதன்

இத் திரைப்படத்தின் கதாநாயகன் சிறு வயதிலிருந்து நடுத்தர வயதில் மரணிக்கும் வரை வாழ்வில் அடுக்கடுக்காக வரும் தோல்விகளையும் இழப்புக்களையும் சந்தித்தவன். தமிழ்த் திரைப்படப் பார்வையாளர்களின் மனதில் உறைந்து போயிருக்கும்





நெறியாளர் வசந்தபாலன்

**தமிழ்த் திரைப்படப் பார்வையாளர்களின் மனதில் உறைந்து போயிருக்கும் கதாநாயக பிம்பத்தைப் போட்டுடைத்து நம்பகத் தன்மையுடன் விருதுநகர் மண்ணின் அசல் சேரிப்புற வாசியாக அவன் சித்தரிக்கப்பட்டிருப்பது மாறுதலான ஒரு அம்சம் எனலாம்.**

கதாநாயக பிம்பத்தைப் போட்டுடைத்து நம்பகத் தன்மையுடன் விருதுநகர் மண்ணின் அசல் சேரிப்புற வாசியாக அவன் சித்திரிக்கப்பட்டிருப்பது மாறுதலான ஒரு அம்சம் எனலாம். இதற்கு நெறியாளருக்குக் கை கொடுத்து வில்லன் நடிகரான பசுபதி மறு அவதாரம் எடுத்திருக்கிறார். தோய்த்துத் தோய்த்து நைய்ந்து போன வேட்டியுடனும் தேய்ந்து அறுந்துபோகும் தறுவாயிலிருக்கும் செருப்புடனும் அவர் அகவயமாகவும், புறவயமாகவும் தனது ஒவ்வொரு அசைவுகளிலும் உணர்வுகளை எத்தகைய மிகையும் இன்றி வெகு இயல்பாக வெளிப்படுத்தியிருப்பது திரைப் படத்தை புதியதொரு தளத்திற்கு உயர்த்தி விடுகிறது.


திரைப்பட நெறியாளரான வசந்த பாலன் சேரிப்புற வாழ்க்கையுடன் நன்கு பரிச்சயமானவர். ஒரு விதத்தில் சுயசரிதை சார்ந்த பல கூறுகள் திரைக்கதையின் உள்ளீடாகக் கொண்டு வரப்பட்டிருப்பது திரைப்படத்தின் ஆரம்பத்திலிருந்து நடுப்பகுதி வரைக்கும் திரைப்படத்திற்கு வலுவூட்டியிருக்கின்றது. இந்த வகையில் கதைக்களனாகிய விருதுநகர் சேரிப்புற வெயிலின் தணல் தகிப்பும், உள்ளுறைந்து மூக்கைத் துளைக்கும் கந்தக நெடியுடன் கூடிக் கனன்று எழும் வெம்மையும் யதார்த்தப் பாங்காக மெய்மை குன்றாது வாழ்க்கைக்கு மிக நெருக்கமாக அணுகப்பட்டிருக்கிறது. இந்த உண்மைக் கூறான அம்சங்களைக் கூர்மையாக வெளிப்படுத்துவதில் நெறியாளர் பிரக்ஞைபூர்வமாகக் கட்டுப் பாட்டுடன் நயக்கத்தக்க விதத்தில் இயங்கியிருக்கிறார். ஒளிப்பதிவும் நன்கு ஒத்துப் போயிருக்கிறது. தமிழ் சினிமா தமிழக வாழ்க்கையினைச் சித்திரிப் பதில்லை என்ற குறைபாட்டினை ஓரளவு நீக்கவும் இத்திரைப்படம் முற்பட்டிருக்கிறது.

அப்பட்டமான அருவருக்கத்தக்க வன்முறைக் காட்சிப்படுத்தல்கள் சினிமா அழகியலைக் கேள்விக் குள்ளாக்கியுள்ளது. வன்முறையின் குரூரங்களை ஒரு சில காட்சிகளின் மூலமே திரை மொழியின் கூறுகளில் சிக்கனமாகவும் அழகியல் உணர்வுடனும் வெளிக் கொண்டு வந்திருக்க முடியுமெனினும், நெறியாளர் அதனை எய்துவதற்குத் தவறியுள்ளார். மேலும் நெறியாளரின் கட்டுப் பாட்டிலிருந்து திரைப்படம் தடம் புரண்டு போய்விடுகிறது. இந்த வகையில் பசுபதியின் யதார்த்த உலகு, பரத்-பாவனா ஆகியோரின் செயற்கைத் தனமான தமிழ் சினிமாப் பாணிக் காதலால் ஊடறுக்கப்படுவது ஏமாற்றத் தையே அளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுப் போய் வெறுமையாகத் திரும்பிய கதாநாயகனை வெற்றியின் சிகரமாகிய அவன் தம்பி வேகமாகத் தழுவிக் கொள்வது, தோல்வியின் ரணங்களுடன் பரிதவிக்கும் பசுபதி - பாண்டியம்மாள் காதலின் ஈரம் ஆகியன வெயிலின் உக்கிரத்திற்கு நிழல் தரும் பரவசமிக்க ஒத்தணங்கள். விளிம்பு நிலைவாசிகள் ரொட்டிக்காக மாத்திரமின்றி வாழ்வின் எளிமையான, வசீகரமான தருணங்களில் பூக்கும் ரோஜாக்களை யாசித்தும் போராடுகின்றனர் என்பதை சேரிப்புறப் பின்புலத்தில் அடித்தட்டு மக்களின் ஏக்கங்களாகவும், நிராசைகளாகவும், போராட்டங்களாகவும் அழகியலுணர்வுடன் நெறியாளர் சித்திரித்திருக்கிறார். வேறு பிற மொழித் திரைப்படங்களால் அருட்டுணர்வு பெறுவதோ அல்லது குறிப்பாக 'சினிமா பாரடைஸோ' என்ற திரைப் படத்திலிருந்து சத்தான சில கூறுகளை அல்லது சாராம்சங்களை உள்வாங்கி திரைகதையமைப்பதோ குற்றமல்ல. திரைமொழியின் கூறுகளில் அவற்றைக் கலைத் திறனுடன் சுவீகரித்துக் கொண்டு வெளிப்படுத்துவதே முக்கியமானது.



இத்தகைய பல மாறுதலான புதிய அம்சங்கள் தலை காட்டியிருப்பினும், இடை வேளைக்குப் பின்னர் தமிழ்த் திரைப் படங்களின் பழகிய தேய்ந்த தடத்திலேயே வெயில் பயணிக்க ஆரம்பிக்கின்றது. மிகையுணர்ச்சிகள், அதீதங்கள் போன்றன வந்து விடுகின்றன. குறிப்பாக, சகோதரிகள் உட்பட வெறுத்தொதுக்கும் தகப்பன் தொடர்பான காட்சிகளிலிருந்து இறுதியில் கதாநாயகன் குடும்பத்திற்காக முழு அளவில் தியாகம் செய்வது ஈறாக பல காட்சிப்படுத்தல்கள் மிகையுணர்ச்சி சித்திரிப்புகள் நிரம்பியவை. இந்த வகையில் நெறியாளர் தனது சம நிலையினையும், கட்டுப்பாட்டினையும் இழந்துபோய் விடுவது சினிமாவை விழிப்புணர்வுமிக்கதொரு மென்மையான கலைச்சாதனம் என்ற உயர் தளத்திலிருந்து முற்றாகவே கீழிறக்கி விடுகிறது.

## நஸ்ரீனுக்கு இந்தியாவில் நிரந்தர வதிவிட அந்தஸ்து



1994ஆம் ஆண்டில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கொலை அச்சுறுத்தல்கள் காரணமாக தனது சொந்தநாடான பங்களாதேஷை விட்டு வெளியேறிய சர்ச்சைக்குரிய எழுத்தாளரான தஸ்லிமா நஸ்ரின் அண்மையில் இந்திய அரசாங்கத்திடம் இந்தியக் குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட உரிமை வழங்குமாறு கோரியுள்ளார். நஸ்ரினுக்குக் கடந்த வருடம் ஆறு மாதகால வதிவிட அனுமதி வழங்கப்பட்டது.

இந்தியா தொடர்பில் விசேடமாக மேற்கு வங்காளம் குறித்து 'மக்களுடைய அன்பு கிடைக்கப் பெற்று உண்மையிலேயே நான் எங்களுடைய வீட்டில் வாழுவதைப் போலவே இங்கு உணர்கிறேன்' என நஸ்ரின் தனது அளவு கடந்த மகிழ்ச்சியையும், திருப்தியையும் தெரிவித்தார்.

பங்களாதேஷை விட்டு நெருக்கடியானதொரு சூழ்நிலையில் வெளியேறிய எழுத்தாளரான தஸ்லிமா நஸ்ரின் படைப்புகள் அவருடைய நாட்டில் இப்போதும் தடைக்குட்பட்ட நிலையிலேயே உள்ளன. 'எனக்குரிய உரிமைகள் பறிக்கப்பட்டதால், பல இழப்புக்களுக்குள்ளானேன். எனது பெற்றோர் காலமாகி விட்டனர். இப்போது எனக்கு இரத்த உரித்துடைய மிக நெருக்கமானவர்கள் என்று கூறிக் கொள்ள அங்கு எவருமில்லை' எனத் தனது அதிருப்தியையும், கவலையையும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டவர்கள் பதிவுக் காரியாலயத்திற்கு மனுச் செய்த நஸ்ரின் விண்ணப்பத்தைப் புகழ்பெற்ற எழுத்தாளர்களான மகாஸ்வேதாதேவி, சுனில் கங்காபத்தே, டிபையந்த பலிற் மற்றும் பொருளியல் நிபுணரான அம்லான் டற்ற ஆகியோர் வரவேற்று ஆதரித்துள்ளனர்.

பங்களாதேஷிலுள்ள கொந்தளிப்பானதொரு சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டு இந்திய அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் நஸ்ரினை நிரந்தரமாக இந்தியாவில் தங்க வைக்கும் வகையில் அவருக்கு நிரந்தர வதிவிட அந்தஸ்தையேனும் வழங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரட்ணாவின் கனவும் நனவும்



இளையதம்பி இரத்தினசபாபதி
1938 - 2006

சேரன்

சுதந்திரனின் வேலை செய்கிற போது, உன்னுடைய அப்பாவை எனக்கு நன்றாகத் தெரியும். இப்போது உன்னோடு தண்ணி அடிக்கிறேன். காலம் எவ்வளவு துரிதமாக மாறிவிட்டது என்று சொல்லியபடியே என்னைக் கட்டித் தழுவுகிறார் ரட்னா. அதுதான் முதல் சந்திப்பு. அப்போது ஈழப்புரட்சி அமைப்பில் (ஈரோஸ்) எத்தகைய நிர்வாகப் பொறுப்பிலும் அவர் இருந்ததாக எனக்கு நினைவில்லை. பழைய பங்களிப்பு, நிறுவனர் என்ற மதிப்பு, இணக்கமும் நெகிழ்வும் கூடிய காரணங்களால் இயக்க வட்டத்தில் ரட்னாவுக்கு அப்போதும் ஒரு வரவேற்பு இருந்தது.

தாடி நரைத்திருந்த புரட்சியாளர்களைப் பார்த்தமை அப்போது எனக்குப் புதுமையாக இருந்தது. சுதந்திரனில் ரட்னா எழுதியிருந்த எந்தச் சிறுகதையையும் வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. எனினும் அவை நகைப்புக்கிடமானவை அல்ல, நகைப்பையும் தரக்கூடியவை என்று நண்பர் ஒருவர் பின்னர் குறிப்பிட்டார்.

கேலிக்கும் கிண்டலுக்கும் நகைச்சுவை மிகுந்த கதைப்புக்கும் அவர் ஒரு நல்ல தோழர் என்பது அறிந்ததே.

**'இயக்க விரோதங்கள் திம்புப் பேச்சுவார்த்தைகளின் பின்பு உருவாக்கப்பட்ட கசப்பான அனுபவங்களாகும். திம்புப் பேச்சு வார்த்தையின் போது நான்கு அம்சங்களில் இணக்கம் பெற்ற அனைத்து இயக்கங்களும் உறுதியாக நின்று மாநாட்டில் கலந்து கொண்டிருந்தன. இந்த ஒற்றுமையானது புறச்சக்திகளின் நலன்களுக்கு குந்தகமாகத் தோன்றியதன் பின்பே இயக்க மோதல்கள் தூண்டி விடப்பட்டிருந்தன.'**

ஈழப்புரட்சி அமைப்பு என்பதின் ஆங்கில முதலெழுத்து குறுக்கத்துக்கான (acronym) விளக்கத்தை எப்படித் தருவது என்பது மெல்லிய தொரு விவாதமாக இருந்தது. Eelam Revolutionary Organisation என்பதா Organisers என்பதா என்ற கேள்வியும் எழுந்தது. ஈழப்புரட்சி அமைப்பு, ஈழ மாணவர் அமைப்பு, ஈழ மீனவர் அமைப்பு, ஈழ மகளிர் அமைப்புப் போன்ற பல அமைப்புகளின் கூட்டிணைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைவதால் Eelam Revolutionary Organisations என்ற கருத்தும் இருந்தது. லண்டனில் மாணவர்களாக இருந்தபோது ஒரு குழுவானமையால் Eelam Revolutionary Organisation of Students என்றும் கருதப்பட்டது. ஆகவே EROS என்பதன் விளக்கமாக இவை அனைத்துமே அமையக் கூடும். எனினும் முதலெழுத்துக் குறுக்கம் சரியாகப் பொருந்தி வரவில்லை என்ற ஆதங்கம் அப்போது பலரிடம் இருந்தமையால் ஏனிந்தச் சிக்கல் என்று இரத்தினசபாபதி அவர்களிடம் கேட்டேன். இளையதம்பி இரத்தினசபாபதி அண்ட் அதர்ஸ் (Elayathamby Ratnasabapathy and Others) என்பதன் சுருக்கம் தான் ஈரோஸ் என்று பகிடியாகச் சொன்னார்.

சிறிய வயதிலேயே தமிழரசுக் கட்சி அரசியலில் ஆர்வமாக ஈடுபட்டிருந்தாலும் லண்டன் வாழ்வும் அனுபவங்களும் பிறநாட்டு போராட்ட விடுதலை அமைப்புகள், போராளிகளுடனான நட்பும் தோழமையும் ரட்னாவிடம் பலத்த பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தன. வர்க்க விடுதலைப் போராட்டமும் தேசிய இன விடுதலைப் போராட்டமும் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைய முடியும். அத்தகைய ஒன்றிணைப்பின் "தர்க்கிகம்" விளைவாக தேசிய விடுதலைப் போராட்டம் (National liberation struggle) மேலெழ முடியும் என்று ரட்னா கருதிச் செயல்பட்டார். இந்தக் கருத்தியல் அடித்தளத்துக்கும் செயல்பாட்டுக்கும் லண்டன் வாழ்வு உதவி புரிந்திருந்தாலும் போராட்டத்தளம் ஈழத்திலேயே இருந்தது. எனவே தவிர்க்க முடியாமல் ஈழ அனுபவங்களுக்கும் அவர் செல்ல வேண்டியிருந்தது.

1970களில் தேசிய விடுதலைப் போராட்டத்துக்குக் கருத்தியல் வளம் சேர்த்ததில் ரட்னாவுக்கு ஒரு பெரும் பங்கு இருந்தது. பிற்பாடு கருத்தியல் வளத்துக்கு அப்பால் படைத்துறைப் பயிற்சி வளங்களையும் அவர் கொண்டு வந்து சேர்த்தார். 1971லேயே லெபனான், சிரியா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு இயங்கி வந்த பலஸ்தீன விடுதலை அமைப்புகளுடன் தொடர்பாக இருந்தவர்



> ஈழதேசியம் என்பது மதச் சார்பற்றது எனவும் ஈழம் என்று வரையறை செய்யப்பட்ட எல்லைகளுக்குள் வாழும் அனைவருமே ஈழவர் தான் என்ற கருத்து நிலையையும் அவர் முன்வைத்தார். மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகிய இரு பிரிவினரும் ஈழப்போராட்டத்தின் முக்கியமான சக்திகளாக மாற வேண்டும் என்பதையும் அவர்களது சமத்துவத்திலும் இணக்கத்திலும் தான் விடுதலைப் போராட்டத்தின் தார்மீக வெற்றி தங்கியிருக்கிறது என்பதையும் ரட்னா வலியுறுத்தினார்.

அவர். ஈழப்புரட்சி அமைப்பும் வேறு அமைப்புகள் சிலவும் கூட பலஸ்தீனப் போராளிகளுடன் இணைந்து பயிற்சி பெறுவதற்கு ரட்னா வகித்துள்ள பாத்திரம் நமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஏற்கெனவே அழுத்தமாகப் பதியப்பட்டு விட்டாலும் இத்தகைய சர்வதேச விடுதலை இயக்கங்களுடனான தொடர்புகளும் உறவுகளும் அரசியல் தளத்தில் நமக்கு வழங்கக்கூடிய கருத்தாதரவு (solidarity) என்பதன் முக்கியத்துவம் பெரிதும் வலியுறுத்தப்படாமை ஒரு பெரிய குறைபாடாகும். ஒரு காலத்தில் ஈழ தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக ஜேர்மனி, ஒல்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் அந்நாட்டவர் சிலர், அந்நாட்டு இடதுசாரி அமைப்பினர், மாணவர் என ஒரு ஆதரவுத்தளம் இருந்தது. இப்போது அது பலவீனமாக இருக்கிறது. (புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்த இடத்தை வேறு வடிவங்களிலும் வேறு தளங்களிலும் வேறு பரிமாணங்களிலும் நிரப்பி இருக்கிறார்கள். ஆனாலும் பல்வேறு நாடுகளின் கருத்தாதரவைப் பெற்றுக் கொள்வது அவர்களால் சாத்தியமற்றுப் போய் விட்டது).

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவராக இருந்த அபு ஜிகாத், சிம்பாவே போராளி இயக்கங்களின் தலைவர்கள் எனப் பலவகையான ஆதரவு, நட்பு வலைகளையும் வளையத்தையும் ரட்னா உருவாக்கி வைத்திருந்தார். தளத்தில் போராட்டம் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு சர்வதேசக் கருத்தாதரவும் ஒத்த இலட்சியங்கள் உடைய பிற நாட்டுப் போராளி அமைப்புகளின் ஆதரவும் முக்கியம் என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார்.

ஈழதேசியம் என்பது மதச் சார்பற்றது எனவும் ஈழம் என்று வரையறை செய்யப்பட்ட எல்லைகளுக்குள் வாழும் அனைவருமே ஈழவர் தான் என்ற கருத்து நிலையையும் அவர் முன் வைத்தார். மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகிய இரு பிரிவினரும் ஈழப்போராட்டத்தின் முக்கியமான சக்திகளாக மாற வேண்டும் என்பதையும் அவர்களது சமத்துவத்திலும் இணக்கத்திலும் தான் விடுதலைப் போராட்டத்தின் தார்மீக வெற்றி தங்கியிருக்கிறது என்பதையும் ரட்னா வலியுறுத்தினார்.

1984இல் ஈரோஸை நிறுவிய பிற்பாடு ரட்னா வெளியிட்ட அறிக்கையில் முக்கியமாக இடம் பெற்ற ஒரு அம்சம் பின்வருமாறு அமைகிறது. "மொழிவாரி இன அடிப்படையில் அணுகப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது தமிழ் பேசும் மக்களின் ஒருங்கமைக்கப்பட்ட பாட்டாளிகளான மலையக மக்களையும், சிங்கள இனத்தின் நில அபகரிப்பால் தமது உடைமைகளை இழந்து வரும் கிழக்கு மாகாண மக்களையும் வடபகுதியல் வெளிப்பட்டு நிற்கும் புத்திஜீவிகளின் தீவிர எதிர்ப்புத் தன்மையையும் ஒருங்கிணைத்து இலங்கைத் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

இந்தப்பிரகடனம் ஆரம்ப கால ஈழப் போராட்டத்தின் அரசியல், வர்க்க நிலைமையை கோடிட்டுக் காட்டுகிறது எனலாம். திம்புப் பிரகடனங்களின் போது மலையகத் தமிழர்களின் உரிமைகள் பற்றிய ஏற்பாடுகளை நான்காவது பிரகடனமாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார். சிங்களப் பேரினவாத அரசு ஒடுக்குமுறை, தமிழர்கள் முஸ்லிம்கள் அனைவரையும் ஒருமித்த சக்தியாக மாற்றிவிடும் என்று அவர் கருதினார். அது அவரது கனவும்கூட

ஈழப்புரட்சி அமைப்புத் தொடர்பான அவரது இலட்சியங்களும் கனவும் நனவாக முடியவில்லை என்பதற்கு பலவகையான காரணங்களை அவரது தோழர்களும் அரசியல் விமர்சகர்களும் முன்வைக்கக் கூடும். ஈரோஸ் என்னும் கிரேக்கச் சொல்லுக்கு அதனுடைய தொன்ம அர்த்தமான காதலும் மோகமும் கிளர்ச்சியும் என்பதாக அவர் பயன்படுத்தாமல், பிணைப்பு சக்தி அல்லது இணைப்பு விசை என்ற தொனியிலேயே அவர் பயன்படுத்தினார். எனினும் ஒரு புரட்சிகரமான அமைப்பு வெற்றிகரமாக இயங்குவதற்கு வேண்டிய அமைப்பு நிறுவன கட்டமைப்புப் பலத்தையும் விசையையும் அவரால் தரமுடியாமல் போய் விட்டது. கனவும் கற்பனையும் இலட்சியப் படிமமும் மட்டும் தான் அவரது நினைவாக எஞ்சி நிற்கின்றன.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஈழவர் ஜனநாயக முன்னணி சார்பில் வெற்றி பெற்ற 13 பேர்களுள் ரட்னாவும் ஒருவர். ரட்னாவின் இந்தப் பாராளுமன்ற தலையீடு ஒரு இடைப் பிறவரலாகவே பார்க்கப்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களாக 21.07.1989 அன்று அவர் ஆற்றிய உரையில் பல முக்கியமான விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார். அதில் மிக முக்கியமானதாகவும் இன்றைய சூழ்நிலைக்குக் கூடப் பொருத்தமானதாகவும் நான் கருதுகிற அம்சம் பின்வருமாறு: "வடக்குக் கிழக்கில் தற்போது ஆயுதக் களைவு என்பது இராணுவ வன்முறையாகவும், மாகாண சபை என்பது பழிவாங்கும் சபையாகவும் வடக்கு கிழக்குப் பாதுகாப்பு ஏற்பாடு என்பது இளைஞர்களைக் கடத்திச் செல்வது என்பதாகவும் உருமாறிப் போயுள்ளன. வடக்குக் கிழக்கில் விடுதலை இயக்கங்களுக்கிடையே போட்டா போட்டி நிலவுகின்ற அவ்வேளையில் இதற்குப் பரிகாரம் காணாமல் அமைதியைத் தோற்றுவிப்பது

ரட்னாவின் வாழ்வில் இருந்து நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டியவை அநேகம். அவருடைய முகம் திருப்பித் திருப்பி மனதில் எழுகிறபோது அடூர் கோபாலகிருஷ்ணனின் முகமுகம் என்கிற திரைப்படத்தில் நாயகனாக இடம்பெறும் பழைய போராளியின் படிமம் நினைவுக்கு வருவதையும் தவிர்க்க முடியவில்லை.



என்பது சாத்தியமற்றதாகும். இந்த வகை இயக்க விரோதங்கள் திம்புப் பேச்சுவார்த்தைகளின் பின்பு உருவாக்கப்பட்ட கசப்பான அனுபவங்களாகும். திம்புப் பேச்சுவார்த்தையின் போது நான்கு அம்சங்களில் இணக்கம் பெற்ற அனைத்து இயக்கங்களும் உறுதியாக நின்று மாநாட்டில் கலந்து கொண்டிருந்தன. இந்த ஒற்றுமையானது புறச்சக்திகளின் நலன்களுக்கு குந்தகமாகத் தோன்றியதன் பின்பே இயக்க மோதல்கள் தூண்டி விடப்பட்டிருந்தன."


எத்தகைய விமர்சனங்களையும் புன் சிரிப்போடும் தனக்கேயுரிய எள்ளலோடும் எதிர்கொள்வது ரட்னாவுக்கு கைவந்ததொரு அற்புத மான கலை. ஈழப்புரட்சி அமைப்பின் பலம், பலவீனம், கருத்தியல் சிக்கல்கள், உடைவு, சிதைவு போன்ற அனைத்துக்கும் ரட்னாவிடம் பதில்களை எதிர்பார்க்க முடியாது. நமது சமூக, அரசியல், இயக்க வரலாற்றை பற்றற்ற நிலையில் இருந்து யாராவது எழுத முன்வந்தால் அல்லது எழுத முடிந்தால் பல கேள்விகளுக்கான பதில்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

அன்டன் பாலசிங்கம் காலமாவதற்கு சில நாட்கள் முன்பாக ரட்னா காலமானார். அவருடைய சாவு வீட்டுக்கு ஆயிரக் கணக்கில் மக்கள் திரளவில்லை. அதற்கான சாத்தியமும் தேவையும் அமைப்பும்கூட அவருக்கு இருக்கவில்லை. எனினும் உயர்ந்த மனிதர்களை அவர்களுடைய பலங்களோடும் பலவீனங்களோடும் சேர்த்தே நேசிக்க வேண்டும் என்பது விடுதலையின் ஒரு பாடமாகும்.

சேகுவரா சொல்லியது போல காதலை நேசிப்பவர்கள் தான் உயர்ந்த விடுதலைப் போராளிகளாக இருக்க முடியும். ரட்னாவின் வாழ்வில் இருந்து நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டியவை அநேகம். அவருடைய முகம் திருப்பித் திருப்பி மனதில் எழுகிறபோது அடூர் கோபாலகிருஷ்ணனின் முகமுகம் என்கிற திரைப்படத்தில் நாயகனாக இடம்பெறும் பழைய போராளியின் படிமம் நினைவுக்கு வருவதையும் தவிர்க்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்து இலக்கியப் பரப்பில் சு.வியின் தடங்கள்

செ.யோகராசா

சு. வில்வரத்தினத்தைப் பற்றி நினைவு கூர வாய்ப்புக் கிடைத்துள்ள இவ்வேளையில் தனிப்பட்ட உறவு சார்ந்த நினைவுத் தடங்களை மீட்டுப் பார்ப்பதை விட அன்னாரது நிலையான தடங்கள் பற்றிக் குறிப்பாக ஈழத்து இலக்கியஞ் சார்ந்து சிந்தித்துப் பார்ப்பதே பொருத்தமானது எனலாம்.

சு.வி ஈழத்து இலக்கியப் பரப்பிலே பல்துறைகளிலும் கால் பதித்திருந்தவராயினும் அவற்றுள் பலவும் பரவலாக அறியப்படாதுள்ளன. பதிலாக அன்னார் நின்றும், இருந்தும், கிடந்தும் என்றும் எப்போதும் செயற்பட்டுக் கொண்டிருந்த கவிதை முயற்சி ஊடாகவே நன்கறியப்பட்டிருந் தார்.

1970 தொடக்கம் சு.வி கவிதை எழுதுகின்ற முயற்சியில் ஈடுபட்டார். ஆரம்ப காலத்தில் ஆன்மீகம், சமூகம், அரசியல் இலக்கியம் (குறிப்பாக 'இலக்கியப் போலிகள்') பற்றி எனப்பல துறை சார்ந்த கவிதைகள் எழுதியிருந்தாலும், வெளியுலகில் நன்கறியப் படக் காரணமாக விருந்ததும், பிற் காலத்தில் அதிகமாக எழுதியதும் அரசியல் சார்பான கவிதைகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு.வியின் அரசியல் சார்பான கவிதைகளின் அடிநாதமாக ஒலித்தவை பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் விளைவுகளுமே. இவ்விதத்தில் முதற் தொகுப்பான "அகங்களும் முகங்களும்" (1985) தொகுப்பிலுள்ளவற்றைவிட பிற்காலத் தொகுப்புக்கள் முக்கியமானவை. ஏனெனில் அவை ஆவணப் பதிவுகளாகத் திகழ்பவை.

மேற்கூறியவாறான தொகுப்புகளுள் "காற்று வெளிக் கிராமம்" (1995, மார்ச் தீவுப் பகுதிகள் (1991இல் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் அத்தீவுப்பகுதிக் கிராமங்களின் சிதைவு நிலையினை - வெறுமை கொண்ட வாழ்வை - பதிவு செய்துள்ளது. தீவுப் பகுதிகள் சிதைக்கப்படுவதற்கு முன்னர் இடப்பெயர்வுக்குள்ளான மக்களின் துயரங்களையும் பிரிந்த ஏக்கங்களையும் பிரதிபலிப்பது "காலத்துயர்" (1995 டிசம்பர். தமிழ் மண் பற்றியதாக, மண்ணின் பெயர்வு பற்றியதாகவுள்ளது "நெற்றி மண்" (2000). இத்தொகுப்பு ஒவ்வொன்றும் தனிக் கவிதைகளைக் கொண்டிருந்தாலும் இன்னொரு நோக்கில் பார்க்கும் பொழுது தத்தம் அளவில் முழுமை எய்திய குறுங் காவியத்தன்மை பெற்றுள்ளனவாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் அவலங்களையும், மண்ணின் சிதைவுகளையும் கவிதையூடே ஆவணப்படுத்துகின்ற முதல் முயற்சிகள் இவைதாம். (நாமோ, நாமில்லையோ புனைகதைத் துறையிலே இத்தகைய முயற்சிகள் ஓரளவு இடம் பெற்றிருக்கின்றன)

ஆயினும் இவை வெறுமனே ஆவணப்படுத்தல் முயற்சி மட்டுந்தானா? அப்படியன்று. "சு.வி"யே சரியாகக் குறிப்பிட்டுள்ளது போன்று, கலா ரீதியான முயற்சிகளாக - மண்ணின் யதார்த்தச் சித்திரிப்புகளாக - மண்ணின் ஆத்மார்த்தக் குரலாக ஒலிக்கின்றன என்பதில் தவறில்லை. இதற்கானதொரு உச்ச உதாரணமாக பின்வரும் கவிதையை அல்லது கவிதைப் பகுதியை இவ்விடத்தில் எடுத்துக் காட்டுவது பொருத்தமானது:

*"முற்றுகை*
*முன்னேறிப் பாய்தல்*
*காற்றில் எரி கற்களென*
*சீறிவரும் வேட்டுகள்*
*குண்டு வீச்சுகள்*
*பீரங்கிகளின் பிளந்த வாயூடே*
*வந்து விழுகின்றன எறிகணைகள்*
*ஐயோ*
*ஏணைக்குள் குழந்தை*
*இடிபடுவன மலைகள்*
*பொடிபடுவன சுவர்கள்*
*முறிபடுவன பனைகள்*
*நுங்கின் குலை*
*தெங்கின் குலை*
*எங்கும் தெறித்தோட*
*இடையுருள்வன*
*மனிதத்தலை*
*தறிகெட்டும் மிதிபட்டும் நெரிபட்டும்*
*தப்பியோடுகிற மனிதரிடை*
*யார் உறவு? யார் சுற்றம்?*
*அவரவர்க்கு தத்தம்முயிர்*
*ஐயோ ஏணைக்குள் குழந்தை*
*சட்டியெடு பானையெடு*
*பெட்டியெடு பேழையெடு*
*நின்றடுக்குப் பண்ணுதற்குள்*
*பின் வளவில் எறிகணைகள்*
*"அம்மா ஏணைக்கை பிள்ளை" யென*
*கூவிக் கொண்டோடுகிறாள்*
*தனக்கும் முன்தாவி விட்டாள்*
*தன் தாயென்றறியாப் பேதை*
*அவரவர்க்குத் தத்தம்முயிர்*
*தாயே உனக்குமாடி*
*தெரு நீளமெங்கும் இழுபடலையோடி*
*குருதி கொப்பளிக்கும் தொப்பூழ் கொடி*
*ஐயோ ஏணைக்குள் குழந்தை*
*அகதி முகாம்*
*உச்சியில் இடிக்கிறது தலைவாசல்*
*தாய் விரிக்கிற கையிரண்டில்*
*தவழ்கிறது வெறுமை.*
*விறைத்த பார்வையில்*
*மின்னலாயிரம்.*
*வெட்டு நொடிக்குள் புரிகிறது யாவும்*
*தாயின் முடிபற்றி*
*தலையோடு தலை மோதுகிறாள்.*
*"பாவியடி நான் பாவியடி"*
*மாரில் அறைகின்றாள்*
*போய்ச் சுவரில் மொத்துகிறாள்*
*பொறி கலங்கும் கபாலத்துள்*
*விகாரித்தழும் குழந்தை முகம்.*
*பிரக்ஞையற்று வீழ்கின்றாள்.*
*பிள்ளையினை யார் மீட்பார்?*
*ஐயோ*
*ஏணைக்குள் குழந்தை"*

**சு.வியின் அரசியல் சார்பான கவிதைகளின் அடிநாதமாக ஒலித்தவை பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் விளைவுகளுமே.**

அடுத்த விடயத்திற்குச் செல்வதற்கிடையில் ஒன்று கூற வேண்டும். "சு.வி" தமிழ்த் தேசிய உணர்ச்சி மிக்கவராயினும் -விடுதலைப் போராட்டத்தை நாவலிக்க வரவேற்றவராயினும் - குறுகிய வட்டத்துள் தம்மை முடக்கிக் கொள்ளாமல் போராட்ட நடைமுறைகள் சிலவற்றை அவ்வப்போது விமர்சித்து வந்தவர். இவ்விதத்தில் குறிப்பாக யாழ்ப்பாண முஸ்லிம்களின் வெளியேற்றம் குறித்தும் மட்டக்களப்பில் ஏற்பட்ட (1991) தமிழ் - முஸ்லிம் கலவரம் குறித்தும் அவரெழுதிய கவிதைகள் கவனத்திற்குரியனவாகின்றன.

மீண்டும் "சு.வி"யின் கவிதைகள் குறித்துச் சிந்திப்போம். ஏறத்தாழ, "சு.வி" கவிதையுலகினுட் பிரவேசித்த காலத்திலேயே ஈழத்துக் கவிதையின் பிரதான போக்காக சமகால அரசியல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைப்புறத் தொடங்கி விட்டது. அன்று தொடக்கம் இன்று வரை இத்தகைய போக்கை முதன்மைப் படுத்தி ஈழத்துக் கவிஞர்கள் பலர் கவிதையெழுதத் தொடங்கி விட்டாலும், அவர்களுள் இரு கவிஞர்கள் முன்னுதாரணமற்ற விதத்தில் புதுமைப் பண்பு கொண்ட கவிதை எழுதி வருகின்றனர். இவர்களுள் "சு.வி"யும் ஒருவராகின்றார். (மற்றொருவர் சோலைக்கிளி).

"சு.வி"யின் புதுமைப் பண்புகளிலொன்று ஏறத்தாழ 2000 ஆண்டு காலத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தை சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், தேவார, திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், தனிப் பாடல்கள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள், வாய்மொழிப் பாடல்கள் முதலானவற்றைப் பயன்படுத்துவதாகும். அதாவது அவற்றின் பாடலடிகளை மேற்கோளாகவோ, பின்புலமாகவோ, படிமங்களாகவோ, குறியீடு களாகவோ, உருவகங்களாகவோ, உவமைகளாகவோ பயன்படுத்துவதாகும். சிறந்த எடுத்துக் காட்டாக யாழ் நூலகம் எரிக்கப்பட்டதை நினைவு கூரும் விதத்தில் எழுந்த கவிதையொன்றினைக் குறிப்பிடலாம். தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தின் தொட்டிலாக யாழ் நூலகத்தை உருவகப் படுத்தும் அக்கவிதையில் தமிழின் ஆதிக் குரலை ஆங்காங்கு கேட்க முடிகின்றமை குறிப்பிடத் தக்கது. சமகால இடப் பெயர்வு களைக் குறித்தெழுந்த "நிலவன் எதிரொலி" என்ற கவிதையும் அத்தகையது தான்!

"சு.வி"யின் மேற்குறித்தவாறான கவிதையாக்க முறைமைக்குக் காரணமுண்டு. அவ்வழியில் பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்களைப் பயன்படுத்துவதனூடாக வாசகர் தமிழின் கவிதைப் பாரம்பரிய சட்டங்களைத் தரிசனம் பண்ணவும், வெவ்வேறுபட்ட உணர்ச்சித் தளங்களின் அனுபவத்திற் குட்படவும் "சு.வி"யின் கவிதை வேரோட்ட வனத்தின் புதிய முகத்தைக் காணவும் வாய்ப்பேற்படுகின்றது.



'சு.வி'யின் புதுமைப் பண்புகளி லொன்று ஏறத்தாழ 2000 ஆண்டு காலத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தை சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், தேவார, திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், தனிப் பாடல்கள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள், வாய்மொழிப் பாடல்கள் முதலானவற்றைப் பயன் படுத்துவதாகும்.

மேற்குறித்த பின்னணியில் "சு.வி" தனது கவிதை பற்றி தானே இவ்வாறு எடுத்துரைத் துள்ளமையும் கவனத்திற் குரியதாகிறது. "தமிழக விமர்சகர் இந்திரன் நுண்கலை இயக்கத்தின் ஊடே தேடுகின்ற தமிழ் அழகியல் என்னும் பார்வை. எனது கவிதையின் ஊடே தன் முகம் காட்டுகிறது என்பது எனது அபிப்பிராயம். "சு.வி"யின் அபிப்பிராயம் ஆழமான ஆய்வின் முடிவிலேயே உறுதிப்படுமாயினும் இப்போது கூட முற்றுமுழுதாக நிராகரித்து விடக்கூடியதன்று!

இவ்விடத்தில் "சு.வி"யின் கவிதை வளத்தை இலகுவாக இனங் காண்பதற்கு உதவுவது போல் அமைந்துள்ள அவர் கவிதைகளினூடாக வெளிப்படுகின்ற புதிய சொற்கள், சொற் றொடர்கள் நவீன தமிழ்க் கவிதைக்குத் தந்துள்ளவர்கள் அரிதென்றே கூறத் தோன்றகின்றது. முதல் வாசிப்பின் போது வெளிப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் சிலவற்றை இவ் வேளை தருகின்றேன்: காலத்துயர், காலப் புற்று, உறவென்னும் ஒளிக் கயிறு, கிராம தேவதா, உயிர்த்துவம், ஒளிக்கனி, தளிரீ, மூன்றாம் பிறைநகை, சிறுவம், உயிர்த் தண்ணி, பொட்டு மேகம், காலத்தின் உதடுகள், ஒளி விரல்கள், இருளின் கூச்சல், புன்னகையின் சுடர், பீதியின் காடு, ஆலைக்கனல், மொட்டைக் கனவு, குருதிக்காடு, அசோகவனத்துயர், அசோகவனத் தவம், சருகுதிர்த்த நினைவுகள், அந்தரத்தில் தொங்கும் அவலங்கள், உயிர்த்தளம்.

சு.வியின் கவிதை வெளிப்பாட்டு முறையின் மற்றொரு தனித்துவம், ஆத்மார்த்தத் தன்மையாகும். ஆத்மார்த்தம் என்கிறபோது அது சமயம் அல்லது ஆன்மீகத்துடன் தொடர்புபட்டதொன்றன்று. அது, கவிதைப் பொருள் எதுவாயினும் கவிஞனும், பொருளும், உணர்ச்சியும் ஒருங்கே கலந்து விடுகின்ற தன்மையாகும். பிரவாகம் என்னும் படியாக, கவிதைப் பாய்ச்சல் நிகழ்வதாகும். இத்தியாதி தன்மை செம்மையாக வெளிப் படுமாறு கவிதையாக்க முயற்சியில் ஈடுபடும் கவிஞர்கள் அபூர்வமாகவே உள்ளனர். இத்தகையோரும் பல்வேறு அனுபவங்களைப் பல்வேறு தளங்களில் வெளிப்படுத்து கின்றபோது ஒரே மாதிரியான வார்த்தைகளையே பயன்படுத்து கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், வெவ்வேறு தளத்திற்கேற்ப வெவ்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்துவது சு.வியின் சிறப்பாகின்றது. இவைபற்றி "அகங்களும் முகங்களும்" முன்னுரையிலே மு.பொன்னம்பலம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அவ்வடிப்படையில் "சு.வி"யின் பிற்காலக் கவிதைகளையும் அணுக முடிகின்றது. (விரிவஞ்சி இங்கு உதாரணங்கள் தரப்படவில்லை.)

கவிதைத்துறையிலே "சு.வி" பதித்த மேற்கூறியவாறான தடங்கள் ஒரு புறமாக, வெளியில் பரவலாக அறியப்படாத சு.வியின் வேறு துறைகள் சார்ந்த ஆற்றல்கள் ஆளுமைகளும் அனந்தம். சு.வியின் நாடகத்துறை நாட்டம் இத்தகையவற்றுள் ஒன்று. ஆரம்ப காலந்தொட்டு சு.விக்கு நாடகத் துறையில் ஈடுபாடு இருந்துள்ளதாயினும், திருமலைக்கு வந்த பின்னர் அது மேலும் சுடர் விடலாயிற்று. பாடசாலை மட்டங்களில் தமிழ்த்தின விழாப் போட்டி முதலானவற்றின் போது சு.வி நாடகத் தயாரிப்புகள் பலவற்றில் ஈடுபட்டுள்ளார். "தோப்பிழந்த கதை" என்ற அவரது நாடகமொன்று போட்டி இறுதித் தேர்விற்குச் சென்ற போது தடைசெய்யப் பட்டதுவரை அன்னாரது நாடகத் துறைச் செயற்பாடுகள் பரந்து பட்டவை!

அவ்வாறே தனிப்பட்ட கலை, இலக்கிய அமைப்புகள், பாடசாலைகளின் தேவை கருதி அதிகளவிலான கவிதை சிறுகதைப் பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை நடாத்தி வந்துள்ளார். (அத்தகையதொரு பயிற்சிப் பட்டறையின் அறுவடை "புதுத் துளிர்கள்" என்ற தொகுப்பாகவும் வெளிவந்துள்ளது). கவிதா நிகழ்வுகளும் நடாத்தப் பட்டுள்ளன. இறுதிக் காலத்தில் நீலாவணன் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு அவர் தயாரித்திருந்த கவிதா நிகழ்வு பலரது பாராட்டுதல்களையும் பெற்றிருந்தது. "கவிதை ஓவியம்" என்றொரு வித்தியாசமான - புதுமையான - நிகழ்ச்சியும் அவரால் அண்மைக்காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்வில் சு.வி எழுதியிருந்த பின்வரும் கவிதையடிகளுக்குத் தீட்டப்பட்ட ஓவியம் பரிசு பெற்றிருந்ததாக நினைவு:

"இருளடைந்தன வெளிச்ச வீடுகள்
பிணம் உருட்டுகிறது குருட்டுக் கடல்
திசை தெரியா வெளி
முகமறியா கரி இருள்
எங்கோ கடலின் மூலையில்
கண்மினுங்கும் படகு
வருகிறதா? போகிறதா?"

இத்தகைய செயற்பாடுகள் நானறிந்த வகையில் நிலாவெளி தொடக்கம் இறக்காமம் வரை நடைபெற்றுள்ளன.



இளந்தலைமுறையினர் உருவாக்கத்தில் மிகுந்த ஆர்வங் கொண்டிருந்த சு.வி, அவர்கள் மத்தியில் வாசிப்பு ஆர்வத்தை மூட்டுவதற்காக "வாசிகம்" என்றொரு வெளியீட்டையும் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தமை இவ்வேளை நினைவிற்கு வருகின்றது.

கு.ப.ரா தொடக்கம் பித்தன்வரை படைப்பாளர்கள் பலரும் இறுதி வேளைகளில் முடிவுறாத படைப்புகள் பலவற்றை விட்டுச் சென்றுள்ளமையை நாமறிவோம். இன்று சு.வியும் இத்தகையதோர் பரம்பரையில் இணைந்துள்ளார் எனலாம். சு.வியும் "சிலுவையில் அறையப்பட்ட தீவுகள்" (காவியம்), "விடுதலை ஆற்றுப்படை" ஆகிய இரு படைப்புகளை அவ்வாறே விட்டுச் சென்றதாக அறியப் படுகின்றது. அவற்றோடு சு.வி அவ்வப்போது எழுதிய இசைப் பாடல்கள், கட்டுரைகள், முன்னுரைகள் என்பனவும் நூலுருப் பெறுகின்ற போது தான் சு.வியை மேலும் புரிந்து கொள்ளவியலும்!

சு.வியின் நினைவுக் கூட்டங்கள் இலங்கையில் சிறந்த முறையில் நடைபெற்றனவோ இல்லையோ தமிழகத்தில் நடைபெற்றிருந்தமையை அண்மையில் அங்கு சென்ற போது அறிய முடிந்தது. சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் 15.12.2006 இல் நடைபெற்ற அஞ்சலிக் கூட்ட மொன்றிலே இன்குலாப், எஸ்.வி.ராஜதுரை, ஞானக் கூத்தன், அ.மார்க்ஸ், இந்திரன், மங்கை, கீதா, அரசு, ஜெயபாலன் முதலான பலரும் பங்குபற்றியுள்ளதாகத் தெரிகின்றது. அவ்வஞ்சலிக் கூட்ட அழைப்பிதழில் இடம்பெற்றுள்ள கவிதையின் பகுதியொன்றினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது:

"இன்னுமொரு வாசல்: இல்லை
இன்னும் ஒன்று: இல்லை
இன்னும் ஒன்றை எட்டிப் பார்க்கையில்
இழுத்துப் பறிக்கும் மூச்சின் ஓசை
வாசற்படியில்
வழுக்கிக் கிடந்தது ஓர் முதுமை
ஊன்றுகோல் கையெட்டாத் தொலைவிலே
இழுத்துப் பறிக்கும் மூச்சினிடையே
எதையோ சொல்ல வாயெடுக்கவும்
பறிபோயின சொற்கள்"

கோயம்புத்தூரில் காலச்சுவடு ஏற்பாட்டில் அண்மையில் நிகழ்ந்தேறிய "பாரதி 125, புதுமைப்பித்தன் 100, சு.ரா.75 உலக இலக்கியக் கருத்தரங்கின் போது சு.வியின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டிருந்தமையும் முக்கியமான விடயந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வறிவை இரு மொழிகளில் பரிவர்த்தனை செய்த இதழியலாளன்



**கே.எஸ்.சிவகுமாரன்**

ஈழத்து ஆங்கில இதழியல் துறையில், தமது நவீனத்துவம் சார்ந்த பாண்டித்தியத்துடன் ஆய்வு ரீதியாகச் சொற்சித்திரங்களை வரைந்த இளைஞன் (ஆக 51 வயதுதான்) ஒருவன் அண்மையில் தன் உடலைக் கெடுத்து (அளவுக்கு மீறிய மதுபாவனை) அநியாயமாக உயிர் நீத்தான். அவர் துணைவியார் மனோஹரிபிள்ளை. (இவர் தமிழ் அல்லது மலையாள பூர்வீகங் கொண்டவராய் இருக்கக் கூடும்). அந்நாட்களில் எம்.டி.குணசேன நிறுவனத்தினர் வெளியிட்ட Sun நாளிதழில் நிருபராய் மனோ பணிபுரிந்தவர்.

மறைந்த இளைஞனின் பெயர் அஜித் சமரநாயக்க. அஜித் சமரநாயக்க கண்டியில் கௌரவமான செல்வாக்கான குடும்பம் ஒன்றில் உதித்தவர். அங்குள்ள தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றான திரித்துவக் கல்லூரியில் (Trinity College) கல்வி கற்றவர். படிப்பில் ஒரு புலி. சிங்கள மொழியிலும். சிங்கள கலை, இலக்கியங்களிலும் இளவயதிலிருந்தே நிறைந்த பரிச்சயம் கொண்டு அவை பற்றி எல்லாம் நிறையச் சிங்களக் கலை ஏடுகளிலும், நாளிதழ்களின் வாரப் பதிப்புகளிலும் எழுதியிருக்கிறார். அவ்விதமான பங்களிப்புகள் ஒருபுறமிருக்க, அவரை அவருடைய ஆங்கில மொழி எழுத்துகள் மூலம் அறிந்து கொள்வோம்.

எழுத்துத் துறையில் ஆர்வம் இருந்ததனால், பல்கலைக்கழகப் படிப்பை நாடாமல் எழுத்தாளனாக மிளிர ஆசைப்பட்டான். இத்தனைக்கும் அவன் படிப்பில் மாத்திரமல்லாமல், கல்வி சார்ந்த ஏனைய மாணவர் ஆளுமை விருத்தி நடவடிக்கைகளிலும் முதன்மை நிலையில் இருந்தான். ஆங்கில மொழியில் அவன் வல்லமை கொண்டிருந்தான். கல்விக் கூட நாட்களிலேயே 20ஆம் நூற்றாண்டு உலக இலக்கியப் படைப்புகளையும் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு களையும் படித்துப் பல்நெறி சார்ந்த திறனாய்வாளனாகத் தன்னை வளர்த்துக் கொண்டான். திரித்துவக் கல்லூரியில் இவன் ஆங்கில ஆசான் சேக்ஸ்பியர் சுப்பிரமணியம். கண்டி மாவட்டத்தில் தலைசிறந்த ஆங்கில இலக்கியப் போதனாசிரியர் அவர். இவன் பட்டப்படிப்பை மேற்கொள்ளாது விட்டாலும், பட்டதாரிகளையும் மிஞ்சிய அறிவும், மொழி வளமும் கொண்டிருந்தான்.

இலங்கையில் ஆங்கில மொழியைச் சிறப்பாகப் பயன்படுத்தி அதனை ஆளுகை செய்த உரைநடை எழுத்தாளர்களுள் என்னை வசீகரித்தவர்கள்: ஜயந்த பத்மநாபா (இவர் ஒரு தமிழர்), ரெஜி சிறிவர்த்தன, மேவின் தி சில்வா, கொட்(f)ப்றி குணதிலக, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் (திரைப்பட நெறியாளர். திஸ்ஸ ஜயதிலக, அஜித் சமரநாய்க்க.

இவர்களுடைய எழுத்தின் மகிமை என்னவென்றால், இவர்கள் பயன்படுத்தும் எளிய பதங்கள், தர்க்க ரீதியாகச் சிந்தித்ததன் விளைவாகத் தெளிந்த கருத்தோட்டம், அதனைத் தக்க சொல் கொண்டு உரிய இடத்தில் பயன்படுத்தி வாசகரைத் தன்வயம் இழுத்துச் செல்லும் பாங்கு போன்றவையாம்.

இத்தகைய வளங்களைக் கொண்ட அஜித் சமரநாயக்க காலப்போக்கில் சமூக அறிவியலிலும், பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கூர்மையாக அவதானித்து விளங்கப்படுத்தும் ஆற்றலிலும் பயிற்சி பெற்று நிபுணத்துவ அறிக்கையாளனாக மாறினான். Ceylon Observer என்ற ஆங்கிலத் தினசரியில் (இது இப்பொழுது மடிந்து விட்டது) பாராளுமன்ற அலுவல்கள் நிருபராகச் சேர்ந்து கொண்டான். அந்நாட்களில் சிறந்த Lobby Correspondent ஆக பெயர் பெற்றான். இவன் ஆங்கில மொழியைக் கையாண்ட முறையும், யாவும் உள்ளடங்கிய விதத்தினாலான அறிக்கைகளும், செய்திக் குறிப்புகளும், இதழாசிரியர்களைப் பிரமிக்க வைத்தன. பயிற்சி நிலை நிருபராக இருந்த இவனை, ஆசிரியத் தலையங்கங்களை எழுதுமாறு இதழாசிரியர்கள் பணித்தனர். எந்த விசயத்தையும் பகுத்தாய்ந்து தனது நிறைவான பின்னணியறிவின் பகைப் புலத்தில் அருமையான ஆசிரியத் தலையங்கங்களை எழுதினான். புனை பெயர்களில் கலை இலக்கியப் பத்திகளை (Columns) எழுதினான்.

பாராளுமன்றத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பவைகளை எழுதும் நிருபராக பணியாற்றிக் கொண்டிருக்கையில், தனது வருங்காலத் துணைவியுடன் அறிமுகமாகி, காதல் வயப்பட்டு திருமணமுஞ் செய்து கொண்டான். 1970 வாக்கில் நான் இவனுடன் அறிமுகமானேன். அந்நாட்களில் - மேர்வின் தி சில்வா Daily News பத்திரிகையின் ஆசிரியராக இருந்த வேளையில் நான் நிறையப் பத்திக் கட்டுரைகளை அப் பத்திரிகையில் எழுதி வந்தேன். அஜித் Observer பத்திரிகையில் பணி புரிந்து கொண்டிருந்தான். அவன் வயதில் என்னைவிடப் 19 வயது இளையவனாயினும் அவனது ஆங்கில எழுத்தில் மயங்கியவனாக நானிருந்தேன். அதேபோன்று அவன் ஈழத்துத் தமிழ் இலக்கியம் தொடர்பாக ஆங்கிலத்தில் நான் எழுதியதைப் படித்து விட்டு என் மேல் மரியாதை கொண்டிருந்தான். இருவரும் நண்பர்களாக (நெருங்கிய விதத்தில் அல்லாவிட்டாலும்) இருந்து வந்தோம்.

எப்படி நான் தமிழன் என்ற வகையில் என் வேர்களைப் புறந்தள்ளாது அவற்றில் காலூன்றித் தமிழார்வம்

இலங்கையில் ஆங்கில மொழியைச் சிறப்பாகப் பயன்படுத்தி அதனை ஆளுகை செய்த உரைநடை எழுத்தாளர்களுள் என்னை வசீகரித்தவர்கள்: ஜயந்த பத்மநாபா (இவர் ஒரு தமிழர்), ரெஜி சிறிவர்த்தன, மேர்வின் தி சில்வா, கொட்(ஃப்)றி குணதிலக, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் (திரைப்பட நெறியாளர், திஸ்ஸ ஜயதிலக, அஜித் சமரநாயக்க.

கொண்டவனாக இருந்தேனோ, அதுபோன்று அவனும் சிங்கள உணர்வு கொண்டிருந்தான். இருவருமே குறுகிய கலையுணர்சிப் பாங்கற்ற (Parochialism) விதத்தில் உலக நோக்குக் கொண்டிருந்தோம். இடதுசாரி அல்லது இடதுசாரி சார்ந்த இடைநிலைப் போக்கை (Left of Centre) அவன் கொண்டிருந்தான்.

மறைந்த அரசியல் தலைவர் அ.அமிர்தலிங்கம், அரசியல் இராணுவப் பகுப்பாய்வாளர் தருமரத்தினம் சிவராம், முன்னாள் பத்திரிகையாளரும் Saturday Review பத்திரிகையின் ஸ்தாபக இதழியலாளருமான எஸ்.சிவநாயகம், மறைந்த மலையக எழுத்துச் சிற்பி சி.வி. வேலுப்பிள்ளை போன்றவர்கள் பற்றி அற்புதமான கட்டுரைகளை இவன் எழுதியிருந்தான். என்னைப் பற்றியும் தனது கலை இலக்கியப் பத்திகளில் குறிப்பிட்டிருக்கிறான்.

இவன் எழுதிய கலை, இலக்கியப் பத்திகள் அனைத்துமே எனக்குப் பிடிக்கும். அவற்றுள்ளே திஸ்ஸ அபேசேகரா நெறிப்படுத்திய "விராகய"( மார்ட்டின் விக்ரமசிங்கவின் நாவலைத் தழுவியது) என்ற சிங்களப் படத்தின் திரைப்படத் திறனாய்வு, பேராசிரியர் விமல் திஸாநாயக்க எழுதிய. சிங்கள ஆய்வறிவாளர்கள் (Intellectuals - புத்திஜீவிகள் என்று கூறுவது தவறு) பற்றிய நூலின் திறனாய்வு ஆகியன எனக்குப் பிடித்தவை.

1983 ஜுலை இனப் படுகொலைக்குப் பின்னர், The Island ஸ்தாபக ஆசிரியர் விஜித யாப்பாவின் அழைப்பின் பேரில், Deputy Features Editar ஆகச் சேர்ந்து கொண்டேன்.

அப்பத்திரிகையில் விஜித யாப்பா, காமினி வீரக்கோன், அஜித் சமரநாயக்கா, பீட்டர் பாலசூரிய, எரிக் தந்தநாராயன், அன்டன் வீரசிங்ஹ போன்றவர்கள் பணிபுரிந்து வந்தனர். இவர்கள் எல்லோருமே என்னை ஏற்கெனவே அறிந்து வைத்திருந்தனர். ஆரம்பத்தில் Sunday Island வாரப் பத்திரிகையில் சிறப்பம்சச் சித்திரப் பக்கங்களுக்குப் பொறுப்பாக இருந்தேன். பின்னர் காமினி வீரக்கோன் The Island பத்திரிகையின் ஆசிரியராகப் பதவி ஏற்றதும் Daily Island க்கு மாற்றப்பட்டு Culture என்ற மகுடத்தில் வாராவாரம் ஒரு பக்கத்தில் எழுதியும், தயாரித்தும் வழங்கி வந்தேன். வாசகர் வாக்கெடுப்பில் அப்பக்கம் முதலிடத்தைப் பெற்றதை இங்கு குறிப்பிட வேண்டும்.

அஜித் சமரநாயக்க ஆசிரியர் தலையங்கங்கள் எழுதுவதுடன், அரசியல் கட்டுரைகளையும் எழுதி வந்தார். ஏற்கெனவே அறிமுகமாகிய நாம் நெருங்கிய விதத்தில் பழகாவிட்டாலும் ஒருவருக்கொருவர் மரியாதையுடன் பழகி வந்தோம்.

எனது கட்டுரைகள் அனைத்தும் மேற்பார்வைக்காக அஜித் சமராயக்கவிடம் கொடுக்கப்பட்டு வந்தது. அஜித் நேரடியாகவே எனது எழுத்துச் சிறப்புக்களையும் பலவீனங்களையும் அறிந்து கொண்டார். அவரது வழிகாட்டல்களில் நான் பயனடைந்தேன்.




டி.பி.எஸ். ஜெயராஜ், காத்ரி இஸ்மாயில், ராஜ்பால் அபேநாயக, ஹனா இப்ராஹிம், லஸந்த விக்கிரமதுங்க, பிரசாத் குணவர்த்தன போன்ற இதழியலாளர்களின் ஆரம்ப அரங்காக The Island பத்திரிகை இருந்து வந்தது. நிருபர்களாகப் பணி புரிந்த மேற்சொன்ன எழுத்தாளர்கள் அஜித்தின் ஆளுமைக்குள்ளும் வந்தனர்.

அஜித் மனிதாபிமானம் மிக்கவர். ஆழமாகச் சிந்திப்பவர், அருமையாக எழுதுபவர். பண்பாட்டு ஊற்றுக்களை மறக்காதவர். புத்துலகச் சிந்திப்பைப் புதுமை ததும்பும் ஆங்கிலத்தில் தருபவர். இவையே அவர் ஆளுமையாக இருந்து வந்தது.

The good die young (நல்லோர் இளமையில் இறப்பர்) என்பார்கள். அஜித் சமரநாயக்கவைப் பொறுத்தவரையில் இது நிரூபணமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓவியங்கள்: நிர்மலவாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered As a News Paper in Sri Lanka. Regi. No:W67879



லலித், காமினியின் பிரேமதாச பகைமையும்
மங்கள, சிறிபதியின் ராஜபக்ச பகைமையும்




நேபாளம்:
எங்கள் புரட்சி வெற்றி பெற்றது!



யாழ்ப்பாணம்:
திறந்த வெளிச்சிறைச்சாலை !



சமாதானம்:
தோல்வி எங்கிருந்து ஆரம்பித்தது ?




வாகரை:
கலைபடும் பறவைகளாய்
அலைபடும் மக்கள்!



ஒசாமா:
ஒடுக்குமுறைக்கு எதிராக
ஒரு பொறி



சங்காரா:
“சினிமா மொழியில்” ஓர் உள்மன யாத்திரை

Publishers: Sarinihar, 66/4, Sri Dharmarama Road, Ratmalana.
Printers: Navamaga, 66/4, Sri Dharmarama Road, Ratmalana.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org